வேதாகமத்தை ஒருவருடத்தில் வாசிக்கப் பொருத்தமான காலக்கிரமத் திட்டம்

அட்டையிலிருந்து அட்டைக்கு

வேதாகம சம்பவங்கள் நிகழ்ந்த பிரகாரம்

செல்வின் ஹியூஸ், ரெவர் ஜே பாட்ரிட்ஜ்

ஒரே ஆண்டில் ஒவ்வொரு நாளாக வேதாகமம் முழுவதும்

அட்டையிலிருந்து அட்டைக்கு

வேதாகம நிகழ்வுகள் நடந்த கால ஒழுங்கில் அனுதின வேத பாடத்திட்டம்

ஒரே ஆண்டில் ஒவ்வொரு நாளாக வேதாகமம் முழுவதும்

அட்டையிலிருந்து அட்டைக்கு

வேதாகம நிகழ்வுகள் நடந்த கால ஒழுங்கில் அனுதின வேத பாடத்திட்டம்

2000 ஆம் ஆண்டில் வேதாகமத்தைப் பின்வருபவர்களுடன் முற்றாக வாசித்து ஜெபத்துக்கு நேரத்தை ஒதுக்குவேன் என்று பொருத்தனை செய்கிறேன்.

செல்வின் ஹியூஸ், ரெவர் ஜே பாட்ரிட்ஜ்

CWR, Waverley Abbey House, Waverley Lane, Farnham, Surrey GU9 8EP

UK (and countries not listed below)

CWR, PO Box 230, Farnham, Surrey GU9 8XG Tel: 01252 784710 Outside UK (44) 1252 784710

INDIA: Full Gospel Literature Stores, 254 Kilpauk Garden Road, Chennai 600010

Tel: (44) 644 3073

MALAYSIA: Salvation Book Centre (M), 23 Jalan SS2/64, Sea Park, 47300 Petaling Jaya, Selangor Tel: (3) 7766411

SINGAPORE: Campus Crusade Asia Ltd., 315 Outram Road, 06-08 Tan Boon Liat Building, Singapore 169074 Tel: (65) 222 3640

SOUTH AFRICA: Struik Christian Books (Pty Ltd), PO Box 193, Maitland 7405, Cape Town Tel: (021) 551 5900

SRI LANKA: Christombu Investments, 27 Hospital Street, Colombo 1
Tel: (1) 433142/328909

Cover to Cover - Through the Bible as it happened

© CWR

The order of chronology in this book is based on the Chronological Bible edited by Edward Reese.

We are grateful to Robert Backhouse who supplied many of the background articles.

Typesetting: Luxmi Printer

Illustrations: Nick Spender of Advocate

Cover photograph: Roger Walker

Printed by: Luxmi Printer - 195, Wolfendhal Street, Colombo-13.

Translation into Tamil: Maranatha Full Gospel Association

Ministris Indian & C.P. Sathianathan of Ceylon Every Home Crusade

Ptoof Read by Rev. A. Iyadurai

Previous editions published as *Through the Bible Every Day in One Year*

Published in this format 1999

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior permission in writing of CWR.

Scripture quotations in this publication are taken from the Holy Bible.

Published in Sri Lanka by

CHRISTOMBU *Books*, a subsidiary of CHRISTOMBU *Investments*

27, Hospital Street,
Colombo 1,
SRI LANKA,
with permission from **CWR.**

அறிமுகம்

புதிய ஆயிரமாண்டை நெருங்குவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னதாக என்னோடு பத்துலட்சம் பேரைச் சேர்த்துக்கொண்டு 2000ஆம் ஆண்டில் முழுவேதாகமத்தையும் வாசிக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தேன். நாம் நெருக்கடி நிறைந்த நாட்களில் ஜீவிக்கிறோம். அதிதீவிர சாத்திய சிந்தனைக்கும் அவநம்பிக்கையான அசாத்திய சிந்தனைக்கும் மத்தியில் உலகம் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. கிறிஸ்தவர்களான நாம் எதிர்காலத்தில் நம்பிக்கையுடையவர்களாக இருக்கவேண்டும். புதிய ஆயிரம் வருடத்தில் எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தவும், சவால்களை எதிர்நோக்கி ஆவிக்குரியவர்களாக எம்மைத் தயார்செய்ய எமது இதயங்களையும், சிந்தனைகளையும் ஜீவனுள்ள வார்த்தைக்குத் திறப்பதிலும் பார்க்க வேறு சிறந்த வழியொன்றையும் நான் அறியேன். (எபிரேயர் 4:12)

வேதாகமத்தை ஒரு வருடத்தில் முழுமையாக வாசிக்கப் பல அணுகுமுறைகள் உள்ளன. சம்பவங்கள் நடைபெற்ற காலக்கிரமப்படி வேதாகமத்தை பல அணுகுமுறைகளோடு வாசித்திருக்கின்றேன். ஆனால் காலக்கிரமப்படி அணு குமுறை சிந்தனையைத் தூண்டுவதாகவும், சிந்தையை வசீகரிப்பதாகவும் இருக்கின்றது.

சில பகுதிகள் கடினமானவைகளாக இருக்கும் என்பதை முன்னதாகவே கூறி எச்சரிக்கவேண்டியது எனது கடமை. சுய ஒழுங்காக்கலும், கட்டுப்பாடும், எதற்கு முக்கியத்துவமளிக்கின்றீர்கள் என்பதும் மிக அவசியமாகும். எவ்வளவு நேரம் செலவழிக்கின்றீர்களோ அதற்கேற்ப வெகுமதியடைவீர்கள் என்பதை உறுதியாகக் கூற விரும்புகிறேன். வருடத்தின் இறுதியில் வேதாகமத்தின் சம்பவங்களை நோக்கும்போது அவைகள் எவ்வளவு பொருத்தமுடையனவாக இருப்பதும் வரலாற்றில் காலம் காலமாகத் தேவன் எவ்வாறு கிரியை செய்தார் என்பதும் எமது விசுவாசத்துக்குப் பெலனூட்டி ஆவிக்குரிய முதலீடாக இருந்தமைக்கு நீங்கள் மனம்வருந்தமாட்டீர்கள்.

வருடம் முழுவதும் படிக்கச் சில குறிப்புகளைத் தரவிரும்புகிறேன். முதலாவது ஜெபத்தோடு உங்களது வாசிப்பை ஆரம்பியுங்கள். நீங்கள் வாசிப்பதன் மூலம் தேவனை உங்களோடு பேசுமாறு கேளுங்கள். தேவன் வேதாகமத்தினூடாக மட்டுமன்றி அமைதியாகவும் பேசுகிறவராக இருக்கின்றார்.

இரண்டாவதாக புரிந்துகொள்வது மட்டுமல்லாது வாசித்தவைகளைச் சொந்த வாழ்வில் உபயோகியுங்கள். வேதாகமச் சித்தாந்தங்களும் சரிதைகளும் நிறைந்ததாகக் காணப்படுகிறது. சித்தாந்தங்கள் எப்படி வாழவேண்டுமென்று கூறுகின்றன. சரிதைகள் எவ்வாறு வேதவழியில் அந்தச் சிந்தாந்தங்கள் பிரயோகிக்கப்பட்டன என்பதை விபரிக்கின்றன. வேதாகமத்தின் உண்மைகள் உங்களை வழிநடத்தட்டும்.

மூன்றாவதாக இந்த வேதாகம பாடத்தை வாசிப்பவர் ஒருவருடன் அல்லது குழுவுடன் தொடர்புகொண்டால் இது குறித்து உரையாட முடியும். இவ்வாறு ஒன்றாகப் பகிர்ந்து கொள்வது எளிதாக மாற்ற மொன்றை ஏற்படுத்துகிறது என்பதை அனுபவங்கள் மூலமாக அறிந்துகொண்டோம். உங்கள் சபையில் அல்லது ஐக்கியத்தில் இத்திட்டத்தைத் தொடராதவர்கள் இருந்தால் வேறு ஒருவரை நீங்கள் அழைத்து உரையாடலாம்.



நாலாவதாக சுகயீனம், அசாதாரண வேலைப்பளு என்ற காரணங்களால் சிலநாட்கள் நீங்கள் வாசியாதிருக்கலாம். அதைரியப்படாதீர்கள். தவறவிட்டதை வாசிக்க நேரம் தருமாறு தேவனிடம் கேளுங்கள். தாங்கள் இழந்த நேரத்தை மீட்டுக்கொள்ளத் தேவன் பலருக்கு அளித்த கிருபையின் சாட்சிகளை நான் பலமுறை கேட்டுள்ளேன். நீங்கள் தேவனிடம் கேட்கவேண்டும்.

ஆவிக்குரிய நல்ல விளைவுகளை ஏற்படுத்துவதிலும் இந்த முயற்சியினால் வேதாகமத்தை முழுதாக வாசிக்கத் தேவனின் வல்லமையோடும், அவர் பிரசன்னத்தோடும் நீங்கள் ஆழமாகத் தேவவார்த்தையை அறிந்துகொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பமும் ஜெபமுமாகும்.

செல்வின் ஹியூஸ்



கால அட்டவணை

தேவன் பேசினார். வேதாகமத்தில் தனது சிந்தனைகளை நாம் புரிந்துகொள்ளும் வார்த்தைகளில் தந்திருக்கிறார். இயேசுவில் அவர் தன்னுடைய சிந்தனைகளை மாம்சமாக அளித்திருக்கிறார். இரண்டாவது வார்த்தையான கர்த்தர் இயேசுகிறிஸ்து தனது வாழ்வையும் பழைய ஏற்பாட்டில் எதிர்வுகூறப்பட்ட வழிநடத்தல்களையும் எமக்குக் காட்டினார். வேதவாக்கியங்கள் எமது வாழ்வுக்கு அத்தியாவசியமான ஆகாரமாக இருக்கிறது என்று இயேசு சொன்னார். அவைகள் எமக்கு இரட்சிப்பையும், வழிநடத்தல்களையும் "ஒவ்வொரு நல்லவேலைக்கும்" ஆயத்தமாக்குதலைக் காட்டுவனவாயுள்ளன.

இக்கற்கைநெறியில் உள்ள விளக்கங்களும் பின்னணிகளும் ஒவ்வொருநாளும் வாசிக்கும் வேதவசனங்களை நன்கு புரிந்துகொள்ள உதவிசெய்வனவாக இருக்கின்றன. ஆனால் விபரிக்க இடம் போதாது. தேவன் வேறுகாரியங்களையும் உங்களது கவனத்துக்குக் கொண்டுவந்து அவைகளை அறிந்துகொள்ளவும், பிரயோகிக்கவும் உதவிசெய்வாராக. உங்கள் அணுகுமுறைகளுக்கு ஒத்தாசைபுரிய சில முக்கிய வழிகாட்டல்களைக் கீழே தருகிறோம்:-

நம்புங்கள்

வேதாகமம் தேவனால் அருளப்பட்டது (2தீமோத்தேயு 3:16). அவர் மனிதர்களை உபயோகித்து அவர்கள் சிந்தையை வழிநடத்தி அவர்களுடைய வார்த்தைகள் மூலமாக தமது வார்த்தையைத் தந்தார். இயேசு செய்ததைப் போல நீங்களும் செய்யுங்கள். அவைகள் அதிகாரமுடையதும், நம்பத்தகுந்தவையும் என்று நாம் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். தேவனுடைய ஆணையில் தான் இயேசு தனது ஊழியத்தைக் கட்டி சிலுவை மட்டும் கீழ்ப்படிந்தார்.

நிலையான கொள்கைகள்

வனாந்தரங்களிலிருந்த இஸ்ரவேலின் கூடாரப் பட்டணங்களின் காலத்தின் வாழ்வுக்கும் நமது தினசரி வாழ்வுக்குமிடையே பெரிதான வேறுபாடு உண்டு. உரோம சாம்ராஜ்ய காலத்தின் ஜீவியத்துக்கும் நமது ஜீவியத்திற்கும் வித்தியாசம் உண்டு. வேறுபாடுகள் பல இருந்தாலும் அறிவுரைகளின் அல்லது சம்பவங்களின் பின்னணியில் ஒரு நிரந்தரக் கொள்கை இருப்பதை நாம் அறியமுடியும். தேவனைக் குறித்தும், அவருக்குச் சேவை செய்வதைக் குறித்தும் பொதுவாக அவைகள் என்ன கற்பிக்கின்றன? இயேசு உதாரணமாகக் "கால்களைக் கழுவியது" எம்மை ஏனைய சேவைகளைச் செய்ய வழிநடத்துகிறது (யோவான் 13:14).

ஆக்கியோனை அறியுங்கள்

தேவனுடைய வார்த்தைகள் எமக்குத் தரப்படுவதற்காக பரிசுத்தாவியானவர் மனிதர்களைப் பயன்படுத்தினார் (2 பேதுரு 1:21). எனவே அவற்றை எமக்கு விளங்கச் செய்யப் பரிசுத்தாவியானவர் மொழிபெயர்ப்பாளராகச் செயற்படவேண்டும். வேதாகமத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதற்குத் தேவனைத் தனிப்பட்ட ரீதியில் அறிந்தும், கிறிஸ்துவை எமது வாழ்வின் கர்த்தராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்கவும் வேண்டும்.

முழுமை

வேதாகமத்திற்கு ஒரு ஆக்கியோன் இருக்கிறார். அது முழுமையான புத்தகம். வேதாகமத்தில் உள்ள தனிப்பட்ட பகுதி ஒன்றினைப் பொதுவாக விளக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தும், குறிப்பிட்ட விடயத்தில் உள்ள ஏனைய பகுதிகளிலுள்ள விளக்கங்களோடு ஒப்பிட்டு விளங்கிக் கொள்ளவேண்டும். யாக்கோபுவின் சில வார்த்தைகள் எங்களுடைய கிரியைகள் எங்களை இரட்சிக்கும் என்பது போல இருக்கலாம் (யாக்கோபு 2:20, 24). வேதாகமத்தின் முழுதான தொனிப் பொருளுக்கும் இது முரணானது. இந்த விளக்கம் சரியானதல்ல (எபே 2:8, 9; ரோமர் 3:23-24). இவைகளை மனதில் வைத்து மறுபடியும் யாக்கோபுவின் புத்தகத்தை கவனமாக வாசிக்கும்பொழுது யாக்கோபு எவ்வாறு இரட்சிக்கப்படலாம் என்ற கேள்விக்கு விடைகூற முனையவில்லை என்றும், கிறிஸ்துவில் உண்மையான விசுவாசம் கிரியையுடையதாக இருக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகிறது.

பின்னணி

பிழையாகப் பாவிக்கப்பட்ட சில கூற்றுக்கள் எம்மைப் பிழையாக வழிநடத்தலாம். பத்திரிகைகள் சிலவேளைகளில் பொது சேவையிலுள்ளவர்களின் கூற்றைப் பிழையாகப் பயன்படுத்துவதால் பிழையான அபிப்பிராயம் ஏற்பட இடமுண்டு. ஒரு பகுதியின் கருத்தை முற்றுமாக அறிவதே எமது நோக்கமாகும். நாம் சரியான கண்ணோட்டமுடையவர்களாக இருக்கவேண்டும்.

தக்க உதவியை நாடலாம்

இவ்வருடம் வேதாகமம் முழுவதையும் வாசிக்கவேண்டும் என்பது உங்களது நோக்கம். உங்களுக்கு ஒவ்வொன்றையும் விபரமாகப் படிக்க நேரம் காணாது. குறிப்பிட்ட சில பகுதிகள் ஆழமாகப் படிக்கவேண்டும் என்று விரும்பலாம். கஷ்டமான பகுதிகளை நல்ல வேதாகம விளக்கத்தின் துணையுடன் விளங்கிக் கொள்ளலாம்.

வாழுங்கள்

நீங்கள் வேதாகமத்தை வாசிப்பதன் நோக்கம் அதனால் ஈர்க்கப்பட வேண்டுமென்பதாகும். அப்பொழுது கர்த்தரோடு நெருங்கி வாழ்ந்து அவருக்கு ஸ்தோத்திரத்தை ஏறெடுக்கக் கூடிய வாழ்வை வாழமுடியும். வேதாகமத்தை முழுதாக வாசிப்பது ஓர் உற்சாகத்தை அளிக்கும். ஆனால் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டும். தேவனுடைய வார்த்தையைத் தேடுகிற வேளையில் அவருடைய ஆவியானவரின் வல்லமை பிரயோகிக்கப்பட வேண்டும் என்று நாம் வேண்டுதல் செய்வது அவசியம். வேதத்தை உள்ளே எடுத்து அதில் நாம் வாழவேண்டும்.

தானியேல் வரைபடம்

கால அட்டவணை

ஓரளவில் வேதாகமத்தை வரிப்பதில் உங்களது முன்னோற்றத்தை அறிய உதவும்படி சிறப்பாக தயாரிக்கப்பட்டது.




கி.மு. 700
அசீரியர்கள் எருசலேமை முற்றுகையிடுதல்
நாகூம்
தானியேல் பாபிலோனுக்கும் கொண்டு போகப்படுதல்
கி.மு. 600
அடிமைத்தனம்
யோசியா
செப்பனியா
ஆபக்கூக்,
நெபுகாத்ரேச்சார்
எரேமியா
யூதாவின் வீழ்ச்சி
எருசலேமின் அழிவு
எசேக்கியேல்
எருபாபேலும் மற்றவர்களும் திரும்புதல்
இரண்டாவது ஆலயம் கட்டப்படுதல்
கி.மு. 500
தானியேல்
சகரியா
ஆகாய
புதுப்பித்தல்
எஸ்ரா திரும்புதல்
நெகேமியா
மல்கியா
எருசலேமின் அலங்கங்களை திரும்பக் கட்டுதல்
கி.மு. 400
30
31
32
33
34
35
36
37
38
39
40
கிறிஸ்துவின் பிறப்பு
கி.பி. 1
கி.பி. 10
கி.பி. 20
41
42 43
44 45
கிறிஸ்துவின் ஞானஸ்நானம்
மரணம் உயிர்த்தெழுதல்
கி.பி. 30
46
பவுலின் மனமாற்றம்
கி.பி. 40
47
முதல் மிஷனரி பயணம்
கி.பி. 50
48
49
50
இரண்டாவது மிஷனரி பயணம்
மூன்றாம் மிஷனரி பயணம்
கி.பி. 60
51
ரோமில் பவுல்
பவுலின் மரணம்
எருசலேமின் அழிவு
கி.பி. 70
52
கி.பி. 80
கி.பி. 90
வெளிப்படுதல்
கி.பி. 100
யோவானின் மரணம்

ஆரம்பித்தல்

வேதாகமத்தை அறிந்துகொள்ளும் இவ்வருடத்தை ஆரம்பிக்கும் வேளையில், இப்பாடங்கள் மிகவும் பயனுள்ளவைகளாக இருக்கவேண்டுமென்று விரும்புவீர்கள். இந்த நோக்குடன் சில ஆலோசனைகளைத் தருகிறோம்:-

1. சிறந்த மொழிபெயர்ப்புள்ள வேதாகமம் முதல் தேவை.
2. இவற்றைத் தினமும் படிக்க, ஒரு குறிப்பிட்ட இடத்தையும், நேரத்தையும் ஒதுக்கி வையுங்கள்.
3. அவரது வார்த்தையைப் படிக்கமுன் தேவனுடைய உதவியையும் வழிநடத்துதலையும் கேட்டு ஜெபியுங்கள்.
4. பொதுக் கருத்தைப் புரிந்துகொள்ள, பாடப் பகுதியை முதலில் ஒருதரம் வாசியுங்கள்.
5. பரிசுத்த ஆவியானவர் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவரும் முக்கிய சத்தியங்களை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.
6. ஒரு நோட்டுப் புத்தகத்தில் முக்கிய கருத்துக்களையும், அவை உங்கள் வாழ்வில் எப்படிப் பொருந்துகின்றனவென்றும் குறித்துக் கொள்ளுங்கள். நினைவில் கொள்ளவேண்டிய 4 முக்கிய வார்த்தைகள்:

   (1) **உற்றுநோக்குதல்** - அது என்ன கூறுகிறது?

   (2) **அர்த்தத்தைப் புரிதல்** - அதன் பொருள் என்ன? புரிந்து கொள்ளுங்கள்.

   (3) **வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தல்** - எனக்கு இது எப்படிப் பொருந்தும்? என்று யோசித்துப் பாருங்கள்.

   (4) **பகிர்ந்து கொள்ளுதல்** - இதை எப்படிப் பிறருக்குக் கூறலாம்? எனச் சிந்தியுங்கள், செயற்படுங்கள்.
7. ஒருநாள் படிப்பை விட்டுவிட நேரிட்டால், சோர்ந்துபோய் நிறுத்தி விடாதேயுங்கள். சாதனைக்குத் தேவையான 4 வார்த்தைகளை மறந்துவிடாதேயுங்கள்.

   (அ) ஆவல் (ஆ) அர்ப்பணம் (இ) மன உறுதி (ஈ) கட்டுப்பாடு
8. படித்து முடித்த பின்னர், சில வினாடிகள் நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்களுக்காக ஆண்டவருக்கு நன்றி கூறுங்கள்; அதை உங்கள் வாழ்க்கையில் தினமும் பயன்படுத்த அவரிடம் பெலன் தருமாறு கேளுங்கள்.

கொடுக்கப்பட்ட வரிசைப்படி முதலில் இடதுபக்க வரிசையில் ஆரம்பித்துப் பின்னர் வலதுபக்க வரிசையையும் படித்து முடியுங்கள்.

1

இந்தப் பகுதியில்....

உலகத்தின் சிருஷ்டிப்பு
பாவத்தின் விளைவு
ஆபிரகாமுடனான தேவனின் உடன்படிக்கை
எகிப்திலே ஒடுக்கப்படுதல்
தேவனுடைய மக்கள் மோசேயினால் விடுதலை செய்யப்பட்டமை

ஆதியாகமம் - தேசங்களின் ஆரம்பம்

'ஆதியாகமம்' என்றால் ஆரம்பம் என்று அர்த்தம். இது சரித்திரத்தின் ஆரம்பத்தை உலகப்பிரகாரமும் ஆவிக்குரிய பிரகாரமும் விளக்குகிறது. இந்த வருடத்தை வேதாகம ஆரம்பத்துடன் ஆரம்பிக்கிற வேளையில் கர்த்தருடனும், அவருடைய வார்த்தையுடனும் ஆழமான அன்பில் ஆரம்பியுங்கள். முதல் பதினொரு அதிகாரங்களிலும் 2000 வருட வரலாறு உண்டு. அது நான்கு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

சிருஷ்டிப்பு	அனைத்தினதும் ஆரம்பம் *ஆதி: 1-2* * ஆதியிலே * சிருஷ்டிப்பின் நாட்கள் * இளைப்பாறுதலின் நாள்	
அக்கிரமம்	ஆதாமின் பாவம் *ஆதி: 3-5* * சாத்தானின் தந்திரம் * ஆதாமின் பாவம் * கலகத்தினால் மரணம்	
ஆக்கினைத் தீர்ப்பு	நோவா கால வெள்ளம் *ஆதி: 6-9* * வெள்ளத்துக்கு முந்தியநிலை * வெள்ளத்தின் மூலம் இரட்சிப்பு * வெள்ளத்தைத் தொடர்ந்த சோகு முடிவு	
குழப்பம்	பாபேல் கோபுரம் *ஆதி: 10-11* * மனிதனின் மன மேட்டிமை * தேவனின் தீர்ப்பு * ஜாதிகளின் பிறப்பு	

சிருஷ்டிப்பின் ஆரம்பம்

நாள் 01

முன்னதாகவே இருக்கின்ற கிறிஸ்து
யோவா 1:1-2

சிருஷ்டிப்புக் கூறி அறிவித்தல்
சங் 90:2

சிருஷ்டிப்பின் ஆரம்பம்
ஆதி 1:1

சாத்தான் வானத்திலிருந்து தள்ளப்படுதல்
ஏசா 14:12-17; எசேக் 28:13-19

சிருஷ்டிப்பின் தீர்ப்பு
ஆதி 1:2

குடியிருக்கும்படி படைப்புக்கள்
ஏசா 45:28 ஆதி: 2:4

படைப்பின் 6ம் நாட்கள்

1ம் 2ம் நாட்கள்
ஆதி :1:2 - 8

3ம் நாள்
ஆதி 2:5-6; 1:9-13

4ம் 5ம் 6ம் நாட்கள்
ஆதி 1:14- 26; 2:7

மனிதன் படைக்கப்பட்ட முறை
ஆதி 5:14 1:27

ஸ்திரி சிருஷ்டிக்கப்படுதல்
ஆதி 1:18- 25

பெயரிடுதல்
ஆதி 5:2; 3:20

சிருஷ்டிப்பின் மேல் மனிதனின் அதிகாரம்
ஆதி 1:28- 30

சிருஷ்டிப்பு பூர்த்தி பெறுதல்
ஆதி 1:31; 2:1; யோவா 1:3

7ம் நாள் ஸ்தாபிக்கப்படுதல்
ஆதி 2:2-3; யாத்: 20:11

ஏதேன் தோட்டம்
ஆதி 2:8- 17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வேதாகமம் போதிப்பது போல, சிருஷ்டிகளில் மனிதன் ஒருவனே தேவ சாயலில் படைக்கப் பட்டவன். ஆகவே இன்றைய நாளாகிய முதலாம் நாளில் இக்கேள்வியை உன்னிடமே கேட்டுக் கொள். "என்னில் எந்த அளவுக்குத் தேவ சாயல் வெளிப்பட்டிருக்கிறது?"

ஆதார சத்தியம்

"ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப் படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துகளும், சிங்காசனங்களாலும், கர்த் தத்துவங்களாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டு அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்எல்லாம் அவ ருக்குள் நிலைநிற்கின்றது." (கொலோ. 1:16-17)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

நாள் 02 மனிதனின் வீழ்ச்சி - நாகரீகத்தின் ஆரம்பம்

சோதனையும் வீழ்ச்சியும்
ஆதி 3:1-7

தேவனின் தீர்ப்பும் சாபமும்
ஆதி 3:8-19

ஏதேனிலிருந்து வெளியேற்றப்படுதல்
ஆதி 3:21-24

காயீன் ஆபேலின் கதை
ஆதி 4:1-15

சேத்தும் அவன் சந்ததியாரும்
1 நாளா 1:1
ஆதி 4:25; 5:3; 4:26; 5:6,9;

1 நாளா 1:2;
ஆதி 5:12, 15,18

காயீனும் அவன் சந்ததியாரும்
ஆதி 4:16- 24

ஆதாம் சந்ததியினரின் தொடர்ச்சி
1 நாளா 1:3
ஆதி 5:21, 25;
5:4-5; 5:22-24; 5:7-8; 5:28-29;
5:10-11,13, 14, 16, 17, 19, 20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

மனித வர்க்கத்தைக் கவர, சாத்தான் மிக நல்ல முறையில் செயல்படக் கூடிய தந்திரங்களைக் கையாளுகின்றான். (1) மாம்சத்தின் இச்சை (2) கண்களின் இச்சை (3) ஜீவனத்தின் பெருமை இவற்றைக் காண்பித்துக் கவர்கின்றான். உங்கள் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட காரியங்கள் செயல்படுவதை உன்னால் பகுத்தறிய முடிகிறதா? இவற்றை மேற்கொள்ள முடிகிறதா?

ஆதார சத்தியம்

"மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று." (1 கொரி 15:21)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
ஆதியாகமம்- வேதாகமத்தின் முதலாவது புத்தகம்	ஆதாம், ஏவாள், நோவா, ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு	உலகத்தின் ஆரம்பத்துடன் இப் புத்தகம் தொடங்குகிறது. தேவன், மனித இனம், பாவம், தெரிந்த மக்கள்

வெள்ளத்தின் கதை

நாள் 03

கறைபட்ட கலாச்சாரம்
ஆதி 6:1-7; 11:12

பேழை செய்ய வழிமுறை போதித்தல்
ஆதி 6:8; 13-21

நோவாவின் குமாரர் பிறத்தல்
ஆதி 5:32; 6:9-10 1 நாளா 1:4

லாமேக்கின் மரணம்
ஆதி 5:30-31

பேழைக்குள் செல்லுதல்
ஆதி 6:22; 7:1-9

வெள்ளம் - மழை பெய்கின்றது
ஆதி 7:10-24

வெள்ளம் - மழை நிற்கின்றது
ஆதி 8:1-19

தேவனின் வானவில் உடன்படிக்கை
ஆதி 8:20-22; 9:8-17; 9:1-7

கர்த்தர் நோவாவை நோக்கி. நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள். இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன். *(ஆதி 7:1)*

ஜலப்பிரளயத்துக்குத் தப்பும்படி நோவாவும் அவனுடனே கூட அவன் குமாரரும், அவன் மனைவியும், அவன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசித்தனர். *(ஆதி 7:7)*

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நோவாவை வெள்ளத்திற்குள் அழைத்த தேவன் தான், அவனை அதைவிட்டு வெளியேயும் அழைத்து வந்தார். அதுபோலவே, வாழ்க்கையின் இப்பொழுதுள்ள நிலைமைக்குள் கைவிடுமாறு அவர் கொண்டு வரவேயில்லை. நீ இப்பொழுது எதிர்கொள்ளும் பிரச்சனை எது வாயிருந்தாலும், தேவன் காப்பாற்றி வெளியே கொண்டுவருவார்.

ஆதார சத்தியம்

"எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும், குடித்தும் பெண் கொண்டும், பெண் கொடுத்தும் ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்; மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்." (மத். 24:38,39)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
யோசேப்பு இயேசுவைப் போன்றவர். இருவரும் வெள்ளிக்கு கிரயமாகக் கொள்ளப்பட்டார்கள்.	தேவன் சிருஷ்டிகர். மனிதன் தன் கீழ்ப்படியாமையினால் தொடர்பை அறுத்தாலும் தேவன் அவனை இன்னும் அழைக்கிறார்.	ஆதி 1:1

நாள் 04 வெள்ளத்திலிருந்து முற்பிதாக்கள் வரை

நோவாவின் சந்ததியார்
ஆதி9:18-19; 10:32; 10:1-32; 1 நாளா 1:5-27

யாப்பேத்தின் குமாரர்
ஆதி 10:2-5; 1 நாளா 1:5-7

காமின் குமாரர்
ஆதி 10:6-20; 1 நாளா 1:8-16

சேமின் குமாரர்
ஆதி 10:31; 10:21-23;

1 நாளா 1:17, 24;
ஆதி 11:10

நோவாவின் திராட்சைத் தோட்டமும் குடிவெறியும்
ஆதி 9:20-21

காம் பெற்ற சாபம்
ஆதி 9:22-27

சாலாவின் பிறப்பு
ஆதி 11:12; 10:24; 1 நாளா 1:18

ஏபேரின் பிறப்பு
ஆதி 11:14

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

இங்குள்ள வம்ச வரலாற்றுப் பட்டியல்கள் படிக்கச் சுவையில்லாத பகுதிகள் என்று சிலர் நினைப் பதுண்டு. ஆனால் தேவன் ஒவ்வொரு சிறிய சம்பவத்திற்கும் எவ்வளவு முக்கியத்துவமளிக்கி றாரென்பதை இவை தெளிவாகக் காண்பிக் கின்றன. உங்கள் வாழ்க்கையின் பொதுவான காரியங்களைக் குறித்து மேலோட்டமாக மட்டும் கரிசனை கொள்ளாது ஒவ்வொரு சிறிய காரி யங்களிலும் கர்த்தர் கவனம் செலுத்துபவர். கர்த்தர் உன்னைக் குறித்து கவலைப்படவே யில்லை என்று எப்போதாவது எண்ணம் வரும் போது இதை மறந்துவிடாதே. அவர் கரிசனை யுள்ளவர்.

யோக்தான், பேலேகின் சரித்திரம்
ஆதி 10:25; 1 நாளா 1:19,25; ஆதி 11:16

யோக்தானின் சந்ததி
ஆதி 10:26-30 1 நாளா 1:20-23

பேலேகின் சந்ததி
ஆதி 11:18, 20

பாபேல் கோபுரம்
ஆதி 11:1-9

நோவாவின் சந்ததியினரின் தொடர்ச்சி
நாகோர் 1 நாளா: 1:26; ஆதி 11:22

தேராகு *ஆதி 11:24*
தேராகுவின் குமாரர்களின் பிறப்பு *ஆதி 11:26*

பேலேகின் மரணம்
ஆதி 11:19

நாகோரின் மரணம்
ஆதி 11:25

நோவாவின் மரணம்
ஆதி 9:28, 29

ஆபிரகாமின் பிறப்பு
1 நாளா 1:27

ஆரோனின் குமாரன், லோத்தின் பிறப்பு
ஆதி 11:27

ஆதார சத்தியம்

"யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்: அவளிடத்தில் கிறிஸ்து எனப்படுகின்ற இயேசு பிறந்தார்". (மத். 1:16)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

யோபுவுக்கு ஆறுதல் கூறிய நால்வர்

எலிப்பாஸ்
யோபு 4, 5, 15-22

சோப்பார்
யோபு 11, 20
நீ வஞ்சகன் *11:11*

பில்தாத்
யோபு 8, 18, 25
நீ தேவனை அறியவில்லை *1:21*

எலிகூ
யோபு 32:37
நீ தேவனுக்கு எதிர்த்து நிற்கிறவன் *34:37*

அவர்களுடைய முடிவான அபிப்பிராயம்:– "உனது பாவத்தினால் துன்புறுகிறாய்"

யோபுவின் முடிவான அபிப்பிராயம்:– "இப்படிப்பட்ட அநேகக் காரியங்களை நான் கேட்டிருக்கிறேன். நீங்கள் எல்லோரும் அலட்டுண்டாக்குகிற தேற்றரவாளர்." (யோபு 16:2)

தேவனுடைய புனரமைப்பு:– யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது. கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுவிற்கு முன்னிருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார். (யோபு 42:10)

நாள் 05 யோபுவின் துன்பம்

யோபுவின் ஆரம்ப சரித்திரம்
யோபு 1:1-5

சாத்தான் யோபுவின் குணத்தை விவாதிக்கின்றான் *யோபு 1:6-12*

கர்த்தர் யோபுவை சோதிக்க உத்தரவு கொடுத்தல் *யோபு 1:13-2:10*

யோபு தனது 3 சிநேகிதரிடம் முறையிடுதல்
யோபு 2:11-13; 3:1-26

முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை
எலிப்பாஸ் யோபுவைக் கடிந்து கொள்ளுதல்
யோபு 4:1-11

எலிப்பாஸின் தரிசனம்
யோபு 4:12-21

பாவிகளின் பாவமே அழிவுக்குக் காரணம்
யோபு 5:1-7

தேவனை அன்புடன் நினைக்க வேண்டும்
யோபு 5:8-16

தேவன் சீர்திருத்தும்போது ஏற்படும் மகிழ்ச்சி
யோபு 5:17-27

யோபு தனது முறையிடுதலை நியாயப்படுத்தல்
யோபு 6:1-7

அவன் மரணத்தை விரும்புதல்
யோபு 6:8-13

அவன் நண்பர்களைக் கடிந்து கொள்ளுதல்
யோபு 6:14-30

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

மிகுந்த வேதனையினூடே கடந்து செல்லும் ஒருவருக்காக நீங்கள் செய்யக்கூடிய மிகப்பெரிய காரியம் ஒன்று அவர்களுடன் ஒன்றும் பேசாது, அமர்ந்திருந்து, உங்கள் செய்கைகளால் மாத்திரம். உங்களது கரிசனையைக் காண்பிப்பதே ஆகும். விவாதம் செய்து ஆறுதல் படுத்த முயற்சிப்பதைவிட இது மிகவும் சிறந்த ஒரு முறையாகும்.

ஆதார சத்தியம்

"நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்: நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன்மேல் புரளுவ தில்லை; நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய்: அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்." (ஏசாயா. 43:2-3)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
யோபு- பழைய ஏற்பாட்டில் பதினெட்டாவது புத்தகம்	தேவன். சாத்தான். யோபு. எலிப்பாஸ். பில்தாத். கோப்பார். எலிகாட்	அபாண்டமான துன்பம் பற்றிய உரையாடல்.

யோபுவின் சிநேகிதர்

நாள் 06

யோபுவின் துன்பங்கள்
யோபு 7:1-6

யோபு ஆண்டவரிடம் வாதாடி விடுதலை கோரி கெஞ்சுதல் *யோபு 7:7-21*

பில்தாத் யோபுவைக் கடிந்து கொள்ளுதல் *யோபு 8:1-7*

மாய்மாலக்காரர் அழிக்கப்படுவர் *யோபு 8:8,19*

யோபுவின் துன்பம் தேவனின் நீதியான நடத்துதலென பில்தாத் விளக்குதல் *யோபு 8:20-22*

யோபு ஆண்டவரின் நீதியை ஒத்துக் கொள்ளுதல் *யோபு 9:1-13*

அவனால் ஆண்டவருடன் போராடக் கூடாத நிலைமை *யோபு 9:14-21*

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

வியாதி, துன்பம், வேதனைகள் தாக்கும் போது, நாம் குழப்பமடைகிறொமென்பதை ஒத்துக் கொள்வது பாவமோ அல்லது 'உலகப் பிரகாரமான' நடத்தையோ அல்ல. நம்மால் எதிர் கொள்ள முடியாமல், நாம் உள்ளத்தில் அடக்கி வைக்கும் உணர்வுகளே பின்னால் கஷ்டத்தைக் கொண்டு வருபவை. நீ அந்தக் குழப்பமான எண்ணங்கள் சரியென ஒத்துப் போவதுதான் தவறு; ஆனால் அவற்றை வெறுமனே அடக்கி வைக்காமல், ஆண்டவரின் பெலத்தில் எதிர் கொண்டு, மேற்கொள்வது அவசியம்.

யோபு, துன்பங்கள், கஷ்டங்களைக் குறித்து முறையிடுதல் *யோபு 9:22-35, 10:1-7*

யோபு, சிருஷ்டிகராகிய ஆண்டவரிடம் பரிந்து பேசுதல் *யோபு 10:8-13*

தேவனின் கண்டிப்பைக் குறித்து யோபு முறையிடுதல் *யோபு 10:14-22*

சோப்பார் யோபுவைக் கடிந்து கொள்ளுதல் *யோபு 11:1-6*

தேவனுடைய சர்வ வல்லமையும், பூரணமும் *யோபு 11: 7-12*

மனந்திரும்பினால் ஆசீர்வாதம் என்று சோப்பார் யோபுவுக்கு உறுதி கூறுதல் *யோபு 11:13-20*

யோபு தன் சிநேகிதரைக் கடிந்து கொள்ளுதல் *யோபு 12:1-5*

துன்மார்க்கர் அடிக்கடி செழிப்படைதல் *யோபு 12:6-11*

யோபு ஆண்டவரின் ஞானத்தையும் வல்ல மையையும் அறிந்திருத்தல் *யோபு 12:12-25*

ஆதார சத்தியம்

"சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநே கிப்பவனும் உண்டு." (நீதி. 18:24)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசு எங்களுக்காகப் பாவமானார். யோபு 25:4 2கொரி 5:21 யோபு 19:25	யோபு தேவனின் மகத்துவத்தை உணருகிறார். 42ஆம் அதிகாரம். தேவனுடைய சித்தத்தை நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும்.	யோபு 19:25

நாள் 07 யோபுவின் கதை தொடர்கிறது

யோபு தன் சிநேகிதரைக் கடிந்து கொள்ளுதல்
யோபு 13:1-12

தேவன் மீது தன் நம்பிக்கையை அறிக்கையிட்டு, தன் பாவத்தைக் காட்டக் கெஞ்சுதல்
யோபு 13:13-28

யோபு, மனிதனின் வாழ்நாள், மரணம் குறித்துப் பேசுதல்
யோபு 14:1-15

பாவத்தினால் மனிதனின் அக்கிரமத்துக்கு ஆளாகுதல்
யோபு 14:16-22

இரண்டாம் சுற்றுப் பேச்சு வார்த்தை
எலிப்பாஸ் யோபுவைக் கடிந்து கொள்ளுதல்
யோபு 15:1-16

துன்மார்க்கரின் தவிப்பு
யோபு 15:17-35

யோபு நண்பரைக் கடிந்து கொள்ளுதல்
யோபு 16:1-5

தனது கபடின்மையை நிலைப்படுத்தி, வழக்காடுதல்
யோபு 16:6-22

யோபு தேவனிடம் மனுச்செய்தல்
யோபு 17:1-9

மரணத்திலும் அவன் நம்பிக்கை
யோபு 17:10-16

பில்தாத் கடிந்து கொள்ளுதல்
யோபு 18:1-4

துன்மார்க்கருக்கு அழிவு காத்திருக்கும்
யோபு 18:5-10

துன்மார்க்கரின் அழிவு
யோபு 18:11-21

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

இன்றைய சபைகளில் அநேகர் யோபுவின் ஆலோசர்களின் மாதிரியைப் பின்பற்றுகின்றனர். பிரச்சனையைப் புரிந்து கொள்ளும் முன்னரே, புரிந்துகொண்டு விட்டோமா என்ற நிச்சயமில்லாமலேயே ஆலோசனை கொடுக்க ஆரம்பிப்பது! பிறருடைய பிரச்சனை, அவர்களுக்கு அதைக் குறித்து இருக்கும் கருத்து இவற்றைப் புரிந்து கொள்ளும் முன்னர், நமது கருத்தை ஏற்றுக் கொள்ளச் செய்யுமாறு முயற்சி செய்யவே கூடாது.

ஆதார சத்தியம்

"மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்; ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!" (நீதி 15:23)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

யோபு குற்றஞ் சாட்டப்பட்டவனாக நிற்கிறான் நாள் 08

யோபு அன்பற்றவிதமாக நடத்தப்படுதல் குறித்து முறையிடுதல்
யோபு 19:1 -7

அவனது துன்பங்களின் மூலகர்த்தா தேவனே
யோபு 19:8 -22

உயிர்த்தெழுதல் பற்றி யோபுவின் நம்பிக்கை
யோபு 19:23-29

சோப்பார் துன்மார்க்கரின் குறுகியகால நல்வாழ்வு குறித்துப் பேசுதல்
யோபு 20:1- 9

சோப்பர் துன்மார்க்கரின் குறுகிய கால நல்வாழ்வு குறித்துப் பேசுதல்
யோபு 20:1-9

துன்மார்க்கரின் பங்கும் அழிவும்
யோபு 20:10 - 29

யோபு தனக்கு செவிகொடுக்கக் கெஞ்சுதல்
யோபு 21:1 - 6

துன்மார்க்கரின் செழிப்பு
யோபு 21:7 16

தேவனின் தீர்மானம் செயல்படுதல்
யோபு 21:17-26

துன்மார்க்கருக்கு நியாயத் தீர்ப்பு
யோபு 21:27 - 34

மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை: மனிதனின் நன்நடத்தையால் தேவனுக்கு லாபமில்லை என்று எலிப்பாஸ் காண்பித்தல்
யோபு 22:1 -4

யோபு பிறரை ஒடுக்கியதாகக் குற்றஞ் சாட்டப்படுதல்
யோபு 22:5 -14

வெள்ளத்திற்கு முந்திய உலகம்
யோபு 22:15 - 20

எலிப்பாஸ் யோபுவை மனஸ்தாபப்படுமாறு அழைத்தல்
யோபு 22:21 - 30

தேவன் விலகிவிட்டாரென யோபு முறையிடுதல்
யோபு23:1 - 7

தனது உண்மையை உறுதிப்படுத்துதல்
யோபு 23:8 -12

தெய்வீக பயங்கரங்கள்
யோபு 23:13 -17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் பார்க்கிற விதமான வாழ்க்கையை பார்க்க ஆரம்பிக்கும் போதுதான் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாறும். இது தான் யோபுவின் உள்ளக் கொந்தளிப்பை திசைதிருப்ப உதவியது; உனது கருத்துக்களையும் திசை திருப்ப உதவும். வாழ்க்கையில் உனக்கு நியாயம் கிடைக்கவில்லையா? தேவன் பார்க்கும் கோணத்திலிருந்து அதைப் பார். இப்பொழுது அது உனக்கு வித்தியாசமாகத் தோன்றுகிறதா?

ஆதார சத்தியம்

"கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடத்தையை தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக் காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்கிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச் சாட்சி உடையவர்களாயிருங்கள்".(1பேது3:16)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 09 யோபு தன்னை நியாயப்படுத்திப் பேசுதல்

துன்மார்க்கன் அடிக்கடி தண்டனைக்குத் தப்பிக்கொள்ளுதல்
யோபு 24:1 -12

துன்மார்க்கர் வெளிச்சத்தை வெறுத்தல்
யோபு 24:13 - 17

துன்மார்க்கர் மீது வரும் தீர்ப்பு
யோபு 24:18 - 25

மனிதன் தேவனுக்கு முன்பாக நீதியை நிலை நாட்டக் கூடாதென பில்தாத் காண்பித்தல்
யோபு 25

யோபு பில்தாதைக் கடிந்து கொள்ளுதல்
யோபு 26:1 - 4

யோபு தேவனின் வல்லமையை ஒத்துக் கொள்ளுதல்
யோபு 26:5 - 14

யோபு தனது உண்மையை நிலைநிறுத்தி மறுப்புத் தெரிவித்தல்
யோபு 27:1 - 6

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஏன் நல்லவர்களுக்கு தீமையான காரியங்கள் நேரிடுகின்றன? இந்தக் கேள்வி உனக்கு மட்டுமே அடிக்கடி தோன்றுவதல்ல; ஏராளமானோர் இக்கேள்வியைக் கேட்பதுண்டு. இதற்கு ஒரேயொரு விடைதானுண்டு. அந்தத் தீமையை, மிகப்பெரிய நன்மை கொண்டு வரக்கூடிய திருப்புமுனையாகப் பயன்படுத்தக்கூடிய வழி இருக்கும்போது மட்டுமே, கர்த்தர் தமது பிள்ளைகளின் வாழ்வில் தீய காரியங்கள் நேரிட அனுமதிக்கிறார்.

மாய்மாலக்காரனுக்கு நம்பிக்கை கிடையாது
யோபு 27:7 -10

துன்மார்க்கரின் பரிதாபமான முடிவு
யோபு 27:11 - 23

உலக ஐசுவரியத்தைக் குறித்து
யோபு 28:1 -11

ஞானம் விலை மதிக்க முடியாதது
யோபு 28:12 - 19

ஞான தேவனின் ஈவு
யோபு 28:20 - 28

யோபுவின் முற்கால வசதியான வாழ்க்கை
யோபு 29:1 - 6

யோபு கனம் பெறுதல்: அவனது பயன்
யோபு 29:7 - 17

வளமான வாழ்வு பெற வாய்ப்பு
யோபு 29:18 - 25

யோபுவின் கனம் இகழ்ச்சியாக மாற்றப்படுதல்
யோபு 30:1 -14

யோபு தனக்குத் தானே சுமையாக இருத்தல்
யோபு 30:15 - 31

ஆதார சத்தியம்

"தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்." (I யோவா 3:20)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

எலிகூவின் கருத்து

நாள் 10

யோபு, தனது நேர்மை, உண்மை, இரக்கத்தைக் கூறி அறிவித்தல்
யோபு 31:1 - 23

யோபுவிடம் இச்சித்தல், விக்கிரக வணக்கம், மாய்மாலம் போன்ற குற்றங்கள் இல்லாமை
யோபு 31:24 - 40

எலிகூ இந்த வாதத்தை குறித்து வெறுப்புக் கொள்ளுதல் *யோபு 32:1 - 5*

அவன் யோபுவையும், அவன் சிநேகிதரையும் கடிந்து கொள்ளுதல்
யோபு 32:6 - 14

அவன் பட்சபாதமின்றி பேசுதல்
யோபு 32:15 - 22

யோபுவிடம் நியாயம் பேச முன்வந்து, அவனது கவனத்தைக் கோருதல்
யோபு அதி 33

தேவன் அநீதியுள்ளவரென யோபு கூறியதாக எலிகூ கூறி அவனைக் கடிந்து கொள்ளுதல்
யோபு அதி :34

எலிகூ யோபுவின் பொறுமையின்மையைக் கடிந்து கொண்டு மனிதனின் குணத்தைப் பற்றிக் கூறுதல்
யோபு அதி: 35

எலிகூ யோபுவின் கவனத்தைக் கோரி, அவனுக்கு ஆலோசனை கூறுதல்
யோபு அதி :36

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கப்பல் ஓட்டும் முறையைக் கற்றுக் கொள்ள வேண்டிய சிறந்த நேரம், புயலில் சிக்கிய பின்னர் அல்ல, புயல் எழும்புவதற்கு முன்னரே யோபின் அளவு பிரச்சினை எழுந்தால் எவ்வாறு சமாளிப்பாய்? பிரச்சினைகள் எழுமுன்பே, அவற்றை எதிர்கொண்டு சமாளிக்கும் வழிமுறை கற்றிருக்கிறாயா? இல்லாவிட்டால், அதைக் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கும் தருணம் - இதுவே!

ஆதார சத்தியம்

"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (மத். 5:11)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 11 யோபுவின் சிறையிருப்பு மாறிப்போகுதல்

எலிகூ தேவனின் வல்லமையைக் கூறுதல்
யோபு 37:1 - 13

யோபு, இயற்கையின் நியதிகளை விளங்க அழைக்கப்படுதல்
யோபு 37:14 - 20

தேவன் பெரியவர் - பயப்படத்தக்கவர்
37:21 - 24

யெகோவாவுடன் சம்பாஷணை: தேவன் யோபுவை உத்தரவு கூறக் கேட்குதல் -
யோபு 38:1 - 3

தேவன் யோபுவை கேள்வி கேட்குதல்
யோபு 38:4 - 41

பல பறவைகள், மிருகங்கள் குறித்து தேவன் யோபுவிடம் கேள்வி கேட்குதல்
யோபு அதி 39

யோபு தேவன் முன்பாகத் தன்னைத் தாழ்த்துதல்
யோபு 40:1 - 5

தேவன் யோபுவுடன் வழக்காடுதல்
40:6 - 14

தேவனின் வல்லமை வெளிப்படுதல்
யோபு 40:15 - 24; அதி. 41

யெகோவாவுடன் சம்பாஷணை தொடருதல். யோபு தாழ்மையாக தேவனுக்கு அடிபணிதல்
யோபு 42:1 - 6

தன் நண்பருக்காக வேண்டுதல் செய்தல்
யோபு 42:7 - 10

புதுப்பிக்கப்பட்ட செழிப்பான வாழ்வு
யோபு 42:10 - 15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் அடிக்கடி நமது கஷ்டங்களை, பிரச்சினைகளை அகற்றுவதன் மூலம் அல்ல, அந்த சமயங்களில் தம்மைப் பற்றி அதிகளவில் வெளிப்படுத்தி, அவற்றை மேற்கொள்ள வழிவகுக்கிறார். நம்மை எரிச்சல் படுத்தும் சூழ்நிலை மாறாதிருக்கலாம்: ஆனால் தேவன் தாம் செய்வதெல்லாவற்றையும் நன்கு அறிந்திருக்கிறார் என்ற நமது உள்ளுணர்வை அது ஆழப்படுத்துகிறது.

ஆதார சத்தியம்

"குமாரன் உங்களை விடுதலையாக்கினால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (எசா 55:8)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

தேவன் ஆபிரகாமை அழைத்தல் நாள் 12

ரெகூவின் மரணம்
ஆதி 11:21

சாராயுடன் திருமணம்
ஆதி 11:29 - 30

செருகுவின் மரணம்
ஆதி 11:23

ஆரானின் மரணம்
ஆதி 11:28

எகிப்துக்கு செல்லுதல் பயணங்கள்
ஆதி 12:10

மனைவியைப் பற்றிய பொய்
ஆதி 12:11 - 20

எகிப்தை விட்டு சீமானாக வெளியேறுதல்
ஆதி 13:1 - 2

பெத்தேலில் வந்த சேருதல்
ஆதி 13:3 - 4

ஊரைவிட்டு ஆரானுக்கு பயணங்கள்
ஆதி 12:1 - 3; 11:31

கெதர்லாகோமேரின் பராக்கிரமம்
ஆதி 14:1 - 4

தேராகுவின் மரணம்
ஆதி 11:32

கானானை நோக்கி....
ஆதி 12:4 - 9

ஆபிராமும் லோத்தும் பிரிதல்
ஆதி 13:5 - 13

உடன்படிக்கை புதுப்பிக்கப்படல்
ஆதி 13:14 - 17

ஆபிராம் எபிரோனுக்கு செல்லுதல்
ஆதி 13:18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

விசுவாச வாழ்க்கையென்பது புரிந்து கொள்ள முடியாத பரவசமளித்த போதிலும். ஒருபொழுதும் சோனை நேரங்கள் வராமலிருப்பதல்ல. எப்பொழுதும் சோதனை வேளைகள் தொடர்ந்து கொண்டு தானிருக்கும். இந்த வினாடியில்: நீ அப்படியொரு வேளைக்குள் இருக்கிறாயா? மனந்தளராதே – தேவன் உன்னிடம் பெரிய காரியத்தை நம்பிக்கையாக ஒப்படைக்கவே. இந்த வேளையை அனுமதித்திருக்கிறார்.

ஆதார சத்தியம்

"விசுவாசத்தினாலே ஆபிரகாம்... (ஒரு) இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்ட போது... கீழ்ப்படிந்து..." (எபிரேயர் 11:8)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

ஆபிரகாமின் வாழ்நாட்களில் முக்கியமான இடங்கள்



தேவனின் ஏழு வாக்குத்தத்தங்கள்

அப் 7:2; ஆதி 12:1-4; யோசு. 24:3

* நான் உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன்.
* உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்.
* உன்னை ஆசீர்வதிப்பவர்களை ஆசீர்வதிப்பேன்.
* நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.
* நீ ஆசீர்வாதமாக இருப்பாய்.
* உன்னைச் சபிப்பவர்களை நான் சபிப்பேன்.
* பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்.

ஆபிரகாமோடுள்ள உடன்படிக்கை நாள் 13

லோத்து சிறைப்படுதல்
ஆதி 14:5 - 13

ஆபிராம் லோத்தை விடுவித்தல்
ஆதி 14:14 - 16

சோதோம் மன்னனுடன் ஆபிராம்
ஆதி 14:17, 14:21 - 24

மெல்கிசேதேக்குடன் ஆபிராம்
ஆதி 14:18 - 20

ஆபிராமுடன் தேவனின் உடன்படிக்கை
ஆதி 15:1- 21

குமாரன் வாக்குப் பண்ணப்பட்டு, சாராய் சாராளாக மாறுதல்
ஆதி 17:15 - 19

இஸ்மவேலின் பிறப்பு
ஆதி 16:15 - 16

அர்பக்சாத்தின் மரணம்
ஆதி 11:13

ஆபிராம், ஆபிரகாமென பெயர் பெறுதல்
ஆதி 17:1 - 8

விருந்தசேதனம் - ஒரு அடையாளம்
ஆதி 17:9 - 14

இஸ்மவேல் - சாராய், ஆகாரை ஆபிராமுக்குக் கொடுத்தல்
ஆதி 16:1 - 14

இஸ்மவேலின் வருங்கால நிலை முன்னறிவிக்கப்படல்
ஆதி 17:20 - 27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கர்த்தர் எந்த ஒரு சிக்கலான சூழ்நிலைக்குள்ளும் தமது ஜீவ சுவாசத்தை ஊதினாலே போதும். அந்த நம்பிக்கையில்லாத சூழ்நிலை மகிழ்ச்சியுள்ளதாக மாறிவிடும். (ஆங்கிலத்தில்) ஒரே ஒரு எழுத்து (h), ஆபிராம், சாராய் இருவரது பெயருக்குள்ளும் சேர்க்கப்படுகிறது: Abraham Sharai அதாவது தேவனின் சுவாசம் அங்கு வேலை செய்ய ஆரம்பிக்கிறது. 'கூடாது என்ற வார்த்தைக்கும் (Impossible) அவர் அதையே தான் செய்கிறார். அவர் அதற்குள் சுவாசிக்கும்போது, அது 'அவரால் - கூடும் என்று மாறிவிடும்! ("HIM - Possible") 'அவரால் - கூடும

ஆதார சத்தியம்

"ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்." (எபி 9:15)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

நாள் 14 ஒரு தேசத்தின் பிறப்பு

கர்த்தர் ஆபிரகாமுக்குத் தோன்றுதலும். சாராளுக்குக் குமாரன் வாக்குப் பண்ணுப்படுதலும் ஆதி *18:1 - 10*

சாராளின் அவிசுவாசம் கடிந்து கொள்ளப்படல் ஆதி *18:11- 15*

சோதோமுக்கு வரவிருக்கும் அழிவை கர்த்தர் ஆபிரகாமுவுக்கு வெளிப்படுதல் ஆதி *18:16- 22*

ஆபிரகாம் சோதோமுக்காக விண்ணப்பித்தல் ஆதி *18:23 - 33*

தூதர்கள் லோத்துவை எச்சரித்தல் ஆதி *19:1 - 23*

சவக்கடல் உருவாகுதல் ஆதி *19:24 -29*

அபிரகாமின் பிந்திய ஆண்டுகள்: அபிமெலேக்கிடம் பொய் சொல்லுதல் ஆதி *20:1 - 18*

ஈசாக்கின் பிறப்பு ஆதி *21:1 - 7; 1நாளா: 1:34*

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அவசர மாற்றங்கள் அல்லது பெரிய ஆபத்துக்கள் வரும் வேளைகளில், தேவனின் உண்மையான ஊழியர் எவ்வாறு எதிர் செயல்படுகின்றனர்? அவர்கள் உடனே. ஆபிரகாம் செய்தது போன்று உண்மையான விசுவாசத்துடன் கூடிய ஜெபத்தை ஏறெடுப்பதன் மூலம் ஆண்டவரை நோக்கித் திரும்புகிறார்கள். வாழ்க்கையின் சிறந்த கண்ணோட்டம் - ஜெபம் நிறைந்த மேல்நோக்கே!

ஆதார சத்தியம்

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால். அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிறதையியம். நாம் எதைக் கேட்டாலும். அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால். அவரிடத்தில் நாம் கேட்டவைகளை பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

ஆபிரகாமின் வாழ்க்கைச் சம்பவங்கள் நாள் 15

லோத்துவின் குமாரத்திகளுக்குக் குமாரர் பிறத்தல் *ஆதி 19:30 - 38*

ஈசாக்கு, இஸ்ரவேலுக்கு இடையில் போராட்டம் *ஆதி 21:8 - 13*

ஆகாரும் இஸ்ரவேலும் தள்ளப்படுதல் *ஆதி 21:14 - 21*

சாலாவின் மரணம் *ஆதி 11:15*

இஸ்மவேலின் குமாரர் *ஆதி 25:12 -16; 1நாளா 1:29 -31*

ஆபிரகாமுடன் அபிமெலேக்கின் உடன் படிக்கை *ஆதி 21:22 - 34*

ஆபிரகாம் ஈசாக்கைப்பலியிடுதல் *ஆதி 22:1 - 19*

ஆபிரகாம் நாகோரின் குடும்பத்தை அறிதல் *ஆதி 22:20 -24*

சாராளின் மரணம் *ஆதி 23:1 - 20*

யோபுவின் மரணம் *யோபு 42:16 -17*

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு சில சமயங்களில், ஆண்டவர் நம்மிடம் உரிமையுடன் எதிர்பார்க்கும் காரியங்கள் நடைமுறைக்கு ஒவ்வாத காரியங்களாகத் தோன்றலாம்; ஆயினும், அப்படிப்பட்ட நேரங்களில் கூட உண்மை விசுவாசம் நிலைதடுமாறாது. அவ்வாறாயின் விசுவாசம் என்றால் என்ன? இதைவிட நல்லதொரு வரையறை இருக்க முடியு மா?" எல்லாவற்றையும் விட்டுவிட்டு, நான் அவரையே நம்புகிறேன்.Forsaking All I Trust Him எல்லாவற்றையும் விட்டுவிட்டு நான் அவரையே நம்புகிறேன்.

ஆதார சத்தியம்

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது."(எபி 11:1)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 16 ஆபிரகாமின் மரணம்

ஈசாக்கு ரெபேக்காளை விவாகம் செய்தல்
ஆதி 24:1 - 67; 25:20

ஆபிரகாம் கேத்தூராளை விவாகம் செய்தல்
ஆதி 25:1

ஆபிரகாமின் பிள்ளைகள்
ஆதி 25:2 - 4 1நாளா 1:32 - 33

சேமின் மரணம்
ஆதி 11:11

ஏசா,யாக்கோபின் பிறப்பு
ஆதி 25:19, 21-26

ஈசாக்கு அனைத்துக்கும் சுதந்தரவாளி
ஆதி 25:5 -6

ஆபிரகாமின் மரணம்
ஆதி 25:7 -10

ஆபிரகாம் மரித்த பின் மீதியாக இருந்த குடும்பத்தினர்
1நாளா: 1:28; ஆதி:25:11

ஏபேரின் மரணம்
ஆதி:11:17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எவ்வளவு முக்கியமான மனிதனாக இருந்தாலும் எத்தனையோ காரியங்களைத் திறமையுடன் செயல்படுத்தியிருந்தாலும். ஒரு மனிதன் உலகில் வாழும் காலமும் அவனது கிரியைகளும் ஒரு எல்லைக்குட்பட்டவையே. ஆயினும் அப்படிப் பட்ட மனிதரின் மறைவை ஆண்டவர் அனுமதித்த போதிலும், கர்த்தர் தமது வேலையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கிறார்.

ஆதார சத்தியம்

"ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்." (யோவா 8:58)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

யாக்கோபு, ஈசாக், யோசேப்பு ஆகியோரது வாழ்நாட்களில் முக்கியமான இடங்கள்



நாள் 17 ஈசாக்கின் வாழ்க்கையிலுள்ள நிகழ்ச்சிகள்

பிறப்புரிமை விற்கப்படல்
ஆதி 25:27- 34

ஏசா, இரு கானானியப் பெண்களை விவாகம் செய்தல்
ஆதி 26:34-35

இஸ்மவேலின் மரணம்
ஆதி 25:17-18

பஞ்சமும், உடன்படிக்கை புதுப்பிக்கப் படுதலும்
ஆதி 126:1;1-5

ஈசாக்கு, ரெபேக்காளைப் பற்றி பொய் சொல்லுதல்
ஆதி 26:6-10

கேராரில் ஈசாக்கின் வெற்றி
ஆதி 26:11-16

கிணறு தோண்டும் ஈசாக்கு
ஆதி 26:17-22

பெயர் செபாவில் ஈசாக்கு உண்டாக்கிய பலிபீடம்
ஆதி 26:23-25

ஈசாக்கு அபிமலேக்குடன் செய்த ஒப்பந்தம்
ஆதி 26:26-33

யாக்கோபு ஏசாவின் ஆசீர்வாதத்தைப் பெறல்
ஆதி 27:1-46

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் தெளிவான கட்டளைகள் மீது சார்ந்து கொள்வதைவிட்டு, நமது மூளையின் மீது சார்ந்து கொள்ளும்போது, பிரபஞ்சத்தின் விதிகளுக்கு முரணாக நாம் நடந்து கொள்ள முயற்சிக்கின்றோம். ஒரு நல்ல முடிவை அடைவதற்காக, எந்தத் தவறான வழியையும் பயன்படுத்துவதில் தவறல்ல என்பது மனிதனின் ஒழுங்காக இருக்கலாம். ஆனால் அது தேவனின் திட்டமே அல்ல.

ஆதார சத்தியம்

"உன் சுய புத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக் கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." (நீதி 3:5-6)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

யாக்கோபின் சரித்திரம்

நாள் 18

யாக்கோபு லாபானின் வீட்டுக்கு அனுப்பப்படுதல்
ஆதி 28:1-5

பெத்தேலின் கனவு
ஆதி 28:10-22

ஆரோனில் சேருதல்
ஆதி 29:1-14

ராகேலுக்காக ஏழு ஆண்டுகள்
ஆதி 29:15-20

முதலில் லேயாள், பின்பு ராகேலை விவாகம் செய்தல்
ஆதி 29:21-31

ராகேலுக்காக வேலை செய்கையில் 12 பிள்ளைகளைப் பெறல்
ஆதி 29:32-34;
ஆதி 30:1-6; 29:35; 30:9, 7-8; 10-11,
ஆதி 30:14-18, 12-13, 19-20, 22-24 & 21

லாபானுடன் யாக்கோபு இருந்த இறுதி நாட்கள்
ஆதி 30:25-43; ஆதி 31:1-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"லாபான் திட்டம்" பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தேவனின் திட்டங்களுக்கு எதிராக, தங்கள் சொந்த ஞானத்தில் திட்டமிட்டுச் செயற்படுபவர்கள், தங்களைப் போலவே திட்டமிடக்கூடிய இன்னொருவருடன் நேருக்கு நேர் மோதிக்கொள்வது தவிர்க்க முடியாதது.

ஆதார சத்தியம்

"எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?" (எரே 17:9)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 19 ஏசாவின் சரித்திரம்

ஏசா மகலாத்தை மணந்து கொள்ளுதல்
ஆதி 28:6-9

ஏசாவின் விவாகங்களும், சந்ததியும்
ஆதி 36:1-30; 1 நாளா 1:35-42

ஏதோமின் மன்னர்: பேலா, முதல் அரசன்
ஆதி 36:31-33;1 நாளா 1:43-44

மற்ற அரசர்கள்
ஆதி 36:34-39; 1 நாளா 1:45-50

ஏதோமின் பிரபுக்கள்
ஆதி 36:40-43 1 நாளா 1:51-54

லாபானை விட்டு யாக்கோபு புறப்படல்
ஆதி 31:17-32

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நாம் பிடிவாதமாக வழி விலகிச் செல்லும் போதுங் கூட தேவன் அடிக்கடி தமது நோக்கத்தை எப்படி யாவது நிறைவேற்றி விடுகிறார். ஆனால் நாம் அவரது அழைப்பைக் கருத்தாகக் கவனித்து, அவருக்குக் காத்திருந்து செயற்படக் கற்றுக் கொண்டால் நமது வாழ்க்கையில் நேரிடக் கூடிய எத்தனையோ மனதுக்கங்களைத் தவிர்த்து விடக்கூடும்.

ஆதார சத்தியம்

"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்." (சங் 37:23)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

யாக்கோபு மறுபெயர் பெறுதல்

நாள் 20

லாபானை விட்டுப் பிரிதலின் தொடர்ச்சி
ஆதி 31:33-55

ஏசாவுடன் மீண்டும் சேருமுன் யாக்கோபு கொண்ட பயம்
ஆதி 32:1-23

யாக்கோபு தூதனுடன் போராடுதல்
ஆதி 32:24-32

யாக்கோபின் பெயர் மாற்றப்படுதல்
ஆதி 35:10

யாக்கோபு ஏசாவை சந்தித்தல்
ஆதி 33:1-16

யாக்கோபு சீகேமுக்குத் திரும்புதல்
ஆதி 33:17-20

தீனாள் தீட்டுப்படல்
ஆதி 34:1-12

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவரின் மற்றெல்லாவற்றையும் குறித்துப் பேசுவதை நிறுத்தி விட்டு. உன் பெயரை மட்டும் ஆண்டவரிடம் கூறும்படி எப்பொழுதாவது முன் வந்ததுண்டா? உன் பெயரென்ன? பயமா? மனக் கசப்பா? தானென்ற ஆணவமா? சுய பரிதாப உணர்வா? உன் பழைய பெயரை நீ ஒத்துக் கொள்ளும் வரை உனக்குப் புதிய பெயர் கிடைக்காது அதாவது அறிக்கையிடுதலே சுத்திகரிக்கும் வழி.

ஆதார சத்தியம்

"... என் புதிய நாமத்தையும் அவன் மேல் எழுது வேன் (வெளி 3:12) உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" (லூக் 10:20)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 21 யோசேப்பு விற்கப்படுதல்

யாக்கோபின் குமாரர் பழி வாங்குதல்
ஆதி 34:13-31

யாக்கோபு பெத்தேலுக்குத் திரும்புதல்
ஆதி 35:1-9; 11-15

பென்யமீன் பிறக்கும் போது ராகேலின் மரணம்
ஆதி 35:16-19; 48:7; 35:20-22

யாக்கோபு எபிரோனுக்குத் திரும்புதல்
ஆதி 35:27;37:1

யோசேப்பின் இளமைப்பருவமும், கனவுகளும்
ஆதி 37:2-11

அவன் சகோதர்களின் சதி
ஆதி 37:12-35

எகிப்துக்குள் விற்கப்படுதல்
ஆதி 37:36; 39:1

யூதாவின் மூன்று குமாரர்
ஆதி 38:1-5; 1நாளா 2:3

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

மனக்கசப்புடனும், பகையுணர்வுடனும் நடந்து கொள்வதற்கு அவர்களது துன்பங்களும் மகிழ்ச்சியற்ற சூழ்நிலைகளும் தான் காரணமென்று சிலர் கூறிக்கொள்வதுண்டு. ஆனால் ஆண்டவரது நோக்கமோ வாழ்க்கையின் சோதனைகளை நம்மை மனக்கசப்புள்ளவர்களாக மாற்றுவது அல்ல. மனதில் வளர்ச்சியடைந்த நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டுமென்பதே இப்பொழுது உன் வாழ்க்கையில் நேரிட்டுக் கொண்டிருக்கும் சம்பவங்களைக் குறித்து என் மனநிலை என்ன? நம்பிக்கையிழந்தா அல்லது மகிழ்ச்சியுடனா எப்படி அவற்றை எதிர்கொள்ளுகிறாய்?

ஆதார சத்தியம்

"தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (லூக் 10:20)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

யோசேப்பின் சரித்திரம்-தொடர்ச்சி நாள் 22

எகிப்தில் யோசேப்பின் ஆரம்ப நாட்கள்
ஆதி 39:2-6

விபசாரத்திற்கு விலகி, யோசேப்பு ஓடுதல்
ஆதி 39:7 -19

யோசேப்பு சிறையிலடைக்கப்படுதல்
ஆதி 39: 20 -23

யோசேப்பு பார்வோனின் கனவுக்கு பொருள்பெறுதல்
ஆதி 41:1 -37

லேவியின் குமாரர்
யாத். 6:16; எண். 3:17;1 நாளா. 6:1,16

யோசேப்பு சொப்பனங்களுக்கு விளக்கந்தருதல்
ஆதி 40:1-23

ஈசாக்கின் மரணம்
ஆதி 35:28 - 29

யோசேப்பு பார்வோனின் கனவுக்குப் பொருள் கூறுதல்
ஆதி 41: 1-37

யோசேப்பு எகிப்துக்கு அதிகாரியாகுதல்
ஆதி 41: 38 -44

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அரிய வாய்ப்புக்களை கஷ்டங்களைப் போல் காண்பிக்க தேவனிடம் அநேக அற்புதமான வழிகள் உண்டு. யோசேப்பு உட்பட நூற்றுக் கணக்கான வேதாகம மனிதர்கள் இதனைக் கண்டு கொண்டனர். நீங்கள் அதை அறிந்து கொண்டீர்களா?

ஆதார சத்தியம்

"ஞானிகளை வெட்க்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவை களைத் தெரிந்து கொண்டார்" (1 கொரி 1:27)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 23 தேவன் ஒரு குடும்பத்தை மீண்டும் இணைத்தல்

யோசேப்பு ஆஸ்நாத்தை மணமுடித்தல்
ஆதி 41:45

பரிபூரணமான ஏழு ஆண்டுகள்
ஆதி 41:46 - 49

யோசேப்பின் குமாரர் பிறப்பு
ஆதி 41:50 - 52

பரிபூரண ஆண்டுகளின் முடிவு
ஆதி 41:53

யூதாவும் தாமாரும்
ஆதி 38:6 - 26

ஏழு ஆண்டுகள் பஞ்சம்
ஆதி 41:54 - 57

பாரேஸ், சேராவின் பிறப்பு
ஆதி 38:27 - 30; 1நாளா 2:4

யோசேப்பு, தன் சகோதரருடன் மீண்டும் இணைதல்
அதி 42; ஆதி. 43:1 - 14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நாம் ஒதுங்கி, பிரிக்கப்பட்டுத் தனியாக காலங் கழிக்க நேரிடும் சமயங்களை, அர்த்தமற்றவையென்றோ, முக்கியமற்றவையென்றோ ஒதுக்கித் தள்ளாதபடி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பின்னால் நாம் எதிர்கொள்ள வேண்டிய ஆவிக்குரிய சவால்களை சந்திப்பதற்கு, கர்த்தர் தமது ஊழியக்காரரை இப்படிப்பட்ட நேரங்கள் மூலம்தான் பயிற்றுவிக்கிறார்.

ஆதார சத்தியம்

"...உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவார்..." (பிலி. 1:5)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

பஞ்சத்துக்குப் பதிலாக உணவு

நாள் 24

யோசேப்பு மீண்டும் சகோதரருடன் இணைக்கப்படுதல்
ஆதி 43:15 - 34; & 44 ம் அதி

யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்துதல்
ஆதி 45:1 - 15

யோசேப்பின் குடும்பம் எகிப்தில் குடியிருத்தல்
ஆதி 46:29 - 34; 47:1 - 12

அவனது ஞானமான தலைமைப் பொறுப்பு தொடர்கிறது
ஆதி 47:13 -26

யாக்கோபு செய்தியைக் கேள்விப்படுதல்
ஆதி 45:16 -28

யாக்கோபு எகிப்துக்குச் செல்லுதல்
ஆதி 46:1 -7 & 28

எகிப்துக்குச் சென்றவர்களின் விபரம்
ஆதி 46:8 - 27; யாத்: 1:1 -5

யாக்கோபின் கடைசி நாட்கள்
ஆதி 47:28 -31

யாக்கோபின் ஆசீர்வாதங்கள்
ஆதி 48:1 - 6; 8 - 22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

புறக்கணிக்கப்பட்டு, தூஷிக்கப்பட்டு, நிந்திக்கப்பட்டு, பொய்க் குற்றஞ்சாட்டப்பட்டு நிற்கும் மனிதர்கள் தங்கள் உள்ளத்தில் பகையுணர்வும், மனத்தாங்கலும் கொள்ளாமலிருப்பது மிக அரிது. ஆனால் அப்படியிருக்கக் கூடும்: யோசேப்பு அவ்வாறு நடந்து கொண்டான்: இயேசு நாதர் நடந்து கொண்டார். ஆகவே கர்த்தரின் பெலத்தில் நீயும் அவ்வாறு நடந்து கொள்ளக்கூடும்.

ஆதார சத்தியம்

"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத் 6:14)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 25 ஒரு உண்மையான உத்தம முற்பிதா

யாக்கோபு தன் 12 குமாரரிடம் பேசுதல்
ஆதி 49:1 -32

யாக்கோபின் மரணம்
ஆதி 49:33

யாக்கோப்பின் அடக்கம்
ஆதி 50:1-14

யோசேப்பு, மீண்டும் சகோதரருக்கு உறுதியளித்தல்
ஆதி 50:15 -21

எஸ்ரோனின் பிறப்பு
ரூத் 4:18; 1நாளா 2:5

சேராவின் சந்ததியார்
1நாளா: 2:6 -8

யோசேப்பின் பிந்திய நாட்கள்
ஆதி 50:22 -23

யோசேப்பின் கடைசி வார்த்தைகள்
ஆதி 50:24 -25

யோசேப்பு, அவன் சகோதரரின் மரணம்
ஆதி 50:26 யாத்: 1:6

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அபாயங்கள், கஷ்டங்களில்லாத ஒரு வாழ்க்கை தருவதாக தேவன் வாக்களிக்க வேயில்லை. ஆனால் ஒன்று மட்டும் அவர் வாக்களிக்கிறார். எல்லா சூழ்நிலைகளிலும், பிரச்சினைகளிலும், அவரது ஞானம் செயல்பட்டு, களிம்பை நீக்கி சுத்தப் பொன்னாக மாற்றும் என்பதை மட்டும் அவர் உறுதிப் படுத்துகிறார்.

ஆதார சத்தியம்

"அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுண்டாகக் காணப்படும்." (1பேது 1:7)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
யாத்திராகமம் இரண்டாவது பழைய ஏற்பாட்டுச் சட்டப் புத்தகம்	மோசே	எகிப்திலிருந்து விடுவிக்கப்படல். கொள்ளைநோய். பஸ்கா, வெளியேற்றம். கற்பனைகள் கொடுக்கப்படுதல்.

மோசேயின் பிறப்பும் ஊழிய அழைப்பும் நாள் 26

இஸ்ரவேல் ஜனத்தொகை பெருகுதல்
ஆதி 47:27 யாத்.1:7

எகிப்தின் அடிமைத்தனமும், துன்பமும்
யாத் 1:8 -14

மோசேயின் ஆரம்ப நாட்கள்
எண் 26:59; யாத்: 6:20

இஸ்ரவேலின் ஆண் குழந்தைகளின் மரணம் அறிவிக்கப்படுதல்
யாத் 1:15 -22

ஆரோனின் பிறப்பு
1நாளா.23:13

மோசேயின் பிறப்பு
யாத் 2:1 -9

மோசேயின் குழந்தைப் பருவம்
யாத் 2:10

ஆரோனின் குடும்பம்
யாத் 6:23; எண்.26.60; 1நாளா 6:49

மோசே எகிப்தியனை வெட்டுதல்
யாத் 2:11-15

கர்த்தர் இஸ்ரவேலரின் அங்கலாய்ப்பைக் கேட்டல் *யாத் 2:23 -25*

மோசே, மீதியானுக்கு ஓடிப்போகுதல்
யாத் 2:16 -20

மோசே, சிப்போராளை விவாகம் செய்தல்
யாத் 2:21 -22

மோசேயின் குமாரர்கள்
1 நாளா. 23:14 -15

பினெகாசின் பிறப்பு
யாத் 6:25

மோசே, தன் ஊழியத்தைப் பெற்றுக்கொள்ளுதல்
யாத் அதி 3

மோசேயின் மறுப்புக்கள்
யாத் 4:1 -13

மோசே உடன்படுதல்
யாத் 4:14 -18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவரின் 'பொறுமையின் பள்ளிக்கூடத்தில் பயின்று பட்டம் பெற்ற பின்னரே, ஆண்டவரது ஊழியத்தைத் திறமையாகச் செய்ய முடியும். பொறுமையின் ஒரு விளக்க உரை, "சீறி மேல் நோக்கி பாயுமுன்பு, எண்ணைக் கீழ் நோக்கி எண்ணக்கூடிய (Count down) திறமை".

ஆதார சத்தியம்

"ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்." (எபி 12:1)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
யாத்திராகமத்தில் உள்ள நிகழ்வுகள் புதிய ஏற்பாட்டைப் பிரதிபலிக்கின்றன. எபி. 4:14, 1கொரி 5:17	யாத்திராகமம் தேவன் தன்னுடைய மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறார் என்று காட்டுகிறது.	யாத் 19:5

நாள் 27 மோசே தலைவனாகுதல்

மோசே - விடுதலை தருபவன்
யாத் 4:19 - 29

மோசே ஜனங்களிடம் கூறுதல்
யாத் 4:30 - 31

இறுதிக்கட்டளைகள்
யாத் 6:1 - 13; 26-30; 7:1 - 6

பார்வோனுடன் முதல் சந்திப்பு
யாத் 7:7

கோல்கள் சர்ப்பங்களாகின்றன
யாத் 7:8 - 14

மோசே பார்வோனுடன் வழக்காடுதல்
யாத் 5:1 - 3

பார்வோனின் சுமைகள் அதிகரித்தல்
யாத் 5:4 - 23

மோசேக்குக் கொடுக்கப்பட்ட பத்து வாதைகள்

1. நதி இரத்தமாகுதல்
யாத் 7:15 - 25

2. தவளைகள்
யாத் 8:1 - 15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இந்த வாழ்க்கை வெற்றியுள்ளதாக அமைய வேண்டுமானால், நாம் மையக் கருத்தாகக் கருத வேண்டிய ஒரு உண்மையுண்டு. தேவனின் சித்தத்தை அரைகுறை கீழ்ப்படிதலுடன் சுற்றி வர முடியாது. முழு கீழ்ப்படிதலுக்குக் குறைவான எந்தக் கீழ்ப்படிதலும் கீழ்ப்படியாமையே ஆகும்.

ஆதார சத்தியம்

"தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்த முள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே..." (எபே. 1:4)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

தேவன் வாதையைத் தொடருகின்றார் நாள் 28

3. பேன்கள்
யாத் 8:16 - 19

4. வண்டுகள்
யாத் 8:20 - 32

5. கொள்ளைநோய்
யாத் 9:1 -7

6. கொப்புளங்கள்
யாத் 9:8 - 12

7. கல்மழை
யாத் 9:13 - 15

8. வெட்டுக் கிளிகள்
யாத் 10:1 - 13; 12:1 -2; 10:14 - 20

9. காரிருள்
யாத் 10:21 - 27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எவ்வளவுக்கு அதிகமாக தேவனின் வார்த்தைக்கு எதிர்த்து நின்று, அவரது கட்டளைகளுக்கு இணங்க மறுக்கிறோமோ, அவ்வளவுக்கு அதிகமாக நமது இருதயம் கடினப்பட்டு, பிடிவாதத்தால் நிறைந்துவிடும். நமது வழியில்தான் போகவேண்டுமென்று நாம் பிடிவாதமாக நிற்கும்போது, தேவனும் நம்மை நமது வழியில் போக அனுமதித்து விடலாமென்பது தான் மிகப் பயங்கரமான ஆபத்து.

ஆதார சத்தியம்

"ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே." (எபி: 10:31)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

10. தலைப்பிள்ளை சங்காரம்: எச்சரிப்பு
யாத் 11:1 - 8

பார்வோன் சமரச பேச்சு வார்த்தைகளை நிராகரித்தல்
யாத் 10:28 - 29

பார்வோனின் இருதயம் கடினப்படுதல்
யாத் 11:9 - 10

பஸ்காவின் நியமன விதிகள்
யாத் 12:3-12

இரத்தத்தின் முக்கியத்துவம்
யாத் 12:13 - 27

இஸ்ரவேலரின் கீழ்ப்படிதல்
யாத் 12:28

எகிப்தியரின் தலைப்பிள்ளைகள் சங்காரம்
யாத் 12:29

எகிப்தியர் அவர்களை உடனே புறப்படச் சொல்லுதல்
யாத் 12:30 -36

விடுதலையின் ஆரம்பம்
யாத் 12:40 -42; எண். 33:1 - 4

ராமசேஸிலிருந்து சுக்கோத்துக்கு
யாத் 12:37; எண். 33:5

சுக்கோத்தில்
யாத். 12:38 - 39; 43 - 51

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலரின் வாழ்க்கையில் மிகப்பெரிய கொண்டாட்டம் பஸ்கா பண்டிகையாகும். எகிப்திலிருந்து அவர்கள் பெற்றுக் கொண்ட விடுதலையை நினைவுகூர்ந்து அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறார்கள். நீயோ, அதைவிடப் பெரிய விடுதலையை அனுபவித்திருக்கிறாய். உன் உள்ளத்தை அது களிகூரப்பண்ணுகிறதா?

ஆதார சத்தியம்

"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே" (1 கொரி 5:7)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நியாயப் பிரமாணப் புத்தகங்கள்

பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களானஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் ஆகியவை பஞ்சாகமங்கள் என்றழைக்கப்படுகின்றன.

பழைய ஏற்பாட்டில் பஞ்சாகமத்தின் மற்றப் பெயர்கள்:

* நியாயப் பிரமாணம் *(எஸ்றா. 10:3)*
* மோசேயின் நியாயப் பிரமாணப் புத்தகம் *(நெகே.8:1)*
* மோசேயின் புத்தகம் *(நெகே.13:1)*
* கர்த்தரின் நியாயப் பிரமாணம் *(1நாளா16:40)*
* தேவனுடைய நியாயப் பிரமாணம் *(நெகே.10:28)*
* தேவனுடைய நியாயப் பிரமாணப் புத்தகம் *(நெகே.8:18)*
* கர்த்தருடைய நியாயப் பிரமாணப் புத்தகம் *(நெகே.9:3)*
* மோசேயின் நியாயப் பிரமாணம் *(தானி.9:11)*

புதிய ஏற்பாட்டில் பஞ்சாகமத்தின் பெயர்கள்:

* நியாயப் பிரமாண புத்தகம் *(கலா 3:10)*
* மோசேயின் புத்தகம் *(மாற்கு 12:26)*
* கர்த்தரின் நியாயப் பிரமாணப் புத்தகம் *(லூக்கா 2:23 -24)*

வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள் மனுக்குலத்திற்கான தேவனுடைய சட்டங்களை விவரிக்கின்றன.

யாத்திரை ஆரம்பம்



நாள் 30 செங்கடலைக் கடத்தல்

பஸ்கா நியமனங்கள்
யாத் 13:1 -19

சுக்கோத்திலிருந்து ஏத்தாமுக்கு
யாத் 13:20 எண் 33:6

அக்கினி ஸ்தம்பமும். மேகஸ்தம்பமும்
யாத் 13:21 -22; 14:1 -2

ஏத்தாமிலிருந்து மிக்கோலுக்கு முன்பாக
எண்.33:7

பார்வோன் பின்தொடரல்
யாத் 14:3 -20

செங்கடலைக் கடத்தல்
யாத் 14:21-31

வெற்றியின் கீதம்
யாத் 15:1 -21

இவ்விமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்பிவித்து இரட்சித்தார். கடற்கரையிலே எகிப்தியர் செத்துக் கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்டார்கள்.
யாத்திராகமம் 14:30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இந்த வேளையில், தேவன் உன்னை வனாந்தரத்தில் வைத்திருக்கிறாரா? தன் மீது சார்ந்து கொள்ளும் பாடத்தை உனக்குக் கற்றுக் கொடுக்கவே இதைச் செய்திருக்கிறார். தேவன் தன்னைத்தவிர வேறு யார் மீதும் சார்ந்து கொள்ள விடமாட்டார்.

ஆதார சத்தியம்

"அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார்: இப்பொழுதும் தப்புவிக்கிறார்: இனியும் தப்புவிப்பாரென்று அவரை நம்பியிருக்கிறோம்." (II கொரி 1:10)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

வனாந்தரத்தினுள்ளே...

நாள் 31

சூர்வனாந்தரத்துக்குள்
யாத் 15:22

சூரிலிருந்து மாராவுக்கு
யாத் 15:23-26; எண் 33:8

மாராவிலிருந்து ஏலிமுக்கு
யாத் 15:27; எண். 33:9

ஏலிமிலிருந்து சீன் வனாந்தரத்துக்கு
யாத் 16:1; எண். 33:10 - 11

உணவுக்காக முறுமுறுப்பு
யாத் 16:2-3

மன்னா வாக்குப் பண்ணப்படல்
யாத் 16:4- 13

மன்னா கொடுக்கப்படல்
யாத் 16:14-22; 31-36

ஓய்வு நாளின் பிரமாணம்
யாத் 16:23 -30

சீன் வனாந்தரத்திலிருந்து ரெவிதீமுக்கு
யாத் 17:1; எண் 33:12 - 14

தண்ணீர் கிடைக்காமல் முறுமுறுத்தல்
யாத் 17:2 - 4

ஓரேப் மலையின் கன்மலையிலிருந்து தண்ணீர்
யாத் 17:5 -7

அமலேக்குடன் யுத்தம்
யாத் 17:8 -16

ரெவிதீமிலிருந்து சீனாக்கு
யாத் 19:1-2; எண் 33:15

நியாயப் பிரமாணம் கொடுத்தல் உடன் படிக்கை பரிசீலிக்கப்பட்டு சில நியமங்கள் கொடுக்கப்படல்
யாத் 19:3 - 18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஏன் ஆண்டவர் நம்மை நல்ல நாட்களையும், மோசமான நாட்களையும் கடந்து செல்ல அனுமதிக்கிறாரென்று எப்போதாவது சிந்தித்திருக்கிறாயா? செழிப்பான நாட்கள் ஒரு பொழுதும் கற்றுக் கொடுக்கக் கூடாத பாடங்களை, வறண்ட எதிரிடையான நாட்கள்தான் கற்றுத்தர முடியும்! அதனால்தான் இரண்டு விதத்தையும் அனுமதிக்கிறார்.

ஆதார சத்தியம்

"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது: நமக்கு எச்சரிப் புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது." (I கொரி10:11)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

இதயத்திற்கு இதயம்

ஜனவரி

நீங்கள் வேதத்தினூடாக பன்னிரண்டில் ஒரு பகுதியை நிறைவு செய்துவிட்டீர்கள். சிலர் கஷ்டமாக இருந்ததென்றும் தவறவிட்டுவிட்டேன் என்றும் அதைரியப்படவேண்டாம். அறிமுகத்தில் கூறிய பிரகாரம் தேவனிடம் உதவி செய்யுமாறு கேளுங்கள். உங்களுக்காக எமது அமைப்பிலுள்ளவர்கள் ஜெபிக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையைக் கிரமமாகத் தினமும் வாசிப்பதனால் ஆழமான ஆவிக்குரிய தன்மையைக் கட்டி எழுப்பமுடியும்.

2

இந்தப் பகுதியில்....

தனது மக்களுக்கு தேவனுடைய கற்பனைகள்.
கூடாரத்தை அமைத்துக் கொள்ளல்.
ஆசாரியரின் ஊழியம்.
வனாந்தரத்தில் இஸ்ரவேலர் களித்தகாலம்

பத்து கற்பனைகள்

உறவினர்கள் மோசேயை வந்து பார்த்தல்
யாத் 18:1-12

எத்திரோவின் ஞானமான ஆலோசனை
யாத் 18:13-27

மோசே, தேவனைச் சந்திக்க, இஸ்ரவேலரை ஆயத்தப்படுத்தல்
யாத் 19:9-15

மோசே இஸ்ரவேலரை மலையிலிருந்து அப்புறப்படுத்துதல்
யாத் 19:16-25

பத்துக் கற்பனைகள் அளிக்கப்படல்
யாத் 20:1-10; 12-20

பலிபீடத்தைக் குறித்த நியமனங்கள்
யாத் 20:21-26

பல விதிகள் கொடுக்கப்படல்; எஜமானரும் வேலைக்காரர்களும்
யாத் 21:1-11

மக்களுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து
யாத் 21:12-36

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எல்லாத் தலைமுறைகளிலும், எல்லா மனிதரும் கைக்கொள்ளும்படி தேவன் கொடுத்துள்ள நீதி போதனைகளின் ஒழுங்கு விதிகளே பத்துக் கற்பனைகள் ஆகும். நீதி வழியில் நடப்பது குறித்து அவ்வளவு உறுதியாக, ஆண்டவர் இல்லாதிருந்தால், பத்து ஆலோசனைகள் என்று கொடுத்திருப்பார் பத்துக் கட்டளைகள் கொடுத்திருக்க மாட்டார்!

ஆதார சத்தியம்

"அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் ...." (எபி.10:16)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

இஸ்ரவேலுடன் தேவனின் உடன்படிக்கை நாள் 33

சொத்துரிமை
யாத் 22:1-15

மக்களுக்கு விரோதமான குற்றங்கள்
யாத் 22:16-31; 23:1-9

நிலமும், ஓய்வு நாளும்
யாத் 23:10-13

மூன்று தேசிய பண்டிகைகள்
யாத் 23:14-19

ஆண்டவர் இஸ்ரவேலோடு செய்த உடன்படிக்கை, வருங்கால வெற்றிகள்
யாத் 23:20-23

பலிபீடம் கட்டப்படல்
யாத் 24:3-8

மோசே சீனாய் மலை மேலேறுதல்
யாத் 24:1-2,9-15

நாற்பது நாட்கள் போதனைகள் ஆரம்பம்
யாத் 24:16-18

ஆசரிப்புக் கூடாரத்துக்குரிய - பட்டியல் தேவையான பொருட்கள்
யாத் 25:1-9

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"எவ்வளவு தான் மங்கிப் போய்விட்டாலும், எழுதப் பட்டுள்ள ஒரு காரியம் மிகச்சிறந்த ஞாபக சக்தி யுள்ளவரின் மனதில் இருப்பதைவிட சிறந்தது; ஏனெனில் அது மறக்கப்படாதிருக்க வாய்ப்பு 'அதிகம்' என்று கன்பூசியஸ் கூறினார். வேதாக மத்தில் கர்த்தரின் கொள்கைகள் எழுதப்படா திருந்தால், எவ்வளவு எளிதாக மறக்கப்பட்டிருக் கக்கூடும்! வேதாகமத்திற்காக நன்றியுள்ளவர் களாக இருக்கிறோமோ?

ஆதார சத்தியம்

"கர்த்தருடைய வசனமோ என்றென் றைக்கும் நிலைத்திருக்கும்: உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகின்ற வசனம் இதுவே." (1பேது 1:25)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 34 ஆசரிப்புக் கூடாரம்

உடன்படிக்கை பெட்டி
யாத் 25:10-22

சமூகத்தப்ப மேஜை
யாத் 25:23-30 லேவி 24:5-9

பொன் குத்து விளக்கு
யாத் 25:31-40

பல நூல்களினாலான மூடு திரைகள்
யாத் 26:1-6

ஆட்டு மயிரிலான மூடு திரைகள்
யாத் 26:7-13

ஆட்டுக் கடாத் தோலினால் கூடார மூடி
யாத் 26:14

பலகைகளும் கழுந்துகளும்
யாத் 26:15-25

தாழ்பாள்கள்
யாத் 26:26-27

பொன் தகட்டால் மூடுதல்
யாத் 26:29-30

உள்திரை
யாத் 26:31-35

வெளித்திரை
யாத் 26:36-37

வெண்கல பலிபீடம்
யாத் 27:1-7

பிரகாரம்
யாத் 27:9-15

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

தமது பிள்ளைகளை வந்து பார்த்து விட்டுத் திரும்பிப் போக அல்ல: அவர்களுடனயே தங்கியிருக்க வேண்டுமென்பதே தேவனின் மிகப் பெரிய வாஞ்சையாகும். ஆண்டவர் நம்மிடம் வந்து செல்வதே மிக அற்புதமான காரியமாக இருக்கிறது. அப்படியானால் அவர் வந்து நம்முடனேயே தங்கிவிட்டால், எவ்வளவு மகிமை நிறைந்த காரியமாக இருக்கும் ஆசீர்வாதமான இம்மானுவேல்! (தேவன் நம்மோடிருக்கின்றார்.)

ஆதார சத்தியம்

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்படத்தக்கதாகிய இந்தச் சிருஷ்டி சம்மந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும், உத்தமமான கூடாரத்தின் வழியாக ....." (எபி. 9:11)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

கூடாரம் - தேவன் மக்களுடன் வாழ்ந்தார்



பன்னிரண்டு கோத்திரங்களும் பாளையத்தில் பெற்ற இடங்கள்

தாண்

ஆசேர் **நப்தலி**

பென்யமீன் மெராரியர் **இசக்கார்**

ஆசாரிப்புக் கூடாரம்

எப்பிராயீம் கெர்சோனியர்  ஆரோனின் குமாரர் **யூதா**

மானசே கோகாத்தியர் **செபுலோன்**

காத் **சிமியோன்**

ரூபன்

நாள் 35 ஆசரிப்புக் கூடாரத்துக்குத் தேவையான பொருட்கள்

பிரகாரமான வாசலுக்குத் தொங்கு திரை
யாத் 27:16-19

விளக்குக்கு எண்ணெய்
யாத் 27:20-21; லேவி 24:1-4

தூப பீடம்
யாத் 30:1-16

வெண்கலத் தொட்டி
யாத் 30:17-21

சுகந்த வர்க்கம், வாசனைத் திரவியங்கள்
யாத் 30:22-38

வேலையாட்கள்
யாத் 31:1-11

ஆசாரியருக்குரிய பொருட்கள்
யாத் 28:1

ஆசாரியரின் உடைகள்
யாத் 28:2-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நீ ஒரு விசுவாசியானால், நீயும் ஒரு ஆசாரியனே. நீயும் ஆண்டவரின் சமூகத்தில் பிரவேசித்து, எவ்வித பயமும் திகிலுமின்றி, அங்கு தங்கி தாபரிக்கலாம். எவ்வளவு பரவசமான ஊழியம்! நீ அதைப் பயன்படுத்துகிறாயா?

ஆதார சத்தியம்

"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்." (2 கொரி 5:1)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

ஆசாரியத்துவம் நாள் 36

ஆசாரியரின் உடைகள் பற்றிய தொடர்ச்சி
யாத் 28:31-43

ஆசாரியரின் அபிஷேகம்
யாத் 29:1-25

ஆசாரியரின் உணவு
யாத் 29:26-37

இடைவிடாத பலி
யாத் 29:38-46

ஓய்வு நாளின் ஓய்வு
யாத் 31:12-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அடிக்கடி உன் மனதில் தோன்றுகின்ற எண்ணங்களை எழுதும்படி உன்னைக் கேட்டால். அது எதைப் பற்றியதாக இருக்கும்? பணமா? புகழா? சிற்றின்பமா? தேவனா? உன் எண்ணங்களின் மையமாக தேவன் இல்லாதிருந்தால். அவருக்குக் கொடுக்க வேண்டிய அந்த மைய இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது ஏதுவோ. அதுவே ஒரு விக்கிரமாகும்.

ஆதார சத்தியம்

"அந்தப்படி. மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்ட தாயிருக்கின்ற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல். பரலோகத்தில் தானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்." (எபி 9:24)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 37 மோசேயின் கோபமும் கற்பலகைகள் உடைபடுதலும்

பொற்கன்றுக்குட்டி
யாத் 32:1-6

மோசேயின் கோபம்
யாத் 32:7-29

மோசேயின் ஜெபமும் ஆண்டவரின் பதிலும்
யாத் 32:30-35

தற்காலிக ஆசாரிப்பு கூடாரம் எழுப்பப்படல்
யாத் 33:7-11

மோசே தேவனோடு பேசுதல்
யாத் 33:12-23

கல்வெட்டியெடுக்கப்பட விதிமுறைகள்
யாத் 34:1-3

இன்னும் 40 நாட்கள் மலை மீது: கற்பலகை மீண்டும் செய்யப்படல்
யாத் 34:4

ஒழுங்கு விதிகள் புதுப்பிக்கப்படல்
யாத் 34:5-28

தேசத்துக்குரிய விதிகள் ஓய்வு ஆண்டு
லேவி 25:1-7

யூபிலி ஆண்டுகள்
லேவி 25:8-24

தேசத்துக்குரிய விதிகள் ஓய்வு ஆண்டு
லேவி 25:1-7

யூபிலி ஆண்டுகள்
லேவி 25:8-24

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நாம் பாவத்திற்குள் விழுந்துவிட்டால், வீண் சாக்குப் போக்குகளும்: நியாயங்களும் கூறினால் அதைவிட்டு வெளிவர முடியாது: ஆனால் உண்மையான மனஸ்தாபத்தினால் எழும் செய்கைகளினால் மட்டுமே அதிலிருந்து வெளியேற முடியும். மனிதன் தனது பாவத்தை மறைக்க முயலும் வேளை அதனை கூட்டிக் கொள்ளுகிறான்: ஆனால் தேவன் பாவத்தை மூடும்போது அதை சித்தியமாகப் போக்கடித்து விடுகிறார்.

ஆதார சத்தியம்

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கின்றார்." (1 யோ.1:9)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

மேலும் விதிகள்

நாள் 38

சுதந்திரத்தை மீட்டுக் கொள்ளுதல்
லேவி 25:25-34

ஏழைகளைப் பராமரித்தல்
லேவி 25:35-46

தரித்திரரை மீட்குதல்
லேவி 25:47-55

மற்ற விதிமுறைகள் - ஆசீர்வாதம் பெற நிபந்தனைகள்
லேவி 26:1-13

தண்டனைகளைக் குறித்த எச்சரிப்பு
லேவி 26:14-31

சிதறடிக்கப்படல் முன்னறிவிக்கப்பட்டது
லேவி 26:32-39

உடன்படிக்கை நிலைநிற்கும் (நிபந்தனைக்குட்பட்டு)
லேவி 26:40-46

பிரதிஷ்டை செய்யப்பட்ட பொருட்களும் மனிதரும் (வரி)
லேவி 27:1-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும், ஆண்டவரின் எச்சரிப்பு அடையாளங்கள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன - பார்க்கக்கூடிய கண்கள் உள்ளவர்கள் யாவரும் பார்க்கும்படியாக அவை காட்சியளிக்கின்றன. ஆண்டவர் தெளிவாகக் காண்பிக்காத ஒரு விதியை நிறைவேற்றுமாறு என்னைக் கட்டாயப்படுத்தினாரென்று யாரும் அவரைக் குற்றப்படுத்தவே முடியாது.

ஆதார சத்தியம்

"அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டடிருக்கிறீர்கள் .... - அவரே, தேவனால் நமக்கு ஞானமும், நீதியும் பரிசுத்தமும், மீட்புமானார்" (1 கொரி. 1:30,31)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 39 ஆசரிப்புக் கூடாத்திலுள்ளவை

பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆட்களும் பொருட்களும் (வரி) தொடர்ச்சி
லேவி 27:14-25

தேவனுக்குச் சொந்தமான மூன்று பொருட்களும்
லேவி 27:26-34

தேவனின் மகிமையால் மோசேயின் முகம் பிரகாசித்தல்
லேவி 34:29-35

ஆசரிப்புக்கூடாரம் கட்டப்படுதல் பொருட்கள் மக்களால் கொடுக்கப்படல்
யாத் 35:4-29:36:1-7

உடன்படிக்கைப் பெட்டி
யாத் 37:1-9

சமூகத்தப்ப மேசை
யாத் 37:10-16

பொன் குத்துவிளக்கு
யாத் 37:17-24

நூலினாலான திரைகள்
யாத் 36:8-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒருவரது வருமானத்திற்குத் தக்கபடி கொடுப்பது வேதாகமக் கொள்கையில் ஒன்றாகும். தங்கள் வருமானத்திற்குத் தக்கதாகக் கொடுக்காதவர்களின் வருமானத்தை, அவர்கள் கொடுத்ததற்குத் தக்கதாக ஆண்டவர் சரிப்படுத்தி விடுவார்!

ஆதார சத்தியம்

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்: அமுக்கி குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து; உங்கள் மடியிலே போடுவார்கள்: நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும்." (லூக். 6:38)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

பிரதான ஆசாரியரும் அவரது உடைகளும்



இயேசுவே நம்முடைய மகா பிரதான ஆசாரியர் *(எபி 4:14)*

நாள் 40 ஆசரிப்புக் கூடாரம் கட்டப்படுதல்

ஆசரிப்புக் கூடாரப் பொருட்கள் - தொடர்ச்சி: ஆட்டுத் தோலினாலான மூடு திரைகள்
யாத். 36:14-18

ஆட்டுக் கடாத் தோல் மூடி
யாத் 36:19

பலகைகளும் கழுந்துகளும்
யாத் 36:20-30

வெளித் தாழ்ப்பாள்
யாத் 36:31-32

நடுத்தாழ்ப்பாள்
யாத் 36:33

தங்கத் தகட்டால் மூடுதல்
யாத் 36:34

உள்திரை
யாத் 36:35-36

வெளித்திரை
யாத் 36:37-38

வெண்கல பீடம்
யாத் 38:1-7

பிரகாரம்
யாத் 38:9-17

பிரகார வாசலுக்கு தொங்கு திரை
யாத் 38:18-20

சுகந்த வாசனைப் பீடம்
யாத் 37:25-28

வெண்கலத் தொட்டி
யாத் 38:8

சுகந்த வாசனையும் நறுமணமும்
யாத் 37:29

பணியாட்கள்
யாத் 35:30-35

ஆசாரியத்துவப் பொருட்கள் - ஆசாரியரின் உடைகள்
யாத் 39:1-31

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நமது பெரிய பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து, நம்மை இரட்சிக்கும் பணியை ஏற்றுக் கொண்ட போது, தாழ்மையின் வஸ்திரங்களைத் தரித்து, மனஉறுதி என்றும் கச்சையினால் தம்மை இடைகட்டிக் கொண்டு, சபையென்னும் ஆவிக்குரிய இஸ்ரவேலரைப் பொறுப்பெடுத்துக் கொண்டார்: ஒரு நாளிலே, நம்மைப் பூரணராக பிதாவின் முன் நிறுத்துவார்.

ஆதார சத்தியம்

"வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம்." (எபி. 4:14)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

லேவியரின் கடமைகள் நாள் 41

ஓய்வுநாள் இளைப்பாறுதல்
யாத் 35:1-3

ஆசரிப்புக் கூடாரக் கட்டுமானத்தின் தொகுப்புரை
யாத் 38:21-3; 39:32-43

சபையோரை விழிப்படையச் செய்ய எக்காளங்கள் பயன்படுத்துதல்
எண் 10:1-10

சேவை செய்யத் தயாராக ஆசரிப்புக் கூடாரம்
யாத் 40:1-15

சீனாய் வனாந்தரத்தை விட்டு வெளியேறு முன்னர் கைக்கொள்ள வேண்டிய கடமைகள் குறித்த அறிவுரைகள் – லேவிய வம்சத்துக்கு
எண் 3:5-13

லேவியரின் குடும்பத்தினருக்கு
எண் 3:14-16; 21-24

லேவியரின் குமாரரின் பொறுப்புகள்
எண் 3:25-39

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சீனாயில் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை கற்றுக் கொண்டு முன்னேறிச் செல்ல, இஸ்ரவேலர் ஒரு முழு ஆண்டுகாலம் எடுத்துக் கொண்டார்கள். நமது ஆவிக்குரிய பயணத்திலும், நாம் அவருக்கு ஒத்துழைப்பும், கீழ்ப்படிதலும் கொடுக்காமலிருக்கிற படியால், ஒரே இடத்தில் முன்னேற்றம் எதுவுமின்றி எவ்வளவு காலம் ஆண்டவர் நம்மை நிறுத்தி வைக்க வேண்டியதாயிருக்கிறது?

ஆதார சத்தியம்

"..... பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம் ....." (1 சாமு. 15:22)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 42 கடமைகள் பிரித்துக் கொடுக்கப்படல்

முதற்பேறான பிறப்புக்கள் மீட்கப்படுதல்
எண் 3:40-51

கோகாத்தியரின் பணிகள்
எண் 4:1-15

எலியேசரின் உத்தியோகம்
எண் 4:16-20

லேவியரின் சுத்திகரிப்பு
எண் 8:5-26

கெர்சோனியரின் பணிகள்
எண் 4:21-28

மெராரியரின் கடமைகள்
4:29-49

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்தவ வட்டாரங்களில் அடிக்கடி கூறப்படும் ஒரு பழமையான வாசகம். நாம் சேவை செய்யவே இரட்சிக்கப்பட்டோம். (Saved to Serve) அது உண்மையே. தேவன் நமக்கு அருளியுள்ள வரங்களையும் பயன்படுத்தும் போது மகிழ்ச்சி பிறக்கிறது. சோம்பேறி கிறிஸ்தவன் தான் மகிழ்ச்சியற்ற கிறிஸ்தவனாயிருப்பான்.

ஆதார சத்தியம்

"அப்படியிருக்க சகோதரரே. நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமாமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று. தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்: இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

ஆசாரிப்புக் கூடாரப்பணி நிறைவு பெறுதல் நாள் 43

சொல்லப்பட்ட விதிகளின்படியே மோசே எல்லாவற்றையும் செய்தல்
யாத் 40:16-33

ஆரோன் விளக்குகளை ஏற்றுதல்
எண் 8:1-4

ஆசரிப்புக் கூடாரத்தை மேகம் மூடுதல்
யாத் 40:34-35

ஆசரிப்புக் கூடாரம், பலிபீடம் அபிஷேகம் பண்ணப்படும் போது, காணிக்கைகளும் வெகுமதிகளும் கொண்டு வரப்படல்
எண் 7:1-77

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் ஊழியத்துக்கு எவ்வளவு திறமையாக அல்லது பயனுள்ள முறையில் மனிதக் கரங்கள் அள்ளிக்கொடுத்தாலும், அதற்கு நோக்கமும், அர்த்தமும் கொடுக்கக் கூடிய காரியம் ஒன்றே ஒன்று தான் - தேவனின் மகிமை அதன் மீது தங்கியிருப்பதேயாகும். அவரின்றி, நாம் எவ்வளவு சிறப்பாக காரியங்களைச் செய்தாலும், அது ஒன்றுமேயில்லை.

ஆதார சத்தியம்

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." (யோவா 1:14)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 44 ஆசாரிய ஊழியம்

காணிக்கைகள், வெகுமதிகள் கொண்டு வரப்படல்
எண் 7:78-88

மோசே கர்த்தரின் குரலை கேட்குதல்
எண் 7:89

ஆரோனின் குமாரரின் ஊழியம் விவரிக்கப்படுதல்
எண் 3:1-3; லேவி 7:35-36

ஆரோன் அபிஷேகிக்கப்படல்
லேவி 8:1-36

ஆசாரிய ஊழியம் ஆரம்பித்தல்
லேவி 9:1-24

நாதாப், அபியூவின் அந்நிய அக்கினி
லேவி 10:1-7; எண் 3:4

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உன் உள்ளமாகிய பலிபீடத்தில் எப்படிப்பட்ட அக்கினி எரிகிறது? - ஆவிக்குரிய அக்கினியா? அந்நிய அக்கினியா? அந்நிய அக்கினி இந்த உலகத்திலிருந்து எழும்பி வருவது; ஆனால் ஆவிக்குரிய ஆக்கினியோ, பரத்திலிருந்து இறங்கி வருவது.

ஆதார சத்தியம்

"நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு (இயேசு கிறிஸ்துவுக்கு) மகிமையும், வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக." (வெளி. 1:6)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடம்
பழைய ஏற்பாட்டின் மூன்றாவது புத்தகம்		பலிகள், பாவநிவாரணம், ஜீவனுக்கான முழு விபரங்களும்

பலியைப் பற்றிய நியமங்கள்

நாள் 45

பாவநிவாரண தினம்
லேவி 16:1 - 34

இரத்தப் பலியின் அவசியம்
லேவி 17:1 - 16

காணிக்கைகள், விளங்கப்படுதல்: பலியிடும் முறையும், ஆசாரியனின்கடமையும்
லேவி 7:37 - 38

மாட்டு மந்தையிலிருந்து தகனபலி
லேவி 1:1 - 9

பறவைகள், ஆட்டு மந்தையிலிருந்து தகனபலி
லேவி 1:10 - 17

தகனபலியைப் பற்றி
லேவி 6:8 - 13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உன் சொந்த பாவங்களுக்காகப் பரிகாரம் தேடும் வேலையை நீ எவ்வாறு செய்வாய்? உனது வீட்டையோ, வங்கிக் கணக்கையோ, வேறு ஏதாவது உலகப் பிரகாரமான சொத்தையோ, பரிகாரமாகக் கொடுப்பாயோ? இப்படிப்பட்ட காரியங்கள் போதவே போதாது. தேவன் தனது குமாரனில், உனது கடனை முழுவதுமாக, இலவசமாக ஏற்கனவே செலுத்திவிட்டார். இதை சிந்தித்துப்பார் - மகிழ்ச்சியாக இரு!

ஆதார சத்தியம்

"அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப் பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம்." (ரோம். 5:11)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வாக்கியம்
லேவியராகமத்தில் பலிகள் பற்றிய விபரங்கள் போதிக்கப்படுகின்றன. எபிரேயர் புத்தகத்தை மேலதிக விளக்கத்திற்காக வாசியுங்கள்	தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்தமாக இருப்பதனால் மாத்திரமே அவருக்குக் கீழ்ப்படிந்து வாழலாம்.	லேவியர் 11:44

நாள் 46 காணிக்கைகள்

போஜன பலியாக மாவு
லேவி 2:1 - 11

போஜன பலி குறித்து
லேவி 6:14 - 23

மாட்டு மந்தையின் சமாதான பலி
லேவி 3:1 - 5

ஆட்டு மந்தையின் சமாதான பலி
லேவி 3:6 - 17

முதற் கனிகளின் காணிக்கை
லேவி 2:12 - 16

சமாதான பலி, அசைவாட்டும் பலி இவற்றைப் பற்றி
லேவி 7:1 1-34

ஏறெடுத்துப் படைக்கும் பலி இவற்றைப் பற்றி
லேவி 7:11-34

ஆசாரியனுக்காகக் குற்ற நிவாரண பலி
லேவி 4:1-12

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேல் மக்கள் அநேகபலிகளைச் செலுத்து மாறு கட்டளை பெற்றார்கள்: ஆனால் தேவன் தனது சபையிடம் கேட்கும் ஒரே ஒரு பலி "ஸ்தோத்திர பலி" (எபி. 13:15) இந்தப் பலியை இடைவிடாமல் ஏறெடுக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். உன்னுடைய இதயமாகிய பலிப்பீடத்திலிருந்து இந்தப்பலி எவ்வளவு தொடர்ச்சியாக எழுந்து கொண்டிருக்கிறது.

ஆதார சத்தியம்

"கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு. தமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபி. 9:28)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

ஐந்து பிரதான லேவியரின் பலிகள்

பலி	குறிக்கப்பட்டுள்ள இடம்	நோக்கம்

சர்வாங்க தகன பலி **லேவி. அதி.1** **பிரதிஷ்டை**

காளைகள், ஆட்டுக்குட்டிகள், வெள்ளாடுகள், புறாக்கள், காட்டுப் புறாக்கள் - இவை பலிபீடத்தில் முற்றிலும் தகனிக்கப்பட்டன. ஒவ்வொரு நாள் காலை, மாலையும் தினந்தோறும் பலியிடப்பட்டது.

போஜன பலி **லேவி. அதி.2** **நன்றியறிதல்**

மெல்லிய மாவு, புளிப்பில்லாத அப்பம், அதிரசம், அடை-எப்பொழுதும் உப்புடன். ஒரு கைப்பிடியளவு பலிபீடத்தில் தகனிக்கப்படும். மீதி, பரிசுத்த ஸ்தலத்தில் வைத்து ஆசாரியர் சாப்பிடும் உணவாகும். காலை, மாலை சர்வாங்க தகன பலியை தொடர்ந்து இந்தப் பலி கொடுக்கப்படும்.

சமாதான பலி **லேவி. அதி.3** **ஐக்கியம்**

எருது, வெள்ளாடு, ஆட்டுக்கடாக்கள் கொழுப்பு தகனிக்கப்படும். மீதி ஆசாரியர், பலி கொடுப்பவர், அவரது நண்பர்கள் இவர்களுக்கு உணவாகும். இந்த பலியைத் தொடர்ந்து போஜன பலியும் பான பலியும் எப்பொழுதும் கொடுக்கப்படும்.

பாவ நிவாரண பலி **லேவி. அதி.4** **சுத்திகரித்தல்**

காளைகள், ஆட்டுக்கடா, ஆட்டுக்குட்டி முழு மிருகமும் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும். எல்லாப் பண்டிகை - நாட்களிலும், முழு சபையாருக்காக, பாவ நிவாரண பலி ஏறெடுக்கப்படும். குறிப்பாக பரிகார நாளில் அது கண்டிப்பாகச் செய்யப்படும்.

குற்ற நிவாரண பலி **லேவி. அதி.5** **சமரசமாகுதல்**

ஒரே ஒரு விதிவிலக்கு (லேவி: 14:12) தவிர எப்பொழுதும் ஒரு ஆட்டுக்குட்டியே. பாவ நிவாரண பலிக்குரிய நியமனமே இதற்கும் பொருந்தும் - ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். அதில் இரத்தம் பலிபீடத்தின் மீது தெளிக்கப்படும்; இதிலோ இரத்தம் ஊற்றப்படும். பிறனுக்கு விரோதமாகக் குற்றம் செய்திருந்தால், அதினால் ஏற்பட்ட நஷ்டத்துடன், அதின் 20% அதிகமாகக் கூட்டிக் கொடுத்த பின் நிவாரணம் செய்யப்படும்.



நாள் 47 பாவத்திற்குப் பரிகாரம்

முழு சபைக்கும் பாவ நிவாரண பலி
லேவி 4:13 - 21

அதிகாரிக்கும், சாதாரண மனிதருக்கும் பாவ நிவாரண பலி
லேவி 4:22 - 35

பாவ நிவாரண பலி குறித்து
லேவி 6:24 -30

பலவித மீறல்கள் குறித்து
லேவி 5:1 -13

கர்த்தருக்கு விரோதமான குற்றங் குறித்து
லேவி 5:14 - 19

பிறருக்கு விரோதமான குற்றங் குறித்து
லேவி 6:1 -7

குற்ற நிவாரண பலி குறித்து
லேவி 7:1 -10

பலிகளைக் குறித்த விதிமுறைகள்
லேவி 10:8 -20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

'நன்றி கூறுவதற்கு முதற்படி நினைவுகூருவது என்று ஒருவர் கூறினார். ஆகவே, உனது பாவத்தைக் கிறிஸ்துவில், எவ்வளவு அற்புதமாக தீர்த்து வைத்துள்ளார் என்பதை எண்ணிப்பார்; உனது அந்த சிந்தனை, நன்றி கூறுதலாக மாறட்டும்.

ஆதார சத்தியம்

"ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி, அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப் பட்டார்." (1பேது 3:18)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

மக்களுக்காகக் கொடுக்கப்பட்ட விதிமுறைகள் நாள் 48

உணவு: சுத்தமுள்ள, சுத்தமற்ற மிருகங்கள்
லேவி 11:1 -47

சடங்காசாரமான சுத்திகரிப்பு: குழந்தை பிறப்புக்கு முன் சுத்திகரிப்பு
லேவி 12:1 -8

குஷ்டரோகத்தைக் கண்டு கொள்ள ஆசாரியனுக்கு வழிமுறைகள்
லேவி 13:1 -17

மேலும் சில விதிமுறைகள்
லேவி 13:18 -44

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தனது மக்களின் நல்வாழ்வு, பரிசுத்தம் இவற்றைக் குறித்து தேவனுக்கு ஒரு தனிப்பட்ட கரிசனை உண்டு. ஏனெனில், நாம் எவ்வளவுக்கு பரிசுத்தமடைகிறோமோ, அவ்வளவு தெளிவாக மற்றவர்கள் அவரை நம்மில் காணக்கூடும். மற்றவர்கள் உன்னில் தேவனை எவ்வளவு தெளிவாகக் காண்கிறார்கள்?

ஆதார சத்தியம்

"கிறிஸ்து இயேசுவினாலே, ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோம 8:2)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 49 குஷ்டரோகப் பிரச்சனை

குஷ்டரோகிகளுக்கு சிகிச்சை
லேவி 13:45 - 46

வஸ்திரக் குஷ்டரோகத்தைக் குறித்து
லேவி 13:47 - 59

குஷ்டரோகம் சொஸ்தமான பின்பு கைக்கொள்ள வேண்டிய விதிகள்: அவன் சுத்தமாகி விட்டானென்று அறிவித்தல்
லேவி 14:1 - 9

அவனால் ஏறெடுக்கப்பட வேண்டிய பலிகள்
லேவி 14:10 - 32

வீட்டுக்கு வரும் குஷ்டம்
லேவி 14:33 - 53

குஷ்ட ரோகத்தைக் குறித்த விதிமுறைகளின் தொகுப்புரை
லேவி 14:54-57

பிரமியத்தினால் வரும் தீட்டு குறித்து விதிமுறைகள்
லேவி 15:1 - 33

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உறுப்புக்களை உருக்குலைத்து, பலவீனப் படுத்தும் குஷ்டரோகத்தை, பிரசங்கிமார்கள் பாவத்திற்கு ஒப்பிடுவதில் ஆச்சரியமில்லை. குணமடைந்ததும் ஒரு குஷ்டரோகியின் உணர்வுகள் எப்படியிருக்கும்? அற்புதமான ஆனந்த உணர்வு இருக்குமல்லவா? பாவத்திலிருந்து விடுதலை பெறுவது அதைவிட அற்புதமான அனுபவமல்லவா?

ஆதார சத்தியம்

"இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு...உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்." (மத் 8:3)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

கர்த்தரின் பண்டிகைகள்

பஸ்காவும் புளிப்பில்லாத அப்பமும் லேவியர் 23:5-8

நோக்கம்

மதவருடத்தின் ஆரம்பத்தில் வெளித்யேற்றத்தையும் தேவனுடைய வல்லமையால் ஸ்தாபித்து இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்பத்தையும் நினைவுகூருதல்

புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய முக்கியத்துவம்

கல்வாரியும் கிறிஸ்துவின் மரணமும்

பெந்தேகொஸ்து வச 15:22

நோக்கம்

அறுவடையின் முதற் பலனையும் பின்னர் நீதிச்சட்டம் கொடுக்கப்பட்டதையும் நினைவு கூருவதற்காகக் கொண்டாடப்பட்டது. பஸ்காவிற்கு 50 நாட்களுக்குப் பின் அனுசரிக்கப்பட்டது. (யாத்திரகமம் 23:16; 34:22: எண் 23:26, உபாகமம் 16:9-10)

புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய முக்கியத்துவம்

பரிசுத்த ஆவியின் வருகை

எக்காளம் வச 23:25

நோக்கம்

வருடத்தின் ஆரம்பத்தில் கொண்டாடப்படுவது. நமது புதுவருடத்திற்கு இணையானது.

புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய முக்கியத்துவம்

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை

பாவநிவர்த்திப் பண்டிகை வச 26:32

நோக்கம்

மகாபரிசுத்த பிரதான ஆசாரியன் கடந்த வருடத்தின் பாவங்களை அறிக்கையிடுவதை நினைவு கூர்ந்து பலி செலுத்துவதைக் கொண்டாடுவது

புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய முக்கியத்துவம்

கிறிஸ்துவின் மீட்பும் நீதியும்

கூடாரங்கள் வச 33:43

நோக்கம்

வனாந்தர வாழ்க்கையை நினைவு கூருதல அறுவடைக்கு ஸ்தோத்திரம் செலுத்துதல். (மத ஆசரிப்பு) ஆண்டின் கடைசிப் பண்டிகை

புதிய ஏற்பாட்டு ஆவிக்குரிய முக்கியத்துவம்

கிறிஸ்துவின் அரசும் ஆளுகையும்

இப்பண்டிகைகளின் நோக்கம் ஆவிக்குரியதாகும். தேவன் தனது மக்களைச் சந்திக்கின்றார்.

நாள் 50 இஸ்ரவேலின் பண்டிகைகள்

திருமணத்தைக் குறித்த ஒழுங்குகள்
லேவி 18:1 - 13

விக்கிரகாராதனை விலக்கப்படல்
லேவி 20:1 - 6 & 27

கர்த்தரின் பண்டிகைகள் ஓய்வு நாள்
லேவி 23:1 - 3

பஸ்கா: புளிப்பில்லாத அப்பப் பண்டிகை; முதற் கனிகளின் பலி
லேவி 23:4 - 14

பெந்தெகொஸ்தே பண்டிகை
லேவி 23:15 - 22

எக்காளப் பண்டிகை
லேவி 23:15 -22

பாவநிவாரண நாள்
லேவி 23:26- 32

கூடாரப் பண்டிகை
லேவி 23:33 - 44

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்தவ வாழ்க்கை விரதமாயிருப்பதையும், விருந்து கொண்டாடப்படுவதையும் உள்ளடக்கியது. கட்டுப்பாட்டிலிருப்பதையும், கொண்டாடப்படுவதையும் புரிந்து கொள்ளாதவர்களுக்கு சம நிலையற்ற கிறிஸ்தவ அனுபவமே, இருக்கும்.

ஆதார சத்தியம்

"தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்." (பிலி.4:12)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

பரிசுத்தமாகும் ஒரு நேரம்

நாள் 51

தேவனது மக்களின் நடத்தை
லேவி 19:1 - 8

அயலகத்தார், தேசம், அந்நியர் ஆகியோரைக் குறித்த விதிமுறைகள்
லேவி 19:9 - 37

கீழ்ப்படியாமைக்கு வரும் தண்டனை
லேவி 20:7 - 26

ஆசாரியருக்குரிய விதிமுறைகள்
லேவி 21:1 - 9

பிரதான ஆசாரியரைக் குறித்து
லேவி 21:10 - 15

ஆசாரியருக்குத் தேவையான சரீர காரியங்கள்
லேவி 21:16 - 24

பரிசுத்த பொருட்களும் ஆசாரியரும்
லேவி 22:1 - 16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கர்த்தருடைய பிள்ளைகள் அவரது நிறைவாகிய (கானானை) சுதந்தரித்துக் கொள்ளும் வரை, ஆயத்தம், பயிற்சி, சோதனைகளை மேற்கொள்ளுதல், போன்ற காலகட்டங்களைக் கண்டிப்பாகக் கடந்து செல்வது அவசியம். பெரிய பொறுப்புக்களையும், சுதந்தரங்களையும் நம்பிக்கையுடன் தமது பிள்ளைகளிடம் ஒப்படைக்கு முன்னர், தேவன் எப்போதும் அவர்களை முதலில் ஆயத்தம் செய்கிறார்.

ஆதார சத்தியம்

"ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்." (1கொரி 6:11)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 52 இரண்டாவது பஸ்கா

பலியிட மிருகங்களின் தேவை
லேவி 22:17 - 33

மரணதண்டனைகள்: தேவதூஷணம்
லேவி 24:10 - 16,23

கொலை
லேவி 24:17 - 22

பாளய விதிகள் விவரிக்கப்படுதல்
எண் 5:1 - 10

சந்தேகப்படும் கணவனைப் பற்றிய சட்டம்
எண் 5:11 - 31

நசரேய விரதம்
எண் 6:1 - 27

பஸ்காவை ஆசரிக்க, இஸ்ரவேலருக்குத் தேவன் நினைப்பூட்டுதல்
எண் 9:1 - 4

சீனாயில் ஆசரிக்கப்பட்ட பஸ்கா
எண் 9:5 - 14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு தனிப்பட்ட நபரின் பாவங்களுக்காக மட்டுமல்ல - ஒரு தனிக் குடும்பத்தினரின் பாவத்திற்காக மட்டுமல்ல - ஒரு தேசத்தின் பாவத்திற்காகக்கூட அல்ல: முழு உலகத்தின் பாவங்களையே சுமந்து சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டியே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவரில், தேவன் இப்படிப்பட்ட ஒரு ஆட்டுக்குட்டியை ஈந்ததற்காக நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்!

ஆதார சத்தியம்

"... இது உங்களுக்காகப் பிட்க்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்" அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது: நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யயுங்கள்..." (கொரி 11:24, 25)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடம்
எண்ணாகமம் - பழைய ஏற்பாட்டில் உள்ள நாலாவது புத்தகம்	மோசே, லேவியர், மிரியம், ஆரோன், காலேப், பாலாம்	இரு குடிமதிப்புக்கள், வாக்குப் பண்ணப்பட்ட பூமியில் உளவாளிகள், வனாந்தர அலைச்சல், பலாமின் கழுதை பேசுதல்

புறப்பட்டுச் செல்ல ஆயத்தமாகுதல் நாள் 53

சீனாயை விட்டுப் புறப்பட ஆயத்தம், மனிதர்களைத் தொகையிடுதல்
எண் 1:1-54

பாளயத்தின் பொது ஒழுங்குகள்
எண் 2;1-2,17, 32-34

கிழக்குப்பிரிவு
எண் 2:3-9

தெற்குப் பிரிவு
எண் 2:10-16

மேற்குப் பிரிவு
எண் 2:18-24

சீனாயிலிருந்து காதேஸ் பர்னேயாவுக்கு பயணம் ஆரம்பித்தல்
எண் 10:11,13

வடக்குப்பிரிவு
எண் 2;25-31

பயணம் தொடருவதற்கு
யாத் 33:1-6

மோசே மீண்டும் அதிகாரம் பெறுதல்
உபா 1:6-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவரின் பிரமாணங்களை அறிகிற அறிவும், பாவத்தை குறித்த மனஸ்தாபமும், மனத் தாழ்மையும், வரும் போதுதான், கடவுளுடன் நாம் கொள்ளக் கூடிய உறவு ஆரம்பமாகிறது. அதன் பின்னரே கானானை நோக்கித் தொடரும் நீண்ட பயணம் ஆரம்பமாகிறது. அவரது ஆசீர்வாதங்களின் நிறைவும் பின் தொடருகிறது.

ஆதார சத்தியம்

"காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்" (யோவா. 3:8)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வாக்கியம்
இயேசு யோவான் சுவிசேசம் 3ஆம் அதிகாரத்தில் மோசே வெண்கல சர்ப்பத்தை உயாத்தியதுபோல் தான் உயர்த்தப்பட விருப்பதாகச் சொன்னார் (எண் 21:4-9)	14ஆம் அதிகாரத்தில் மக்கள் தேவனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்ததையும் 40 வருடங்கள் அலைந்து திரிந்ததையும் வாசிக்கிறோம். தேவனை நம்பிக் கீழ்ப்படிய வேண்டும்.	எண்ணாகமம் 14:24

நாள் 54 பயணங்கள் தொடருகின்றன

பிரிவுகளின் வரிசை
எண் 10:14-28

மேகம் அவர்களை நடத்துதல்
யாத் 40:30-38 எண் 9:15-23

பாரான் வனாந்தரத்தில்
எண் 10:12:29-32

தபேராவில் நெருப்பு
எண் 10:33-36: 11:1-3

கிப்ரோத்தில் சேருதல்
எண் 33:16

கிப்ரோத்திலிருந்து ஆஸ்ரோத்துக்கு
எண் 11:35;33:17

மன்னா பற்றி முறுமுறுத்தல்
எண் 11:4-9

மோசே புகார் செய்தல்
எண் 11:10-15

70 மூப்பர்கள் தெரிந்தெடுக்கப்படல்
எண் 11:26-30

பாளயத்தில் தீர்க்க தரிசனம்
எண் 11:26-30

காடைகளால் வாதை
எண் 11:31-34

மிரியாமின் குஷ்ட ரோகம்
எண் 12:1-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இன்றைய பிரச்சனைகள் நம்மை அழுத்தும் போது நமக்குள் பழைய, முந்திய நாட்களைப் பற்றிய ஒரு ஏக்கத்தை உண்டுபண்ணி விடுகிறது 'அந்த நல்ல பழைய நாட்கள்' என்கிறோம்! தேவனின் எதிர்கால ஆசீர்வாதங்களைக் குறித்த வாக்குத் தத்தங்களை நாம் மறந்துவிட்டோமானால், சரியான புரிந்து கொள்ளுதலில்லாமல் துன்பத்துக்குள்ளாவோம்.

ஆதார சத்தியம்

".... ஒன்று செய்கின்றேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." (பிலி 3:13,14)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடம்
உபாகமம் - பழைய ஏற்பாட்டுப் புத்தகம்- ஐந்தாவது சட்டப் புத்தகம்	மோசே, யோசுவா	இதன் கருத்து இரண்டாம் சட்டம் என்பதாகும். கானானில் தேவபிள்ளைகள் வாழத்தொடங்கியவுடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட தேவ கட்டளைகள்

கானானிலிருந்து பின் திரும்புதல் நாள் 55

ஆஸ்ரோத்திலிருந்து காதேஸ்பர்னே யாவுக்கு
எண் 33:18-36; 12:16; உபா 1:19-20

காதேஸ் பர்னேயாவிலிருந்து யோர்தான் கடத்தல், கானானுக்கு ஒற்றர்கள் அனுப்பப்படுதல்
எண் 13:1-24; உபா 1:21-24

ஒற்றர்கள் திரும்புதல்
எண் 13:25-33; உபா 1:25-33

இஸ்ரவேலின் அவிசுவாசம்
எண் 14:1-24

வனாந்தரத்தில் சந்ததி மடியும்படி சபிக்கப்படுதல்
எண் 14:25-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எத்தனை முறை நாம் கிட்டதட்ட ஆண்டவரின் நிறைவான ஆசீர்வாதத்தை அனுபவிக்கு மளவிற்கு நெருங்கி வந்த பின்னர், அசுவிசு வாசத்தின் நிமித்தம் பின் வாங்கி விடுகிறோம், நீ இப்பொழுது அந்நிலையிலிருக்கிறாயா? இராட்ச தர்களை பொருட்படுத்தாமல் முன்னேறு. உன் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் கர்த்தர் உனக்குக் கொடுப்பார்.

ஆதார சத்தியம்

"ஆதலால் அவிசுவாசத்தினாலே, அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற் போனார் களென்று பார்க்கிறோம். ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப் பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டா யிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடை யாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாத படிக்கு பயந்திருக்கக் கடவோம்." (எபி 3:19-4:1)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வாக்கியம்
எபிரேயர் புத்தகம் இயேசு புதிய உடன் படிக்கையின் மத்தியஸ்தராக இருக்கிறார். (எபி 12:24) இயேசுவும் உபாகமத்தை மேற்கோள் காட்டினார்.	இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே கொடுத்த மூன்று பிரசங் கங்களை அடங்கியதாக உபாகம் இருக்கிறது.	உபாகமம் 6:5

நாள் 56 வனாந்திரத்தில் அலைந்து திரிதல்

சந்ததியின் சாபம் தொடருதல்
எண் 14:31-38; உபா 1:34-40

ஓர்மாவில் தோல்வி
எண் 14:39-45 உபா 1:41-44

கட்டளைகள் - காணிக்கைகள்
எண் 15:1-31

பிரிந்து போகுதல்
எண் 15:37-41

காலங்கடந்த மனஸ்தாபம்
உபா 1:45-46

ஆரம்ப கால சங்கீதம்
சங் 90:1,3-17

ஓய்வு நாளில் வேலை செய்த மனிதன் கல்லெறியப்படல்
எண் 15:32-36

கோராகு, தாத்தான், அபிராம் ஆகியோரின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்
எண் 16:1-2

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தமது மக்கள் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளத் தவறும்போது, தேவன் பல சமயங்களில் அவர்களுக்கு இரண்டாவதாக ஒரு தருணம் கொடுக்கிறார். ஆனால் வேதனையோடு கூடிய ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்குள் அவர்களைக் கொண்டு வந்த பின்னரே தருணம் தருகிறார். உன் உள்ளத்திற்குள் எந்தவித கலக்கம் எழுந்தாலும் சரி, தேவனுக்கு எப்போதும் 'ஆம்' என்று கூற உன் மனதைப் பக்குவப்படுத்து.

ஆதார சத்தியம்

"ஆகையால் பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே, இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்." (எபி. 3:7,8)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

ஜனங்கள் முறுமுறுத்தல் நாள் 57

கோராகு, தாத்தான், அபிராமின் போராட்டம் தொடருதல் - ஆசாரியப் பட்டத்துக்காக கோராகு சண்டையிடுதல்
எண் 16:3-11

தாத்தான், அபிராமின் கீழ்ப்படியாமை
எண் 16:12-15

கர்த்தரின் மகிமை தோன்றுதல் – மோசே, ஆரோனின் விண்ணப்பம்
எண் 16:16-22

தாத்தான் அபிராமை பூமி விழுங்குதல்
எண் 16:23-34

கோராகின் கூட்டத்தார் அழிக்கப்படல்
எண் 16:35-40

ஜனங்கள் முறுமுறுத்தல் வாதை அனுப்பப்படுதல்
எண் 16:41-50

ஆரோனின் கோல் துளிர்த்தல்
எண் 17:1-13

லேவியரின் பொறுப்புக்கள்
எண் 18:1-24

jesus

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நமது வாழ்க்கையின் காரியங்களில் தவறும் போது, பிறரைக் குறைகூறிக் குற்றம் சாட்டி, "எல்லாம் உன்னால் வந்தது தான்" என்று சாடி விடுவது எவ்வளவு எளிதான காரியம்! சரித்திரத்தில் தொன்று தொட்டு நாம் இதைத்தான் பார்க்கிறோம். ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் இதைத்தான் செய்தார்கள். உனக்கு விருப்பமான தற்காப்பு ஆயுதமும் இதுதானா?

ஆதார சத்தியம்

"அதினாலே (நாவினாலே) நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மறுஷரை அதினாலேயே சபிக்கிறோம்.... என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது." (யாக். 3:9-10)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 58 கன்மலையிலிருந்து சுரந்த தண்ணீர்

லேவியரின் பொறுப்புக்கள்
எண் 18:25-32

சிவப்புக் கிடாரி நியமனம் இறந்தவர்களைக் குறித்த விதிமுறைகள்
எண் 19:1-22

மிரியாவின் மரணம்
எண் 20:1

மேரிபாவின் தண்ணீர்
எண் 20:2-13

மோசேயின் பேரப்பிள்ளைகள் பிறப்பு
1 நாளா 23:16-17

ஏதோமின் வழியாகப் போக அனுமதி மறுப்பு *எண் 20:14-21*

ஓர் மலைக்கு
எண் 20:22;33;37

ஆரோனின் மரணம்
எண் 20:23-28; 33:38-39; உபா 10:6-7

ஆரோனுக்காக துக்கம் கொண்டாடுதல்
எண் 20:29

ஓர்மாவில் வெற்றி
எண் 33:40;21:1-3

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நமது பெலவீனங்களை வைத்துத்தான் சத்துரு நம்மை எளிதாகத் தாக்கக் கூடும் என்று எண்ணுவது எப்போதும் சரியாக இருக்கமுடியாது. நமது பலமான காரியங்கள் மூலமாகக்கூட நாம் தாக்கப்படக் கூடும். பூமியெங்கிலுமுள்ள மனிதரிலெல்லாம் சாந்தமுள்ளவன் என்று பெயர் பெற்ற மோசே, அதை இழந்து கோபமடைந்ததினால் பாவம் செய்தான்! கிறிஸ்துவில் மாத்திரமே நாம் பெலன் கொண்டு நிற்கமுடியாது.

ஆதார சத்தியம்

"நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னதாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்." (எபே. 4:26-27)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

வனாந்தரத்தில் அலைந்து திரிதல்



நாள் 59 நோய்க்குப் பரிகாரம்

ஓர் மலையிலிருந்து ஏதோமைச் சுற்றி
உபா 2:1-12, எண் 21:4; 33:41-42

வெண்கலச் சர்ப்பம்
எண் 21:5-9

ஓபோத்திலிருந்து அபாரீம் மேடுகளுக்கு
எண் 21:10-11; 33:43-44

மோவாப் வழியாக வடக்கு நோக்கி
எண் 21:12-15; உபா 2:13-18; எண் 33:45

எமோரியர் மீது வெற்றி கீலோயாத்தில் (சீகோனுக்கு மேல்)
எண் 21:16; எண் 33:46-47; 21:17-32; உபா 2:19-37

பாஷானில் (ஓக் மீது)
உபா 3:1-11; எண் 21:33-35

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு தோல்வியின் சரித்திரம், வெற்றிக்கு வழியில்லை என்று பொருள்படாது. நாம் நம்மைத் தேவனுடன் இணைத்துக் கொண்டால், கடந்த காலத் தோல்விகள் எதுவாக இருந்தாலும், வெற்றி பெறக்கூடும் என்பது மட்டுமல்ல; வெற்றி பெறுவது நிச்சயமான ஒன்று.

ஆதார சத்தியம்

"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும்." (யோவா. 3:14:15)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

பாலாக் பிலேயாமை சந்தித்தல் நாள் 60

இஸ்ரவேலர் மோவாபில் குடியிருத்தல்
எண் 22:1;33:48-49

பாலாக் பிலேயாமுக்கு ஆளனுப்புதல்
எண் 22:2-14

பிலேயாம் பாலாக்கிடம் செல்லுதல்
எண் 22:15-21

பிலேயாமின் கழுதை பேசுதல்
எண் 22:22-35

பிலேயாமும், பாலாக்கும் சந்தித்தல்
எண் 22:36-41

பாலாக்கின் பலியும், பிலேயாமின் ஆசீர்வாதமும்
எண் 23:1-10

பாலாக்கின் ஏமாற்றம்
எண் 23:11-15

பிலேயாம் மீண்டும் இஸ்ரவேலை ஆசீர்வதித்தல்
எண் 23;16-24

பாலாக்கனின் மூன்றாவது பலி
எண் 23:25-30

பிலேயாம் இஸ்ரவேலின் மகிழ்ச்சியான நாட்களை முன்னறிவித்தல்
எண் 24:1-9

பாலாக், பிலேயாமை விரட்டிவிடுதல்
எண் 24:10-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தவறுவது. ஆவிக்குரிய உணர்வற்ற நிலைக்கு நிச்சயமாக வழிநடத்தும். தூதன் தனது வழியை மறிப்பதை பிலேயாம் உணரக் கூடாதது. இந்நிலையைத்தான் சித்தரிக்கிறது. கழுதைக்குக் கூட. பிலேயாமைவிட ஆவிக்குரிய உணர்வு அதிகமாக இருப்பது போல் தோன்றுகிறது!

ஆதார சத்தியம்

"உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்". (நீதி. 3:5,6)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

இதயத்திற்கு இதயம்

பெப்ரவரி

இஸ்ரவேலரைப் போன்று நீங்களும் பயணம் செய்கிறவர்களாக இருக்கிறீர்கள். அவர்களுடைய பயணம் நாற்பது வருட காலமாக வனாந்தரத்தில் நடைபெற்றது. உங்களுடைய பயணம் வேதாகமத்தில் ஒருவருடம்தான். அவர்கள் மோசேயாலும் அக்கினி ஸ்தம்பத்தாலும் வழிநடத்தப்பட்டார்கள். நீங்கள் இயேசுவானவராலும் பரிசுத்த ஆவியாலும் வழிநடத்தப்படுகிறீர்கள். அதைரியப்பட வேண்டாம். மோசேயைப் போலவும் காலேப்பைப் போலவும் எல்லாப் பரீட்சைகளையும் மேற்கொண்டு விசுவாசமுள்ளவர்களாக தேவன் அவர்களுக்குக் கொடுத்த பொறுப்பை நிறைவு செய்தது போல நாமும் செய்வோம்.

3

இந்தப் பகுதியில்....

மோசேயின் பிரியாவிடைச் செய்தி
கானானை வெற்றி கொள்ளல்.
தேசத்தில் பிரிவுகள் ஏற்படல்.
தேவன் நியாதிபதிகளை நியமித்தல்.
ரூத்தின் கதை

நாள் 61 இஸ்ரவேலர் இரண்டாந்தரம் தொகையிடப்படல்

பிலேமியாவின் தீர்க்கதரிசனங்கள்
எண் 24:15-25

இஸ்ரவேலர் (பாவத்தில் சிக்க) கவர்ச் சிக்கப்படுதல்
எண் 25:1-5

பினெகாஸ், சிம்ரியையும் கஸ்பியையும் கொன்று போடுதல்
எண் 25:6-15

முதலில் தொகையிடப்பட்ட ஒருவரும் மீந்திருக்கவில்லை.
எண் 26:63-65

மீதியானியர் தண்டிக்கப்பட வேண்டியது
எண் 25:16-18

இஸ்ரவேலர் மீண்டும் தொகையிடப்படல்
எண் 26:1-51

தேசத்தைப் பங்கிடுதல்
எண் 26:52-56

லேவியரின் எண்ணிக்கை
எண் 26:57-58;61-62

சுதந்தரிக்கும் விதிகள்
எண் 27:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

காலேப், யோசுவா என்ற இருவரைத் தவிர, முதல் தடவை தொகையிடப்பட்டவர்கள் அனை வரும் - ஒரு முழு சந்ததியே - இரண்டாவது முறை தொகையிடப்படும் முன்னர் வனாந்த ரத்தில் செத்துமடிந்தது எவ்வளவு விசனமான காரியம்! தேவனின் நோக்கத்தைக் கீழ்ப் படியாமை சின்னாபின்னமாக்கி விடுகிறது.

ஆதார சத்தியம்

"... உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுத்தரிக்கக் கொடுக்கும் தேசத்தை நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு ... இந்த யோர்தானைக் கடந்து போவீர்கள் (யோசு. 1:11) எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவே சிப்பதில்லை." (எண் 14:30)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

வனாந்தரத்தில் அலைச்சல்கள்



நாள் 62 பலிகளும் காணிக்கைகளும்

அன்றாடகப்பலி
எண் 28:1-8

ஓய்வுநாள், மாதப்பிறப்பு பலிகள்
எண் 28:9-15

பஸ்காவும் முதற்கனி படைப்பும்
எண் 28:16-31

எக்காளப் பண்டிகையில் பாவநிவாரண நாளில் செலுத்தும் காணிக்கை
எண் 29:1-11

கூடார பண்டிகையில் செலுத்தும் காணிக்கைகள்
எண் 29:12-40

ஆணையிடுதலின் விதிமுறைகள்
எண் 30:1-2

ஆணைக்கு நீங்கலாக மீட்டுக் கொள்ளுதல்
எண் 30:3-16

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

பழங்கால இஸ்ரவேலர் செலுத்திய பலவிதமான பலிகள், காணிக்கைகளில் தினமும் வேண்டிய ஒரு பலி பாவ நிவாரணபலி. தேவன் தாமே கல்வாரியில் நமக்காகச் செலுத்திய அந்தப் பெரிய பாவ நிவாரண பலியை முதலில் நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டால், நமது சர்வாங்க தகனபலிகளினால் எவ்விதமான பயனுமில்லையென்பதை இது எவ்வளவு அழகாக சித்தரிக்கிறது.

ஆதார சத்தியம்

"ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்தில் கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்". (1 பேது. 3:18)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் நாள் 63

மீதியானியருடன் யுத்தம்
எண் 31:1-7

பிலேயாமும் மீதியானிய மன்னரும் கொலை செய்யப்படல்
எண் 31:8-12

பாவம் உண்டு பண்ணியவர்கள் கொலை செய்யப்படல்
எண் 31:13-18

இஸ்ரவேலரின் சுத்திகரிப்பு
எண் 31:19-24

கொள்ளையைப் பங்கிடுதல்
எண் 31:25-47

கர்த்தருக்குக் காணிக்கை
எண் 31:48-54

ரூபன், காத் புத்திரர் சுதந்திரம்
எண் 32:1-5

மோசே அவர்களைக் கடிந்து கொள்ளுதல்
எண் 32:6:15

அவர்களது நோக்கம் விளக்கப்படுதல்
எண் 32:16-27

யோர்தானுக்குக் கிழக்கே அவர்கள் குடியேறுதல்
எண் 32:28-42

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவ பிள்ளைகள் சிலர், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருக்கும்போது, தேவனின் சிறந்த பங்கைப் பெறாமல், ஆசீர்வாதக் குறைவான ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வது எத்தனை வேதனையான காரியம்! உன் காரியம் என்ன? நீ யோர்தானுக்கு இப்புறத்திலேயே தங்கிவிடுவதில் திருப்தியடைகிறாயோ? தேவனின் சிறந்த ஈவுகளைவிட குறைந்த மதிப்புள்ள ஆசீர்வாதங்களை நாடுகிறாயோ?

ஆதார சத்தியம்

"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமானஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 64 கானானுக்குள் பிரவேசிக்க ஆயத்தம்

கோத்திரங்களின் சுதந்திரம்
உபா 3:12-17; யோசு 13:8-13; 15-32

வெற்றிகளின் பட்டியல்
யோசு 12:1-6

படையெடுக்க உத்தரவு
எண் 33:50-56; உபா 3:18-29

எல்லைகள் கொடுக்கப்படல்
எண் 34:1-15

தேசத்தைப் பங்கிட மனிதர்கள் மனிதர்கள் தெரிந்தெடுக்கப்படுதல்
எண் 34:16-29

லேவியருக்கு வாக்களிக்கப்பட்ட பட்டணங்கள்
எண் 35:1-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உள்ளே பிரவேசிக்குமுன்னரே. நிலத்தை இஸ்ரவேலர் பங்கிட்டுக் கொண்டது. அவர்கள் கர்த்தரின் பெரிய வாக்குறுதியின் மீது வைத்திருந்த விசுவாசத்தைக் காட்டுகிறது. தேவன் உனக்குத் தனிப்பட்ட விதத்தில் ஏதாவது வாக்குக் கொடுத்துள்ளாரா? அதை ஏற்கனவே பெற்றுக் கொண்டு விட்டதுபோல் நீ செயல்பட ஆரம்பிப்பதே விசுவாசம் என்பதை நினைவில் வைத்துக்கொள்.

ஆதார சத்தியம்

"எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத் தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் 'ஆம்' என்றும் அவருக்குள் 'ஆமென்' என்றும் இருக்கிறதே" (II கொரி 1:20)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

யூத சட்டமும் சரித்திரமும் மறுபரிசீலனை செய்யப்படல் **நாள் 65**

கொலை பற்றிய விதிகள்
எண் 35:9-34

அடைக்கலப் பட்டணங்கள் நியமிக்கப் படுதல்
உபா 4:41-49

கொலையைக் குறித்த சட்டங்கள் உருவாக்கப்படுதல்
உபா 19:1-13

சுதந்தரிக்கும் சட்டம் மறுபரிசீலனை
எண் 36:1-12

யூதசட்டம், சரித்திரம் மறுபரிசீலனை - இஸ்ரவேலுக்கு மோசேயின் வார்த்தைகள்
உபா 1:1-5

மோசே, கீழ்ப்படியும்படி மக்களைத் தட்டி எழுப்பும் போதனை தருதல்
உபா 4:1-24

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஏன் ஒரு சிலர் மற்றவர்களைவிட அதிகமாக ஆண்டவரின் ஆசீர்வாதங்களை அனுபவிக் கிறார்களென்று நீங்கள் எப்போதாவது எண் ணிப் பார்த்ததுண்டா? ஒரு முக்கியமான திறவு கோல் - கீழ்ப்படிதல் அந்த திறவுகோல் தான் முழுக் கானானையும், இஸ்ரவேலருக்குத் திறந்து கொடுத்தது நீ, அந்தத் திறவுகோலைப் பயன்படுத்தும் போது மட்டுமே. உன்னுடைய தனிப்பட்ட வாழ்வின்'கானான்' உனக்குத் திறக்கப்படும்.

ஆதார சத்தியம்

"மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக் கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற் குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப் புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? (ரோம 6:16)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 66 பத்துக் கற்பனைகள் மீண்டும் கூறப்படுதல்

தேவனின் எச்சரிப்பும் இரக்கத்தைக் குறித்த வாக்குறுதியும்
உபா 4:25-40

ஓரேபில் உடன்படிக்கை
உபா 5:1-5

பத்துக்கற்பனைகள் மீண்டும் கூறப்படல்
உபா 5:6-22

மக்களின் வேண்டுகோள்
உபா 5:23-33

கீழ்ப்படிதலுக்குக் கிடைக்கும் பலன்
உபா 6:1-3

கீழ்ப்படியுமாறு அறைகூவல்
உபா 6:4-5

கீழ்ப்படிதல் கற்றுக்கொடுக்கப்படல்
உபா 6:6-16

பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டிய அறிவுரைகள்
உபா 6:20-25

விக்கிரக வணக்கத்தினருக்கு விரோதமான எச்சரிப்பு
உபா 7:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பத்துக் கற்பனைகளைத் திரும்பக் கூறும்போது, மோசே 'என்னையன்றி உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்' என்ற கற்பனையை வலியுறுத்துகிறார். இந்தக் கற்பனைக்கு மட்டும் மோசே ஏன் அவ்வளவு அழுத்தம் கொடுக்கிறார்? பொதுவாக மிக முக்கியமான 'ஒருவருக்கு' கொடுக்க வேண்டிய ஸ்தானத்தை மக்கள் ஏதாவது ஒரு 'பொருளுக்கு' கொடுப்பது சர்வ சாதாரணமாக எக்காலத்திலும் நிகழக்கூடிய அபாயமென்பதை மோசே நன்கறிந்திருந்தார்.

ஆதார சத்தியம்

"அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள்." (ரோமர் 1:21,25)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

தூண்டியெழுப்பும் போதனைகளும் எச்சரிப்புகளும் நாள் 67

கீழ்ப்படிதலின் பலன்கள்
உபா 7:12-26

தூண்டும் போதனைகளும் எச்சரிப்புகளும்
உபா 8:1-9

தொடர்ந்து போதனைகளும் எச்சரிப் புகளும்
உபா 8:10-20

வெற்றி, தகுதியைப் பொறுத்தல்ல
உபா 9:1-6

மோசே இஸ்ரவேலருக்குத் தேவனின் இரக்கத்தை நினைவுபடுத்தல்
உபா 9:7-29

மோசே, புதிய கற்பலகைகள் உண்டு பண்ணுதல்
உபா 10:1-5

மோசே, ஜனங்களைக் கீழ்ப்படிய உற்சாக மூட்டுதல்
உபா 10:8-22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நமது தகுதியைப் பொறுத்தல்ல, கர்த்தருடைய கிருபையினாலே நமக்கு வெற்றி கிட்டுகிறது என்று மோசே நினைவு படுத்தும் உண்மை, இன்றைய சபைக்கும் பொருத்தமான தொன் றாகும். இதை நிரூபிக்கப்பட்ட உண்மையாகப் பற்றிக்கொண்டு, முடிந்தளவு மீண்டும், மீண்டும் மனதில் கூறு. "அவர் எப்படியிருக்கிறாரோ அப்படி இருக்கிறபடியால் தான் நானும் இப்பொழுது இருக்கிறபடி இருக்கிறேன்."

ஆதார சத்தியம்

"தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந் திருக்கவும் எனக்குத் தெரியும்: எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற் றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு." (பிலி 4:12,13)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 68 தாண்டியெழுப்பும் போதனைகளும் விதிமுறைகளும் தொடருகின்றன

கீழ்ப்படியாமை கீழ்ப்படிதல் இவற்றுக்குக் கிடைக்கும் பலன்
உபா 11:1-7

வாக்குறுதிகளும் எச்சரிப்பும்
உபா 11:8-17

தேவனின் வார்த்தையைப் படிப்பது பிரதானமான கட்டளை
உபா 11:18-25

ஆசீர்வாதமா? சாபமா? தெரிந்து கொள்ளுதல்
உபா 11:26-32

விக்கிரகாராதனை நினைவுச்சின்னங்கள் அழிக்கப்பட வேண்டும்
உபா 12:1-4

தேவனைச் சேவிக்கும் இடம்
உபா 12:5-32

துன்மார்க்கருக்குத் தண்டனை
உபா 13:1-11

விக்கிரகம் நிறைந்த பட்டணங்கள் அழிக்கப்படுதல் வேண்டும்
உபா 13:12-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நமது கிறிஸ்தவ கடமைகளெல்லாவற்றையும் விட கர்த்தருடைய வார்த்தையை வாசித்துப் படிப்பதற்கு மிக முக்கியமான முதலிடம் கொடுக்க வேண்டும் அவரை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக வேதத்தை நேசிப்போம். அதுபோல வேதத்தையும் அதிகமாக நேசிக்க நேசிக்க ஆண்டவரையும் அதிகமாக நேசிப்போம். ஆகவே சோர்ந்து போகாதே. விட்டு விடாதே நாம் வேதத்தை வாசித்து தியானிக்க செலவழிக்கும் நேரத்தையும் படும் பிரயாசத்தையும்விட அதனால் நாம் பெற்றுக் கொள்ளும் பயன் மிக அதிகம்.

ஆதார சத்தியம்

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்குமுன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." (II தீமோ 2:15)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

விதிகளும், கைக்கொள்ளும் முறைகளும் நாள் 69

இஸ்ரவேலர் தனிச்சிறப்பு வாய்ந்த மக்களாகத் திகழ வேண்டும்
உபா 14:1-21

தசம பாகத்தை பற்றி
உபா 14:22-29

ஏழாம் ஆண்டு - விடுதலையின் ஆண்டு
உபா 15:1-11

வேலைக்காரரை மீட்டுக் கொள்ளுதல்
உபா 15:12-18

மந்தைகளின் தலையீற்று பற்றி
உபா 15:19-23

வருடாந்தப் பண்டிகைகள்
உபா 16:1-17

நியாதிபதிகள் பிற அதிகாரிகள் நிய மனங்கள்
உபா 16:18-22

பலிகள் பூரணமாக இருக்க வேண்டும்
உபா 17:1

விக்கிரக வணக்கத்துக்குத் தண்டனை
உபா 17:2-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உலகிலிருந்தாலும் அதினின்று வேறுபட்டுத் தனிச்சிறப்புடன், அவரது பிள்ளைகளாக இஸ்ரவேலர் திகழ வேண்டுமென்பதே தேவன் அவர்களைப் பற்றி வைத்திருந்த நோக்கமாகும். இன்று உன்னையும், என்னையும் பற்றிய அவரது நோக்கமும் அதுவே. ஆனால் சில சமயங்களில் உலகிலிருந்து வேறுபட்டு நிற்பதை விட அதனுடன் நாம் ஒத்துப் போகும் காரியங்களே அதிகத் தெளிவாகத் தெரிவது எவ்வளவு வேதனையானது!

ஆதார சத்தியம்

"நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம் முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக் கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி யாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்." (I பேது 2:9)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 70 தேசச் சட்டங்கள்

கருத்து வேற்றுமைகளைத் தீர்த்துக் கொள்ளுதல்
உபா 17:8-13

ஒரு இராஜாவைத் தெரிந்து கொள்ளுதலின் விதிமுறைகள்
உபா 17:14-20

லேவியருக்குத் தேவையான உணவு
உபா 18:1-8

விலக்கப்பட வேண்டிய அருவருப்பு
உபா 18:9-14

கைப்பற்றப்பட்ட பட்டணங்களைக் குறித்த விதிமுறைகள்
உபா 20:10-20

கிறிஸ்து - பெரிய தீர்க்கதரிசி
உபா 18:15-22

எல்லைக்குறி மாற்றப்படக்கூடாது
உபா 19:14

பொய்ச் சாட்சிக்கு வரும் தண்டனை
உபா 19:15-21

யுத்த சம்பந்தமான அறிவிப்புகள்
உபா 20:1-9

இன்னும் மற்ற விதிமுறைகள்
உபா 21:1-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவருடைய விதிகளும் ஒழுங்கு நியதிகளும் சிலசமயங்களில் மிகுந்த பாரமுள்ளவைகளாகவும், தேவையற்றவையாயும் தோன்றலாம். ஆனால் அவரது கற்பனைகள் நமக்குத் தீங்கு செய்வதற்காக அல்ல. உதவி செய்வதற்காகவே உருவாக்கப்பட்டவை. மலையினடிவாரத்தில் ஒரு ஆஸ்பத்திரியை உருவாக்குவதைவிட, மலையின் உச்சியில் ஒரு வேலியமைத்து விடுவது சாலச் சிறந்தது அல்லவா?

ஆதார சத்தியம்

"உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப் பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன்." (ரோமர். 7:22)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

இஸ்ரவேலருக்கான மேலும் சில ஒழுங்குகள் நாள் 71

முதற்பிறப்பு
உபா 21:15-17

ஒரு பிடிவாதமான மகன்
உபா 21:18-21

தூக்கிலிடுவதைப் பற்றிய விதி
உபா 21:22-23

இரண்டாவது கட்ட சட்ட ஒழுங்குகள்
உபா 22:1-30

சபைக்குரிய ஒழுங்குகள்
உபா 23:1-25

தண்டனை அளவு
உபா 25:1-3

எருதுவைப் பற்றிய விதி
உபா 25:4

சகோதரன் மனைவியை மணந்து கொள்வது பற்றி
உபா 25:5-12

கள்ளத் தராசு, நிறைகள் குறித்து
உபா 25:13-16

அமலேக்குக்கு எதிரான யுத்தம்
உபா 25:17-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கானானில் என்னென்ன பிரச்சனைகள் எழக்கூடும். அவற்றைத் தீர்த்து வைக்கக்கூடிய தெளிவான விதிமுறைகளென்ன என்று மோசே ஞானமாகக் கூறுவது. ஒரு உண்மையான தலைவனுக்கு இருக்கவேண்டிய ஞானத்தைக் காண்பிக்கிறது. உன்னுடைய வீட்டிலாவது, சபையிலாவது, சமூகத்திலாவது உனக்குத் தலைமைப் பதவியைத் தேவன் தந்துள்ளாரா? அப்படியானால் ஞானம் வேண்டுமென ஜெபி – நீ கேட்டால் உடனே பெற்றுக்கொள்ளலாம் என்பதை மறந்துவிடாதே.

ஆதார சத்தியம்

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." (யாக். 1:5)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 72 தனிமனிதன் வாழ்க்கைக்குரிய விதிமுறைகள்

விவாகரத்து இன்னும் மற்ற விதிமுறைகள்
உபா 24:1-22

முதற்கனி காணிக்கை
உபா 26:1-11

கீழ்ப்படிதலும் ஜெபமும்
உபா 26:12-19

கற்களில் எழுதப்பட வேண்டிய கற்பனைகள்
உபா 27:1-10

கூறப்பட வேண்டிய சாபங்கள்
உபா 27:11-26

இஸ்ரவேலின் வருங்காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனம்
உபா 28:1-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சுயசித்தமுள்ளவர்களாக, நாம் விரும்பிய பாதையைத் தெரிந்து கொள்ளலாம்; ஆனால் ஆண்டவருடைய திட்டப்படி, எப்பொழுதும் செயல்படும் ஒரு விதியுண்டு - "கீழ்ப்படிதல் பலன்களைக் கொண்டுவரும். கீழ்ப்படியாமையோ (தீய) விளைவுகளைக் கொண்டுவரும்." நமக்குப் பாதையைத் தெரிந்து கொள்ள உரிமையுண்டு. ஆனால் நாம் தெரிந்துகொள்ளும் பாதையின் விளைவுகளை மாற்றவோ, மறுக்கவோ நமக்கு உரிமையில்லை. ஆகவே - இன்றே ஜீவனைத் தெரிந்துகொள்.

ஆதார சத்தியம்

"உங்கள் முன் ஒருவரும் எதிர்த்து நிற்பதில்லை; உங்கள் தேவனாகிய கர்த்தர்... உங்களால் உண்டாகும் பயமும் கெடியும்... பூமியின் மேலெல்லாம் வரப்பண்ணுவார். இதோ! இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் வைக்கிறேன்... உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால், ஆசீர்வாதமும்..." (உபா. 11:25-27)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

மோசேயின் செய்தி

தேவனின் உண்மை
உபா. 2:7; 4:33-38; 7:6-8; 8:3-4; 9:4-6; 29:5,6; 32:9-14

தேவனின் குணாதிசயங்கள்
உபா. 6:4,5; 7:9; 32:39

தேவனின் அன்பு
உபா. 7:13

தேவனின் மகிமை
உபா. 4:39; 10:17,18

தேவனின் கிருபை
உபா. 7:6-9; 9:4-6

தேவனின் சித்தம்
உபா. 10:12-16

தேவனின் வருகை - மேசியா
உபா. 18;15-19

தேவனின் வார்த்தை
உபா. 4:1,2,7,9; 11:18-21; 30:11-14

நாள் 73 இஸ்ரவேலின் வருங்காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனம்

கீழ்ப்படியாமையின் சாபங்கள்
உபா 28:15-44

கீழ்ப்படியாமையின் விளைவுகள்
உபா 28:45-68

மோசே கர்த்தரின் இரக்கங்களை நினைவுபடுத்தக் கூப்பிடுதல்
உபா 29:1-9

தேவ கோபம்
உபா 29:10-21

விக்கிரக வணக்கத்தின் விளைவு
உபா 29:22-28

மறைவானவைகள் யாவும் கர்த்தருக்கே சொந்தம்
உபா 29:29

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சர்வ வல்லவரின் சிட்சையைக் குறித்து ஒருபொழுதும் பயப்படாதே. அவை நம்மை இழிவுபடுத்தவோ, மனதைத் தளர்ச்சியடையச் செய்யவோ அல்ல; நம்மை வளர்ச்சியடையச் செய்யவே கொடுக்கப்படுகின்றன. பொதுவாகத் தங்கள் பிள்ளைகளைக் கண்டிக்க வேண்டிய நேரங்களில் கண்டிக்கப் பயப்படும் பெற்றோர் மீது, ஒரு நாளில் அந்தப் பிள்ளைகள் ஏறி மிதிக்க நேரிடும்.

ஆதார சத்தியம்

"கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.. நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்து கிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" (எபி. 12:6,7)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

மோசேயின் இறுதி வார்த்தைகளும் பாடலும் நாள் 74

மனஸ்தாபப்படுகிறவர்களுக்கு இரக்கங்கள் வாக்குப் பண்ணப்படுதல்
உபா 30:1-10

ஜீவனும், மரணமும் முன்வைக்கப்படுதல்
உபா 30:11-20; எண் 36:13

மோசேயின் ஸ்தானத்தில் யோசுவா
எண் 27:15-23

மக்களுக்கு, மோசேயின் கடைசி வார்த்தைகள்
உபா 31:1-6

யோசுவாவுக்கு, மோசேயின் கடைசி வார்த்தைகள்
உபா 31:7-8,23

ஆசாரியருக்கு, மோசேயின் கடைசி வார்த்தைகள்
உபா 31:9-13

லேவியருக்குக் கூறிய கடைசி வார்த்தைகள்
உபா 31:24-29

இஸ்ரவேலின் விசுவாசத் துரோகம் முன்னறிவிக்கப்படல்
உபா 31:14-22, 30; 32:1-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பொதுவாக, எந்தப் பெரிய மனிதனின் கடைசி வார்த்தைகளும், மிக முக்கியமானவை: சிறப்பான அர்த்தமுள்ளவை: மோசேயின் வார்த்தைகளும் அப்படியே இருந்தன: இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளும் அப்படியே அமைந்தன. அவரது கடைசி வார்த்தைகளை நினைவு கூருகிறாயா? அவை பிரபஞ்சம் முழுவதையும் தொடக்கூடிய அர்த்தம் கொண்டவை. "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." (மாற் 16:15)

ஆதார சத்தியம்

"நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி... ஏழு சபைகளுக்கும் அனுப்பு. நான்... உயிருள்ள வருமாயிருக்கிறேன், மரித்தேன், ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்... நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவு கோல்களை உடையவராயிருக்கிறேன்." (வெளி. 1:11,17,18)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 75 மோசேயின் மரணம்

மோசேயின் பாட்டு
உபா 32:15-18

பாவத்திற்கு வரும் தீர்ப்பு
உபா 32:19-25

தேவன் தரும் விடுதலை
எண் 32:26-43

மோசேயின் தூண்டியெழுப்பும் போதனை
உபா 32:44-47

மோசே நேபோ மலைக்குச் செல்லுதல்
எண் 27:12-14 உபா 32:48-52

கோத்திரங்களுக்குக் கடைசி வார்த்தைகள்
உபா 33:1,6-25;2-5;26-29; சங். 91:1-16

மோசேயின் மரணம்
உபா 34:1-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு பெரிய தலைவர், அதுவும் குறிப்பாக ஒரு ஆவிக்குரிய தலைவர், பரத்தில் தனது பலனைப்பெற அழைப்புப் பெற்று எடுத்துக் கொள்ளப்படும்நேரம், சோகமான ஒரு தருணமே. ஆயினும், ஆண்டவர் தமது ஊழியக்காரரை அடக்கம் செய்தாலும், தமது வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டுதானிருக்கிறாரென்ற சத்தியத்தை உறுதியாய்ப் பற்றிக் கொள்ள நாம் மறந்து போகவே கூடாது.

ஆதார சத்தியம்

"நான் தேசத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது... கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்: எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்." (11தீமோ. 4:6-8)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

இஸ்ரவேல் சரித்திரத்தின் ஒரு தொகுப்புரை நாள் 76

மோசேக்காகத் துக்க நாட்கள் முப்பது
உபா 34:8;10-12

புதிய தலைவன் யோசுவா
உபா 34:9

இஸ்ரவேலரின் பூர்வ சரித்திரத்தைத் தொகுத்துத் தரும் சங்கீதங்கள்
சங் 78:12-66; 105:16-45; 106:1-33; 135: 1-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேசத்தை தலைமை தாங்கி நடத்திச் செல்ல, கர்த்தர் யோசுவாவை அழைத்தபோது, அவனை இன்னொரு மோசேயாக இருக்கும்படி கூறவில்லை. இஸ்ரவேலை வழிநடத்தும் கடினமான பணி மோசேக்குக் கொடுக்கப்பட்டது. அதே கடினமான பணி ஒரு யோசுவாவுக்கும் கொடுக்கப்பட்டது. ஆயினும் யோசுவா மோசேயாக முடியாது; மோசே யோசுவாவாக மாறவும் முடியாது. தேவனின் அநாதித் திட்டத்தில், உனக்கும் ஒரு பங்கு உண்டு. ஆனால், நீ, எப்படி இருக்கிறாயோ அப்படியேதான் அத்திட்டத்திற்குள் பொருந்த முடியும். வேறொருவராக மாற முயற்சி செய்யாதே.

ஆதார சத்தியம்

"ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயங்கள் இருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்கள்..." (ரோமர் 12:4-6).

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 77 கானானுக்குள் கடந்து செல்லுதல்

தேவன் யோசுவாவை நியமித்தல்
யோசு 1:1-4

தேவன் உதவி செய்வதாக வாக்களித்தல்
யோசு 1:5-9

யோசுவா ஜனங்களுக்கு கட்டளை கொடுத்தல்
யோசு 1:10-18

ராகாப் வேவுகாரரை ஒளித்து வைத்தல்
யோசு 2:1-21

வேவுகாரர் திரும்பி வருதல்
யோசு 2:22-24

யோசுவாவும் இஸ்ரவேலரும் யோர்தானுக்குச் செல்லுதல்
யோசு 3:1

உடன்படிக்கையின் முக்கியத்துவம்
யோசு 3:2-13

யோர்தானைக் கடத்தல்
யோசு 3:14-17

நினைவுக் கற்கள்
யோசு 4:1-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எதிர்காலத்தில் தேவன் நமக்காக வைத்திருக்கிற காரியங்களின் மீது மட்டுமே நமது கவனத்தைச் செலுத்தினோமானால், கடந்த காலத்தை மறப்பது மிக எளிதாக இருக்கும் ஆயினும் கடந்த காலத்தில் தேவன் பெற்ற வெற்றிகளை நினைவுபடுத்திக் கொள்வது, தொடர்ந்து எதிர்காலத்திலும் அவர் நமக்குத் தரப்போகும் வெற்றிகளைக் குறித்த நமது நம்பிக்கையை உறுதிப்படுத்த உதவும். இன்று உன் மனதில் கடந்த காலத்திலுள்ள எந்த "ஞாபகக்கல்லை" எழுப்பப் போகிறாய்?

ஆதார சத்தியம்

"...இப்பொழுது உங்களுக்கு எழுதுகிறேன், பரிசுத்த தீர்க்கதரிசிகளால், முன் சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவு கூரும்படி, இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்." (11 பேது. 3:1-2)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடம்
யோசுவா - 6ஆவது பழைய ஏற்பாட்டுப் புத்தகம் முதலாவது வரலாற்று நூல்	யோசுவா	வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை வெற்றிகொண்டமையை இப்புத்தகம் விளக்குகிறது.

எரிகோ யுத்தம்

நாள் 78

தேவ பயத்தைத் தூண்டும் செய்தி
சங். 114:1-8

கில்காலில் பாளயம்
யோசு 4:19-24;5:1

விருத்த சேதனம் புதுப்பிக்கப்படல்
யோசு 5:2-9

உணவு மாற்றமடைதல்
யோசு 5:10-12

கர்த்தருடைய சேனையின் அதிபதி
யோசு 5:13-15

எரிகோ அடைக்கப்படுதல்
யோசு 6:1

எரிகோவின் முற்றுகை
யோசு 6:2-5

பட்டணம் சூழ்ந்து கொள்ளப்படுதல்
யோசு 6:6-16

எரிகோ பிடிக்கப்படுதல்
யோசு 6:17-20

ராகாபும் குடும்பமும் காப்பாற்றப்படல்
யோசு 6:21-27

ஆயியில் தோல்வி
யோசு 7:1-5

யோசுவாவின் தாழ்மையும் ஜெபமும்
யோசு 7:6-9

தேவன் யோசுவாவுக்குக் கட்டளை கொடுத்தல்
யோசு 7:10-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எரிகோவில் வெற்றி - ஆனால் ஆயியில் தோல்வி! ஏன்? மிகச் சாதாரணமான காரணமே. பாவம் நிறைந்த கீழ்ப்படியாமை. அந்தப் பாவம் சுத்திகரிக்கப்பட்டபோது, வெற்றி கொடுக்கப் பட்டது. நீ அனுபவிக்க வேண்டிய வெற்றிகளை, அனுபவிக்க முடியாதவாறு உன் உள்ளத்தில் ஏதாவது ஒன்று தடையாகச் செயல்படுகிறதா? அப்படியானால், இன்றே அதை வேருடன் பிடுங்கியெறி.

ஆதார சத்தியம்

"புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப் பண்ணும் (கலா5:9). திராட்சைத் தோட்டங்களைக் கெடுக்கிற குழி நரிகளையும், சிறு நரிகளையும் நமக்குப் பிடியுங்கள்..." (உன்னதப்பாட்டு 2:15)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
இரட்சிப்பின் உதாரணங்கள் இதில் தரப்பட்டுள்ளன. கானானை வென்று இஸ்ரவேலருக்கு தலைமை தாங்கும் யோசுவா மக்களை விடுதலையாக்கும் இயேசுவைப் போல் இருக்கிறார். (எபி. 2:10)	இதன் முக்கிய செய்தி தேவன் தனது வாக்குத் தத்தங்களை நிறைவேற்றுவார் என்பதாகும்.	யோசுவா 21:45

நாள் 79 ஆயியில் கிடைத்த வெற்றி

ஆகான் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்படல்
யோசு 7:16-26

தேவன் யோசுவாவை உற்சாகப்படுத்துதல்
யோசு 8:1-2

ஆயியைப் பிடித்தல்
யோசு 8:3-22

ஆயியின் அழிவு
யோசு 8:23-29

ஏபால் மலைமீது கட்டப்பட்ட பலிபீடம்
யோசு 8:30-35

இஸ்ரவேலுக்கு எதிராக வந்த இராஜாக்கள்
யோசு 9:1-2

கிபியோனியர் சமாதானம்
யோசு 9:3-13

அவர்களை அடையாளம் கண்டு கொள்ளுதல்
யோசு 9:14-21

அவர்கள் பணிவிடைக்காரராக அமர்த்தப்படுதல்
யோசு 9:22-27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நமது ஞானத்தை மாத்திரம் சார்ந்துகொண்டு, நாம் எடுக்கும் தீர்மானங்களில் தேவனுக்கு இடமளிக்க மறுக்கும்போது, நாம் நடந்து செல்லும் பாதை எவ்வளவு அபாயகரமானது! (யோசு 9:14-15). நீ இன்று ஒரு முக்கியமான தீர்மானம் எடுக்கவேண்டியது இருக்கிறதா? நீ ஜெபித்து, அந்தத் தீர்மானத்தில் ஆண்டவர் இடைபட அவருக்கு இடங்கொடுக்குமுன், ஒரு முடிவும் எடுக்காதே.

ஆதார சத்தியம்

"உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள் முழுதும் காத்திருக்கிறேன்." (சங். 25:5)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

கானானில் தொடர்ந்த வெற்றிகள் நாள் 80

கர்த்தருடைய தூதன் ஜனங்களைக் கடிந்து கொள்ளுதல்
நியா 2:1-5

கிபியோனை 5 இராஜாக்கள் தாக்குதல்
யோசு 10:1-6

யோசுவா கிபியோனியருக்கு உதவுதல்
யோசு 10:7-14

இராஜாக்களின் சேனைகள் தோல்வியடைதல்
யோசு 10:15-27

மற்ற வெற்றிகள்
யோசு 10:28-43

மேரோமினருகில் இராஜாக்கள்
யோசு 11:1-9

ஆத்சோர் எரிக்கப்படுதல்
யோசு 11:10-14

தேசம் கீழ்ப்படுத்தப்படுதல்
யோசு 11:15-23

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இன்று உன் வாழ்க்கையில் ஒரு அற்புதம் தேவைப்படுகிறதா? சூரியனும், சந்திரனும் தரித்து நின்ற சம்பவத்தை மீண்டும் ஆழ்ந்து சிந்தித்துப் பார். இப்படி சூரியன் தரித்து நின்று, 'பகற் பொழுதை சேமித்த' அற்புதம், பல்லாயிரக் கணக்கான மக்களின் நம்பிக்கையைத் தூண்டியுள்ளது. கர்த்தரால் செய்யக் கூடாத கடினமான காரியம் என்று ஒன்று உண்டா? சிந்தித்தாயா?... ஏதாவது அவரால் கூடாத காரியம் உள்ளதா?

ஆதார சத்தியம்

"ஆ, கர்த்தராகிய ஆண்டவரே! இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும், பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை." (ஏரேமியா. 32:17)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 81 காலேபும் யோசுவாவும்

யோசுவா இராஜாக்களைத் தோற்கடித்தல்
யோசு 12:7-24

தேசம் இன்னும் முழுமையாகக் கைப்பற்றப்படவில்லை
யோசு 13:1-6

கானானைப் பங்கிடுதல்
யோசு 13:7;14:1-5

காலேப் எபிரோனையும், அவனது மகள் ஆசீர்வாதத்தையும் பெறுதல்
யோசு 14:6-15; யோசு 15:13-19
நியா 1:20, 10-16; 1நளா 6:56

யூதாவின் பங்கு
யோசு 15:1-12

யூதாவின் பட்டணங்கள்
யோசு 15:20-47

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

400 ஆண்டுகள் எகிப்தில் காத்திருந்து, 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் தத்தளித்து அலைந்து திரிந்து, மாதக் கணக்கான கசப்பான யுத்த அனுபவங்களுக்குப் பின்னர், இஸ்ரவேலர் கடைசியாக, கானான் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். மிகக் குறுகிய காலத்தில் இவர்கள் கானானை சுதந்தரிக்க முடியும். ஏனிந்த தாமதமென்று யூகிக்க முடிகிறதா? கீழ்ப்படியாமை. நாமும் இதன் மூலம் கற்றுக்கொள்வோமா?

ஆதார சத்தியம்

"இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்." (யோசுவா. 1:8)

	நோவா வெள்ளம்	யோபு (சோதனை)	
சிருஷ்டி கி.மு. 3000	கி.மு. 2500	கி.மு. 1900	
ஆதாமும் ஏவாளும்	எகிப்தில் பிரமிட் யுக ஆரம்பம்	ஊரைவிட்டு ஆபிரகாம் புறப்படல்	ஈசாக்கு

தேசத்தைப் பங்கிடுதல்

நாள் 82

யூதாவின் பட்டணங்கள்
யோசு 15:48-63; நியா 1:21

யோசேப்பின் குமாரருக்குள்ளே பங்கு
யோசு 16:1-10

மனாசேயின் பங்கு
யோசு 17:1-6

மனாசேயின் எல்லை
யோசு 17:7-13

யோசேப்பு அதிக அளவு பங்கை விரும்புதல்
யோசு 17:14-18

ஆசரிப்புக் கூடாரம் அமைத்தல்
யோசு 18:1

மீதி தேசம் பங்கிடப்படல்
யோசு 18:2-10

மீதி தேசம் பங்கிடப்படல்
யோசு 18:2-10

பென்யமீனின் கோத்திரத்துக்குச் சீட்டு
யோசு 18:11-28

சிமியோன் கோத்திரத்துக்கு சீட்டு
யோசு 19:1-9; 1நாளா 4:28-33

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வேதாகமத்தின் இந்தப் பகுதியை அநேக மக்கள் விருப்பமின்றி கடந்து போவதுண்டு. ஆனால் 11தீமோ 3:17 கூறுவதுபோல் "வேத வாக்கியங்களெல்லாம் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது". ஆகவே வேதாகமத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் பொற்பாளங்கள் நிறைந்துள்ளன. இந்தப் பகுதியில் 'சுதந்திரம்' என்ற வார்த்தை அப்படிப்பட்ட பொன்னான வார்த்தையாகும். அது அநேக தடவை இப்பகுதியில் வருகிறது. உனக்கும் கூட. தேவனில் ஒரு சுதந்திரம் உண்டு. அது என்னவென்று உனக்குத் தெரியுமா? அதற்குள் நீ பிரவேசித்து விட்டாயா?

ஆதார சத்தியம்

"தாம் நம்மை அழைத்ததினாலே, நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்... நீங்கள் அறியும்படிக்கு... பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறேன்." (எபே 1:18,19)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

பன்னிரண்டு கோத்திரங்கள்



அடைக்கலப் பட்டணங்கள்

நாள் 83

செபுலோனுக்கு விழுந்த சீட்டு
யோசு 19:10-16

இசக்காருக்கு விழுந்த சீட்டு
யோசு 19:17-23

ஆசேருக்கு விழுந்த சீட்டு
யோசு 19:24-31

நப்தலிக்கு விழுந்த சீட்டு
யோசு 19:32-39

தாணு க்கு விழுந்த சீட்டு
யோசு 19:40-48

யோசுவாவின் பங்கு
யோசு 19:49-51

அடைக்கலப் பட்டணங்கள்
யோசு 20:1-9

லேவியரின் பட்டணங்கள்
யோசு 13:14,33

லேவியருக்காகக் குறிக்கப்பட்ட பட்டணங்கள்
யோசு 21:1-42

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தவறுதலாக அல்லது கைப்பிசகாக கொலை செய்து விட்ட ஒருவன், ஒரே நாளில் ஓடிச்சென்று அடைக்கலம் புகுந்து கொள்ள வசதியாக அடைக்கலப் பட்டணங்கள் நியமிக்கப்பட்டிருந்தன. இவை எளிதில் சென்றடைய வசதியாக, தெளிவாகக் கண்டுகொள்ளக்கூடிய அடையாளப் பலகைகள் கொண்டதாகவும், இரவும் பகலும் திறந்து வைக்கப்பட்ட நிலையிலும் இருந்தன. நமது நித்திய அடைக்கலப் பட்டணமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, இந்த அடையாளங்கள் எவ்வளவு பொருத்தமாக, அழகாகச் சித்தரிக்கின்றன! - ஆம், துன்ப நேரங்களில், நாம் அவருக்குள் ஓடி மறைந்து கொண்டால், பூரண சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் அனுபவிக்கிறோமே - அல்லேலூயா.

ஆதார சத்தியம்

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்." (சங். 46:1)

	யாக்கோபு			
கி.மு. 1800	கி.மு. 1700 யோசேப்பு	எகிப்தில் இஸ்ரவேலர் கி.மு. 1600	கி.மு. 1500	யாத்திராகமம் கி.மு. 1400 எரிகோ

நாள் 84 நியாயாதிபதிகளை ஏற்படுத்தல்

லேவியரின் பட்டணங்கள்
1நாளா 6:54-55; 57-81

கர்த்தரின் வாக்கு நிறைவேறுதல்
யோசு 21:43-45

ரூபனும் காத்தும் வீடுகளுக்கு அனுப்பப் படுதல்
யோசு 22:1-9

இஸ்ரவேலரைக் கோபப்படுத்தின சாட்சிப் பீடம் கட்டப்படுதல்
யோசு 2:10-20

ரூபன் கோத்திரத்தாரின் மறு உத்தரவு
யோசு 22:21-29

இஸ்ரவேலர் திருப்தியடைதல்
யோசு 22:30-34

நியாயாதிபதிகள் ஏற்படுத்தப்படல்
நியாயா 2:16-19

முதல் விசுவாசத்துரோகம், அந்நியரை சேவித்தல் (மொசொப்பொத்தேமியா)
நியாயா 3:5-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து தேவனின் பிள்ளைகளுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளும் குழப்பங்களும் எளிதில் தீர்க்கப்படக் கூடாத அளவு கடினமானவை. ஆகவேதான் நாம் வேதம் கூறும் புத்திமதியைக் கருத்தில் கொண்டு, "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருந்து அதையடைய உண்மையாக முயற்சி எடுக்கவேண்டும்." (எபே 4:3)

ஆதார சத்தியம்

"அப்பொழுது பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து வந்தால், நான் எத்தனை தடவை மன்னிக்க வேண்டும்? ஏழு தடவை மட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழு தடவை மாத்திரமல்ல, ஏழெழுபது தடவை மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்." (மத். 18:21-22)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடம்
நியாயாதிபதிகள்-பழைய ஏற்பாட்டில் 7ஆவது புத்தகம் 2ஆவது வரலாற்று நூல்	கிதியோன், சிம்சோன்	இப்புத்தகம்"காலச் சுழற்சி"யைத் தெளிவாக விளக்குகிறது. தேவனை மறப்பதும், மனந்திரும்புதலும் மீண்டும் மறப்பதும்.

யோசுவாவின் மரணம்

நாள் 85

முதல் நியாயாதிபதி ஒத்னியேல் இஸ்ரவேலை விடுவித்தல்
நியா 3:9-10

யோசுவா இறுதியாகக் கொடுத்த தூண்டுதலான போதனைகள்
யோசு 23:11-16

யோசுவா ஜனங்களை எச்சரித்தல்
யோசு 23:1-10

அவர்கள் பிதாக்களுக்கு கர்த்தர் செய்த நன்மைகள்
யோசு 24:1-14

யோசுவா, உடன்படிக்கையைப் புதுப்பித்தல்
யோசு 24:15-28; நியா 2:6-7

யோசுவாவின் மரணம்
யோசு 24:29-31; நியா 2:8-9

யோசேப்பின் எலும்புகள் அடக்கம் பண்ணப்படுதல்
யோசு 24:32

பென்யமீன் கோத்திரத்தாரின் செயல்கள்
நியா 1:22-26

யூதா, சிமியோன் கோத்திரத்தாரின் செயல்கள்
நியா 1:1-9; 17-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

மோசேயை இழந்த இஸ்ரவேலர், இப்போது யோசுவாவையும் இழந்து நிற்கின்றனர். ஆயினும் அதன் மூப்பர்களின் ஆவிக்குரிய செயல்கள் மக்களை அதிகமாகத் தொட்டிருந்தபடியால் அவர்கள் கர்த்தரைத் தொடர்ந்து சேவித்தார்கள். சரியான முறையில் ஆவிக்குரிய தலைமையேற்று நடத்துதல், தொடர்ந்து அநேக ஆவிக்குரிய தலைவர்களை உருவாக்குவது உறுதி.

ஆதார சத்தியம்

"பலங்கொண்டு திடமனதாயிரு; இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய் (யோசு 1:6). யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப் பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பருடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் கர்த்தரைச் சேவித்தார்கள்." (யோசு 24:31)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
இயேசு நாசரேத்தில் பிறந்த தாழ்மையான தச்சன். அவர் தாழ்த்தப்பட்ட, பெலவீனமான, அப்பாவியானவர்களைக் காக்கவந்தார். நியாயாதிபதிகளில் தாழ்மையானவர்களையும், முக்கியமற்றவர்களையும் தேவன் பயன்படுத்துகிறார்.	தேவனை ஒதுக்குகின்ற வேளையில் ஒரு தேசம் மோசமான விளைவுகளுக்கு முகம் கொடுப்பதை எடுத்துக்காட்டுகிறது இப்புத்தகம்.	நியாயாதிபதிகள் 3:9

நாள் 86 மீகாவின் விக்கிரக வணக்கம்

மனாசே கோத்திரத்தாரின் செயல்கள்
நியா 1:27-36

இஸ்ரவேலின் பின்மாற்றம்
நியா 2:10-15,20

சில தேசங்கள் விடப்படுதல்
நியா 2:21-23;3:1-4,11

இரண்டாவது விசுவாச துரோகமும் அந்நியரைச் சேவித்தலும் (மோவாப்)
நியா 3:12-14

எலியேசரின் மரணம்
யோசு 24:33

இரண்டாம் நியாயாதிபதி ஏகூத். இஸ்ரவேலை விடுவித்தல்
நியா 3:15-30

மீகாவும் அவன் தாயாரும்
நியா 17:1-6

மீகா. ஒரு லேவியனை ஆசாரியனாக அமர்த்துதல்
நியா 17:7-13

தாண் கோத்திரத்தின் சுதந்திரத்தை விரிவாக்க முயற்சித்தல்
நியா 18:1-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு லேவியன் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. தேவன் தன்னிடமும் தனது விக்கிரங்களிடமும் காண்பித்த தயவின் அடையாளமென்று மீகா எண்ணிக் கொண்டான். அவன் செய்த தவறு என்ன? சூழ்நிலைகளை வேதத்தின் வெளிச்சத்தில் நிறுத்திப் புரிந்துகொள்வதை விட்டுவிட்டு. வேதத்தை. சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அர்த்தப்படுத்திக் கொண்டான்.

ஆதார சத்தியம்

"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது. சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்: அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல். தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி. வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்." (யோவா 16:13)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
ரூத் - 8ஆவது பழைய ஏற்பாட்டுப் புத்தகம்.	நஹோமி. ரூத். யோவான் 3ஆவது வரலாற்று நூல்	இப்புத்தகம் சாதுவான ரூத் எவ்வாறு இயேசுகிறிஸ்துவின் முதாதையருள் ஒருவரானதை காட்டுகிறது (தாவீது இராஜாவின் கொள்ளுப்பாட்டி)

இஸ்ரவேலில் உள்நாட்டு யுத்தம் நாள் 87

தாண் புத்திரர், மீகாவைக் கொள்ளையிட்டு லாயீஸ் மீது படையெடுத்தல்
நியா 18:16-31

ஒரு லேவியனும் அவனது மறுமனையாட்டியும்
நியா 19:1-13

கிபியா மக்களின் துன்மார்க்கம்
நியா 19:14-30

இஸ்ரவேல் உள்நாட்டு யுத்தத்துக்குத் தயாராகுதல்
நியா 20:1-17

பென்யமீனியருக்கு எதிரான யுத்தமும் அவர்களது தோல்வியும்
நியா 20:18-36

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு நாளில் ஆவிக்குரிய அனுபவங்களின் உன்னத நிலைக்கு ஏறும் ஆண்டவரின் பிள்ளைகள், மறுவினாடியே நம்பிக்கையிழந்து, கீழான நிலைக்குத் தள்ளப்பட்டுத் தவிக்கும் பாதாள அனுபவத்தை அனுபவிக்கிறார்களே- ஏனிந்த ஏற்றத் தாழ்வுள்ள ஆவிக்குரிய அனுபவங்கள்? ஒரேயொரு விடைதானுண்டு. மனித இருதயத்தின் திருக்கான தன்மையே காரணம். அடுத்தமுறை ஆவிக்குரிய உன்னத அனுபவத்திற்குள் கடந்து செல்லும்போது, இதை மறந்துவிடாதே.

ஆதார சத்தியம்

"எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத் தக்கவன் யார்?" (எரே. 17:9)

இயேசுவும் வேதமும்	போதனை	மனை வசனம்
ரூத்தின் புத்தகம் சுதந்தரவாளி 13 தடவை சொல்கிறது. போவாஸ். ரூத்தின் சுதந்திரவாளி - அதைப் போலவே இயேசு பாவத்திலிருந்து எம்மை மீட்கிறார்.	இப்புத்தகம் தேவன் எவ்வாறு ஒரு விதவையில் கரிசனை	ரூத் 1:16

நாள் 88 நகோமியும் ரூத்தும்

இஸ்ரவேலர் வெற்றி பெற்றவிதம்
நியா 20:36-48

பென்யமீன் கோத்திரத்துக்காகத் துக்கம் கொண்டாடுதல்
நியா 21:1-25

மூன்றாவது நியாயாதிபதி, சம்கார்
நியா 3:31

மூன்றாவது முறை விசுவாசத் துரோகமும், அடிமைத்தனமும் (கானான்)
நியா 4:1-3

எலிமலேக், அவன் குமாரரின் மரணம்
ரூத் 1:1-5

நகோமி தாய்நாடு திரும்புதல்
ரூத் 1:6-13

ரூத் நகோமியுடன் செல்லுதல்
ரூத் 1:14:18

ரூத்தும் நகோமியும் பெத்லகேமுக்கு வருதல்
ரூத் 1:19-22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

மெய்யான மனந்திரும்புதலில் நடைபெறும் காரியங்களையே ரூத், ஓர்பாள் எடுத்த முடிவுகள் சித்திரிக்கின்றன. தனது நாட்களை விக்கிரக வணக்கத்தில் கழித்துவிட, ஓர்பாள் முடிவு செய்துவிட்டாள். ஆனால் ரூத்தோ, தனது பெயர் தெய்வீக அட்டவணையில் பொறிக்கப்படும் படியாக முன்னேறிக் கடந்து செல்கிறாள். ஆவிக்குரிய பயணத்திலும், சிலர் தேவனின் பிள்ளைகளோடு கடந்து சென்ற போதிலும், எல்லாவற்றையும் இரட்சகரின் கரத்தில் ஒப்படைத்து, விசுவாசத்தில் தாவிச் செல்லும் அனுபவத்தைப் பெறத் தவறிவிடுவது எவ்வளவு வருந்தத்தக்க காரியம்!

ஆதார சத்தியம்

"...அகிரிப்பா பவுலை நோக்கி: 'நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல்: நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங் குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன்' என்றான்." (அப். 26:28-29)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	ஆச்ரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம், டெபோரா, பாராக்		சாமுவேல்

ரூத்தும் போவாசும்

நாள் 89

ரூத், போவாசின் வயலில் கதிர் பொறுக்குதல்
ரூத் 2:1-3

ரூத்திடம் போவாஸ் காட்டிய பரிவு
ரூத் 2:4-16

ரூத், நகோமியிடம் திரும்புதல்
ரூத் 2:17-23

நகோமியின் அறிவுரைகள்
ரூத் 3:1-5

போவாஸ், உறவின் முறையாரின் கடமைகளை ஒத்துக்கொள்ளுதல்
ரூத் 3:6-13

ரூத், நகோமியிடம் திரும்பி வருதல்
ரூத் 3:14-18

ரூத்தின் சுதந்திரத்தை மீட்க உறவின் முறையால் மறுத்துவிடுதல்
ரூத் 4:1-8

போவாஸ், ரூத்தை மணமுடித்தல்
ரூத் 4:9-12

ஓபேத் பிறத்தல்
ரூத் 4:13-17

நான்காம், ஐந்தாம் நியாயாதிபதிகள் தெபோராள், பாராக்
நியா 4:4-9

சிசேரா தோற்கடிக்கப்படுதல்
நியா 4:10-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவரால் கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கையில், ஒன்றுமே தற்செயலாக நடப்பது அல்ல: ரூத், போவாசை சந்தித்ததும் தற்செயல் நிகழ்ச்சியல்ல, அது ஆண்டவரே ஒழுங்குபடுத்திய காரியம். உன்னுடைய வாழ்க்கையும், நட்சத்திரங்களினாலோ, அதிர்ஷ்டத்தினாலோ ஆளப்படாமல், கர்த்தராகிய இரட்சகரால் மட்டுமே ஆளப்படுகிறது என்பது எவ்வளவு மகிழ்ச்சியான காரியம்! அதைக் குறித்து நீ மகிழ்ச்சியடைகிறாயா?

ஆதார சத்தியம்

"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்." (சங். 37:23)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப், எலியா, இஸ்ரவேல்	ரியரோபெயாம் II

நாள் 90 இஸ்ரவேல் - ஒரு உலக வல்லரசு

சிசெரா கொல்லப்படுதல்
நியா 4:17-24

தேவனுக்குத் துதியும் மகிமையும் கொடுக்கப்படுதல்
நியா 5:1-5

இஸ்ரவேலின் விடுதலை
நியா 5:6-11

சிலர் புகழப்படுதல் - சிலர் கண்டிக்கப்படுதல்
நியா 5:12-23

ஆறாவது நியாயாதிபதி, கிதியோன் இஸ்ரவேலை விடுவிக்கப் புறப்படுதல்
நியா 6:11-24

சிசெராவின் தாய் ஏமாற்றமடைதல்
நியா 5:24-31

நான்காவது முறையாக விசுவாசத் துரோகமும், அடிமைத்தனமும் (மீதியானியர்)
நியா 6:1-6

இஸ்ரவேல் கடிந்து கொள்ளப்படல்
நியா 6:7-10

கிதியோன், பாகாலின் பீடத்தை அழித்தல்
நியா 6:25-35

கிதியோனின் "ஆட்டுத்தோல்"
நியா 6:36-40

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஜனங்களின் கீழ்ப்படிதலினாலும், ஆண்டவரின் ஆசீர்வாதத்தினாலுமே, இஸ்ரவேல் ஒரு வல்லரசாக எழும்ப முடிந்தது. அவர்கள் ஆண்டவருக்கு உண்மையானவர்களாக இருக்கு மட்டும், அவர்கள் வல்லமையுடனிருப்பது உறுதியாக இருந்தது. அவர்கள் கீழ்ப்படியாமலிருக்கும் போதோ, அவர்கள் வலிமை குன்றிப் போனார்கள். இது தேசங்களின் சரித்திரம் மட்டுமல்ல, தனிமனிதனின் வாழ்க்கைக்கும் பொருந்தும் உண்மையாகும்.

ஆதார சத்தியம்

"தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம் பண்ணு ம்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்." (சங். 101:6)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அச்சிரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா, பாராக்		சாமுவேல்

கிதியோனின் சரித்திரம் நாள் 91

கிதியோனின் சேனை குறைக்கப்படுதல்
நியா 7:1-8

கிதியோன் உற்சாகப்படுத்தப்படல்
நியா 7:9-15

மீதியானியரின் தோல்வி
நியா 7:16-22

எப்பிராயீமர், ஓரேப், சீபை பிடித்தல்
நியா 7:23-25

கிதியோன், எப்பிராயீமரை அமைதிப்படுத்துதல்
நியா 8:1-3

சுக்தோத், பெனுவேல் தண்டிக்கப்படல்
நியா 8:4-17

கிதியோன் தன் மக்களுக்காகப் பழி வாங்குதல்
நியா 8:18-21

கிதியோன் விக்கிரக வணக்கத்துக்கு வழிவகுத்தல்
நியா 8:22-30

அபிமலேக்கின் பிறப்பு
நியா 8:31

கிதியோனின் மரணம்
நியா 8:32-35

அபிமலேக்கு இராஜாவாகுதல்
நியா 9:1-6

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உன்னை மிகவும் பாரமாகப் பிரச்சினைகள் அழுத்தும் நேரங்களில், மீதியானியரை முறியடிக்க கிதியோனுக்கு ஒரு அருமையான திட்டத்தை வகுத்துக் கொடுத்தது போல, உனக்கும் ஒரு தெய்வீகத் திட்டத்தின் மூலம் பிரச்சினையைத் தீர்த்துவைக்க ஆண்டவர் வல்லவராயிருக்கிறார். உனது வாழ்க்கையில் உனக்கு எதிராகப் போராடும் 'மீதியானியர்' யார்? – எவை? குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைத் திட்டமாக உன் கண்முன் நிறுத்தி, தேவனிடம் அதைத் தீர்த்து வைக்க அவர் ஒரு திட்டத்தை வகுத்துத் தருமாறு கேள்.

ஆதார சத்தியம்

"இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோம. 8:31)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப், எலியா, இஸ்ரவேல்	ரியரே, பெயாம் II

இதயத்திற்கு இதயம்

மார்ச்

வாழ்த்துக்கள்! இப்பொழுது காற்பங்கு வேதாகமத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். கஷ்டமான பகுதிகளை முடித்து விட்டீர்கள். இப்பொழுது தினசரிப் பாடங்களை கட்டுப்பாட்டுடன் உங்களை ஒழுங்கு செய்து வாசியுங்கள் ஒரு விளையாட்டு வீரனைப் போன்று தினமும். பயிற்சி செய்வது போல ஆவிக்குரிய பயிற்சிகளை தினமும் செய்து கொள்ள வேண்டும். அது விசுவா சத்தைக் கட்டி, தடைகளை மேற் கொள்ளச் செய்யும். இப்பொழுது தேவ இராஜ்ஜியத்தின் சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் அனுபவிக்கலாம்.

4

இந்தப் பகுதியில்....

சிம்சோனின் வீரதீரங்கள்.

இஸ்ரவேலர் தமக்கு இராஜா ஒருவர் வேண்டும் என்று கோரியமை.

சவுல் தாவீதை உயர்த்தியமை.

நாள் 92 அபிமெலேக்கின் சரித்திரம்

யோதாம் சீகேமியரைக் கடிந்து கொள்ளுதல்
நியா 9:7-21

சீகேமியரின் சதித் திட்டங்கள்
நியா 9:22-29

அபிமலேக்கு சீகேமியரை அழித்தல்
நியா 9:30-49

அபிமலேக்கு வெட்டப்படுதல்
நியா 9:50-57

ஏழாவது நியாயாதிபதி தோலா இஸ்ரவேலைக் காப்பாற்றுதல்
நியா 10:1-2

எட்டாவது நியாயாதிபதி, யாவீர்
நியா 10:3-5

(9 ஆவது நியாயாதிபதி, ஏலி) சிம்சோன் கருவில் உருவாகுதல்
நியா 13:8-14

மனோவாவுக்குத் தூதன் தரிசனம் அளித்தல்
நியா 13:8-14

மனோவாவின் பலி
நியா 13:15-23

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

"அதிகாரத்தை ஒருவன் எவ்வாறு பிரயோகம் பண்ணுகிறானோ, அதுவே ஒரு மனிதனின் அளவுகோலாகும்" என்று ஒரு பெரிய தத்துவ மேதை கூறினார். கிதியோனின் மகனாகிய அபிமலேக்கு அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததினால் இறுதியில் அவன் வாழ்க்கை தோல்வியிலும், இழப்பிலும் முடிந்தது. தேவன் உனக்குக் கொடுத்துள்ள அதிகாரத்தை நீ எவ்வாறு பயன்படுத்துகிறாய்? கவனமாகவா? கவலையீனமாகவா?

ஆதார சத்தியம்

"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." (II தீமோ 1:7)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
1 சாமுவேல் 9ஆவது பழைய ஏற்பாட்டு நூல் 4ஆவது வரலாற்றுப் புத்தகம்	அன்னாள், ஏலி, சாமுவேல், சவுல், தாவீது, கோலியாத், யோனத்தான்	1சாமுவேல் புத்தகம் அரச ஆட்சி பற்றிக் கூறுகிறது. மக்கள் தேவனுடைய அரச ஆட்சியை உதறித் தள்ளுவதையும், ஏனைய நாடுகளைப் போல உலகப் பிரகாரமான அரசனைக் கொண்டிருக்கவேண்டும் என்று விரும்பியதையும், சவுலின் குறைவுகளையும், யோனத்தானுடன் தாவீதின் சினேகிதத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

சிம்சோனின் சரித்திரம்

நாள் 93

சிம்சோனின் பிறப்பு
நியா 13:24-25

யெப்தாவின் இளமைப் பருவம்
நியா 11:1-3

எல்க்கானாவும் அவன் குடும்பமும்
Iசாமு 1:1-8

அன்னாளின் ஜெபம்
Iசாமு 1:9-18

சாமுவேலின் பிறப்பு
Iசாமு 1:19-23

சாமுவேல் பிரதிஷ்டை செய்யப்படுதல்
Iசாமு 1:24-28

அன்னாளின் கீதம்
Iசாமு 2:1-10

இஸ்ரவேலரின் உபத்திரவம்
நியா 10:6-9

இஸ்ரவேலின் மனஸ்தாபம்
நியா 10:10-18

மேற்குப் பகுதியில் பெலிஸ்தர்
நியா 13:1; சங் 106:34-46

சிம்சோன், பெலிஸ்திய பெண்ணை விரும்புதல்
நியா 14:1-4

சிம்சோன் சிங்கத்தைக் கொல்லுதல்
நியா 14:5-9

சிம்சோனின் விடுகதை
நியா 14:10-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சிம்சோனின் வீழ்ச்சிக்கு ஒரு முக்கியமான காரணம் - தான் அதிகாரத்திலிருக்கும் போது அதைக் குறித்த அவனது அலட்சிய மனப்பான்மை. தேவன் தங்களுக்குக் கொடுக்கும் கடமைகளையும் பொறுப்புக்களையும் குறித்துக் கவலையீனமாக இருப்பவர்கள் இறுதியில் சிம்சோனைப் போன்றே வலிமையிழந்து ஏமாற்றமடைந்து தரிசனத்தை இழந்து போவது நிச்சயம்.

ஆதார சத்தியம்

"மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்." (1 கொரி 4:2)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
சாமுவேல் 2ம் அதிகாரத்தில் உள்ள அன்னாளின் ஜெபம் லூக்கா 1இல் உள்ள மரியாளின் ஜெபத்தைப் போன்றது இயேசு பெரிய தீர்க்கதரிசியாகவும் தேவனுக்கு கீழ்ப் படிந்தார் தனது மக்களை விடுவிக்கும் வல்லமை பெற்றார்.	சாமுவேல், சவுல், தாவீது ஆகியோரின் வாழ்வில் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகளால் தேவனை ஒதுக்குவது கஷ்டத்தை கொண்டு வருமென்றுசாமுவேல் சுற்பிக்கிறது.	1சாமுவேல் 15:22

இஸ்ரவேலின் நியாயாதிபதிகள்

ஒத்னியேல்	நாடோடிகளுக்கு எதிராக	நியா 3:5-11
ஏகூத்	மோவாபியருக்கு எதிராக	நியா 3:12-30
சம்கார்	பெலிஸ்தியருக்கு எதிராக	நியா 3:31
தெபோராள்	கானானியருக்கு எதிராக	நியா 4-5 அதிகாரங்கள்
கிதியோன்	மீதியானியருக்கு எதிராக	நியா 6:11-8:33
தோலா	இசக்காரிலிருந்து	நியா 10:1-2
யாவீர்	கீலேயாத்திலிருந்து	நியா 10:3-5
யெப்தா	அம்மோனியருக்கு எதிராக	நியா 10:6-12:7
இப்சான்	பெத்லகேமிலிருந்து	நியா 12:8-10
ஏலோன்	செபுலோனிலிருந்து	நியா 12:11-12
அப்தோன்	எப்பிராயிமிலிருந்து	நியா 12:13-15
சிம்சோன்	பெலிஸ்தருக்கு எதிராக	நியா 13-16 அதிகாரங்கள்

தேவன் சாமுவேலை அழைத்தல் நாள் 94

சிம்சோனின் விடுகதை
நியா 14:15-20

சிம்சோனுக்கு அவனது மனைவி மறுக்கப்படுதல்
நியா 15:1-2

ஏலியின் கெட்ட குமாரர்
1சாமு 2:12-17

சாமுவேலின் இளமைப் பருவம்
1சாமு 2:11, 18-21,26

ஏலிக்கு எச்சரிப்பு
1சாமு 2:22-25, 27-36

சவுலின் பிறப்பு
1சாமு 9:1; 14:51

தேவன் சாமுவேலை அழைத்தல்
1சாமு 3:1-10

தேவன் சாமுவேலிடம் ஏலி வீட்டுக்கு வர இருக்கும் அழிவு பற்றிக் கூறுதல்
1சாமு 3:11-18

சாமுவேல் தீர்க்கதரிசியாக உறுதி செய்யப்படல்
1சாமு 3:19-21

யெப்தாவும் கீலேயாத் மக்களும்
நியா 11:4-11

அவன் சமாதானம் செய்து வைக்க முயற்சி செய்தல்
நியா 11:12-28

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஜெபத்தின் மூலம் கிடைக்கக்கூடிய ஆழமான விளைவுகளை யாரால் கூற முடியும்? அன்னாள் ஜெபித்தாள் - விளைவாக இஸ்ரவேலின் முதல் பெரிய தீர்க்கதரிசியும், கடைசி நியாயாதிபதியுமாக இருந்த சாமுவேல் பிறந்தான். நீ கனவில் கூட நடக்கக் கூடாதவை என்று நினைத்துள்ள காரியங்களைக் கூட உனது தொடர்ந்த சோர்ந்து போகாத ஜெபம் நிறைவேறச் செய்யும் - ஆகவே ஜெபித்துக் கொண்டே இரு.

ஆதார சத்தியம்

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்...." (1 யோவா 5:14,15)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

நாள் 95 உடன்படிக்கைப் பெட்டி பிடிபடுதல்

யெப்தாவின் பொருத்தனை
நியா 11:29-40

எப்பிராயீமர். யெப்தாவுடன் சண்டையிடுதல்
நியா 12:1-6

பத்தாவது நியாயாதிபதி. யெப்தாவின் மரணம்
நியா 12:7

பதினொராவது நியாயாதிபதி சிம்சோன்
நியா 15:20

உடன்படிக்கைப் பெட்டி பிடிக்கப்படுதல்
1சாமு 4:1-11

ஏலிமரித்தலும் இக்கபோத் பிறத்தலும்
1சாமு 4:12-22

தாகோன் உடைக்கப்படுதல்
1சாமு 5:1-5

பெலிஸ்தியர் வாதிக்கப்படுதல்
1சாமு 5:6-12;6:1

உடன்படிக்கைப் பெட்டி திரும்பக் கொண்டு வரப்படல்
1சாமு 6:2-12

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உடன்படிக்கைப் பெட்டி அவர்களோடிருந்த போதிலும் இஸ்ரவேலர் தோல்வியடையக் காரண மென்ன? ஒருவேளை தேவன் மீது சார்ந்து கொள்வதை விட அதிகமாக அவர்கள் உடன்படிக்கைப் பெட்டி மீது சார்ந்து கொள்ள ஆரம்பித்ததே காரணமாக இருக்கலாம். தேவன் மீதுள்ள நமது நம்பிக்கை குறையும் போது தேவை யற்ற, பயனற்ற மற்ற பொருட்கள் மீது வைக்கும் நம்பிக்கை அதிகமாகும். அது நடக்கும்போது நாம் வெற்றி பெறுவது உறுதியான காரியமல்ல.

ஆதார சத்தியம்

"விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிற வைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை யென்றும் அறிந்திருக்கிறோம்." (எபி 11:3)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தம்பிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

சிம்சோனும் தெலீலாளும்

நாள் 96

பெத்ஷிமேஷில் உடன்படிக்கைப் பெட்டி
1சாமு 6:13-18

மக்கள் அழிக்கப்படல
1சாமு 6:19-21

உடன்படிக்கைப் பெட்டி கீரியாத் யாரீமுக்குக் கொண்டு செல்லப்படல்
1சாமு 7:1-2

12 ஆவதுநியாயாதிபதி இப்சான்
நியா 12:8-10

சிம்சோனும் பெலிஸ்தியரும்
நியா 15:3-19

சிம்சோன் தப்பித்துக் கொள்ளுதல்
நியா 16:1-3

சவுலின் திருமணமும், குடும்பமும்
1சாமு 14:50,49

13ஆவது நியாயாதிபதி ஏலோன்
நியா 12:11-12

சிம்சோனும் தெலீலாளும்
நியா 16:4-22

சிம்சோனின் மரணம்
நியா 16:23-31

மிஸ்பாவில் எழும்புதல்
1சாமு 7:3-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் 'இரண்டாவது தருணம்' தருகிற தேவன் என்பதை நினைக்கும் போது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது. சிம்சோனின் முடி மீண்டும் வளர ஆரம்பிக்கிறது! தேவன் உன்னிடம் ஒப்படைத்த எந்தக் காரியத்திலாவது தோல்வியடைந்திருக்கிறாயா? மனந்தளராதே – அவரிடம் மனம் வருந்தி மன்னிப்புக்கேள். நிச்சயமாகவே இன்னொரு தருணம் தருவார்.

ஆதார சத்தியம்

"நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய் வெட்டுக்கிளிகளும், பச்சைக் கிளிகளும்... பட்ஷித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன். நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை." (யோவே 2:25,26)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 97 சவுலின் சரித்திரம்

பெலிஸ்தியர் தோல்வியடைதல்
1சாமு 7:9-14

சாமுவேலின் தலைமைப் பொறுப்பு
1சாமு 7:15-17

14ஆவது நியாயாதிபதி. அப்தோன்
நியா 12:13-15

பொல்லாத அரசாங்கம்
1சாமு 8:1-3

இஸ்ரவேலர் இராஜாவை விரும்புதல்
1சாமு 8:4-9

இராஜாவின் குணநலன்கள், நடத்தை
1சாமு 8:10-22

சவுல் சாமுவேலிடம் கொண்டு வரப்படல்
1சாமு 9:2-10

சவுலைப் பற்றி சாமுவேலுக்கு அறிவிக்கப்படல்
1சாமு 9:11-7

சவுலை சாமுவேல் நடத்திய விதம்
1சாமு 9:18-27

சாமுவேல் சவுலை அபிஷேகம் செய்தல்
1சாமு 10:1-16

சவுல் அரசனாகத் தெரிந்தெடுக்கப்படல்
1சாமு 10:17-27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டது. வேறொரு காரியத்தை மறைப்பதற்கே ஒழிய உண்மையான ஆர்வத்துடனல்ல. உள்ளத்தின் ஆழத்தில் தங்களை ஆண்டவர் ஆட்சி செய்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் செய்த காரியம் ஒரு சிறுவன் தனது தகப்பனைப் பற்றிச் சொன்னதைப் போல் இருந்தது. "எனது அப்பா என்னை உட்காரச் சொன்னார்: நான் வெளிப்பார்வைக்கு உட்காந்திருந்தாலும் என் உள்ளத்தில் நான் இன்றும் நின்று கொண்டு தானிருக்கிறேன்!" இப்படிப்பட்ட தன்மையுள்ள வர்கள் உன் நினைவுக்கு வருகிறதா? நீ எப்படி?

ஆதார சத்தியம்

"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவா 14:15)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

பெலிஸ்தியருடன் யுத்தம்

நாள் 98

யாபேஸ் -கீலேயாத் விடுவிக்கப்படல்
1சாமு 11:1-11

சவுல் ராஜாவாக உறுதிப்படுத்தப்படல்
1சாமு 11:12-15

சவுல் ஆகாரியரைத் தோற்கடித்தல்
1நாளா 5:10, 18-22

சாமுவேல் தனது உண்மையைக் கூறி அறிவித்தல்
1சாமு 12:1-5

சாமுவேல் மக்களைக் கடிந்து கொள்ளுதல்
1சாமு 12:6-25

அறுவடை சமயத்தில் இடி
1சாமு 12:16-25

பெலஸ்தியர் படையெடுத்தல்
1சாமு 13:1-7, 19-23

சவுல் பலியிட்டுக் கண்டிக்கப்படுதல்
1சாமு 13:8-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் தமது குணத்திற்கு மாறாக ஒரு பொழுதும் கிரியை செய்பவரல்ல. தமது பிள்ளைகள் எவ்வளவு எதிர்த்து நின்ற போதிலும் 'தமது மகத்துவமான நாமத்தினிமித்தம்' அவர்களைக் கைவிட மாட்டேன். என்று வாக்களிக்கிறார். (1சாமு 12:22) அதே காரணத்தினிமித்தம் ஆண்டவர் உன்னையும் கைவிட மாட்டார். இனி சோர்வடைந்து மனந்தளரும் போது இதை நினைவில் வைத்துக் கொள்.

ஆதார சத்தியம்

"... நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை: உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" (எபி 13:5)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப், எலியா, இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 99 சவுலின் வீழ்ச்சி

யோனாத்தானின் வெற்றி
1சாமு 14:1-23

ஜனங்கள் சாப்பிடாதபடி தடை செய்யப்படுதல்
1சாமு 14:24-35

யோனத்தான் - தடையை மீறுதல்
1சாமு 14:36-46

பெலிஸ்தியருடன் தொடர்ந்த யுத்தங்கள்
1சாமு 14:47-48,52

சவுல் அமலேக்கை அழிக்க அனுப்பப்படுதல்
1சாமு 15:1-9

சவுல் தன்னைத்தான் மெச்சிக் கொள்ளுதல்
1சாமு 15:10-23

சவுலின் அரைகுறைத் தாழ்மை
1சாமு 15:24-31

ஆகாகைக் கொலை செய்தல் - சவுலும் சாமுவேலும் பிரிந்து போகுதல்
1சாமு 15:32-35

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எவ்வளவு தான் நமது சிற்றறிவுக்கு அவை முரணாகத் தோன்றின போதும், தேவனின் கட்டளைக்குக் கீழ்ப்படியத் தவறுவது, ஆவிக்குரிய பேரிழப்புக்களைக் கொண்டு வரும். உனக்கு விருப்பமேயில்லா விட்டாலும், தேவன் கேட்பது எதுவோ அதற்கே கீழ்ப்படிவதை உனது வாழ்க்கையின் குறிக்கோளாக வைத்துக்கொள். தேவன், 'பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலையே உத்தமம்' என்று கூறுகிறார், ஆம் அதுவே உத்தமம்.

ஆதார சத்தியம்

"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளை பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." (ஏசாயா 55:8-9)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா, பாராக்		சாமுவேல்

தாவீதின் உயர்வு

நாள் 100

சாமுவேல் பெத்லகேமுக்கு அனுப்பப்படுதல்
1சாமு 16:1-11

சாமுவேல் சவுலை அபிஷேகித்தல் *1சாமு 16:12-13*

தேவனின் சிருஷ்டிப்பின் மகிமை
சங் 19:1-14; 8:1-9

தாவீது சவுலை அமைதிப்படுத்துதல்
1சாமு 16:14-23

கோலியாத்தின் சவால்
1சாமு 17:1-11

தாவீது பாளயத்திற்கு வருதல்
1சாமு 17:12-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கோபம் நீதியுள்ளதாகவும் இருக்கலாம். அநீதியானதாகவும் இருக்கலாம். கோலியாத் இஸ்ரவேலரை எள்ளி நகையாடிய போது தாவீது அடைந்த கோபம் நியாயமானது. நீதியானது: ஏனெனில், தனக்கு நேர்ந்த ஒரு அவமானத்தினால் மனத்தாங்கலடைந்து எழுந்த கோபமல்ல அது: மாறாக பிறருக்கு நேரிட்ட காரியங்களிலிருந்து பொங்கியெழுந்த துக்கத்தினால் ஏற்பட்ட கோபம் அது.

ஆதார சத்தியம்

"நீங்கள் கோபங் கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது." (எபே 4:26)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 101 தாவீதின் செல்வாக்கு மக்கள் மத்தியில் உயருகிறது

தாவீதும் கோலியாத்தும்
1சாமு 17:31-41, 55-56, 42-51, 57-58; 52-54

யோனத்தானின் நட்பு
1சாமு 18:2, 1, 3-4

தேவனின் கிருபை, பராமரிப்பு குறித்து தாவீதின் நம்பிக்கை
சங் 23:1-6

தாவீது புகழப்படுதல்
1சாமு 18:5-9

சவுல் தாவீதைக் கொல்ல முயற்சித்தல்
1சாமு 18:10-13

தாவீது பாதுகாப்புக்காக ஜெபித்தல்
சங் 5:1-12

தாவீதின் ஞானம்
1சாமு 18:14-19

தாவீது மீகாளை விவாகம் செய்தல்
1சாமு 18:20-30

உதவி கேட்டு தாவீதின் ஜெபம்
சங் 12:1-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கோலியாத்தின் மீது தாவீது கொண்ட வெற்றி, சவுலின் யுத்த ஆயுதங்களையும் உடைகளையும் தரித்துக் கொண்டதினால் கிடைக்கவில்லை. கர்த்தரால் அருளப்பட்டு தாவீது பெற்றிருந்த பரிசுத்தத்தின் விளைவாக அவனுக்குக் கிடைத்த ஒரு விசேஷித்த உள்ளுணர்வும், தந்திரமும் தான் கோலியாத்தின் தோல்விக்கு தேவையாக இருந்தன. இன்று உனது 'கோலியாத்தை' சந்திக்கும் போது இதை மனதில் கொள்: பலத்தினாலுமல்ல, பரக்கிரமத்தினாலுமல்ல: என்டைய ஆவியினாலேயே ஆகும்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 4:6)

ஆதார சத்தியம்

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக் கடவன்; அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக் 1:5)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

சவுல் மன்னன் - எழுச்சியும் வீழ்ச்சியும்

சவுலின் எழுச்சி

1. இஸ்ரவேல் ஒரு இராஜா வேண்டுமெனக் கேட்குதல். *(1சாமு. 8)*
   இஸ்ரவேலர் பிறதேசங்களைப் போலிருக்க விரும்பினர்.
2. சவுல் தெரிந்தெடுக்கப்படுகிறான். *(1சாமு. 9)*
   தேவன் சவுலைத் தேடிப்பிடிக்க, சாமுவேலுக்குக் கட்டளையிடுதல்.
3. சாமுவேல், சவுலைப் பிரதிஷ்டை செய்தல். *(1சாமு. 10)*
   கர்த்தரின் ஆவி அவன் மேல் வந்து, அவன் தீர்க்க தரிசனம் கூறுதல்.
4. அவனது இராஜ்யபாரம் உறுதிப்படுதல். *(1சாமு. 11)*
   இஸ்ரவேலர் பிற தேசங்களைப் போலிருக்க விரும்பினர்.



சவுலின் வீழ்ச்சி

1. அவன் ஆசாரியத்துவத்தை அவமதித்தல். *(1சாமு. 13)*
   அவன் ஒரு தகன பலியைச் செலுத்துகிறான். சாமுவேல் கடிந்து கொள்ளுகிறான்.
2. அவன் அமலேக்கியரை அழிக்காமல் காப்பாற்றுதல்.
   தேவன் அவர்களை அழிக்கக் கட்டளை கொடுத்திருந்தார். சாமுவேல் கடிந்து கொள்ளுகிறான்.
3. ஒரு பொல்லாத ஆவியினால் பீடிக்கப்படுதல். *(1சாமு. 16)*
   அவன் தாவீதைக் கொல்ல, அழிக்க முயற்சி செய்கிறான். தாவீது தப்பியோடி, அவனை எதிர்க்கிறான்.
4. கர்த்தருடைய ஆசாரியரைக் கொலை செய்கிறான். *(1சாமு. 22)*
   தாவீது மீது கொண்ட பொறாமையில், அவர்களை அவனது ஆதரவாளரென் றெண்ணி, தவறுதல்.
5. எந்தோரிலுள்ள சூனியக்காரியைப் போய்ச் சந்திக்கிறார். *(1சாமு. 28)*
   சவுல் பயத்தால் நிறைந்து, தனது ஆயுத தாரியுடன் தற்கொலை செய்து கொள்கிறான். *(1சாமு. 31)*

நாள் 102 தாவீது தனது தேவனிடம் திரும்புதல்

யோனத்தான் தாவீதை எச்சரித்தல்
1சாமு 19:1-3

தாவீது கர்த்தர் பேரில் நம்பிக்கை உள்ளவனாயிருக்கிறான்.
சங் 11:1-7

சவுல், தாவீதிடம் நடந்து கொள்ளும் விதம்
1சாமு 19:4-11

மீகாள் தாவீதுக்கு உதவுதல்
1சாமு 19:12-17

பாதுகாப்பு கோரி, தாவீது செய்த ஜெபம்
சங் 59:1-17

தாவீது சாமுவேலிடம் ஓடுதல்
1சாமு 19:18-24

நீதி கேட்டு தாவீதின் ஜெபம்
சங் 7:1-17

வழி நடத்துதலும் பாதுகாப்பும் கேட்டு, தாவீதின் ஜெபம்
சங் 25:1-22

தாவீது யோனத்தானைக் கலந்து ஆலோசித்தல்
1சாமு 20:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பாதை அடைபட்டு, சுவரில் மோதி நிற்கும் வேளையில் நம்பிக்கை தேடி யாரிடம் திரும்புகிறாய்? கலையிடமா? இலக்கியத் தினிடமா? இசையினிடமா? மதுபழக்கத் தினிடமா? தாவீதோ, தேவனிடம் திரும்பி தேவன் பரலோகிலிருக்கிறாரென்பதை நினைவு படுத்திக் கொள்ளுகிறான். வாழ்க்கையின் பாது காப்பற்ற சூழ்நிலைகளில் அவரே நமக்கு மிகப்பெரிய பாதுகாப்பாவார்.

ஆதார சத்தியம்

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்." (சங் 46:1)

கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

தாவீது கஷ்டங்களில் சிக்குதல் நாள் 103

தாவீதுடன் யோனத்தானின் உடன்படிக்கை
1சாமு 20:12-23

சவுல் யோனத்தானைக் கொல்ல வகை தேடுதல்
1சாமு 20:24-34

யோனாத்தானும் தாவீதும் பிரிதல்
1சாமு 20:35-42

தாவீதின் ஜெபம்
சங் 26:1-12

தாவீது அகிமெலேக்கிடம் தப்பியோடுதல்
1சாமு 21:1-9

தாவீது பயித்தியமாக நடித்தல்
1சாமு 21:10-15

தாவீது கர்த்தரின் நன்மைகளைத் துதித்துப் பாடுதல்
சங் 34:1-22

தாவீது கர்த்தரை நம்பி செய்த ஜெபம்
சங் 56:1-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சவுலிடமிருந்து தப்பித்து ஓடுகையிலும் கூட. தாவீது இரு மகத்துவமான சங்கீதங்களை இயற்ற நேரம் கண்டுபிடிக்கிறான். இதுதான் நம்மைப் பின்ன டையச் செய்யும் அதே காரியத்தை நாம் முன் னோகித் தாவிச் செல்ல உதவும் பலகையாக மாற்றிக் கொள்வதாகும். உன்னால் வாழ்க் கையின் சோதனைகளையும் பின்னடையச் செய் யும் காரியங்களையும் சங்கீதமாக மாற்றக் கூடு மா? இன்றே அதைச் செய்ய முயற்சித்துப் பார்.

ஆதார சத்தியம்

"என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லு கிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமை யிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்." (பிலி 4:11)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 104 தாவீதின் வெற்றி

அதுல்லாம் கெபியில் தாவீது
1சாமு 22:1; 1 நாளா 12:16

உதவி கேட்டு தாவீதின் ஜெபம்
சங் 142:1-7

அநேகர் தாவீதிடம் வருதல்
1சாமு 22:12; 1நாளா 12:17-18

தாவீதின் மாலை ஜெபம்
சங் 141:1-10

தாவீது மோவாபுக்கு ஓடிப்போகுதல்
1சாமு 22:3-5

பாதுகாப்புக்காக தாவீதின் ஜெபம்
சங் 64:1-10

தோவேகு ஆசாரியரை வெட்டுதல்
1சாமு 22:6-20

தாவீதின் ஜெபம் - உதவிக்காக
சங் 35:1-28

கேகிலாவின் மக்களைத் தாவீது காப்பாற்றுதல்
1சாமு 23:1-5

தாவீது அபியத்தாருக்கு அடைக்கலம் தர முன்வருதல்
1சாமு 22:21-23

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக்கிறவர்கள் யாவரையும் ஒன்று சேர்த்துத் திரட்டி, வலிமை வாய்ந்த படையாக அக்கூட்டத்தை தாவீது மாற்றியிருப்பதை சற்றுக் கற்பனை செய்து பாருங்கள்! அது நமது மனத் திரையில் தாவீதிலும் பெரியவராகிய இயேசுவைக் கொண்டு வருகிறதல்லவா? ஆம்! அவர் தகுதியில்லாத மனிதரை ஆண்களையும், பெண்களையும் - ஒன்று சேர்ந்து ஜீவனுள்ள தேவனின் ஆலயமாகிய வலிமைமிக்க போர் வீரராக மாற்றும் காட்சி நம் மனக்கண்முன் தோன்றுகிறது!

ஆதார சத்தியம்

"ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே இவர்கள்; மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக் கொள்ளப் பட்டவர்கள்" (வெளி 14:4)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

சவுல் தாவீதைப் பின் தொடருதல் நாள் 105

தாவீது கர்த்தரின் நீதியையும் கிருபையையும் குறித்துப் பேசுதல்
சங் 52:1-9

தாவீதின் புகார்
சங் 109:1-31

பாதுகாப்புக் கேட்டு, தாவீதின் ஜெபம்
சங் 140:1-13

தேவன் தாவீதை எச்சரித்தல்
1சாமு 23:6-13

தேவன் மீது நம்பிக்கை வைத்து தாவீது செய்த ஜெபம்
சங் 31:1-24

தாவீது இன்னும் சவுலால் வேட்டையாடப்படுதல்
1சாமு 23:14-15

உதவி கேட்டுத் தாவீதின் ஜெபம்
சங் 13:1-6

யோனத்தான் தாவீதை அறுதல் படுத்தல்
1சாமு 23:16-18

சீப் ஊரார் தாவீதைக் காட்டிக் கொடுத்தல்
1சாமு 23:19-23

தாவீது தப்பித்துக் கொள்ளுதல்
1சாமு 23:24-28

பாதுகாப்பு கோரி தாவீதின் ஜெபம்
சங் 54:1-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இந்த வினாடியில், சாத்தான் உன்னைத் தாங்க முடியாத அளவுக்கு விரட்டிப் பின் தொடர்ந்து கொண்டிருக்கிறானா? அப்படியானால் தாவீது செய்ததுபோல் செய்: உன் எண்ணங்களைத் தேவன் மீதே ஒருமுகப்படுத்து ஆகவேதான் தேவன் தாவீதின் வார்த்தைகளை அவரது புத்தகமாகிய வேதாகமத்தில் பதிவு செய்திருக்கிறார். உன்னையும் உன் சிந்தனைகளை அவர் மீதே ஒருமுகப்படுத்துமாறு அழைக்கிறார். அப்படிச் செய்யும்போது தாவீது பெற்றுக் கொண்ட அதே ஆறுதலை நீயும் பெற்றுக்கொள்வாய்.

ஆதார சத்தியம்

"வெள்ளம் போல் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோத மாய்க் கொடியேற்றுவார்." (ஏசா 59:19)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 106 தாவீது சவுலைத் தப்பவிடுதல்

தாவீது என்கேதிக்குச் செல்லுதல்
1சாமு 23:29

தாவீதின் ஜெபம்
சங் 17:1-15

தாவீது சவுலைத் தப்பி விடுதல்
1சாமு 24:1-7

தாவீது தன் குற்றமின்மையைக் காண்பித்தல்
1சாமு 24:8-15

சவுல் தன் தவறை ஒத்துக்கொள்ளுதல்
1சாமு 24:16-22

கர்த்தர் மீது தாவீதின் நம்பிக்கை
சங் 57:1-11; 108:1-5

சாமுவேலின் மரணம்
1சாமு 25:1

தாவீதின் விண்ணப்பம்
1சாமு 25:2-11

நாபாலை அழிக்குமாறு தாவீது கொண்ட எண்ணம்
1சாமு 25:12-17

அபிகாயில் தாவீதை அமைதிப்படுத்தல் - நாபாலின் மரணம்
1சாமு 25:18-38

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆவிக்குரிய வெற்றி, வாழ்க்கைக்குத் தேவையான ஒரு முக்கியமான காரியம் - தலைமைப் பொறுப்பி லிருப்பவர்கள் உனக்கு விரோதமாக நிற்கும் போதும் தோல்வியின் அறிகுறிகள் அவர்களில் காணப்படும் போதும் அவர்கள் தலைமைப் பதவிக் குரிய கனத்தைக் கொடுக்கத் தவறாதிருப்பதே சவுலுக்குக் கிடைத்த அதிகாரம் ஆண்டவரால் அளிக்கப்பட்டது என்று தாவீது அறிந்திருந் தபடியால், அதற்குரிய கனத்தைக் கொடுத்து வெற்றியை நோக்கிக் கடந்து சென்றான்.

ஆதார சத்தியம்

"உங்களை நடத்துகிறவர்கள்; உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால் அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே." (எபி 13:17)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப், எலியா, இஸ்ரவேல்	யெரோபெயாம் II

அரசனாகிய ஆட்டு மேய்ப்பன்

பெத்தலகேமில் ஒரு விவசாயியின் மகனான **தாவீது, ஆடு மேய்ப்பவனாயிருந்தா**லும் பல திறமைகளை உடையவனாயிருந்தான். சிறந்த இசைக்கலைஞன், பல சங்கீதங்களை நமக்குத்தந்த நல்ல கவிஞன், சிறந்த அரசு நிர்வாகி, தைரியமுள்ள போர்த்தளபதி, பிரிந்திருந்த இஸ்ரவேல் கோத்திரம் ஒன்று சேரக் காரணமாயிருந்தவன். இஸ்ரவேலின் தலைசிறந்த இராஜாவாக நினைவு கூரப்படுகிறவன். தாவீது கர்த்தருக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணித்தவன் என்பதை 1 சாமு. 13:14 விளக்குகிறது. தாவீது தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன் என்று அங்கு கூறப் பட்டுள்ளது.

நாள் 107 தாவீது ஒரு பெரிய சேனையை உருவாக்குதல்

தாவீது அபிகாயிலை விவாகம் செய்தல்
1சாமு 25:39-44

மீண்டும் தாவீது சவுலைக் கொல்லாது தப்ப விடுதல்
1சாமு 26:1-12

தாவீது சவுலுடன் வழக்காடுதல்
1சாமு 26:13-25

தாவீது காத்துக்குச் செல்லுதல்
1சாமு 27:1-7

தாவீது ஆகிசை ஏமாற்றுதல்
1சாமு 27:8-12

தாவீதின் நண்பர்கள்
1நாளா 12:1-7

பெலிஸ்தியர் யுத்தத்துக்கு ஆயத்தப்படுதல்: தாவீதின் மீது ஆகிசின் நம்பிக்கை
1சாமு 28:1-2

தாவீது யுத்தம் செய்யாதபடி தடுக்கப்படுதல்
1சாமு 29:1-11

தாவீதைச் சேர்ந்து கொண்ட மனிதர்கள்
1நாளா 12:19-22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனுக்காக எதையாவது கட்டி எழுப்ப வேண்டுமானால் அதற்கு அர்ப்பணமும், மன உறுதியும், தளராத முயற்சியும் தேவை. அநேக கடினமான குழப்பமான நேரங்கள் எழுந்து வருவதைத் தவிர்க்க முடியாது. தாவீதுக்கும் இப்படிப் பட்ட நேரங்கள் வந்தன. அவன் அதை ஒத்துக் கொண்டான்; எதிர்த்து நின்றான்; தேவன் தன்னைப் போகச் சொன்ன பாதையிலேயே தொடர்ந்து முன்னேறிச் சென்றான். நீயும் இவ்வித மாகவே செய்ய வேண்டும்.

ஆதார சத்தியம்

"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மன முறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை." (II கொரி 4:8, 9)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
1நாளாகமம் - பழைய ஏற்பாட்டின் 13ஆவது புத்தகம். 8ஆவது வரலாற்று நூல்	தாவீது	குடும்பவரலாறு

சவுல் யோனத்தானின் மரணம்

நாள் 108

சிக்லாகு கொள்ளையிடப் படல்
1சாமு 30:1-6

தாவீது அமலேக்கியரைப் பின்தொடருதல்
1சாமு 30:7-15

எல்லாவற்றையும் மீட்டுக் கொள்ளுதல்
1சாமு 30:16-20

தாவீது கொள்ளையைப் பங்கிடுதல்
1சாமு 30:21-31

யுத்த அணிவகுப்பு
1சாமு 28:4

சவுல் எந்தோரின் அஞ்சனக்காரியிடம் கலந்தாலோசித்தல்
1சாமு 28:3-5-19

சவுலின் பயம்
1சாமு 28:20-25

சவுலின் தோல்வியும் மரணமும்
1சாமு 31:1-13; 1 நாளா 10:1-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் இராஜரீக ஆளுகையில், தாவீதின் வீடு கொள்ளையிடப்பட்ட சம்பவம், வெளித் தோற்றத்தின்படி பெரியதொரு துன்பமான காரியமாகத் தோன்றினாலும் கூட, அவனது வாழ்க்கையின் அடுத்த கட்டமாகிய இராஜா வாகும். உன்னத நிலைக்கு அவனை ஆயத்தப் படுத்த அதுவே பயன்படுத்தப்பட்டது. 'பெருந் துன்பம்' - 'அரசாளும் இராஜரீகம்' என்ற இரு வார்த்தைகளும் ஒன்றுக்கொன்று எதிரானவை!

ஆதார சத்தியம்

"அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோம 8:28)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
தேவனுடைய பிள்ளைகள் அவரைத் தொழுதுகொண்டு கீழ்ப்படிய வேண்டும் என்று புத்தகம் போதிக்கின்றது. தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்.	1 நாளாகமம். 2 சாமுவேலில் குறிப்பிட்டுள்ள வரலாற்றுக் காலத்தையே குறிப்பிடுகிறது. மேலும் பாபிலோனின் சிறையிருப்பில் இருந்து திரும்பியமை வரை இது கூறுகிறது.	1 நாளாகமம் 28:20

நாள் 109 தாவீது அரசனாகுதல்

மேவிபோசேத் முடவனாதல்
IIசாமு 4:4

தாவீது சவுலின் மரணத்தைப் பற்றிக் கேள்விப்படுதல்
IIசாமு 1:1-16

தாவீதின் புலம்பல்
IIசாமு 1:17-27

சவுலின் சந்ததியார்
1நாளா 8:29-40; 9:35-44

தாவீது அரசனாகுதல்
IIசாமு 5:4; 1நாளா 2:11; 1நாளா 29:27

தாவீது யூதாவின் அரசனாக அபிஷேகம் பண்ணப்படுதல்
IIசாமு 2:1-7

இஸ்போசேத் இஸ்ரவேலில் இராஜா வாகுதல்
IIசாமு 2:8-11

இஸ்ரவேலில் உள்நாட்டுக் கலகம்
IIசாமு 2:12-32; II சாமு 3:1

எப்ரோனில் பிறந்த குமாரர்
IIசாமு 3:2-5; 1 நாளா 3:1-4

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாவீது யோனத்தானின் மரணத்திற்காகப் புலம்பி அழும்போது. "உன் சிநேகம் ஆச்சரியமா யிருந்தது? என்று கூறுகின்ற வார்த்தைகள் வேதாகமத்திலுள்ள மிக அழகான பகுதிகளில் ஒன்று. கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்து நினைக்கும் போது. இதே வார்த்தைகள் உன் உணர்வுகளைப் பிரதிபலிக்கிறதா? அவரது மரணம் உன்னை எப்படிப் பாதிக்கிறது?

ஆதார சத்தியம்

"நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல. அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து. நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது." (1 யோவா 4:10)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
பழைய ஏற்பாட்டின் 10ஆவது புத்தகம் - 5ஆவது வரலாற்றுப் புத்தகம்	சவுல். தாவீது. பாத்சேவா. நாத்தான். அப்சலோம்	எருசலேம் கட்டி எழுப்பப்படலும் தாவீதின் ஆட்சியும்

இஸ்ரவேல் ஒன்றுபடுதல்

நாள் 110

மீகாள். அப்னேர் தாவீதிடம் திரும்பி வருதல்
IIசாமு 3:6-21

யோவாப் அப்னேரைக் கொலை செய்தல்
IIசாமு 3:22-39

இஸ்போசேத் கொலை செய்யப்படல்
IIசாமு 4:1-3, 5-12

தாவீது இஸ்ரவேலின் இராஜாவாகுதல்
IIசாமு 5:1-3; 1நாளா 11:1-3

தாவீது வைத்திருந்த யுத்த வீரரின் பட்டியல்
1நாளா 12:23-40

இஸ்ரவேல் தாவீதின் தலைமையில் ஒன்றுபடுதல்
1நாளா 29:26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாவீதின் பெரிய வெற்றியின் இரகசியம் என்ன? மற்ற எல்லா காரணங்களுக்கும் மேலாக – தனது வாழ்க்கையின் ஆரம்ப நாட்களிலேயே, உடன் படிக்கையின் தேவனிடம் அவன் ஒரு ஒப்பந்தம் செய்திருந்தான். உடன்படிக்கையின் தேவனும் அவனுடன் ஒப்பந்தம் செய்திருந்தார். இந்த வித மான ஒருமைப்பாடு இல்லாத எந்த வாழ்க்கை யிலும், பாதுகாப்பு இருக்க முடியாது.

ஆதார சத்தியம்

"இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக் காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்கு ரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (மத் 26:28)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
கர்த்தர் தாவீதுக்கு அவனது சந்ததி யின் ஆட்சியில் நிலைப்பார் (2 சாமு 7:16) என்று வாக்களித்தார். தாவீதின் குமாரனான இயேசு இதை நிறைவு செய்கிறார்.	பாலம் செய்யும் தாவீது	2 சாமு 7:12-13

நாள் 111 தாவீது - இஸ்ரவேல், யூதாவின் இராஜா

தாவீதின் ஆட்சிக்காலம்
IIசாமு 5:5

துன்மார்க்கருக்கு வரும் தண்டனை
சங் 58:1-11

தேவன்.பெரிய இராஜா
சங் 93:1-5

ஒரு துதியின் பாடல்
சங் 95:1-11

எருசலேம் தலைநகராக மாறுதல்
IIசாமு 5:6-10 ; 1நாளா 11:4-9

காத் புத்திரர், தாவீதைச் சேருதல்
1நாளா 12:8-15

பெலிஸ்தியர் ஒன்று கூடுதல்
IIசாமு 5:18; 1நாளா 14:9

ஒரு நன்றியறிதலின் ஜெபம்
சங் 118:5-28

தாவீதுக்காகக் கட்டப்பட்ட வீடு
IIசாமு 5:11-12; 1நாளா 14:1-2

தாவீதின் வாக்குறுதி
சங் 101:1-8

எருசலேமில் பிறந்த குமாரர்
IIசாமு 5:13-16; 1நாளா 3:5-9; 14:3-7

பெலிஸ்தியருக்கு எதிரான யுத்தங்கள்
IIசாமு 5:17; 1நாளா 14:8

தாவீதுக்கு பெத்லகேமிலிருந்து தண்ணீர் கொண்டு வருதல்
IIசாமு 23:13-17 1நாளா 11:15-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பெத்லகேம் கிணற்றிலிருந்து கொண்டு வரப்பட்ட தண்ணீரை ஊற்றிவிட்ட தாவீதின் தியாகம் அவனது அர்ப்பணிப்பு. உண்மை இவற்றின் ஆழத்தைக் காண்பிக்கிறது. உனது தியாக சிந்தை. தாவீதின் செய்கையுடன் ஒப்பிடப்படும் போது எப்படிப்பட்டதாக இருக்கிறது? ஓரளவு ஒத்துப் போகிறதா? மிக நெருங்கிய முறையில் ஒத்துப் போகிறதா? அல்லது உனக்கும் தாவீதின் தியாகத்துக்கும் வெகுதூரமா?

ஆதார சத்தியம்

"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோமர் 12:1)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அ.சீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

இஸ்ரவேலின் வெற்றி

நாள் 112

பாகால் பிராசிமில் வெற்றி
IIசாமு 5:19-21; 1நாளா 14:10-12

இரண்டாவது போராட்டம்
IIசாமு 5:22-25; 1நாளா 14:13-17

உடன்படிக்கைப் பெட்டியைத் திரும்பக் கொண்டு வரத் தீர்மானம்
1நாளா 13:1-4

தேவனின் எல்லாம் அறிந்த தன்மையும் பராமரிப்பும்
சங் 139:1-24

கீரியாத் - யாரீமிலிருந்து உடன்படிக்கைப் பெட்டியுடன் பயணம்
IIசாமு 6:1-2; 1நாளா 13:5-6; IIசாமு 6: 3-5; 1நாளா 13:7-8

தேவனும் அவரது ஜனங்களும்
சங் 78:1-11, 67-72

ஒபேத் ஏதோமிடம் உடன்படிக்கைப் பெட்டி கொண்டு வரப்படல்
IIசாமு 6:6-11; 1நாளா 13:9-14

தாவீதின் வெற்றிப் பாடல்
சங் 68:1-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கர்த்தரின் ஆசீர்வாதம் பெருகி வர வேண்டுமானால், அவருக்கு மையஸ்தானம் கொடுக்கப்பட வேண்டும். தேவனின் பிரசன்னத்துக்கு அடையாளமாக விளங்கிய உடன்படிக்கைப் பெட்டி, தேவனின் நகரமாகிய எருசலேமுக்குக் கொண்டு வரப்பட வேண்டியதாயிருந்தது. உன் வாழ்க்கையில் தேவன் எப்பகுதியில் வசிக்கிறார்? ஒரு ஓரத்திலா? அல்லது மையத்திலா?

ஆதார சத்தியம்

"உங்களில் நற்கிரியைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பிரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிற பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்." (பிலி 1:5,6)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப், எலியா, இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 113 உடன்படிக்கைப் பெட்டி மீண்டும் கொண்டுவரப்படல்

தாவீதின் வெற்றிக் கீதம்
சங் 68:19-35

உடன்படிக்கைப் பெட்டிக்கு ஆயத்தம்
Iநாளா 15:1-14

ஆலயம் புகழப்படுதல்
சங் 132:1-18

பாடகர் தெரிந்தெடுக்கப்படல்
Iநாளா 15:15-24

உடன்படிக்கைப் பெட்டி எருசலேமுக்குக் கொண்டு வரப்படல்
IIசாமு 6:12-15; Iநாளா 15:25-28

ராஜாதி இராஜாவாகிய ஆண்டவர்
சங் 97:1-12

உடன்படிக்கைப் பெட்டி அதன் ஸ்தானத்தில் வைக்கப்படுதல்
IIசாமு 6:17, 18; Iநாளா 15:29;16:1; II நாளா 1:4

தேவனது தேவை
சங் 15:1-5

பெரிய இராஜா
சங் 24:1-10

தாவீது ஜனங்களை ஆசீர்வதித்தல்
IIசாமு 6:18-19; Iநாளா 16:2-3

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் பிரசன்னமாகிய உடன்படிக்கைப் பெட்டிக்குக் கொடுக்கப்பட வேண்டிய சரியான ஸ்தானம் கொடுக்கப்பட்டால், வெற்றிக்களிப்பும் கொண்டாட்டமும் தானாகப் பின் தொடரும் உனது உள்ளம் இன்று சங்கீதம் பாட முடியாது தவித்துக் கொண்டிருந்தால், ஒரு வேளை இது காரணமாக இருக்கலாம் - உன் வாழ்க்கையில் கர்த்தருக்குக் கொடுக்கப்பட வேண்டிய இடம் கொடுக்கப்படாமலிருக்கலாம்.

ஆதார சத்தியம்

"அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக." (சங் 107:21,22)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா, பாராக்		சாமுவேல்

துதியின் சங்கீதங்கள் நாள் 114

துதியின் கீதம் ஆயத்தப்படுதல்
Iநாளா 16:4-7

துதியின் கீதம் பாடப்படுதல்
Iநாளா 16:8-22

தேவனும் அவரது பிள்ளைகளும்
சங் 105:1-15; Iநாளா 16:23; சங் 96:1-2; Iநாளா 16:24-33; சங் 96:3-13; 98:1-9; Iநாளா 16:34-36; சங் 106:47-48

அன்றாடகப் பலி ஸ்தாபிக்கப்படுதல்
Iநாளா 16:37-43

மீகாள் தாவீதை இகழுதல்
IIசாமு 6:20-23

உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றி தாவீதின் கரிசனை
IIசாமு 7:1-3; Iநாளா 17:1-2

தாவீது தேவனின் உடன்படிக்கை
IIசாமு 7:4-17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சிலருடைய உள்ளங்களில் மாத்திரமல்ல: சபையிலுள்ள எல்லா மக்களின் உள்ளத்திலும் ஆண்டவருக்குச் சரியான இடம் கொடுக்கப்பட்டிருந்தால் தான், தாவீதின் காலத்திலிருந்ததைப் போல், சபை இடைவிடாத துதியினாலும் தொடர்ந்த மகிழ்ச்சியினாலும் நிறைந்து நிற்கும். ஏன் இவ்வாறு இல்லை?

ஆதார சத்தியம்

"கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்; அவர் எனக்கு இரட்சிப்புமானார். நீதிமான்களுடைய கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீர சத்தம் உண்டு; கர்த்தரின் வலது கரம் பராக்கிரமஞ் செய்யும்." (சங் 118:14-15)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம I	ஆகாப், எலியா, இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 115 இஸ்ரவேல் தனது எல்லையை விரிவாக்குதல்

தாவீதுடன் தேவனின் உடன்படிக்கை
1நாளா 17:3-15

தாவீதின் ஜெபமும் நன்றி கூறுதலும்
IIசாமு 7:18-29; 1நாளா 17:16-27

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட இராஜா
சங் 2:1-12; 110:1-7

தாவீதின் நம்பிக்கை நிறைந்த ஜெபம்
சங் 16:1-11

எல்லைகள் சம்பாதித்தல் - பெலிஸ்தியர்
IIசாமு 8:1 1நாளா 18:1

மோவாப்
IIசாமு 8:2;1நாளா 18:2

சோபா
IIசாமு 8:3-4; 7-8; 1நாளா 18:3-4;7-8

சிரியா
IIசாமு 8:5-6;1நாளா 18:5-6

தாவீதின் நன்றியறிதல்
சங் 9:1-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலர் இதுவரை சம்பாதித்த எல்லைகள் போதாதென்று இன்னும் அவர்களது எல்லைகளை விரிவாக்க ஆண்டவர் வழிவகுக்கிறார். உனது கிறிஸ்தவ வாழ்க்கையைப்பற்றி என்ன? ஆண் டவர் உன்னை மேலும் வெற்றிகளுக்கு நேராக வழிநடத்துகிறாரா? பின்வாங்காதே... த..ள..ர்..ந்..து கொடு தேவன் உன்னுடனிருக்கிறார்.

ஆதார சத்தியம்

"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு: உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடை செய்யாதே: உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து." (ஏசா 54:2)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	ஆசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

தாவீதின் இராணுவ வெற்றிகள் நாள் 116

ஜெயிக்கப்பட்ட எல்லை - ஆமாத்
IIசாமு 8:9-11 1நாளா 18:9-10

விடுதலை கேட்டு தாவீது செய்த ஜெபம்
சங் 60:1-12; 108:6-13

ஏதோம் ஜெபிக்கப்படுதல்
IIசாமு 8:13-14;1நாளா 18:12-13

ஆதாத் எகிப்துக்கு ஓடிப்போகுதல்
Iஇராஜா 11:15-20

கொள்ளைகள் பிரதிஷ்டை பண்ணப்படல்
IIசாமு 8:12 1நாளா 18:11

தாவீதின் பராக்கிரமசாலிகள்
IIசாமு 23:8-12 1நாளா 11:10-14
1நாளா 11:20-47

தாவீதின் அரசாங்கமும் அதிகாரிகளும்
IIசாமு 8:15-18; 1நாளா 18:14-17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாவீதின் வெற்றிப் பட்டியல் நம்மைப் பிரமிக்க வைக்கிறது. ஆனால் கர்த்தர் துணையின்றி அவன் யுத்த களத்துக்குச் சென்றிருந்தால், நாம் இப் பொழுது அவனது வெற்றிகளைப் பற்றியல்ல தோல்விகளையே வாசிக்க வேண்டியதாய் இருக்கும் தேவன் ஒருவனை அனுப்பும் போது, அவன் வழியில் வரக்கூடிய அத்தனை ஆபத்துக் களையும் விலக்கி, நமக்கு வேண்டிய வெற்றி களைத் தருகிறார்.

ஆதார சத்தியம்

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவ னுக்கு ஸ்தோத்திரம்." (1கொரி 15:57)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 117 தாவீதின் நன்றியறிதலின் கீதம்

தாவீதின் நன்றியறிதலின் சங்கீதம்
IIசாமு 22:1-51

தாவீதின் வெற்றியின் கீதம்
சங் 18:1-50

வெற்றிக்காகத் தேவனைத் துதித்தல்
சங் 144:1-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் தமது மக்களின் துதியில் மகிழ்ச்சியடைகிறவர். கடந்த வாரத்திலாவது சமீப நாட்களிலாவது தேவன் உனக்கு ஏதாவது வெற்றி கொடுத்திருக்கிறாரா? அப்படியானால் தாவீது செய்தது போல நீயும் செய் உனது துதியின் சங்கீதத்தை நீயாக எழுது. விளைவு உனக்கே ஆச்சரியமளிக்கும்.

ஆதார சத்தியம்

"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்." (சங் 34:1)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

தேவனுடைய நாமங்கள்

ஏலோஹிம் – தேவனுடைய வல்லமையையும், பெலத்தையும் காட்டும் இந்த வார்த்தை 2570 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. *(ஆதி. 1:1; சங். 19:1)*

ஏல் – இதன் நான்கு பிரிவுகள்

எலியோன் – வலிமையிலும் வலிமையுள்ளவர் *(ஆதி. 14:17-20; ஏசா. 14:13,14)*

ரோயீ – காண்கிற தேவன்

ஷடாய் – மார்பகமுள்ளவர் (பழைய ஏற்பாட்டில் 48 முறை உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆதி. *17:1; சங்.91:1)*

ஓலாம் – நித்திய தேவன் *(ஏசா. 40:28)*

அதோனை – எஜமான், ஆண்டவர், தேவன் சர்வ சிருஷ்டிக்கும் சொந்தக் காரர் *(மல. 1:6)*

யெகோவா – பொதுவான பெயர் – 6823 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சுயமாய் இருப்பவர் உடன்படிக்கையின் தேவன் *(ஆதி. 2:4)*. இப்பெயரின் ஒன்பது பிரிவுகள் வருமாறு:

யீரே – தேவைகளைச் சந்திக்கும் தேவன் *(ஆதி. 22:13,14)*

நிசி – ஜெயக்கொடியான கர்த்தர் *(யாத். 17:15)*

ஷாலோம் – சமாதான கர்த்தர் *(நியா. 6:24)*

சபாயோத் – சேனைகளின் கர்த்தர் *(1சாமு. 1:3, ஏசா. 6:1-3)*

மெக்கடேஷோயம்– பரிசுத்தமாக்கும் கர்த்தர் *(யாத். 31:13)*

ரோஹி (ரா) – மேய்ப்பரான கர்த்தர் *(சங். 23:1)*

ட்சிட்கனு – நம்முடைய நீதியான கர்த்தர் *(ஏரே. 23:6)*

ஷம்மா – கூட இருக்கும் கர்த்தர் *(எசே. 48:35)*

ரஃபா – குணமாக்கும் கர்த்தர் *(யாத். 15:26)*

நாள் 118 தாவீதும் பத்சேபாளும்

தாவீதும் மேவிபோசேத்தும்
IIசாமு 9:1-13

திட்டமான வெற்றி - அம்மோனியர் சீரியர் படைகள்
IIசாமு 10:1-14; 1நாளா 19:1-15

தாவீது சீரியர் படைகளைத் தோற்கடித்தல்
IIசாமு 10:15-19; 1நாளா 19:16-19

வெற்றி கேட்டு. தாவீதின் ஜெபம்
சங் 20:1-9

தாவீதின் பாவம்
1இராஜா 15:5

தாவீதின் விபசாரம்
IIசாமு 11:1-5

அதை மறைக்க அவன் எடுத்த முயற்சிகள்
IIசாமு 11:6-13

உரியா கொலை செய்யப்படல்
IIசாமு 11:14-27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் இருதயத்தக்கு ஏற்ற மனிதனாக இருந்த "தாவீது" விபசாரம். கொலை. போன்ற பாவங்களில் விழுந்து போனது எவ்வளவு துக்கமான காரியம்! தாவீதின் இருதயத்தில் ஏதோ ஒரு மூலையில். ஆவிக்குரிய பகுதி ஒன்று அரிக்கப்பட்டு அழிந்திருக்க வேண்டும். உனது ஆவிக்குரிய காரியம் எப்படி இருக்கிறது? துருப்பிடித்த பகுதிகள் உண்டா? காலம் கடந்து போகுமுன்னர் தற்பரிசோதனை செய்து பார்.

ஆதார சத்தியம்

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால். பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும். நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவா 1:9)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	ஆ சீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

சாலமோனின் பிறப்பு

நாள் 119

நாத்தானின் உவமையும் தாவீதின் பாவ அறிக்கையும்
IIசாமு 12:1-15

பாவ மன்னிப்பு கோரி, அவனது ஜெபம்
சங் 51:1-19; 32:1-11; 38:1-22

தேவனின் அன்பும் இரக்கமும்
சங் 103:1-22

தாவீதின் விண்ணப்பம்
IIசாமு 12:16

உதவி கேட்டு ஜெபம்
சங் 6:1-10

தாவீதின் குழந்தை மரித்தல்
IIசாமு 12:17-23

சாலமோனின் பிறப்பு
IIசாமு 12:24-25

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வாழ்க்கையில் ஒருவர் மிகப்பெரிய அளவில் ஏமாற்றுவது, தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதே ஆகும். தாவீது தன்னைத் தானே அந்த அளவுக்கு ஏமாற்றிக் கொண்டிருந்த படியால், நாத்தான் மனதைப் புண்படுத்தும் வகையில் ஒரு உவமையைக் கூறித்தான் அவனை வெளிச்சத்துக்குள் கொண்டு வர முடிந்தது. "உனக்குத்தானே உண்மையாயிரு - அப்படியானால் இரவு பகலைத் தானாகத் தொடர்ந்து விடுவது போன்று. உன்னால் யாருக்குமே துரோகம் செய்ய முடியாத நிலை இயற்கையாகவே உருவாகும்.

ஆதார சத்தியம்

"இதோ! உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்: அந்தகாரத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்." (சங் 51:6)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 120 தாவீதின் குடும்பக் கஷ்டங்கள்

தாவீதும், யோவாபும் ரப்பாவைப் பிடித்தல்
IIசாமு 12:26-31; 1நாளா 20:1-3

வெற்றிக்காகத் துதித்தல்
சங் 21:1-13

அம்னோன் தன் சகோதரி தாமாரைக் கற்பழித்தல்
IIசாமு 13:1-20

அப்சலோம், அம்னோனைக் கொல்லுதல்
IIசாமு 13:21-29

அப்சலோம் கேசூருக்கு ஓடிப்போதல்
IIசாமு 13:30-39

அப்சலோம் திரும்பி வரும்படி இணங்க வைத்தல்
IIசாமு 14:1-7
IIசாமு 14:15-17, 8-14, 18-33

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு கீர்த்தி வாய்ந்த குடும்ப ஆலோசகர் ஒருவர் இவ்வாறு கூறுகிறார். "சிறு பிள்ளைகளின் அநேகமான பிரச்சனைகள், அவர்களது பெற்றோர்களின் இருதயத்தில் மறைந்திருப் பவைகளின் பிரதிபலிப்பே ஆகும். தாவீதின் பெலவீனங்கள் அவனது சொந்த கர்ப்பப் பிறப்பா கிய மகனிடமே பிரதிபலிக்கின்றனவா? நாம் இப்படி யூகிக்கத்தான் கூடும். உண்மை எதுவோ ஆயினும் இது நன்றாக யோசிக்கத் தகுதி பெற்ற கேள்வியே

ஆதார சத்தியம்

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து: அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்." (நீதிமொழி 22:6)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

அப்சலோமின் புரட்சி

நாள் 121

ஈத்தாயின் இராஜ விசுவாசம்
IIசாமு 15:17-23

தாவீது உடன்படிக்கைப் பெட்டியைத் திருப்பியனுப்புதல்
IIசாமு 15:24-28

பாதுகாப்புக் கோரி அவனது ஜெபம்
சங் 61:1-8

ஒலிவ மலைமீது தாவீது
IIசாமு 15:29-30

உதவி கேட்டு தாவீது செய்த ஜெபம்
சங் 3:1-8

அவன் மனவேதனையின் கூதறல்
சங் 22:1-18

அப்சலோமின் மனக்கோட்டை
IIசாமு 15:1-6

தாவீது தேவன் மீது கொண்ட நம்பிக்கை
சங் 62:1-12

அப்சலோமின் சதித்திட்டம்
IIசாமு 15:7-12

தாவீது எருசலேமை விட்டு வெளியே செல்லுதல்
IIசாமு 15:13-16

தேவனின் பாதுகாப்பைப் பற்றிய அவனது நம்பிக்கை
சங் 63:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாவீதுக்கு எதிராகப் பெரியதொரு சதித்திட்டம் செயல்படும் வேளையில், அவன் எவ்விதம் அதனால் பாதிக்கப்படுகிறான்? சுயபரிதாபத்துக்கு இடமளிக்காமல் இந்த சூழ்நிலை மூலம் தான் கற்றுக் கொள்ளும் பாடங்களினால், இன்று நல்ல முறையில் அவரது ஊழியக்காரனாக உருவாகவேண்டுமென்றுதான் வாஞ்சிக்கிறான். எல்லா சம்பவங்களிலும் தேவனின் கரத்தைக் காண நாம் கற்றுக் கொண்டோமானால், அவரது கரத்திலுள்ள எல்லா சம்பவங்களையும் நம்மால் காணக்கூடும்.

ஆதார சத்தியம்

"இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது; பிரயோஜமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே" (ஏசா 48:17)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப், எலியா, இஸ்ரவேல்	யெரோபெயாம் II

ஏப்ரல்

தாவீதும் அவனது சேனைவீரர்களும் போரில் தேர்ச்சியுடையவர்களாக இருந்தமையினால் தேவனுடைய எதிரிகளை முறியடித்து அவருடைய ஆட்சியை நாடு முழுவதும் விரிவுபடுத்தினார்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையில் பயிற்சி எடுக்கிறவர்களாக இருக்கிறீர்கள். இதனால் சந்தேகங்களையும், எதிர்ப்புகளையும் முறியடித்து கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தை விரிவுபடுத்த முடியும். கிறிஸ்துவின் போர்வீரனாக வேதாகமத்தினூடாக நிலைத்து நிற்க வேண்டும்.

5

இந்தப் பகுதியில் .....

அப்ஸ்லோம் தாவீதிற்குகெதிராக கிளர்ந்தமை.
தேவாலயத்திற்காக ஆரம்ப ஆயத்தங்கள்.
தாவீதின் துதியும் ஜெபமும்
சாலமோனின் தேவாலயப் பிரதிஷ்டை
சாலமோனின் செல்வமும் ஞானமும்

நாள் 122 அப்சலோமின் ஆலோசகர்கள்

தாவீதின் ஜெபமும் துதியும்
சங் 22:19-31

மனிதனின் துன்மார்க்கம்
சங் 14:1-7; 53:1-6

சீமேயி தாவீதை தூஷித்தல்
11 சாமு 16:5-14

தாவீது தேவனிடம் கதறுதல்
சங் 39:1-13

அப்சலோம் எருசலேமுக்கு வருதல்
11 சாமு 16:15-23

தாவீதும் ஊசாயும்
11 சாமு 15:31-37

தாவீதும் சீபாவும்
11 சாமு 16:1-4

அகித்தோப்பேல், ஊசாய் அப்சலோமுக்கு ஆலோசனை கூறுதல்
11 சாமு 17:1-14

தாவீது தப்பிக் கொள்ளுதல்
11 சாமு 17:15-24

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

நீங்கள் தூஷிக்கப்படும் போதும், கேலி பண்ணப் படும்போதும் எவ்வித உணர்வடைகிறீர்கள்? சீமேயி தன்னைத் தூஷிக்கும் போது தனது கோபம் தூண்டப்பட தாவீது இடங்கொடாமல், அதை தேவனின் சிட்சையாக எடுத்துக் கொள்ளுகிறான். எல்லாத் தீமையான காரியங்களையும் கூட நமக்குப் பாடம் கற்றுத் தரும் வாய்க்கால்களாக நமக்கு சேவை செய்யும் காரியங்களாக மாற்றிக் கொள்ள நாம் கற்றுக் கொண்டால், வாழ்க்கைப் பிரச்சனைகளை எவ்வளவு எளிதாக எதிர்கொள்ளக் கூடும்.

ஆதார சத்தியம்

"என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாகச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்: சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்: பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (மத் 5:11,12)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

அப்சலோம் தாவீதைப் பின்தொடருதல் நாள் 123

உதவி கோரி தாவீதின் ஜெபம்
சங் 4:1-8

அப்சலோம் தாவீதைப் பின் தொடருதல்
11 சாமு 17:25-26

தாவீது உதவி பெறுதல்
11 சாமு 17:27-29

நாடு கடத்தப்பட்ட ஒரு மனிதனின் ஜெபம்
சங் 42:1-11; 43:1-5

தாவீது காட்டிக் கொடுக்கப்பட்ட பின் செய்த ஜெபம்
சங் 55:1-23

ஒரு முதியவரின் ஜெபம்
சங் 71:1-24

உதவி நாடி தாவீது செய்த ஜெபம்
சங் 28:1-9; 143:1-12

தாவீது தேவனைத் துதித்தல்
சங் 40:1-12

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வாழ்க்கைப் பிரச்சனைகளை இருவிதமாகக் கையாளலாம் என ஒருவர் கூறினார். ஒன்று நம்மை அந்தப் பிரச்சனைகள் நம்பிக்கையற்றவர்களாக்க இடங்கொடுப்பது. அல்லது ஜெபிப்பவர்களாக மாற்றுமாறு இடமளிப்பது. தன்னை எரிச்சல் மூட்டிய காரியங்களைக் கற்றுக் கொண்டு விட்டீர்களா?

ஆதார சத்தியம்

"எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்." (பிலி 4:11)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஓபதியா. யோவேல். யூதா கி.மு. 800	உசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 124 எப்பிராயீம் மலை யுத்தம்

உதவி நாடி தாவீதின் ஜெபம்
சங் 40:13-17; 70:1-5

அவரது துதி நிறைந்த ஜெபம்
சங் 27:1-14

உதவி கோரும் கதறல்
சங் 69:1-36

உதவி கோரும் ஜெபம்
சங் 120:1-7

நம்மைப் பாதுகாக்கும் கர்த்தர்
சங் 121:1-8

அப்சலோமின் படை தோல்வியடைதல்
11 சாமு 18:1-8

அப்சலோம் கொல்லப்படுதல்
11 சாமு 18:9-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எவ்வளவு முரண்பாடு! ஆண்டு தோறும் அப்சலோமின் தலைமயிர் 200 சேக்கல் நிறைய எவுக்கு வெட்டியெடுக்கப்படும்: இந்த மகிமையான தலைமயிரே அவனது மரணத்திற்குக் காரணமாயிருந்தது. உனது பெலனாகத் தோன்றும் காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாயிரு அதுவே உனது பெரிய பலவீனமாக மாறிவிடலாம்.

ஆதார சத்தியம்

"அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்:ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும்: நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்." (11 கொரி 12:10)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

தாவீது மீண்டும் அரியாசனம் ஏறுதல் நாள் 125

தாவீது அப்சலோமின் மரணத்தைக் கேள்விப்படுதல்
11 சாமு 18:19-33

நீதி கோரி ஜெபம்
சங் 10:1-18

யோவாப், தாவீதைக் கடிந்து கொள்ளுதல்
11 சாமு 19:1-10

தாவீது எருசலேமைப் புகழுதல்
சங் 122:1-9

தாவீது எருசலேமுக்குத் திரும்புதல்
11 சாமு 19:11-15

சீமேயியை மன்னித்தல்
11 சாமு 19:16-23

ஒரு துதியின் கீதம்
சங் 92:1-15

தாவீதும் மேவிபோசேத்தும்
11 சாமு 19:24-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு மனிதன் எவ்வளவு பெரியவன் என்பதைக் கணிப்பதற்கு ஒரு அளவிகோல் அவன் யாருக்கு விரோதமாகக் குற்றம் செய்தானோ அவர்களிடம் காலந்தாழ்த்தாது மன்னிப்புக் கேட்பதில் மட்டுமல்ல; தனக்கு விரோதமாக்க குற்றம் செய்தவர்களை எவ்வளவு மனப்பூர்வமாக மன்னிக்கிறான்என்பதையும் பொறுத்தது. இந்த அளவின் படி, தாவீது பெரியவனாக உயர்ந்து நிற்கிறான் உனது நிலை என்ன?

ஆதார சத்தியம்

"நீங்கள் ஜெபம் பண்ணும் போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" (மாற் 11:25)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஓபதியா, யோவேல், யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 126 இஸ்ரவேலும் யூதாவும் சண்டையிடுதல்

தாவீதும் பர்சிலாவும்
11 சாமு 19:31-40

இஸ்ரவேல் யூதாவுடன் சண்டையிடுதல்
11 சாமு 19:41-43

சீபா குழப்பமுண்டாக்குதல்
11 சாமு 20:1-3

ரிஸ்பாவின் பொறுப்புணர்வு
11 சாமு 21:10-14

தாவீதின் அதிகாரிகள்
11 சாமு 20:23-26

யோவாப் அமாசாவைக் கொல்லுதல்
11 சாமு 20:4-12

சீபா அடைக்கலம் தேடி, கொல்லப்படுதல்
11 சாமு 20:13-22

கிபியோனியர் பழிவாங்குதல்
11 சாமு 21:1-9

தேவனின் இராஜரீகத்தை தாவீது கனப்படுத்துதல்
சங் 29:1-11

அவனது நன்றி கூறுதல்
சங் 65:1-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

(இஸ்ரவேல் மக்களைவிட மிகக் கடுமையாக வார்த்தைகளைக் கொட்டிய) யூதா மனிதருக்கும், இஸ்ரவேல் மனிதருக்குமிடையில் எழுந்த சண்டை, கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆதார சத்தியத்தை அவர்கள் பின்பற்றியிருந்தால், நிச்சயமாகத் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடும்.இனி ஒரு சண்டை எழும்பக் கூடிய சூழ்நிலை வருமாயின் கீழேயுள்ள ஆதார சத்தியத்தைக் கடைப்பிடித்துப் பாருங்கள்.

ஆதார சத்தியம்

"மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்." (நீதி 15:1)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
I இராஜாக்கள் - பழைய ஏற்பாட்டின் II ஆவது புத்தகம் 4ஆவது வரலாற்று நூல்	தாவீது. சாலமோன். எலியா. ஆகாப்	I இராஜாக்கள் புத்தகம் யூதா இஸ்ரவேல் என்ற இரு தேசங்களின் வரலாற்றாகும். சாலமோன் தேவாலயம் கட்டப்பட்ட பிறகு தேசம் இரு நாடுகளாகப் பிரிகின்றது.

தாவீது ஜனங்களை இலக்கம் பார்த்தல் நாள் 127

பெலிஸ்தியருடன் யுத்தங்கள்
11 சாமு 21:15-22 1நாளா 20:4-8

மனிதனின் துன்மார்க்கத்தையும் தேவனின் தயவையும் குறித்து தாவீது கூறுதல்
சங் 36:1-12

தாவீது ஜனங்களை எண்ணுதல்
11 சாமு 24:1-9 1நாளா 21:1-6

இலக்கம் பார்த்தல் தடை செய்யப்படுதல்
1 நாளா 27:23-24

தாவீதின் தெரிந்து கொள்ளுதல்
11 சாமு 24:10-14;1நாளா 21:7-13

கொள்ளை நோய்கள்
11 சாமு 24:15-17-17 1நாளா 21:14-17

தாவீதின் தியாகம்
11 சாமு 24:18-25; 1நாளா 21:18-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாவீதின் தியாகமான ஈகையுடன் ஒப்பிடப்படும் போது உனது ஈகை எப்படிப்பட்டது என்று நினைத்துப்பார். சிலர் பிழிந்தாலொழிய நீரை வெளிவிடாத உறிஞ்சும் பஞ்சைப் போல் (Sponge) கொடுப்பார்கள். சிலர் மோசேயிட மிருந்து அடி வாங்கினாலொழிய நீரைக் கொடுக் காத பாறை யைப் போன்றவர்கள். ஆனால் சிலரோ, சூரிய னைக் கண்டால் மனமுவந்து மலர்ந்து மணம் பரப்பும் மலரைப் போன்றவர்கள். கொடுப்பதே அவர்களுக்கு மகிழ்ச்சி தாவீது அந்த ரகத்தைச் சேர்ந்தவன். நீங்கள் எந்த ரகம்?

ஆதார சத்தியம்

"அவனவன் விசனமாயுல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." (II கொரி 9:7)

கண்ணோட்டம்		
இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வாக்கியம்
சேபாவின் அரசி சாலமோனின் ஞானத்தை மெச்சினாள் (1இரா 10:8) சாலமொன் கிறிஸ்துவின் தன்மையுடையவன் ஞானமுடையவன் (1கொரி 1:30)	இராச்சியம் பிரிந்த பிறகு 12-14 அதிகாரங்கள் எருசலேமிலிருந்து ஆண்ட இராஜாக்களின் வரலாறு சமாரியாவிலிருந்து ஆட்சி செய்த இஸ்ரவேல் அரசர்களின் வரலாறும் இதில் உண்டு. தேவனுக்குக் கீழ்ப்படியாதவிடத்தில் தோல்வி என்பதை இது கற்பிக்கின்றது.	1 இரா 4:29

நாள் 128 சாலொமோன் மன்னனாக முடிசூட்டப்படல்

தாவீது நன்றி கூறுதல்
சங் 30:1-12

ஒரு துதியின் கீதம்
சங் 33:1-22

தாவீதின் தாழ்மையான நம்பிக்கை
சங் 131:1-3

தாவீதின் முதிர் வயது
1 இராஜா 1:1-4

அதோனியாவின் சதி
1 இராஜா 1:5-9

தாவீது சாலொமோன் மன்னனாக்குதல்
1 இராஜா 1:10-37

சாலெமானே அபிஷேகம் பண்ணப்படுதல்
1 இராஜா 1:38-40

இராஜாதி இராஜா
சங் 47:1-9

அதோனியா அடிபணிதல்
1 இராஜா 1:41-53

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாவீதின் மகன் சாலொமோன் இஸ்ரவேல் நாட்டின் சிம்மாசனத்தில் மன்னனாக அமர்ந்து விட்டது. இஸ்ரவேல் மக்களுக்கு மிக்க மகிழ்ச்சி அளித்த காரியமாக இருந்தது. ஆனால் நமக்கோ, அதைவிட மகிழ்ச்சி தரும் செய்தி ஒன்று உண்டு: 'தாவீதின் குமாரன் இயேசு' ஒருநாளும் மறைந்து போகக் கூடாத இராஜ்ஜியத்தின் சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து விட்டார்:அல்லேலூயா! நமது தேவன் அரசாளுகிறார்.

ஆதார சத்தியம்

"அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும்" (1 தீமோ 6:15)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஒபதியா. யோவேல். யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

சாமுவேல் - சுற்றிவந்து நியாயம் விசாரித்த போதகர்



சாமுவேல் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான். அவன் வருஷா வருஷம் புறப்பட்டுப் பெத்தேலையும். கில்காலையும். மிஸ்பாவையும் சுற்றிப்போய். அவ்விடங்களிலெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்த பின்பு அவன் ராமாவுக்குத் திரும்பிவருவான். அவனுடைய வீடு அங்கே இருந்தது: அங்கே இஸ்ரவேலை நியாயம் விசாரித்து அவ்விடத்தில் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். (1 சாமுவேல் 7:15-17)

நாள் 129 தேவாலயத்திற்குத் தாவீதின் ஆயத்தங்கள்

ததவீதின் ஆயத்தங்கள்
1 நாளா 22:1-5

சாலொமோனுக்கு அவனது அறிவுரைகள்
1 நாளா 22:6-16

பிரபுக்களுக்கு அவன் கட்டளைகள்
1நாளா 22:17-19

லேவியரும் அவர்கள் கடமைகளும்
1நாளா 23:2-6, 24-32; 24-20-31

ஆசாரியரின் வகுப்புகள்
1நாளா 24:1-19

பாடகரும் இசைக் கலைஞரும்
1நாளா 25:1-31

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்துவின் சபையில், சாலொமோன் தேவாலயத்தில் இருந்தது போலவே ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட இடமும் நோக்கமும் உண்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உனது இடம் என்னவென்பதைக் கண்டுபிடித்து விட்டாயா? * இல்லாவிட்டால், நீ உனக்குரிய பணியைச் செய்வதற்குப் பதிலாக வேறொருவரின் பணியைச் செய்து கொண்டிருக்க நேரிடலாம்!

ஆதார சத்தியம்

"அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்கள்" (ரோம 12:5-6)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

ஆலய கடமைகள்

நாள் 130

ஆலயக் காவலர்
1நாளா 26:1-19

ஆலய பொக்கிஷத்தார்
1நாளா 26:20-28

நிர்வாகக் கடமைகள்
1நாளா 26:29-32

தாவீதின் படைப் பலம்
1நாளா 27:1-15

தாவீதின் உரை
1நாளா 28:2-10

12 கோத்திரங்களின் தலைவர்கள்
1 நாளா 27:16-22

தாவீதின் விசாரிப்புக்காரரும் அதிகாரிகளும்
1நாளா 27:25-34

தாவீது ஜனங்களைக் கூட்டிச் சேர்த்தல்
1 நாளா 28:1

சாலொமோன் மன்னனாகுதல்
1நாளா 23:1

தாவீதின் துதியின் கீதம்
சங் 145:1-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாவீது மிகவும் ஞானமாக ஆலய வழிபாட்டிற்கு மட்டுமல்லாமல், யுத்தத்திற்கும் தேவையானவற்றை அவதரித்து வைக்கிறார். ஆவிக்குரிய வாழ்க்கையும் ஆசீர்வாதங்களை மட்டுமல்ல யுத்தங்களையும் உள்ளடக்கியது. விழிப்புணர்வுள்ள கிறிஸ்தவாகள் தங்களது போராயுதங்களைத் தரித்துக் கொண்டவர்களாகவே ஆண்டவரைத் தொழுது கொள்ளுகின்றனர்.

ஆதார சத்தியம்

"கடைசியாக என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்" (எபே 6:10,11)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 131 தாவீதின் அறிவுரைகள்

தாவீதின் ததியின் கீதம்
சங் 145:9-21

ஆலயத்தைக் குறித்து தாவீது அளித்த ஆலோசனை விதிகள்
1நாளா 28:11-21

சிருஷ்டிகரைப் புகழ்தல்
சங் 104:1-35

தாவீது தேவனின் பாதுகாப்பைக் குறித்துப் பேசுதல்
சங் 124:1-8

சகோதர சிநேகத்தைப் புகழுதல்
சங் 133:1-3

உதவி கோரி தாவீதின் ஜெபம்
சங் 86:1-17

கொடுப்பதைக் குறித்து தாவீதின் அறிவுரைகள்
1நாளா 29:1-9

அவர் நன்றி கூறுதல்
1நாளா 29:10-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சிருஷ்டிப்பின் மகிமையை சிந்திக்க ஆரம்பித்தாலே தாவீதின் உள்ளம் முடிவில்லாத துதியினால் பொங்கி வழியும். நீ எப்போதாவது ஒரு சங்கீதம் உருவாக்க முயன்றதுண்டா? இன்றே முயற்சி செய். உனது தனிப்பட்ட வாழ்வில் கடவுளின் அன்பையும் தயவையும் தியானம் செய்ய ஆரம்பி அதன் பின்னர் உனது சொந்தக் காரியங்களுக்காகத் துதிக்கும் கீதத்தை இயற்று.

ஆதார சத்தியம்

"சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிக்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து." (எபே 5:19,20)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடம்
2 நாளாகமம் 14ஆவது பழைய ஏற்பாட்டுப் புத்தகம் 9ஆவது வரலாற்று நூல்	சாலமோன், சேபாவின் அரசி.	21 அரசர்களும் 1 அரசியும் ஆட்சி செய்தமையை விபரிக்கின்றது. தேவாலயக் கட்டிட வேலைக்கும் நிறைவுக்கும் முக்கிய இடம்.

தாவீதிவின் இறுதி வார்த்தைகள் நாள் 132

தாவீதின் ஜெபம்
1நாளா 29:14-19

இராஜாவுக்காக அவனது ஜெபம்
சங் 72:1-20

சாலொமோன் சிம்மாசனம் ஏறுதல்
1நாளா 29:20-22

தாவீதின் கடைசிப் பேச்சு
11 சாமு 23:1-7; 1இராஜா 2:1-9

தாவீதின் மரணம்
1இராஜா 2:10; 1நாளா 29:28-30

எந்தப் பிரிவையும் சேராத தாவீதின் சங்கீதங்கள்
சங் 37:1-40; 138:1-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பெரிய மனிதர்கள் மரிக்குமுன் கடைசியாகக் கூறும் வார்த்தைகள் வருங்கால சந்ததிக்காக கவனமாகக் குறிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன மோசே, தாவீது எலியா இன்னும் அநேகரது இறுதி வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பொழுது தாவீது கடைசியாகக் கூறிய வார்த்தைகளை வாசித்தீர்கள். இனி இயேசு கிறிஸ்துவின் கடைசி வார்த்தைகளை வாசியுங்கள் அவைகள் உங்களுடன் எதைக் குறித்தாவது இன்று பேசுகிறதா?

ஆதார சத்தியம்

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்." (அப் 1:8)

கண்ணோட்டம்		
இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வாக்கியம்
தன் அதிகாரத்தில் சேபாவின் அரசி சாலமோனிடம் விஜயம் செய்வதையும் அவரது ஞானத்தையும் செல்வத்தையும் காட்டுகிறது. மத்தேயு 12:42 இயேசு சாலமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று தன்னைக் குறித்துக் கூறுகின்றார்.	தேவனுடைய உடன்படிக்கையை மீறுவதினால் வரும் விளைவைக் குறிப்பதே இதன் தொனிப் பொருள் தேவன் தனது சட்டங்களுக்கேற்ற பிரகாரம் நடப்பவர்களுக்கு வெகுமதி அளிக்கிறார்.	2 நாளா 1:14

நாள் 133 சாலொமோன் மன்னன்

சாலொமோன் ஆட்சி ஆரம்பித்தல்
1இராஜா 2:12; 1நாளா 29:23-25; 11நாளா 1:1

அதோனியா கொல்லப்படுதல்
1 இராஜா 2:13-25

அபியத்தார் நாடு கடத்தப்படல்
1இராஜா 2:26-27

யோவாப் கொல்லப்படுதல்
1இராஜா 2:28-34

சிமேயிக்கு சாலொமோனின் அறிவுரைகள்
1இராஜா 2:35-38

சாலொமோனும் பார்வேனின் குமாரத்தியும்
1இராஜா 3:1

ஒரு இராஜ திருமணப் பாடல்
சங் 45:1-17

சாலொமோன் தேவன் மீது கொண்ட அன்பு
1இராஜா 3:2-3

அவனது பலி
1 இராஜா 3:4, 11நாளா 1:2-3, 5-6

ஞானம் வேண்டி அவன் செய்த ஜெபம்
1 இராஜா 3:5-15; 11நாளா 1:7-12

அவன் எருசலேமுக்குத் திரும்புதல்
11 நாளா 1:13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சாலொமோன் ஐசுவரியத்திலும், கனத்திலும், ஞானத்திலும் மிகப் பெரியவனாக இருந்த போதிலும் அவனைக் குறித்துக் கூறப்பட்ட காரியங்களில் மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. "சாலொமோன் கர்த்தரிடம் அன்பு கூர்ந்தான்." (1இராஜா 3:3) உனது கல்லறை மீது இது எழுதப்பட்டால் இது உண்மையாக இருக்கக் கூடுமா?

ஆதார சத்தியம்

"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்" (யூதா 21)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரெபெயாம் II

சாலொமோன்

சாலொமோன் ஞானம் தருமாறு விண்ணப்பம் செய்த ஜெபம் அவனுக்கு வரலாற்றில் ஒரு நிலையான இடத்தை அடையச் செய்துவிட்டது. ஏனெனில் தேவன் அந்த விண்ணப்பத்திற்குத் தாராளமாக் கொடுத்து பதிலளித்தார். பழைய ஏற்பாட்டில் 'ஞானம்' என்பது அறிவை அன்றாடக வாழ்க்கையில் திறமையுடன் பயன்படுத்துவது என்ற முறையில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. சாலொமோனின் நாட்களிலும், அதற்கு முன்னதாகவுங்கூட, பழங்கால சமீபக் கிழக்கு நாடுகளில், ஞானிகளும், ஞானத்தைத் தேடியலைந்தவர்களும் நிறைந்திருந்தனர். எகிப்திய, மெசப்பொத்தோமியா ஞானிகள் தங்களது ஞானத்தை வெளிப்படுத்தும் படைப்புக்களை நமக்கு விட்டச் சென்றபோதிலும் சாலொமோன் அவர்களையெல்லாம் மிஞ்சிவிட்டார். இவ்வாறு தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட, ஞானமுள்ள மனிதனாக, தேவாலயத்தைக் கட்டியெழுப்பிய சாலொமோன், பிந்திய நாட்களில், சத்தியத்தை விட்டுவிலகி அந்நிய தேவர்களைப் பின்பற்றி சோரம் போய் தவறான கொள்கையுடையவனாக எப்படி மாறமுடிந்ததென்பதை எண்ணும்போது நாம் பிரமிப்படைகிறோம். ஞானம், செல்வம் மனைவிகள் என்ற வலிமையான சேர்க்கையை சாலொமோன் சரிவரக் கையாளத் தவறினான். யூத இராஜ்ஜியத்தின் 'அகுஸ்து ராயனின் ஆட்சிக்காலம்' என்று சாலொமோனின் ஆட்சி சில சமயங்களில் குறிப்பிடப்படுவதுண்டு. அவன் யூதரின் 'அகஸ்து ராயனாக' மட்டுமல்ல பாரம்பரியப்படி அதன் 'அரிஸ்டாட்டிலாகவும்' இருந்தான். அவன் மூலமாகத்தான் இஸ்ரவேலர் ஒரு புதுமையான எண்ணங்கள் கொண்ட உலகத்தைக் காணமுடிந்தது. அந்தபரந்த மனப்பான்மைதான் பிற்காலத்தில் யூதமதம் கிறிஸ்தவமாக வளர வழிவகுத்தது. அதன் ஆரம்பத்தை நாம் சாலொமோனின் ஆட்சிக்காலத்தில் காண்கிறோம்.

நாள் 134 ஆலயத்தைக் கட்ட ஆயத்தங்கள்

சாலொமோன் நியாயம் விசாரித்தல்
1இராஜா 3:16-28

தாவீதின் மரணத்தினால் ஏற்பட்ட பாதிப்பு
1 இராஜா 11:21-22

சாலொமோனின் அரசரவை
1இராஜா 4:1-19

அவனது ஒருநாள் உணவு செலவு
1இராஜா 4:22-23, 27-28

ஈராமுடன் ஒப்பந்தம்
1 இராஜா 5:1-12; 7:13-14

ஈராமுடன் உடன்படிக்கை
11நாளா 2:1, 3-16

அவனது வேலையாட்கள்
1 இராஜா 5:13-18; 11நாளா 2:2, 17-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனைப் பணிந்து தொழுது கொள்ள ஒரு ஆலயம் கட்டுவதென்பது மிகப் பிரமாண்டமானதொரு வேலையாகும். அதற்கு மிகத் தெளிவான திட்டங்கள், திறமையான பேச்சு வார்த்தைகள், மிகப் பெரிய விசுவாசம் போன்றவை தேவை. தேவன் விரும்பும் வகையில் செய்யப்படும் தேவனின் பணி நிச்சயமாகத் தேவனின் ஆதரவையும் உதவியையும் பெறுவது நிச்சயமென்று சாலொமோன் கண்டு கொண்டான்.

ஆதார சத்தியம்

"... சமாதானத்தின் தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகல நற்கிரியைகளிலும் சீர் பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றெக்றைக்கும் மகிமை உண்டாவதாக...." (எபி 13:20-21)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	ஆசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

ஆலயம் கட்டப்படுகிறது

நாள் 135

சீமேயி சிரச்சேதம் செய்யப்படுதல்
1இராஜா 2:39-46

ஒரு தாயின் புத்திமதிகள்
நீதி 31:1-9

தேவனின் இலட்சியப் பெண்
நீதி 31:10-31

சாலொமோன் கட்ட ஆரம்பித்தல்
1இராஜா 6:1, 37;11நாளா 3:1-2

தேவனின் வாக்குத்தத்தம்
1இராஜா 6:11-13

ஆலய அளவுகள்
1இராஜா 6:2;11நாளா 3:3

தேவையான சாமான்கள்
1இராஜா 6:7, 9;11நாளா 3:5-7

மண்டபம்
1இராஜா 6:3; 11நாளா 3:4

சன்னல்கள்
1இராஜா 6:4

அடுக்கு மாடிகள்
1இராஜா 6:5-6, 8,10

மகா பரிசுத்த ஸ்தலம்
1இராஜா 6:16-22; 11நாளா 3:8-9

கேரூபீன்கள்
1இராஜா 6:23-28; 11நாளா 3:10-13

திரைச்சீலை
11நாளா 3:14

தரை, கதவுகள், சுவர்கள்
1இராஜா 6:15, 29-35

ஆலயம் முற்றுப் பெறுதல்
1இராஜா 6:14; சங் 127:1-5

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சாலொமோனின் ஆலயம் எல்லையற்ற அளவு சுவனத்துடன் போடப்பட்ட திட்டங்களினால் மட்டுமல்ல: எவ்வித ஆர்ப்பட்டமும் சந்தடியுமற்ற அமைதியுடனும் கட்டப்பட்டது. "அது கட்டப்படுகிற போது, சுத்திகள் வாச்சிகள் முதலான எந்த இருப்பு ஆயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை." (1 இராஜா 6:7) ஆவிக்குரிய வளர்ச்சியிலும், அவ்வாறே பரபரப்பும், கொத்தளிப்பும் வளர்ச்சிக்கு உதவியாகஅல்ல. இடையூறாகவே அமைகின்றன. ஆண்டவரின் இராஜ்ஜியம் அமைதியாக முயற் சிகள் எதுவுமின்றி ஆரவாரமின்றி தான் வளர்ச்சியடையுமே தவிர பெருஞ்சத்தத்துடன் கூடியஆரவாரமான எக்காள தொனிகளினால் வளர்ச்சியடைவதில்லை.

ஆதார சத்தியம்

"நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்: அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்..." (ஏசா 30:15)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 136 ஆலயத்துக்குத் தேவையான பணி முட்டுகள்

கீழ்ப்படிதல் தரும் வெகுமதி
சங் 128:1-6; 1இராஜா 6:38

சாலொமோனின் கட்டிடங்கள்
1இராஜா 7:1-12

ஆலயத்திற்கு தேவையான பணி முட்டுகள்
1இராஜா 7:15-22 ;11நாளா 3:15-17

வெண்கலப் பலிபீடம்
11நாளா 4:1

வெண்கலக் கடல் தொட்டி
1இராஜா 7:23-26; 11நாளா 4:2-5,10

பத்து ஆதாரங்கள்
1இராஜா 7:27-37

பத்து கொப்பரைகள்
1இராஜா 7:38-39; 11நாளா 4:6

ஆலயப் பிரகாரங்கள்
1இராஜா 6:36; 11நாளா 4:9

ஈராமின் வெண்கல வேலை
1இராஜா 7:40-47; 11நாளா 4:11-18

பொற் பாத்திரங்கள்
1இராஜா 7:48-50; 11நாளா 4:7-8, 19-22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சாலொமோனின் ஆலயத்தில் ஊழியம் செய்த ஆசாரியர்கள் கர்த்தருக்கு முன்பாக நின்று ஊழியம் செய்தபடியால் தான், தங்களை அடிக்கடி சுத்திகரித்துக் கொள்வது அவசியமாக இருந்தது. தேவனின் 'இராஜரீக ஆசாரியராகிய' நாமும்கூட, நம்மைக் கழுவி சுத்திகரிக்கத் தரப்பட்டுள்ள இயேசுவின் இரத்தத்தையும் கர்த்தருடைய வார்த்தையாகிய தண்ணீரையும் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆதார சத்தியம்

"... கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும்" (எபே 5:25,26)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசபாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

சாலொமோனின் ஆலயம்

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டிக்கான நிரந்தரமான உறைவிடம். ஆசரிப்புக் கூடாரத்தைப் போன்றே இருந்தாலும் பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகாபரிசுத்த ஸ்தலத்தின் பரப்பளவு இரண்டு மடங்காகும். இதன் அழகும். வேலைப்பாடுகளும் அக்கால உலகை மூக்கில் விரல் வைக்கச் செய்யக் கூடியதாயிருந்தது. பாபிலோனியர்களால் அழிக்கப்படும்வரை நாநூறு ஆண்டுகள் நிலைத்திருந்தது.



4 முழம் = 6 அடி வேதத்தில் கூறப்பட்டுள்ள அளவுகளெல்லாம் அறைகளின் உள் அளவைக் குறிப்பதாகவே கணக்கிடப்படுகிறது.

சாலமோன் கர்த்தருக்காகக் கட்டிய ஆலயத்தின் நீளம் அறுபது முழமும். அகலம் 20 முழமும். உயரம் 30 முழமுமாகும். (1இராஜா 6:2)

தாவீது ஜனங்கள் கர்த்தரை ஆராதிக்கும்படி ஒரு நிரந்தர ஆலயத்தைக் கட்ட விரும்பினான். ஆனால் யுத்தத்தின் அவன் மூலமாக அநேகர் கொல்லப் பட்டிருந்ததால் தேவன் அவனை ஆலயம் கட்ட அனுமதிக்கவில்லை. மாறாக அவனுடைய குமாரன் சாலமோனுக்கு அந்தப் பணி கொடுக்கப்பட்டது.

நாள் 137 ஆலயம் பிரதிஷ்டை செய்யப்படுதல்

ஆலயப் பிரதிஷ்டை கி. மு. 972

ஆலயம் கட்டி இறுதி வேலைகள் பூர்த்தியாகுதல்
1இராஜா 7:51; 11நாளா 5:1

ஆலயம் பிரதிஷ்டை செய்யப்படுதல்
1இராஜா 8:1-11; 11நாளா 5:2-14

நன்றி கூறும் ஜெபம்
சங் 118:1-4, 29

ஒரே மெய்யான தேவன்
சங் 115:1-18

ஆண்டவரைத் துதிக்க ஒரு அழைப்பு
சங் 134: 1-3; 135:21

நன்றி கூறும் ஒரு கீதம்
சங் 136:1-26

சாலொமோனின் அருளுரை
1இராஜா 8:12-16; 11நாளா 6:1-6
1இராஜா 8:17-20; 11நாளா 6:7-10;
1இராஜா 8:21; 11நாளா 6:11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தமக்கு ஒரு ஆலயம் கட்டப்பட வேண்டியது மட்டுமல்ல: அது பிரதிஷ்டை செய்யப்பட வேண்டுமெனவும் தேவன் விரும்பினார். பிரதிஷ்டை என்றால் என்ன? நாம் கொடுப்பதைக் கர்த்தர் அங்கீகரிக்கிறார் என்று நம்புவது மட்டும் பிரதிஷ்டை ஆகாது. அதைவிட ஆழமனானது அது: இந்த நம்பிக்கையையெல்லாம் உள்ளடக்கிய திட்டமான, தெளிவான அர்ப்பணத்தையே அது குறிக்கிறது. தேவன் உன்னை பயன்படுத்தவாரென்று நம்பினால் மட்டும் போதாது. இப்பொழுதே உனது தாலந்துகளை அவருக்கே அர்ப்பணித்துவிடு.

ஆதார சத்தியம்

"... சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்:இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர் 12:1)

கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

சாலொமோனின் ஜெபம்

நாள் 138

சாலொமோன் தேவனிடம் அவரின் வாக்குத்தத்தங்களை நினைவு படுத்தல்
1இராஜா 8:22-26; 11நாளா 6:12-17

அவன் மன்னிப்புக்காகக் கெஞ்சுதல்
1இராஜா 8:27-30; 11நாளா 6:18-21

அந்நியரின் ஜெபத்தையும் கேட்கக் கோரி ஜெபித்தல்
1இராஜா 8:41-43; 11நாளா 6:32-33

இஸ்ரவேலருக்காக ஜெபம்
1இராஜா 8:46-53; 11நாளா 6:36-39

அவன் தேவனின் நீதியுள்ள தீர்ப்பிற்காக ஜெபிக்கிறான்
1இராஜா 8:31-32; 11நாளா 6:22-23

அவன் இரக்கம் நாடி ஜெபித்தல்
1இராஜா 8:33-40; 11நாளா 6:24-31

வெற்றிக்காக ஜெபம்
1இராஜா 8:44-45;11நாளா 6:34-35

அவனது இறுதி விண்ணப்பம்
11நாளா 6:40-42

சாலொமோனின் ஆசீர்வாதங்களும், தட்டியெழுப்பும் அறிவுரைகளும்
1இராஜா 8:54-61

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பழைய ஏற்பாட்டு பக்தர்களின் ஜெபங்களில் சாலொமோனின் ஜெபம் உட்பட ஒரு பொதுவான காரியத்தை நாம் காணக்கூடும் அதுதான் ஆவிக்குரிய தைரியம். தேவன்தாம் அருளிய வாக்குத்தத்தங்களை எப்படியும் நிறைவேற்றக் கட்டுப்பட்டவர் என்ற அறிவிலிருந்து பிறந்த தைரியமே அது (1இராஜா 8:25 பார்க்கவும்) நீயும் இந்த விதமாக உரிமை கொண்டாடி ஜெபிக்க ஆரம்பி: உன் ஜெப வாழ்க்கை ஒரு புதுப் பொலிவு பெற்று பரிமளிக்கும்.

ஆதார சத்தியம்

"ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்." (எபி 4:16)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப், எலியா, இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 139 கட்டிடத் திட்டங்கள் முற்றுப் பெறுதல்

கர்த்தரின் ஆசீர்வாதங்கள்
11நாளா 7:1-3

சாலொமோனின் சமாதான பலிகள்
1இராஜா 8:62-66; 11நாளா 7:4-10

கர்த்தர் இராஜாதி இராஜா
சங் 99:1-9

ஒரு துதியின் சங்கீதம்
சங் 100:1-5

கட்டுமானப் பணிகள் நிறைவு பெறுதல்
1இராஜா 9:1; 11நாளா 7:11

கர்த்தர் சாலொமோனை எச்சரித்தல்
1இராஜா 9:2-9; 11நாளா 12:22

சாலொமோனும் ஈராமும்
1இராஜா 9:10-14; 11நாளா 8:1-2

ஆமாத் ஜெயிக்கப்படுதல்
11நாளா 8:3

சாலொமோனின் மனைவியின் மாளிகை
1இராஜா 9:24; 11நாளா 8:11

அன்பின் ஆரம்பம்
உன்னதப்பாட்டு 1:1-17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சாலொமோன் எதற்கு முக்கியத்துவம் முதலில் கொடுக்கப்பட வேண்டுமோ அதற்குக் கொடுப்பது முக்கியத்துவங்களை சரியான வரிசைப்படுத்துவது அவனது ஞானத்தை வெளிப்படுத்துகிறது. தனக்கு ஒரு வீடு கட்டுவதற்கு முன்பாகக் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுகிறான். நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும் போது செழிப்பும் ஆசீர்வாதமும் தானாகப் பின் தொடரும். உன் வாழ்க்கையில் தேவனின் காரியங்களுக்காக அல்லது உனது விருப்பங்களுக்காக, எதற்கு முதலிடம் கொடுக்கிறாய்?

ஆதார சத்தியம்

"முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." (மத் 6:33)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
உன்னதப்பாட்டு 22ஆவது புத்தகம் - 5ஆவது கவிதை	சாலமோன், சூலமித்தியப் பெண்	காதற்காவியம்

மணவாளனும் மணவாட்டியும்

நாள் 140

அன்பின் ஆரம்பம்
உன்னதப்பாட்டு 2:1-7

அன்பு மறைதல்
உன்னதப்பாட்டு 2:8-17; 3:1-5

அன்பு மீண்டும் நிலைவரப்படுதல்
உன்னதப்பாட்டு 3:6-11; 4:1-16; 5:1

அன்பு தாமதித்தல்
உன்னதப்பாட்டு 5:2-16; 6:1-3

அன்பின் நிறைவு
உன்னதப்பாட்டு 6:4-13; 7:1-13; 8:1-4

அன்பின் வெற்றி
உன்னதப்பாட்டு 8:5-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"தவறு செய்துவிட்டாலும், நான் வருந்துகிறேன் என்று சொல்லவே சொல்லாமலிருப்பதுதான் அன்பின் அடையாளமென, நவீன காலக் கருத்தாக மக்களிடையே ஒரு எண்ணம் பிரபலமாகப் பரவி வருகிறது! அதாவது உண்மையான அன்பு இருக்குமிடத்தில், மன்னிப்பு கேட்பது தேவையில்லை என்று எண்ணுகிறார்கள் ஆனால் இது சரியா? சாலொமோனின் மணவாட்டி அவ்வாறு எண்ணவில்லை. அன்பு என்றால், வருத்தம் தெரிவிக்க வேண்டிய வேளையில் 'வருந்துகிறேன்' என்று சொல்லத் துடிப்பது மட்டுமல்ல; அதை சொல்லுவதும் கூட!

ஆதார சத்தியம்

"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." (எபே 4:32)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
வேதாகமத்தில் மிகவும் பிரபலமான வசனம் எவ்வாறு தேவன் மனிதனை நேசித்தார், என்று கூறுகிறது. யோவான் 3:16	ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள அன்பின் தன்மையும் தாற்பரியமும் அழகுறச் சித்தரிக்கப்படுகிறது. கிறிஸ்து தனது சபையை இவ்வண்ணமாக நேசிப்பார்.	உன்னதப்பாட்டு 8:7

நாள் 141 சாலொமொனும் சேபாவின் இராஜஸ்திரீயும்

கட்டாய வேலை செய்யும் வரி
1இராஜா 9:20-23,15; 11நாளா 8:7-10

பட்டணங்களைக் கட்டுதல்
1இராஜா 9:16-19; 11நாளா 8:4-6

தகன பலிகள்
1இராஜா 9:25; 11நாளா 8:12-16

சாலொமோனின் செல்வச் செழிப்பு
1இராஜா 9:26-28;10:22; 11நாளா 8:17-18; 9:21

சேபாவின் இராஜஸ்திரீ
1இராஜா 10:1-13; 11நாளா 9:1-12

சாலொமோனின் ஐசுவரியம்
1இராஜா 10:14-21, 27:23-25; 11நாளா 1:15; 9:13-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சேபாவின் இராஜஸ்திரீ சாலொமோனின் ஐசுவரியத்தையும், அளவற்ற ஞானத்தையும் கண்ட பின்னர் முடிவாகக் கூறினார். "இதில் பாதியாகிலும் எனக்கு சொல்லப்படவில்லை" பிதாவை, அவரது குமாரனாகிய கிறிஸ்துவின் மூலம் அறிந்து கொள்ளும் ஒவ்வொருவரும் இந்த முடிவுக்குத்தான் வருகிறார்கள். எத்தனை போதகர்கள், பிரசங்கிமார் ஒன்று சேர்ந்து விவரித்தாலும் கூட 'இயேசு' என்ற அற்புதரைப் போதுமான அளவு வர்ணிக்கவே முடியாது!

ஆதார சத்தியம்

"தேவன் தம்மில் அன்பு கூருகிறார்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்." (1 கொரி 2:910)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்		விசேடதன்மை
நீதி மொழிகள் பழைய ஏற்பாட்டில் 20ஆவது புத்தகம் 3ஆவது கவிதை. ஞானப் புத்தகம்		மனனம் செய்யக்கூடிய சிறிதான ஒன்றினைக் கவிதை போன்ற வசனங்கள் இலட்சிய மனைவி எவ்வாறு அமைய வேண்டும் என்று 31ஆம் அதிகாரம் கூறுகிறது.

சாலொமோனின் ஐசுவரியமும் ஞானமும் நாள் 142

சாலொமோனின் ஐசுவரியம்
1நாளா 9:20, 27, 22-24; 1இராஜா 4:26; 10:26, 28-29;
11நாளா 1:14, 16-17; 9:25,28

அவனது இராஜ்யபாரம்
1இராஜா 4:21, 24:20,25; 11நாளா 9:26

அவனது பர்வையாளர்
1இராஜா 4:34

அவனது ஞானம்
1இராஜா 4:29-31, 33,32

உதவி கேட்டுக் கதறல்
சங் 88:1-18

தேசத்தில் குழப்பமிகுந்த போது ஏறெடுக்கப்பட்ட பாடல்
சங் 89:1-52

நீதி மொழிகளின் விலைமதிப்பு
நீதி 1:1-6

இளைஞருக்குப் புத்திமதி
நீதி 1:7-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இன்று, ஒருவேளை கர்த்தர் உன்னிடத்தில் நீ எதைக் கேட்டாலும் பெற்றுக்கொள்ளலாமெனக் கூறினால் நீ எதைத் தெரிந்து கொள்வாய்? ஐசுவரியமா? கீர்த்தியா? சந்தோஷமா? சாலொமோனோ, இந்தக் கேள்வி அவனிடம் கேட்கப்பட்ட போது, எல்லாவற்றிலும் பெரிதான, அரிதான பொருளாகிய ஞானத்தைத் தெரிந்து கொண்டான். தேவனும் அவனது வேண்டுகோளைக் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டு அவன் கேட்காத ஐசுவரியத்தையும் கனத்தையும் கூடக் கொடுத்தார்.

ஆதார சத்தியம்

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." (யாக் 1:5)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
8ஆம் அதிகாரம் ஞானத்தை நன்கு விளக்குகிறது. புதிய ஏற்பாடு எல்லா ஞானமும் கிறிஸ்துவுக்குள் மறைக்கப்பட்டிருக்கின்றன (கொலோ 2:3) கூறுகிறது	நீதிமொழிகள் 1:2-7 இப்புத்தகத்தின் நோக்கத்தை விளக்குகிறது. வாசகருக்கு ஞானம், ஒழுக்கம், புரிந்துணர்வு என்பவைகளை புகட்டுகிறது. தேவனுக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம் என்று இது கூறுகிறது.	நீதிமொழிகள் 9:10

நாள் 143 நீதி போதனைக்குக் கட்டுப்படும் ஞானம்

ஞானத்தின் நற்குணம்
நீதி 1:20-33

ஞானம் தரும் வெகுமதி
நீதி 2:1-22

தேவனின் ஞானத்தை நம்புதல்
நீதி 3:1-35

ஞானத்தின் நன்மைகள்
நீதி 4:1-27

விபசாரத்திற்கு எதிரான எச்சரிப்பு
நீதி 5:1-23

அந்நியருக்கு பிணைப்படுதலின் அபாயம்
நீதி 6:1-5

சோம்பேறித் தனத்தைப் பற்றிய எச்சரிப்பு
நீதி 6:6-11

தேவன் வெறுக்கும் காரியங்கள்
நீதி 6:12-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

'ஞானம்' என்றால் என்ன என்பதைக் குறித்து எப்போதாவது நீ சிந்தித்ததுண்டா? ஒரு பெரிய மகான் கூறினார். 'ஞானம்அறிவைக்காட்டிலும் பெரியது. அறிவு என்பது காரியங்களை அறிந்து கொள்வது மட்டுமே. ஆனால் ஞானமே. இந்த அறிவை மிகச் சிறந்த விளைவு கிடைக்குமாறு பயன்படுத்தும் திறமையாகும்." மீண்டும் ஒரு முறை நீ ஞானத்தில் தேற உதவி செய்யுமாறு ஆண்டவரிடம் கேள்.

ஆதார சத்தியம்

"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ள தாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது" (யாக் 3:17)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

ஞானத்தின் முக்கியத்துவம்

நாள் 144

விபசாரத்துக்கு விரோதமாக இன்னும் கொஞ்சம் எச்சரிப்பு
நீதி 6:20-35

ஞானத்தைக் கற்றுக்கொள்ளுதலின் முக்கியத்தவம்
நீதி 7:1-5

துன்மார்க்கமான ஸ்திரீ
நீதி 7:6-27

ஞானத்தின் தன்மையும் அது அளிக்கும் ஐசுவரியமும்
நீதி 8:1-21

ஞானம் (கிறிஸ்து) சிருஷ்டிப்பில்
நீதி 8:22-31

ஞானத்திற்கு (கிறிஸ்துவுக்கு) செவி கொடு
நீதி 8:32-36

ஞானமும் மூடத்தனமும்
நீதி 9:1-18

சாலொமோனின் நீதி மொழிகள்
நீதி 10:1

நீதியினால் வரும் நன்மைகள்
நீதி 10:2-32; 11-1-6

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வேத ஆதாரத்தின்படி ஞானத்தைப் பற்றிக் கூறப் படும் மிகப்பெரிய விளக்க உரைகளில் ஒன்று "ஞானமென்பது தேவன் பார்க்கும் கோணத் திலிருந்து வாழ்க்கையைப் பார்ப்பதாகும்." (கொலோ 1:9 ஜே. பி. பிலிப்ஸ்) இப்பொழுது நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கிற இந்த நீதி மொழிகள் யாவும். நிங்கள் அவர் பார்க்கிற வண் ணமாக வாழ்க்கையைப் பார்க்க உங்களுக்கு உதவி செய்யுமாறு அதாவது நீங்கள் ஞான முள்ளவர்களாகுமாறு ஆண்டவர் உங்களுக்கு அருளியுள்ள திட்டம்.

ஆதார சத்தியம்

"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல: உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ. அப்ப டியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிக ளும். உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கின்றது." (ஏசா 55:8-9)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா, இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 145 நீதியால் விளையும் நன்மைகள்

நீதியின் நன்மைகள்
நீதி 11:7-11

சண்டையிடுதல் தவறு செய்தல் இவற்றின் மடமை
நீதி 11:12-31

நீதிமானும் துன்மார்க்கனும்
நீதி 12:1-11

ஞானமுள்ளவனும் மூடனும்
நீதி 12:12-28

வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்
நீதி 13:1-6

செல்வந்தனும் தரித்திரனும்
நீதி 13:7-25

ஞானமுள்ளவனுக்கும் மூடனுக்குமுள்ள வேறுபாடு
நீதி 14:1-35

ஞானம் - சிறந்த வழி
நீதி 15:1-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வார்த்தைகளின் வல்லமையை நாம் சரிவர உணருவதேயில்லை. தேவன் 'வார்த்தையினால்' உலகத்தை உருவாக்கினார். ஒரு மகிமையான பிரபஞ்சத்தை உண்டாக்கினார். நீ பேசும்போதும் கூட நீயும் ஒரு உலகத்தை உருவாக்குகிறாய். அது ஒருங்கிணைந்த, அழகான உலகமாக இருக்கலாம். அல்லது குழப்பம் நிறைந்த அமைதியற்ற உலகமாகவும் இருக்கலாம். இப்பொழுது உன்னிடமே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்.' இன்று இதில் எந்தவிதமான உலகத்தை நான் எனது வார்த்தைகளினால் உருவாக்கப் போகிறேன்?"

ஆதார சத்தியம்

"என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உனது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக" (சங் 19:14)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா, பாராக்		சாமுவேல்

நன்னடத்தை

நாள் 146

ஞானம் - சிறந்த வழி
நீதி 15:20-33

பெருமைக்கு எதிரான எச்சரிப்பு
நீதி 16:1-5

நல்ல முறையில் வாழ்க்கை
நீதி 16:6-26

பலாத்காரத்தக்கு எதிரான எச்சரிப்பு
நீதி 16:27-33

நன்னடத்தை
நீதி 17:1-28; 18:1-5

மூடனின் வார்த்தைகள்
நீதி 18:6-9

பெருமைக்கு விரோதமான எச்சரிப்பு
நீதி 18:10-14

அறிவும் நீதியும் நிறைந்த பாதை
நீதி 18:15-18

நாவின் வல்லமை
நீதி 18:19-24

தனிமனிதனின். தனிப்பட்ட நடத்தை
நீதி 19:1-29

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அநேக கிறிஸ்தவர்கள் கஷ்டப்பட நேரிடுவதன் காரணம் என்ன? ஒரு முக்கியமான காரணம் - பெருமை (நீதி 18:12 பார்க்கவும்) இந்தப் பெருமை தான் ஒரு தேவ தூதனிடமிருந்து பிசாசு உருவாகவும் பரலோகம் அநேக தூதர்களை இழக்கவும் காரணமாக அமைந்தது! (ஏசா 14:12-14: யூதா 6 பார்க்கவும்) இந்தப் பெருமை உன்னையும் தடுமாறி விழச்செய்து விடாதபடி எச்சரிக்கையாயிரு.

ஆதார சத்தியம்

"அழிவுக்கு முன்னானது அகந்தை: விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. (நீதி 16:18) ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்: பரலோக இராஜ்யம் அவர்களுடைது." (மத் 5:3)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	1ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 147 ஞான உபதேசங்கள்

கண்ணியமான நடத்தை
நீதி 20:1-3

ஞானமான ஆலோசனை
நீதி 20:4-21

கர்த்தரின் வழிகள்
நீதி 20:22-30

ஞானிகளின் உபேதசங்கள்
நீதி 22:17-29; 23:1-14

ஞானமுள்ள மகனின் ஆசீர்வாதங்கள்
நீதி 23:15-25

நியாயமாக நடப்பதன் முக்கியத்துவம்
நீதி 21:1-31

விவேகத்தின் முக்கியத்துவம்
நீதி 22:1-5

ஞானமான போதனை
நீதி 22:6-16

தீமைக்கு எதிரான எச்சரிப்பு
நீதி 23:26-35

ஞானத்தின் வழி
நீதி 24:1-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இந்த நீதிமொழிகளை வாசிக்கும் போது தேவன் உன்னிடம் என்ன பேச விரும்புகிறாரென்று உணருகிறாயா? உணர வேண்டுமெனில். நீதி மொழிகள் 22:17-21 வாசித்துப் பார். (1) நீ இந்த சத்தியங்களை உனக்குள் ஏற்று அவற் றுடன் ஒன்றிப்போகும்படியும் (2) உனது நம்பிக் கை அவர் மீது இன்னும் ஆழமாகவும். (3) உன் மூலமாக அவரது சத்தியங்கள் பிறருக்குக் கடந்து செல்லவும் அவர் விரும்புகிறார். இவை நிறைவேற இடங்கொடுக்கிறாயா?

ஆதார சத்தியம்

"மனுஷனுக்குத் தன் வாய் மொழியினால் மகிழ்ச்சி உண்டாகும்: ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது." (நீதி 15:23)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

இன்னும் அதிகமான நீதிமொழிகள் நாள் 148

இன்னும் கொஞ்ச ஞானஉபதேசங்கள்
நீதி 24:15-34

சாலொமோனின் பிந்திய நீதிமொழிகள்
நீதி 25:1

ஞானமுள்ள நடத்தை
நீதி 25:2-28

மற்ற பாவங்கள்
நீதி 26:1-28

மற்ற பொதுவான நீதிக்கருத்துகள்
நீதி 27:1-27

நன்மைக்கும் தீமைக்குமுள்ள
வேறுபாடுநீதி *28:1-18*

நிலையான ஐசுவரியத்துக்கு வழி
நீதி 28:19-28

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உன்னைப் பற்றிய உண்மையைக் கூறி உன் நண்பர்கள் யாராவது உன்னை மனத்தாங் கலடையச் செய்ததுண்டா? நீதி. 27:5-6 இன்படி சிநேகிதர் அதற்காகத் தானிருக்கிறார்கள் இந்த நீதி மொழிகள் விவரிப்பது போன்ற சிநேகிதர் உனக்கு இல்லாவிட்டால் இன்றே நீ அவ்வித மான நண்பனாக இரு.

ஆதார சத்தியம்

"இருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்து கொள்ளுதலைக் கேட்பது நலம்." (பிர 7:5)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

நாள் 149 சாலமோனின் பின் மாற்றம்

இன்னும் கொஞ்சம் ஞான ஆலோசனை
நீதி 29:1-27

ஆகூரின் வார்த்தைகள்
நீதி 30:1-6

அதிகம் அல்லது குறைச்சல் இல்லாத சரியான வாழ்வுக்கு வழி
நீதி 30:7-9

இன்னும் கொஞ்சம் நீதிமொழிகள்
நீதி 30:10-33

சாலொமோனின் பின்மாற்றம்
1இராஜா 11:1-13

அவனது எதிரிகள் ஆதாத்
1இராஜா 11:14

ரேசோன்
1இராஜா 11:26-40

யெரோ பெயாம்
1இராஜா 11:26-40

பின்மாற்றக்காரரின் மகிழ்ச்சியற்ற நிலை
பிர 1:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஞானமும் உயர்வும் விரும்பப்படத்தக்க. புகழ்ச் சிக்குரிய காரியங்களாக இருந்த போதிலும். ஆவிக்குரிய நிலையான வாழ்வையும். முன்னேற் றத்தையும் ஒருவன் பெற்றுக்கொள்ள அவைகள் போதுமானவையல்ல. நாம் தினந்தோறும் தேவனைச் சார்ந்துதான் நடக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறும் போது சாலொ மோனைப் போன்றே நாமும் விழுந்து தவறிப் போவது நிச்சயம்.

ஆதார சத்தியம்

"உன் சுயபுத்தியின் மேல் சாயாமல். உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயி ருந்து. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத் துக் கொள்: அப்பொழுது அவர் உன் பாதைக ளைச் செவ்வைப்படுத்துவார்." (நீதி 3:5-6)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்		
பிரசங்கிகள்பழைய ஏற்பாட்டின் 21ஆவது புத்தகம் கவிதை ஞானப் புத்தகங்களில் 4ஆவது ஆகும்.		

வாழ்க்கையின் முரண்பாடுகள் நாள் 150

ஞானமும் வீண்
பிர 1:12-18

மகிழ்ச்சியின் வெறுமை
பிர 2:1-3

உலக ஐசுவரியத்தின் மாயை
பிர 2:4-11

ஞானம் மூடத்தனத்தின் விளைவுகள்
பிர 2:12-26

ஒவ்வொன்றிற்கும் ஒரு காலம்
பிர 3:1-8

வாழ்க்கையின் சோர்பு
பிர 3:9-22

ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்கும் மூடத்தனம்
சங் 49:1-20

வாழ்க்கையின் துன்பமும் ஏற்றத் தாழ்வுகளும்
பிர 4:1-16

யோசிக்காமல் சட்டென்று வாக்குக் கொடுக்காதபடி எச்சரிப்பு
பிர 5:1-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்தவர்கள் அடிக்கடி கேட்கின்ற ஒரு கேள்வி வாழ்க்கையில் அர்த்தமற்றவைகளாகத் தோன்றும் நிகழ்ச்சிகளினால் நாம் என்ன கற்றுக் கொள்ளக் கூடும்? ஒரே ஒரு வழிதானுண்டு நாம் நமது வாழ்க்கையை "தேவன் பார்க்கும் விதமாக அவரது கோணத்திலிருந்து" பார்க்க முயற்சி செய்ய வேண்டும். வாழ்க்கையை நீ புரிந்து கொள்ள முடியாது; ஆனால் தேவனைப் புரிந்து கொள்ள உன்னால் முடியும்.

ஆதார சத்தியம்

"ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகள் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத் தீர்ப்புகள் அளவிடப் படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக ஆமென்" (ரோம 11:33, 36)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
வெறுமையான வாழ்வு தேவனுடன் உறவை வைத்திருக்க மாட்டாது இயேசு தேவனோடு எவ்வாறு வாழ வேண்டுமென்று தன்னுடையவர்களுக்குப் போதித்தார் (யோவான் 10:10)	பிரசங்கி புத்தகம் தேவனோடு வாழாத ஜீவியம் அர்த்தமற்றது என்று விளக்குகிறது.	பிரசங்கி 12:13

நாள் 151 வாழ்க்கையைப் பற்றிய சிந்தனைகள்

ஐசுவரியமும் திரித்திரமும்
பிர 5:8-20

மனிதனின் தவிர்க்க முடியாத முடிவு
பிர 6:1-12

குணமாக்கக் கூடாத மனிதனின் தீய தன்மைகள்
பிர 7:1-29

கர்த்தரின் வழிநடத்துதலின் இரகசியம்
பிர 8:1-17

உலகத்தில் தவறான மதிப்பீடுகள்
பிர 9:1-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நீதிமான்கள் துன்பப்படுவதாகவும். துன்மார்க்கர் செழிப்பதாகவும் தோன்றும். இந்த உலக வாழ்வில் விசுவாசம் மட்டுமே நமது உள்ளத்தைத் தடுமாறாமல் நிலையாக வைத்துக் கொள்ள உதவும். கர்த்தருடைய கிருபை தான் வாழ்க்கையின் கஷ்டங்களை வாழ்க்கையை மாற்றியமைக்கும் நல்ல சுதவுகளாகப் பார்க்கக் கூடிய வலிமைதரும்: வாழ்க்கையின் கஷ்டங்களை அவருக்கு சித்தமான வேளையில் நீக்கிவிடுமாறு. அவரது கரத்திலேயே விட்டு விடக் கற்றுக் கொள்ளும்போது அவரது கிருபையை இலவசமாகவே நமக்கே சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

ஆதார சத்தியம்

"துன்மார்க்கருடைய பொல்லாங்கை ஒழிப்பண்ணும்: நீதிமானை ஸ்திரப்படுத்துவிராக: நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர். செம்மையாக இருதயமுள்ளவர்களை இரட்சிக்கிற தேவனிடத்தில் என் கேடகம் இருக்கிறது." (சங். 7:9, 10)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

சாலொமோனின் மரணம்

நாள் 152

உலகின் ஒழுங்கீனங்களும் குழப்பமும்
பிர 10:1-20

ஞானமான ஆலோசனை
பிர 11:1-6

இளைஞருக்குப் புத்திமதி
பிர 11:7-12:8

ஒரு நம்பிக்கையுள்ள முடிவு
பிர 12:9-14

சாலொமோனின் மரணம்
1இராஜா 11:41-43; 11நாளா 9:23-31

அவனது சந்ததியார்
1நாளா 3:10-24

12 கோத்திரங்கள்
ஆதி 35:23-26; 1நாளா 2:1-2

யூதாவும் அவன் வம்சமும்
1நாளா 4:1-14, 16-23

எஸ்ரோனிலிருந்து தாவீது வரை
ரூத் 4:19-22

எஸ்ரோனிலிருந்து தாவீதின் மருமக்கள் வரை
1நாளா 2:9-17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஐசுவரியமும் கனமும் மட்டுமே ஆத்துமாவை மகிழ்ச்சியாக்கக் கூடுமானால், சாலொமோன் பரிபூரண திருப்தியுள்ள நிறைவுடனிருந்திருக்க வேண்டும். ஆனால் அவனது ஏமாற்றத்தை அவன் கூறும், 'எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமுமாய் இருக்கிறது' என்ற வார்த்தைகள் ஒன்று திரட்டித் தருகின்றன. மெய்யான மகிழ்ச்சியை, சூரியனுக்குக் கீழேயல்ல, சூரியனுக்கு மேலே - தேவனின் நித்தியமான பிரசன்னத்திலேயே கண்டுகொள்ள முடியும்.

ஆதார சத்தியம்

"ஜீவ மார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு." (சங். 16:11)

சவுல்	சாலமோன் ரெகோபெயாம்	ஜெகோசாத் ஒபதியா யோவேல்	உளசியா யோனா
கி.மு. 1000	கி.மு. 900	யூதா கி.மு. 800	கி.மு. 700
தாவீது	I ஆம் தேவாலயம் யெரோபெயாம் I	ஆகாப். எலியா. இஸ்ரவேல்	யெரோபெயாம் II

இதயத்திற்கு இதயம்

மே

தேவனுடைய வார்த்தை தேவாலயத்தில் வைக்கப்பட்டது. இதனை தேவனுடைய ஆசாரியர்கள் மக்களுக்கு தேவனைக் குறித்துப் போதிக்கவும் அவர் சமூகத்தை உணர்த்தவுமே புதிய ஏற்பாடு நாங்கள் சபை யில் தேவனுடைய ஆசாரியர்களாக இருக்கின்றோம் என்று விளக்குகிறது. உங்களுக்குள் தேவ வசனம் இருந்தால் தான் நீங்கள் மற்றவர் களை உற்சாகப்படுத்தி அவர்கள் தேவனுடைய சமூகத்தை உணரச் செய்து அவர்களைச் சென்றடையமுடியும். எவ்வளவு அருமையான புத்தகம்: அருமையான செய்தி: அருமையான ஆக்கியோன்.

6

இந்தப் பகுதியில் .....

இராட்சியத்தின் பிரிவினை
நல்ல. தீய அரசர்களின் ஆட்சி.
எலியா தேவனுக்காக எழுந்து நிற்றல்.
எலிசா செய்த அற்புதங்கள்
நியாயத் தீர்ப்பைக் குறித்த தீர்க்க தரிசனங்களும் இறுதியான புனரமைப்பும்.

நாள் 153 வம்ச வரலாற்று அட்டவணை

எஸ்ரோனிலிருந்து எலிஷாமா வரை
1நாயா 2:21-41

எஸ்ரோனின் மகன் காலேப்
1நாளா 2:18-20, 42-49

ஊரின் மகன் காலேப்
1நாளா 2:50-55

எப்புன்னேயின் மகன் காலேப்
1நாளா 4:15

கெர்சோமின் சந்ததியர்
யாத் 6:17, எண் 3:18; 1நாளா 6:17 1நாளா 6:20-21; 23:7-11

கோகாத்தின் சந்ததியார்
யாத் 6:18; எண் 3:19;
1நாளா 6:2,18; 23:12 ;
யாத் 6:21-22, 24;
1நாளா 6:22-28;23:18-20

ஆரோனின் சந்ததியார்
1நாளா 6:3-15, 50-53; எஸ்றா 7:1-5

மெராரியின் சந்ததியார்
யாத் 6:19; எண் 3:20;
1நாளா 6:19, 29,30; 23:21-23

இசை வல்லுனரின் முற்பிதாக்கள்
1நாளா 6:31-48

சிந்தனைக்கும். தியானத்திற்கும்

வம்ச வரலாற்று அட்டவணைகள் சுவையற்ற பொருத்தமற்ற தேவ பாகங்களாகச் சிலருக்குத் தோன்றலாம். ஆனால் கர்த்தர் தனி மனிதனிடம் கொண்டுள்ள கரிசனையை அவை நிரூபிக் கின்றன. மனிதர்கள் சரித்திரத்தின் ஒரு பகுதி மட்டுமல்ல - சரித்திரத்தைப் பற்றிய தேவனின் நோக்கங்களின் ஒரு பகுதிதான் மக்கள். நீங்கள் ஏதோ ஒரு குடும்பத்தின் பரம்பரையில் தோன்றிய ஒருவராக மட்டுமல்ல நீங்கள் ஒரு நோக்கத் துடன் படைக்கப்பட்ட தனி மனிதனாகத்தான் இங்கே இருக்கிறீர்கள்.

ஆதார சத்தியம்

"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத் திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி ...". (எரே. 1:5)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அச்சிரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். தெபோராள். பாராக்		சாமுவேல்

கோத்திரங்கள்

நாள் 154

ரூபன் கோத்திரம்
யாத் 6:14; 1நாளா 5:1-9

காத் கோத்திரம்
1நாளா 5:11-17

மனாசே கோத்திரம் (கிழக்கே)
1நாளா 5:23-24

மனாசே கோத்திரம் (மேற்கே)
1நாளா 7:14-19

சிமியோன் கோத்திரம்
யாத் 6:15; 1நாளா 4:24-27,34-38

இசக்கார் கோத்திரம்
1நாளா 7:1-5

நப்தலி கோத்திரம்
1நாளா 7:13

எப்பிராயிம் கோத்திரம்
1நாளா 7:20-29

ஆசேர் கோத்திரம்
1நாளா 7:30-40

பென்யமீன் கோத்திரம்
1நாளா 7:6-12; 8:1-28

தொகுப்பு
1நாளா 9:1

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேல் குடும்பம் பல்வேறு கோத்தரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று எப்போதாவது நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? ஒரு பெரிய குழுவில் இடம் பெறுமுன், ஒரு சிறிய குழுவுடன் நம்மை இணைத்தக் கொள்ள வேண்டும். உள்ளூரிலுள்ள உங்கள் சபையுடன் உங்களை இணைத்துக் கொண்டால்தான் நீங்கள் எளிதாக அகில உலக சபையுடன் இணைத்துக் கொள்ளக்கூடும்.

ஆதார சத்தியம்

"ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்." (மத் 18:20)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஓபதியா, யோவேல், யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 155 பிரிக்கப்பட்ட இராஜ்ஜியம் கி. மு. 945-721

கோத்திரங்களின் எதிர்ப்பும் கலகமும்
11நாளா 10:1-19

தவறான ஆலோசனை எதிர்ப்பை அமளியை உண்டு பண்ணுதல்
1இராஜா 12:1-19

யெரோபெயாம்
1இராஜா 12:20

ரெகோபெயாம்
1இராஜா 14:21; 11நாளா 12:13

மக்கள் விக்கிரக வணக்கத்துக்கு வழி நடத்தப்படல்
1இராஜா 12:25-33; 11நாளா 11:15

ரெகோபெயாம் எச்சரிக்கப்படுதல்
1இராஜா 12:21-24; 11நாளா 11:1-4

பெத்தேல் பலிபீடத்தைப் பற்றிய தீர்க்க தரிசனம்
1இராஜா 13:1-10

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கோபமில்லாமல் நிதானமாக, கவனமாக வார்த்தைகளைப் பயன்படுத்தி பேசுவதற்கு அதிக மான சுயவெறுப்பும். கட்டுப்பாடும் தேவை; இறுதி யில் அவை பெரிய காரியங்களை பெற்றுக் கொள்ள உதவி செய்யும். கவலையீனமாக அடிக் கடி வீணாகக் கொட்டப்படும் வார்த்தைகளைப் பயன்படுத்தாமலிருக்க தேவன் நம்மை பயிற்று விக்கிறார். அடிக்கடி அதுவே அவரது வேலை யாக இருக்கிறது. இன்று 'ஆண்டவரே(மக்க ளை வார்த்தைகளினால் துண்டு போடுகிற பணி யை அல்ல. ஒற்றுமைப்படுத்தும் பணியைச் செய்ய என்னைப் பயன்படுத்தும்! என்று ஆண்டவரிடம் கேள்.

ஆதார சத்தியம்

"உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ. அவன் ஞானத்திற்குரிய சாந்தத் தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கை யினாலே காண்பிக்கக்கடவன்" (யாக் 3:13)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	I ஆவது ஆலயம்	கி.மு. 900	ஓபதியா. யோவேல். யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

பிரிக்கப்பட்ட இராஜ்ஜியம்

வடபகுதி இராஜ்ஜியத்தின் மன்னர்கள்

யெரோபெயாம்	யோவாகாஸ்
நாதாப்	யோவாஸ்
பாஷா	யெரோபெயாம் 11
ஏலா	சகரியா
சிம்ரி	சல்லும்
ஓம்ரி	மெனாகேம்
ஆகாப்	பெக்காகியா
அகசியா	பெக்கா
யோராம்	ஓசெயா
யெகூ	

* இஸ்ரவேல் என்றும் எப்பிராயீம் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.
* கி. மு. 945ல் ஆரம்பித்தது.
* முதல் மன்னன் யெரோபெயாம்
* கடைசி மன்னன் ஓசெயா
* மொத்தமாக ஆண்ட மன்னர்கள் 19 பேர்
* ஒருவரும் இரட்சிக்கப்படவில்லை.
* பத்து கோத்திரங்களைக் கொண்டது.
* சமாரியா அதன் தலைநகர்
* ஆசீரியரால் கி. மு. 712 இல் கைப்பற்றப்பட்டது.
* சிறையிருப்பிலிருந்து திரும்பவேயில்லை.
* மொத்தம் 224 ஆண்டுகள் நிலைத்திருந்தது. (கி. மு. 945-721 வரை)



தென்பகுதி இராஜ்ஜியத்தை ஆண்ட மன்னர்கள்

ரெகோபெயாம்	யோதாம்
அபியாம்	ஆகாஸ்
ஆசா	எசேக்கியா
யோசபாத்	மனாசே
யோராம்	ஆமோன்
அகசியா	யோசியா
அத்தாலியாள்	யோவாகாஸ்
யோவாஸ்	யோயாக்கீம்
அமசியா	யோயாக்கீன்
உசியா	சிதேக்கியா

* யூதா என்று பெயர் கொண்டது.
* கி. மு. 945ல் ஆரம்பித்தது.
* முதல் மன்னன் ரெகோபெயாம்
* கடைசி மன்னன் சீதேக்கியா
* மொத்த ஆண்ட மன்னர்கள் 20 பேர்
* இரட்சிக்கப்பட்டவர்கள் எட்டுப் பேர்.
* இரு கோத்திரங்களைக் கொண்டது.
* எருசலேம் அதன் தலைநகர்
* பாபிலோனியரால் கி. மு. 586 இல் கைப்பற்றப்பட்டது.
* சிறையிருப்பிலிருந்து மூன்று தடவை தனித்தனி குழுக்களாகத் திரும்பி வருதல்.
* மொத்தம் 359 ஆண்டுகள் நிலைத்திருந்தது. (கி. மு. 945-586 வரை)

நாள் 156 யெரோபெயாமும் ரெகோபெயாமும்

ஆவிக்குரிய மக்களால் ஏற்படும் பாதிப்பு
11நாளா 11:13-14, 16-17

ரெகோபெயாமின் இராஜ்யபாரம்
11நாளா 11:5-12

ஒரு தேவ மனிதனின் தீர்ப்பு
1இராஜா 13:11-32

ரெகோபெயாமின் குடும்பம்
11நாளா 11:18-23

அவனது விசுவாசத் துரோகம்
11நாளா 12:1,14; 1இராஜா 14:22-24

சீஷாக் எருசலேமை முற்றுகையிடல்
1இராஜா 14:25-28: 11நாளா 12:2-12

யெரோபெயாம் தொடர்ந்து தீயவற்றை செய்தல்
1இராஜா 13:33-34

அகியாவின் தீர்க்க தரிசனம்
1இராஜா 14:1-18

யுத்தங்கள்
1இராஜா 14:30;15:6

ரெகோபெயாமின் மரணம்
1இராஜா 14:29,31; 11நாளா 12:15-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ரெகோபெயாமின் பாவங்களுக்கும் தவறுகளுக்கும் காரணம், தெளிவாக இந்த வசனத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. "... அவன் கர்த்தரைத் தேடுகிறதற்குத் தன் இருதயத்தை நேராக்காமல் ..." (11 நாளா 12:14) பகலை இரவு தொடருவது எவ்வளவு இயற்கையான நிகழ்ச்சியோ. அப்படியே கர்த்தரைத் தேட தவறும்போது, அவரைச் சேவிக்கக் கூடாமல் பொல்லாப்பில் பிடிபடுவதும் நிச்சயமாக நிகழும்.

ஆதார சத்தியம்

"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களி கூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்." (சங் 16:8-9)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	அச்சிரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா. பாராக்		சாமுவேல்

நல்ல மன்னர்களும், தீயவரும் நாள் 157

யூதாவின் மன்னன் அபியா
1இராஜா 15:1-2; 11நாளா 13:1-2

யெரோபெயாமுக்கும், அபியாவுக்கும் யுத்தம்
11நாளா 13:3-19

அபியாவின் குடும்பம்
11நாளா 13:21

அவனது தீய நடத்தை
11இராஜா 15:3-4

அவனது மரணம்
11நாளா 13:22; 1இராஜா 15:7-8

யூதாவின் இராஜா ஆசா
11நாளா 14:1,2,5; 1இராஜா 15:9-11

நாதாப்
1இராஜா 15:25, 26

யெரோபெயாமின் மரணம்
11நாளா 13:20; 1இராஜா 14:19-20

ஆசாவின் பட்டணங்களும் படைப்பலமும்
11நாளா 14:6-8

நாதாபின் மரணம்
1இராஜா 15:31; 27-28

இஸ்ரவேலின் இராஜா, பாஷா
1இராஜா 15:33,34, 29-30

ஆசா எத்தியோப்பியரைத் தோற்கடித்தல்
11நாளா 14:9-15

துன்பத்தில் ஆறுதல்
சங் 77:1-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆசாப் 77ஆம் சங்கீதத்தில் கூறுவது போல், 'ஆண்ட வர் இரக்கஞ் செய்ய மறந்தாரோ?' (வ. 9) என்று நீ எண்ணிய தருணங்கள் உண்டா? அப்படிப்பட்ட நேரங்களில், ஆசாப் செய்தது போல், கடந்த காலங்களில் அவர் செய்த கணக்கற்ற நன்மை களை நினைவுபடுத்திப் பார். (சங் 77:10) அது, காரியங்களைச் சரிவர புரிந்து கொள்ள உனக்கு உதவி செய்யும்.

ஆதார சத்தியம்

"உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட் சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள் முழுவதும் காத்திருக்கிறேன். கர்த்தாவே, உம்முடைய இரக்கங்களையும் உம்முடைய காருணியங் களையும் நினைத்தருளும், அவைகளை அநாதி கால முதல் இருக்கிறதே. " (சங் 25:5-6)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஓபதியா. யோவேல். யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 158 ஆசாவின் தேவ பயம் நிறைந்த ஆட்சி

அசரியாவின் தீர்க்க தரிசனம்
1நாளா 15:1-7

ஆராதனையில் சீர்திருத்தங்கள்
11நாளா 15:8, 17, 18;
1இராஜா 15:12,14-15

உடன்படிக்கை புதுப்பிக்கப்படல்
11நாளா 15:9-15

ஆசா தனது தாயை அப்புறப்படுத்தல்
1இராஜா 15:13; 11நாளா 15:16

சமாதான சமயம்
11நாளா 15:19

பாஷாவுக்கும் ஆசாவுக்கும் யுத்தம்
1இராஜா 15:16-32

அவனது மரணம்
1இராஜா 16:15-16

ஓம்ரியும் திப்னியும்
1இராஜா 16:21-28

ஆகாப் + யேசபேல்
1இராஜா 16:29-33; 21:25-26

ஆசா இஸ்ரவேலரைத் தோற்கடித்தல்
11நாளா 16:1-6; 1இராஜா 15:17-22

யெகூவின் தீர்க்க தரிசனம்
1இராஜா 16:1-4, 7

ஆனானியின் எச்சரிப்பு
11நாளா 16:7-10

பாஷாவின் மரணம்
1இராஜா 16:5-6 :
ஏலா : 1இராஜா 16:8, 14, 9

அவனது மரணம்
1இராஜா 16:10;
சிம்ரி: 1இராஜா 16:11-13;20

ஆசாவின் கால்களில் நோவு காணு தல்
1இராஜா 15:23; 11நாளா 16:11-12

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆசா மரிப்பதற்கு இரு ஆண்டுகளுக்கு முன்னதாக அவன் கால்களில் கொடிய நோய் தாக்கியது. மருத்துவர்களின் உதவியை நாடிய தற்காக ஆண்டவர் அவனைத் தண்டித்தாரா? இல்லை: அவர் மருத்துவர்களை மட்டுமே நாடி, கர்த்தரிடத்திலிருந்து உதவி கேட்காததினால் தான் அவன் தண்டிக்கப்பட்டான். ஒரு மருத்துவர் சரியான மருந்து எது என்பதைக் காட்ட மட்டுமே முடியும்: ஆனால் தேவன் தான் சுகமளிக்கிறவர் என்பதை நாம் ஒருபொழுதும் மறந்து போகக் கூடாது.

ஆதார சத்தியம்

"நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்." (யாத். 15:26)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா, பாராக்		சாமுவேல்

எலியாவின் ஊழியத்தின் ஆரம்ப நாட்கள் நாள் 159

ஆசாவின் மரணம்
1இராஜா 15:24; 11நாளா 16:13-14

எரிகோவைத் திரும்பக் கட்டுதல்
1இராஜா 16:34

தீர்க்கதரிசிகளைத் துன்புறுத்தல்
1இராஜா 18:4

யோசபாத்
11நாளா 20:31-33; 1இராஜா 22:41-43,46
11நாளா 17:1-19; 18:1

எலியாவின் ஊழியம் ஆரம்பமாகுதல்
1இராஜா 17:1-24

ஒபதியாவும் ஆகாபும்
1இராஜா 18:1-3, 5-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவருக்காக ஓடியாடிக் காரியங்களைச் செய்ய அழைக்கப்படுமுன், அவருக்கு முன்பாக அமைதியாகக் காத்திருக்க, எலியா கற்றுக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. நீ அந்தப் பாடத்தைக் கற்றுக்கொண்டு விட்டாயா? அவருக்காக உழைப்பவர்கள் பலர், அவருக்கு முன்பாக அமைதியாகக் காத்திருக்கக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். 'காத்து நிற்பவர்களும் சேவை செய்பவர்களே'.

ஆதார சத்தியம்

"கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்." (சங். 40:1)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஒபதியா. யோவேல். யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 160 எலியாவுக்குத் தேவனின் பராமரிப்பு

கர்மேல் மலைமீது நடந்த போட்டி
1இராஜா 18:17-39

பாகாலின் தீர்க்க தரிசிகள் அழிவு
1இராஜா 18:40-46; 19:1-2

தேவன் - எலியாவுக்குக் காட்டும் கரிசனை
1இராஜா 19:3-7

ஒரேபில் கர்த்தர் பேசுதல்
1இராஜா 19:8-18

எலிசா, எலியாவைச் சேருதல்
1இராஜா 19:19-21

பெனாதாத் சமாரியாவை முற்றுகையிடல்
1இராஜா 20:1-12

அவனது தோல்வி
1இராஜா 20:13-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தமது ஊழியக்காரரை, ஒரு தனிப்பட்ட சிறப்புப் பணிக்காகக் கர்த்தர் தெரிந்தெடுக்கும் போது, தனது கரத்தில் கொடுக்கப்படும் பணியில் முழுக் கவனத்தையும் செலுத்தி, அதில் முழுமனதோடு ஈடுபடக் கூடியவர்களையே அவர் தேடுகிறார். எலிசா உழுது கொண்டிருக்கும்போது அழைப்புப் பெற்றான். பேதுரு, மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அழைப்புப் பெற்றான். உனக்கு ஆண்டவர் தற்சமயம் கொடுத்துள்ள பணியை சிறப்பாகச் செய்து கொண்டிரு: அப்பொழுது கர்த்தர் இதைவிடப் பெரிதான பணிகளை உன் கரத்தில் கொடுப்பார்.

ஆதார சத்தியம்

"... நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25:23)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஒபதியா, யோவேல், யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

எலியாவின் ஜெபங்கள்



பழைய ஏற்பாட்டின் தலைசிறந்த தனித்து நிற்கும் தீர்க்கதரிசி; புதிய ஏற்பாட்டில் 30 தடவைகளுக்கு மேலாகக் குறிப்பிடப்பட்டுள்ளவன். மறுரூப மலையில் தோன்றினவன். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும், யோவான் ஸ்நானகனும், மீண்டும் வந்த எலியாக்களாகக் கருதப்பட்டனர். அவனது காலத்திலிருந்த மன்னன் மீதும் தேசத்தின் மீதும் 'அக்கினியால் தீர்ப்பளித்த' எலியா அக்கினி இரத்தத்திலேறி மறைந்து போனான்!

எலியாவின் வாழ்வில் 4 பெரிய ஜெபங்கள் குறிப்பிடத்தக்கவை.

1. மழை வேண்டாமென்று (யாக் 5:17)
2. விதவையின் மரித்துப் போன மகனுக்காக (1 இராஜா 17:19-24)
3. வானதிலிருந்து அக்கினி இறங்கக் கோரி (1 இராஜா 18:36-38)
4. மழை மீண்டும் பெய்ய வேண்டுமென்று (1 இராஜா 18:41-46)

எலியாவின் ஜெபங்களில் காணப்படும் குணாதிசயங்கள் – மூன்று

1. நடக்கக் கூடாததை நடக்குமாறு கர்த்தரிடம் கேட்பதில் மகிழ்ச்சி கண்டான்.
2. அவன் எதற்காக ஜெபிக்கிறானோ, அதைப் பெற்றுக்கொள்வோமென்று நம்பினான்.
3. அவனது விடாமுயற்சியான ஜெபம்.

நாள் 161 யோசபாத்தும் ஆகாபும்

சீரியர், மீண்டும் தோல்வி
1இராஜா 20:22-30

ஆகாப் பெனாதாத்துடன் சமாதானம் செய்தல்
1இராஜா 20:31-34

இஸ்ரவேலின் பாவம்
1இராஜா 20:35-43

ஆகாபும், நாபோத்தும்
1இராஜா 21:1-3

யேசபேல் நாபோத் கொலைக்கு காரணமாகுதல்
1இராஜா 21:4-16

எலியா, அழிவைக் கூறுதல்
1இராஜா 21:17-24

ஆகாப் மனஸ்தாபப்படுதல்
1இராஜா 21:27-29

மூன்றான்டுகள் சமாதானம்
1இராஜா 22:1

யோசபாத் ஆகாபுடன் சேருதல்
1இராஜா 22:2-4 11இராஜா 18:2-3

தீர்க்க தரிசிகள் ஆகாபிடம் பொய் தீர்க்க தரிசனம் கூறுதல்
1இராஜா 22:5-6, 10-12;
11நாளா 18:4-5, 9-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தனக்குச் சொந்தமல்லாததை, சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்ற ஆகாபின் ஆசை அதிருப்திக்கும், மரணத்துக்கும், அழிவுக்கும் வழிநடத்துகிறது. கண்டுபிடிக்கப்பட்ட மாத்திரத்திலேயே அப்புறப்படுத்தப்படாமல் விட்டு வைக்கப்பட்டால், பொறாமை, வைராக்கியம் என்ற கணைகள், புற்றுநோயைப் போல் பரவக் கூடியவை. இந்த 'இரட்டைத் தீமை' யிலிருந்து உன் இருதயம் விடுபட்டுள்ளதா?

ஆதார சத்தியம்

"களியாட்டும் வெறியும், வேசித்தனமும், காம விகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக் கடவோம்." துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்." (ரோமர். 13:13-14)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	ஆசீரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா, பாராக்		சாமுவேல்

தேவ மனிதன் - யோசபாத்

நாள் 162

மிகாயா அழைக்கப்படுதல்
1இராஜா 22:7-9; 11நாளா 18:6-8

அவனது உண்மைத் தீர்க்கதரிசனம்
1இராஜா 22:13-28; 11நாளா 18:12-27

ஆகாபின் மரணம்
1இராஜா 22:29-40; 11நாளா 18:28-34

யோசபாத் கடிந்து கொள்ளப்படல்
11நாளா 19:1-7

தேவன், இராஜாதி இராஜா
சங். 82:1-8

யோசபாத் ஒழுங்கு கொண்டு வருதல்
11நாளா 19:8-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் பயமற்ற ஆகாபுடன் அவன் கொண்ட உறவை தீர்க்கதரிசி கண்டித்தபோது, யோசபாத் உடனே தன் உள்ளத்தை ஆராய்ந்து பார்த்து, தனது வழிகளைச் சீர்திருத்திக் கொள்ளுகிறான். தேவனின் கடிந்து கொள்ளுதலுக்கு நீ எவ்வாறு பதிலளிக்கிறாய்? – மனஸ்தாபப்பட்டா அல்லது எதிர்ப்புணர்வுடனா?

ஆதார சத்தியம்

"அன்றியும்; என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும் போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்." (எபி. 12:5-6)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	[1]ஆவது ஆலயம்	கி.மு. 900	ஒபதியா, யோவேல், யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 163

யோசபாத்தின் வெற்றி

யூதாவுக்கு விரோதமான படைகள் வருதல்
11நாளா 20:1-4

யோசபாத் ஜெபிக்கிறான்
11நாளா 20:5-13

எதிரிகள் தோல்வியடையுமாறு ஜெபம்
சங். 83:1-18

யகாசியேலின் தீர்க்கதரிசனம்
11நாளா 20:14-19

தேவன் நம்முடனிருக்கிறார்
சங். 46:1-11

பாடகர்கள் நியமிக்கப்படுதல்
11நாளா 20:20-21

எதிரி அழிக்கப்படுதல்
11நாளா 20:22-26

யூதா களிகூருதல்
11நாளா 20:27-28

கர்த்தரின் பட்டணம்
சங். 48:1-14

யூதாவின் வெற்றி, பயத்தை உண்டாக்குதல்
11நாளா 20:29-30

அகசியாவும் மோவாபும்
1இராஜா 22:51-53; 11இராஜா 3:4-5; 1:1-2

ஒரு குறுகிய கால ஒப்பந்தம்
11நாளா 20:35-37;
1இராஜா 22:44, 47-49

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

யுத்த களத்திற்குப் போகும்போது, தனது படைக்கு முன்பாகப் பாடகர்களை நிறுத்திய யோசபாத்தின் யுத்த தந்திரம், ஆழ்ந்த ஆவிக்குரிய சத்தியங்களை விளக்குவதாக அமைந்துள்ளது. சில யுத்தங்களை ஜெப ஆவியோடு அணுகுவதை விட, துதியின் ஆவியோடு அணுகுவதே சாலச்சிறந்தது. இதனால் ஜெபம் முக்கியமானதல்ல என்று அர்த்தமல்ல; ஜெபத்தினால் வெற்றிகிட்டாதது போன்று தோன்றுகிற சமயங்களில் துதிப்பதை ஆரம்பித்துப் பார்க்க வேண்டுமென்பதே இதன் அர்த்தமாகும்.

ஆதார சத்தியம்

"கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்; அவருடைய வலது கரமும், அவருடைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது." (சங். 98:1)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
2 இராஜாக்கள் 12ஆவது பழைய ஏற்பாட்டுப் புத்தகம் 7ஆவது வரலாற்று நூல்	எலிசா, நாகமான், எசேக்கியா யோசியா	இலட்சியங்களின் வரலாறு தொடர்கிறது. இஸ்ரவேல் அசோரியாவால் தோற்கடிக்கப்பட்டு அதன் தலைநகர் சமாரியா அழிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

எலிசாவின் ஊழியம் ஆரம்பமாகிறது நாள் 164

எலியா அக்கினியை வரவழைத்தல்
11இராஜா 1:3-16

அகசியாவின் மரணம்
11இராஜா 1:18,17

யோராம்
11இராஜா 3:1-3

எலியா யோர்தானைப் பிளக்கச்செய்தல்
11இராஜா 2:1-8

எலியா பரத்துக்கு எடுத்துக் கொள்ளப் படல்
11இராஜா 2:9-11

எலிசா சால்வையைப் பெற்றுக்கொள்ளல்
11இராஜா 2:12-18

நல்ல குடிதண்ணீர் அற்புதம்
11இராஜா 2:19-22

குழந்தைகள் அழிக்கப்படுதல்
11இராஜா 2:23-25

யோசபாத், யோராமைச் சேர்ந்து கொள்ளுதல்
11இராஜா 3:6-9

எலிசாவின் வாக்குறுதி
11இராஜா 3:10-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

விருப்பத்திற்குரிய அந்த சக்தி மிகுந்த சால்வையைப் பெற்றுக்கொள்ள எலிசா நிறைவேற்ற வேண்டிய நிபந்தனை மிக சாதாரணமானது. தனது எஜமான் பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது அவன் தனது கண்களை அவர்மீதே பதித்து வைக்க வேண்டியதாய் இருந்தது. இன்றைய திருச்சபையும் வல்லமை பெற்றுக் கொள்ள, இதே நிபந்தனையைத் தான் பின்பற்ற வேண்டும்; உங்கள் கண்கள் இயேசுவின் மீதே வைக்கப்பட வேண்டும்.

ஆதார சத்தியம்

"தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது; நான் பாடிக் கீர்த்தனம் பண்ணுவேன்; என் மகிமையும் பாடும்." (சங். 108:1)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
கர்த்தரின் வார்த்தை என்ற சொற் தொடர் 24 தடவைகள் இப்புத்தகத்தில் வருகிறது. இயேசு கிறிஸ்து தேவனுடைய இறுதி வார்தையாக இருக்கிறார்.	1ஆம் 2ஆம் இராஜாக்கள் புத்தகங்கள் தேவனுக்கு எதிரான கலகம் தீமையில் முடியும் என்று போதிக்கின்றன.தேவனுடைய அன்பும். வல்லமையும் தீர்க்க தரிசிகள் உண்மையான அரசர்கள் மூலமாகப் பிரகாசிக்கின்றது.	2 இராஜாக்கள் 19:15

நாள் 165 எலிசாவும் சூனேமித்தியப் பெண்ணும்

மோவாபியரின் தோல்வி
11இராஜா 3:21-27

விதவையின் எண்ணெய்
11இராஜா 4:1-7

சூனேமித்தியப் பெண்
11இராஜா 4:8-17

அவனது மகன் உயிர்பெறுதல்
11இராஜா 4:18-37

எலிசா பஞ்சத்தை முன்னறிவித்தல்
11இராஜா 8:1-2

யோராம்
11இராஜா 8:16-17;
11நாளா 21:5

யோசபாத்தின் மரணம்
11நாளா 20:34; 1இராஜா 22:45,46,50;
11நாளா 21:1-4

யோராமின் தீய வாழ்க்கை
11இராஜா 8:18-19; 11நாளா 21:6-7

ஏதோம் நியாயந் தீர்க்கப்படல்
ஓபதி 1:1-9

ஏதோமின் பெரிய பாவம்
ஓபதி 1:10-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எலியா, எலிசாவிடம் கேட்டது போல், "நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்றிருக்கிறாய்? என்று வேறு சீடனிடம் ஒருவேளை கேட்டிருந்தால் என்ன பதில் கொடுத்திருப்பான் தெரியுமா?" "எஜமானரே, நீங்கள் செய்த அற்புதங்களில் பாதியாவது நான் செய்யக் கூடுமானால், அதுவே எனக்குப் போதும்!" என்றுதான் கூறியிருந்திருப்பான். ஆனால், எலிசா அப்படியல்ல, அவன் பாதி வல்லமை கேட்கவில்லை; இரட்டிப்பான வல்லமை வேண்டுமென்று கேட்டான்; அவன் பெரிய காரியங்களைக் கேட்டான் – பெரிய காரியங்களைப் பெற்றுக் கொண்டான். நீ எவ்வளவு பெரிய காரியங்களைக் கேட்கிறாய்?

ஆதார சத்தியம்

"நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்." (யோவா 14:13,14)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்		விசேடதன்மை
ஓபதியா + நாகூம் பழைய ஏற்பாட்டின் 31ஆவது, 34ஆவது புத்தகங்கள் தீர்க்க தரிசனப் புத்தகங்களில் 9ஆவதும் 12ஆவதுமாகும்		நற்செய்தியைப் போன்று 17ஆம் வசனத்தில் இயேசுக்கிறிஸ்து மக்களுக்கு இரட்சிப்பின் நற்செய்தியைக் கூற வந்தார் என்று சொல்லப்படுகிறது.

எலிசாவின் மற்ற அற்புதங்கள் நாள் 166

எலிசாவின் மற்ற அற்புதங்கள்
11இராஜா 4:38-44

தேசங்கள் கண்டிப்பான தீர்ப்பு கூறப்படுதல்
ஓபதி 1:15-16

வருங்கால இராஜ்ஜியம்
ஓபதி 1:17-21

ஏதோம், லிப்னாவின் புரட்சி
11இராஜா 8:20-22; 11 நாளா 21:8-10

எலியாவின் தீர்க்க தரிசனம்
11நாளா 21:12-15

படையெடுத்தல்
11நாளா 21:16-17

நாகமான் குணமடைதல்
11இராஜா 5:1-19

கேயாசியின் தண்டனை
11இராஜா 5:20-27

கோடாரி மீண்டும் கிடைத்தல்
11இராஜா 6:1-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கோடாரி தொலைந்து போனபோது, அதற்கு மேல் எந்த வேலையும் தொடரமுடியாத நிலை. ஏனெனில் அந்தக் கருவி, தனது வெட்டும் பகுதியை இழந்துவிட்டது. ஆயினும், உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழும்பிய துயரக் குரலின் விளைவாக, அற்புதமாக ஆழத்திலிருந்து அந்தக் கோடாரி மிதந்து வந்தது. உனது கிறிஸ்தவ அனுபவத்தின் கூரான பயனுள்ள பகுதியை நீ ஒருவேளை இழந்து நிற்கிறாயோ? மனஸ்தாபத்துடன் கூடிய துயரக் குரலையெழுப்பு. தேவன் மீண்டும் அந்த அனுபவத்தைத் தருவார். இன்றே தருவார்!

ஆதார சத்தியம்

"நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாயென்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக..." (வெளி. 2:4-5)

இயேசுவும் தீர்க்கதரிசனமும்	போதனை	மனன வசனம்
நாகேல்லிடம் 1:15 என்ற சிறப்பான வசனத்திற்குப் பின்னர் வரும் வசனத்தில் நற்செய்தியைக் கொண்டு வருதல்பற்றிக் கூறப்படுகிறது. மத்தேயு 4:23 இன்படி நற்செய்தியைக் கொண்டு வரும் என்கிறது.	ஓபதியா ஏதோம் தண்டிக்கப்படும் என்று தீர்க்க தரிசனம் உரைத்தார். நாகூமின் கவிதைகள் நினிவேயின் வீழ்ச்சியில் யூதர்கள் கொண்ட மகிழ்ச்சியை விபரிக்கிறது.	நாகூம் 1:7

நாள் 167 சமாரியாவின் முற்றுகை

சீரியரின் தோல்வி
11இராஜா 6:8-23

யோராமின் வியாதி
11நாளா 21:18

அகசியா
11இராஜா 9:29; 8:25

யோராமின் மரணம்
11நாளா 21:19-20;
11 இராஜா 8:23,24

சமாரியாவின் முற்றுகை
11இராஜா 6:24-33; 7:1-20

சூனேமியாள் நிலங்களைத் திரும்பப் பெறுதல்
11இராஜா 8:3-6

அகசியாவின் தீய ஆட்சி
11இராஜா 8:26-27; 11நாளா 22:1-4

பெனாதாத்தின் மரணம்
11இராஜா 8:7-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சீரியப் படைத் தண்டில் சிதறிக் கிடந்த உணவு, பிறபொருட்களைக் கண்ணுற்ற நான்கு குஷ்ட ரோகிகளும், தாங்கள் கண்டவற்றைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வை உடனே பெற்றுக் கொண்டார்கள். "இது ஒரு நற்செய்தியின் நாள்: இதை நாம் நமக்குள் வைத்துக் கொண்டிருக்கிறோமே" என்று எண்ணினார்கள். நீ பெற்றுக்கொண்ட அற்புதங்களைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வாஞ்சிக்கிறாயா?

ஆதார சத்தியம்

"வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்: இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்." (மத். 10:8)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஒபதியா, யோவேல், யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

எலிசாவின் அற்புதங்கள்

எலியா பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது அவனுக்கிருந்த ஆவியின் வரம் தனக்கு இரட்டிப்பாகக் கிடைக்க வேண்டுமென்பதே எலிசாவின் ஜெபம் (II இராஜா 2:9) அவனுடைய வாழ்க்கை முழுவதும் அற்புதங்களால் நிறைந்ததாகும்.

01.	யோர்தான் பிரிந்தது	*2இராஜா 2:14*
02.	தண்ணீர் ஆரோக்கியமாகுதல்	*2இராஜா 2:21-22*
03.	பயபக்தியில்லாதவர்களுக்குத் தண்டனை	*2இராஜா 2:23-24*
04.	பள்ளத்தாக்குகள் தண்ணீரால் நிரப்பப்பட்டதும், மோவாபிய சேனையின் தோல்வியும்	*2இராஜா 3:9-24*
05.	ஏழை விதவையின் எண்ணெய் பெருகியது	*2இராஜா 4:1-7*
06.	சூனேமியானின் மகன் உயிரோடு எழுப்பப்பட்டது	*2இராஜா 4:32-36*
07.	விஷமுள்ள கூழ் சுத்தமாக்கப்பட்டது	*2இராஜா 4:38-41*
08.	திரளானோர் போஷிக்கப்பட்டது	*2இராஜா 4:42-44*
09.	நாகமான் குணமாக்கப்பட்டது	*2இராஜா 5:1-14*
10.	கேயாசிக்கு குஷ்டரோகம்	*2இராஜா 5:26-27*
11.	தொலைந்து போன கோடரி	*2இராஜா 6:5-7*
12.	சீரியர்களுக்கு குருட்டாட்டம்	*2இராஜா 6:15-23*
13.	சீரியர்களின் தோல்வி மற்றும் இராஜாவின் மனுஷனின் மரணம் பற்றிய தீர்க்க தரிசனம்	*2 இராஜா 7ஆம் அதிகாரம்*
14.	மரணத்திற்குப் பின்னும் உயிரோடு எழுப்புதல்	*2இராஜா 13:20-21*

நாள் 168 அரச குலக் கொலைகள்

அகசியாவும் யோராமும்
11இராஜா 8:28-29; 11நாளா 22:5-6

யெகூ, இராஜாவாக அபிஷேகம் பண்ணப் படுதல்
11இராஜா 9:1-13

யெகூ, யோராமைக் கொலை செய்தல்
11இராஜா 9:142; 11 நாளா 22:7

அகசியாவின் மரணம்
11இராஜா 9:27-28; 11நாளா 22:9

ராஜகுமாரர் கொலை செய்யப்படுதல்
11இராஜா 10:12-14; 11 நாளா 22:8

அரச குடும்பம் படுகொலை
11இராஜா 11:1; 11நாளா 22:10

யோவாஸ் காப்பாற்றப்படுதல்
11இராஜா 11:2-3; 11நாளா 22:11-12

யேசபேல்
11இராஜா 9:30-37

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

யார் கொலை செய்யப்பட்டாலும், அது ஒரு துக்கமான காரியமே: ஆனால் ஒரு அரச பரம்பரையே இவ்வாறு அழிக்கப்படுவது மிகப் பயங்கரமான, பரிதாபக் கதையே. நீங்கள் இராஜ குடும்பத்திற்காக ஜெபித்து எத்தனை நாட்கள் ஆகின்றன? கடைசியாக ஜெபித்த நாள் நினைவிலிருக்கிறதா? ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். (அதிகாரிகளுக்காகவும்) இராஜ குடும்பத் திற்காகவும் ஜெபிப்பது ஒரு கிறிஸ்தவன் மனமிருந்தால் மட்டுமே செய்யக்கூடிய ஒரு காரியமல்ல: அது அவன் மீது விழுந்த கடமையாகும்.

ஆதார சத்தியம்

"நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்: நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலக்கமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்." (1 தீமோ. 2:1,2)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1100	
	அச்சிரிய சாம்ராஜ்யம் ஸ்தாபிதம். டெபோரா, பாராக்		சாமுவேல்

யெகூவும் யோவாசும் நாள் 169

ஆகாபின் மீது வந்த தீர்ப்பு
11இராஜா 10:1-11

யோனதாப் காப்பாற்றப்படல்
11இராஜா 10:15-17

யெகூ, பாகால் வணக்கத்தை ஒழித்தல்
11இராஜா 10:18-28,30

யோவாஸ் மன்னனாகுதல்
11இராஜா 11:4-12; 11 நாளா 23:1-11

யெகூ பின்மாற்றமடைதல்
11இராஜா 10:29, 31-33

அத்தாலியாள் சிரச்சேதம் பண்ணப்படுதல்
11இராஜா 11:13-16; 11நாளா 23:12-15

யோவாசின் நல்ல வாழ்க்கை
11நாளா 24:1-2
11இராஜா 11:21; 12:1-3

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவாலயத்தைச் சீர்படுத்த வேண்டுமென்ற யோவாசின் கரிசனை மிகவும் பாராட்டுதற்குரியதாகும். கர்த்தரின் வீடு நல்ல நிலையிலிருக்க வேண்டும் (11 நாளா 24:4). உனது சரீரமும் கூட ஆண்டவரின் ஆலயமே. அந்தக் கர்த்தரின் 'சொத்தை' நீங்கள் கருத்துடன் பாதுகாப்பதில் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்கிறீர்கள்?

ஆதார சத்தியம்

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1 கொரி. 6:19)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஒபதியா, யோவேல், யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 170 யோவாசின் தேவ பயம் நிறைந் ஆட்சி

யோய்தாவின் தலைமையில் மறுமலர்ச்சி
11இராஜா 11:17-20; 11நாளா 23:16-21

யோவாசின குடும்பம்
11நாளா 24:3

யெசூவின் மரணம்
11இராஜா 10:34-36

உண்மையற்ற ஆசாரியர்கள்
11நாளா 24:4-7; 11 இராஜா 12:4-8

யோவகாஸ்
11இராஜா 13:1-2

சீரியாவின் துன்புறுத்துதல்
11இராஜா 13:22,3-7

யோவாஸ் தேவாலயத்தைப் பழுது பார்த்தல்
11இராஜா 12:9-16; 11நாளா 24:8-14

பூச்சிகளின் வாதை
யோவே 1:1-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பலிபீடத்தினருகில் ஒரு காணிக்கைப் பெட்டியை வைக்க வேண்டுமென்ற யோய்தாவின் யோசனை அவன் உள்ளத்தில் எழுந்த எழுப்புதலின் விளைவு (11இராஜா 12:9). ஆராதனையும், காணிக்கை கொடுப்பதும் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டுள்ளன. தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் சேர்த்து ஆராதனை செய்ய முடியாது. ஆனால் உலகப் பொருளினால் தேவனுக்கு ஆராதனை செய்ய முடியும்.

ஆதார சத்தியம்

"...உன் ஆண்மக்கள் எல்லோரும் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் வெறுங் கையோடே வராமல், உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு அருளிய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக, அவனவன் தன் தன் தகுதிக்கு ஏற்றபடி காணிக்கையைக் கொண்டுவரக் கடவன்."
(உபா. 16:16-17)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்		விசேடதன்மை
29ஆவது யோவால் பழைய ஏற்பாட்டுப் புத்தகம் தீர்க்கதரிசனப் புத்தகத்தில் 7ஆவது புத்தகம்		வெட்டுக்கிளிகளினால் வரும் கொள்ளை நோய் யோவேல் உதாரணமாக உபயோகிக்கிறார்.

யோவேலின் தீர்க்கதரிசனம்

நாள் 171

தேவனின் நியாயத் தீர்ப்பு
யோவே 2:1-11

மனஸ்தாபப்படும்படி தூண்டிவிடும் போதனை
யோவே 2:12-17

மனஸ்தாபத்தின் விளைவுகள்
யோவே 2:18-27

பெரிய வாக்குத்தத்தம்
யோவே 2:28-32

தேசம் நியாயந் தீர்க்கப்படுதல்
யோவே 3:1-17

யூதா திரும்பக் கட்டப்படுதல்
யோவே 3:18-21

யோய்தாவின் மரணம்
11நாளா 24:15-16

பிரபுக்கள் பின்மாற்றமடைதல்
11நாளா 24:17-19

யோவாஸ் ஆசகேலுக்கு லஞ்சம் கொடுத்தல்
11இராஜா 12:17-18

யோவாஸ்
11இராஜா 13:10

யோவகாஸின் மரணம்
11இராஜா 13:8-9

யோவாஸின் தீய வாழ்க்கை
11இராஜா 13:11

சகரியா கொலை செய்யப்படுதல்
11நாளா 24:20-22

யூதா தோல்வியடைதல்
11நாளா 24:23-24

யோவாஸ் கொலை செய்யப்படுதல்
11நாளா 24:25-27; 11இராஜா 12:19-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட வேளைகளிலும், தருணங்களிலும் மட்டுமல்ல: தமது பிள்ளைகளின் உள்ளங்களில் நிரந்தரமாக, என்றென்றைக்குமாகத் தங்கிவிடும் நாளொன்று வருமென்று யோவேல் காட்சி கண்டார். யோவேல் கண்ட அந்த நாள் இப்பொழுது வந்துள்ளது. நீ இதைக் குறித்துச் சந்தோஷப்படுகிறாயா?

ஆதார சத்தியம்

"தீர்க்க தரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனம் சொல்லுவார்கள்: உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்: உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்."
(அப். 2:16,17)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசுக்கிறிஸ்து யோவேலின் அற்புதமான பரிசுத்த ஆவியானவர் பற்றிய வாக்குத் தத்தங்களில் உயர்த்தப்படுகிறார். (யோனாஸ் 16:13)	தேவன் மனித வரலாற்றில் தீர்க்கமாக தலையீடு செய்வார். அவர் யார் என்பது தெளிவாகும் அவர் எமது இராஜா	யோவேல் 2:28

நாள் 172 யூதாவும் இஸ்ரவேலும்

யோவாஸ் எலிசாவைப் போய்ப் பார்த்தல்
11இராஜா 13:14-19

கல்லறையில் அற்புதம்
11இராஜா 13:20-21

அமத்சியா
11நாளா 25:1-4; 11இராஜா 14:1-6

படைகள் ஆயத்தம்
11நாளா 25:5

சிரியாவின் தோல்வி
11இராஜா 13:23-25

யூதா இஸ்ரவேலை சூலிக்கு அமர்த்துதல்
11நாளா 25;6-10

அமத்சியாவின் வெற்றி
11இராஜா 14:7; 11நாளா 25:11-12

பட்டணங்கள் கொள்ளையிடப்படல்
11நாளா 25:13

அமத்சியாவின் விக்கிரக ஆராதனை
11நாளா 25:14-16

எருசலேம் கொள்ளையிடப்படுதல்
11இராஜா 8-14 ;11நாளா 25:17-24

உசியா (அசரியா)
11இராஜா 14:21; 15:1-4;
11நாளா 26:1,3-5

யோவாசின் மரணம்
11இராஜா 13:12-13; 14:15-16

அமத்சியாவின் இறுதி வருடங்கள்
11இராஜா 14:17,22; 11நாளா 25:25;26:2

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எலிசாவின் மீது தங்கியிருந்த கர்த்தரின் வல்லமை மிகப் பெரிதானதாக இருந்தபடியால், அவனது மரணத்திற்குப் பின்னும் அந்த வல்லமை அவனது எலும்புகளில் தங்கியிருந்தது (11 இராஜா 13:21). உயிருடனிருக்கும் எத்தனையோ கிறிஸ்தவர்களிடம் இருக்கும் வல்லமையை விட மிக அதிகமான வல்லமை எலிசாவிடம் அவன் மரித்த பின்னரும் இருந்தது.

ஆதார சத்தியம்

"இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின வருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர், உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே, சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." (ரோம். 8:11)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
ஓசியா பழைய ஏற்பாட்டின் 23ஆவது புத்தகம் 6ஆவது தீர்க்கதரிசனப் புத்தகம்	ஓசியாவும் ஹோமாரும்	இப்புத்தகத்தின் தொனிப் பொருளை விளங்க தனது மனைவியின் விபசாரத்தை உதாரணமாக்குகின்றார்.

ஓசியாவின் செய்தி

நாள் 173

யெரோபெயாம்
11இராஜா 14:23-27

அமத்சியாவின் மரணம்
11இராஜா 14:18-20; 11நாளா 25:26-28

பெலிஸ்தியர் தோற்கடிக்கப்படுதல்
11நாளா 26:6-15

இஸ்ரவேல் எதிர்காலத்தில் மீண்டும் கட்டப்படுதல்
ஆமோஸ் 9:11-15

இஸ்ரவேல் கடிந்து கொள்ளப்படுதல்
ஓசியா 1:1-2:5

தேவனின் தீர்ப்புகள்
ஓசி 2:6-13

அவரது வாக்குத் தத்தங்கள்
ஓசி 2:14-23

இஸ்ரவேல் மீண்டும் கட்டப்படுதல்
ஓசி 3:1-5

யோனாவின் கீழ்ப்படியாமை
யோனா 1:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஓசியா ஒரு சின்ன தீர்க்கதரிசிதான். ஆனால் தனக்குத் துரோகம் செய்த இஸ்ரவேலரையும் தொடர்ந்து நேசிக்கும் தேவனின் மெய்யான அன்பை வெளிப்படுத்தும் செயல் ஒன்றை அவரது வாழ்க்கையில் செயல் முறையில் செய்து காட்ட வேண்டிய மிகப் பெரிய பணி அவருக்குக் கொடுக்கப்பட்டது. இந்த வினாடியில் ஆண்டவர் உன்னிடமும் இதை எதிர்பார்க்கிறாரா? அப்படியானால் ஓசியா செய்தது போலவே நீயும், தேவன் மீது முற்றிலும் உன் பாரத்தையெல்லாம் வைத்துச் சார்ந்துவிடு: அவர் உன்னை ஒரு பொழுதும் கைவிடமாட்டார்.

ஆதார சத்தியம்

"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது." (1கொரி. 13:4,7,8)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
ஓசியா 6:6 ஐ இயேசு மேற்கோள் காட்டுகின்றார் நோயாளிக்கு வைத்தியன் வேண்டியதே அல்லாமல் சுகமானவனுக்கல்ல (மத் 9:12-13)	மக்கள் மேலுள்ள ஒப்பற்ற அன்பையும் வாஞ்சையையும் எடுத்துரைக்கின்றார். ஓசியா தேவன் தன்னிடம் மக்கள் திரும்ப வேண்டுமென்று அவர்களை தொடர்ந்து நேசிக்கின்றார்.	ஓசியா 14:4-5

மீன் வயிற்றில் யோனா
யோனா 1:12-17

யோனாவின் ஜெபம்
யோனா 2:1-9

அவனது விடுதலை
யோனா 2:10

நினிவேயில் யோனா
யோனா 3:1-10

அவனது விசித்திரமான செயல்
யோனா 4:1-11

தேசங்களுக்கு விரோதமான தீர்ப்பு
ஆமோ 1:1-15; 2:1-3

இஸ்ரவேல், யூதாவுக்கு விரோதமான தீர்ப்புகள்
ஆமோ 2:4-3:15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தனது தீர்க்கதரிசனமும், எச்சரிப்பும் நிறைவேறாது. தான் கூறியது தவறு என்று நிரூபிக்கப்பட்டு விடுமோ என்ற பயமே யோனாவின் மிகப்பெரிய பிரச்சனையாகும் (யோனா 4:2). அவன் தேவனையோ அல்லது தன் மூலமாகத் தேவன் வெளிப்படுத்தப் போகும் செய்தியை விடத் தன்னைப் பற்றியே அதிகமாக நினைத்தான். தேவன் உன்னைப் பயன்படுத்த வேண்டுமென்று ஆசைப்பட்டால், நீ அவரது செய்திக்கு முதலிடம் கொடுக்கவும், உனது உணர்வுகளுக்கு இரண்டாவது இடம் மட்டுமே கொடுக்கவும் தயாராக இருக்கவேண்டும். இல்லாவிடில், யோனாவைப் போல் நீ கஷ்டத்துக்குள்ளாக நேரிடும்.

ஆதார சத்தியம்

"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை: அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது: சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ!." (1 கொரி. 9:16)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
யோனா பழைய ஏற்பாட்டின் 32ஆவது புத்தகம்		

ஆமோஸின் செய்தி

நாள் 175

இஸ்ரவேல் கடிந்து கொள்ளப்படல்
ஆமோ 4:1-5

அவர்களது நிர்விசாரம் காண்பிக்கப்படுதல்
ஆமோ 4:6-13

கர்த்தரைத் தேட அழைப்பு
ஆமோ 5:1-6

மனஸ்தாபத்திற்குத் தூண்டப்படுதல்
ஆமோ 5:7-17

நியாயத் தீர்ப்பு குறித்துஎச்சரிக்கை
ஆமோ 5:18-27

ஆடம்பர வாழ்வின் அபாயம்
ஆமோ 6:1-7

பாவங்களுக்குத் தண்டனை
ஆமோ 6:8-14

ஆமோசின் தரிசனங்கள்
ஆமோ 7:1-9

ஆமோசும் அமத்சியாவும்
ஆமோ 7:10-17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் தூக்கு நூலைக் கொண்டு, ஆமோஸ் இஸ்ரவேலை சரிபார்த்தபோது, தேசம் மிகவும் குறைவுபட்டதைக் காண்கிறான். ஆமோஸ் இன்று உன்னிடம் வந்து உங்கள் வாழ்க்கையை தேவனின் தூக்கு நூலைக் கொண்டு சரி பார்த்தால் என்ன நேரிடும்? அது சரியான நிலையைக் கட்டுமா? குறைபாடுள்ளதாக இருக்குமா?

ஆதார சத்தியம்

"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்." (யாத். 1:12)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசு யோனாவுக்கு உதாரணமாக மரணத்துக்கூடாகச் சென்று உயிர்த்தெழுந்தார். (மத் 12:39-41)	வெறுக்கப்பட்ட அசீரியர்களின் தலைநகரான நினிவே தீமைக்கும் கொடூரக்கும் எடுத்தக்காட்டாக இருந்தது. யோனா இங்கு செல்வதற்கு மறுத்தமை ஆச்சரியமானதல்ல இப்புத்தகம் புற ஜாதியாரில் தேவனுக்கு இருந்த பெரிதான அன்பை வெளிக்காட்டப்படுகிறது.	ஓசியா 4:2

தீய இராஜாக்கள்

இன்னொரு தரிசனம்
ஆமோ 8:1-3

இஸ்ரவேலின் தப்பமுடியாத அறிவு
ஆமோ 8:4-14

தேவனின் தீர்ப்புகள்
ஆமோ 9:1-10

யெரோபெயாமின் மரணம்
11இராஜா 14:28-29

தேவனின் குற்றச்சாட்டு
ஓசியா 4:1-11

அந்நிய தெய்வங்களின் வழிபாடு கண்டிக்கப்படல்
ஓசியா 4:12-19

சகரியா
11இராஜா 15:8-12

சல்லூம்
11இராஜா 15:13-15

மெனாகெம்
11இராஜா 15:16-18

அசீரியரின் படையெடுப்பு
11இராஜா 15:19-20

உசியாவின் தலையீடு
11நாளா 26:16-18

உசியாவின் குஷ்டம்
11நாளா 26:19-21; 11இராஜா 15:5

மெனாகிமின் மரணம்
11இராஜா 15:21-22

பெக்காகியா
11இராஜா 15:23-24

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் பலிபீடத்தில். ஆசாரியர் செய்ய வேண்டிய தூபங்காட்டும் பணியில் தலையிட்டது உசியா செய்த பாவமாகும். அப்பணி, ஆரோனின் சந்ததியார் மட்டுமே செய்யும்படி ஒதுக்கப்பட்டிருந்த திருப்பணி. விளைவு? அவன் குஷ்ட ரோகியாக, தனிப்படுத்தப்பட்ட வாழ்க்கை நடத்த வேண்டிய நிலை. தடை செய்யப்பட்ட கனத்தை இச்சிப்பவர்கள், தங்களுக்கு நியாயமாக வரவேண்டிய கனத்தையும் இழக்க நேரிடும்.

ஆதார சத்தியம்

"தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல. கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்." (11கொரி. 10:18)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
ஆமோஸ் பழைய ஏற்பாட்டின் 30ஆவது புத்தகம் தீர்க்கதரிசனங்களில் 8ஆவது புத்தகம்		

ஏசாயாவின் செய்தி

நாள் 177

பெக்காகியா கொலை
11இராஜா 15:25-26

பெக்கா
11இராஜா 15:27-28

உசியாவின் மரணம்
11இராஜா 15:6-7; 11நாளா 26:22-23

ஏசாயாவின் தரிசனம்
ஏசா 6:1-13

யோதாம்
11நாளா 27:1,8,2; 11இராஜா 15:32-35

ஏசாயாவின் தரிசனம்
ஏசா 1:1-31

வாக்குத்தத்தம்
ஏசா 2:1-6

ஆசீர்வாதத்துக்கு முந்திய சிட்சை
ஏசா 2:7-3:26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஏசாயா கூறுகிறான் "உசியா இராஜா மரண மடைந்த வருஷத்தில். ஆண்டவரைப் பார்த்தேன்! உலகப் பிரகாரமான இராஜாவின் சவப்பெட்டியில் அவரது மரித்த உடலைப் பார்த்த பின்னர்தான். அவனால் பரலோக இராஜாவை அவரது சிம்மாசனத்தில் பார்க்க முடிந்தது. நமது பார்வையைத் தமது மீது திருப்பும்படியாக. சில சமயங்களில் ஆண்டவர் நம்மிடமிருந்து எதையாவது எடுத்துக் கொள்ள வேண்டியதாய் இருப்பது எவ்வளவு துக்கமான காரியம்.

ஆதார சத்தியம்

"நானோவென்றால் கர்த்தரை நோக்கிக் கொண்டு. என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்: என் தேவன் என்னைக் கேட்டருளுவார்." (மீகா. 7:7)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
ஆமோஸைப் போன்று மதமாய்மாலங்களையும் இயேசுகிறிஸ்து வெறுத்தார்.மத் 23:23	ஆமோஸின் செய்திகள் இஸ்ரவேலின் பாவமான அயல்நாடுகளையும் கண்டித்தன. நீதியாகவிலிருந்து தேவனை விசனத்தோடு தொழுது கொள்ள வேண்டுமென்று கூறுகிறது.	ஆமோஸ் 5:24

நாள் 178

மீகாவின் செய்தி

எருசலேம் மீண்டும் கட்டப்படுதல்
ஏசா 4:1-6

திராட்சைத் தோட்டத்தின் உவமை
ஏசா 5:1-7

ஆறு 'ஐயோ'க்கள்
ஏசா 5:8-30

மீகாவின் செய்தி
மீகா 1:1

தேவனின் கோபாக்கினை
மீகா 1:2-16

இஸ்ரவேலின் பாவங்கள்
மீகா 2:1-5

அவர்களது தீய வழக்கங்கள்
மீகா 2:6-11

ஒரு வாக்குறுதி
மீகா 2:12-13

யோதாமின் பலம்
11நாளா 27:3-6

ரெசின், பெக்காவுடன் சேருதல்
11இராஜா 15:37

யோதாமின் மரணம்
11இராஜா 15:36,38; 11 நாளா 27:7,9

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தலைவர்கள் கர்த்தரைப் பின்பற்றினால் தான் 'தலைவனைப் பின்பற்று' என்ற விளையாட்டு அருமையாக அமையுமென்பதை மீகா காண்பிக்கிறார். ஆவிக்குரிய வாழ்க்கையில் உன் தலைவர் யார்? உனது ஆவிக்குரிய தலைவர்கள், தங்கள் சொந்த வாழ்வில் கிறிஸ்துவின் அன்பைப் பிரதிபலிப்பவர்களா? அப்படியில்லாவிடில், உனது ஆவிக்குரிய கூட்டுறவையும், அர்ப்பணிப்பையும் நீ மீண்டும் ஒருமுறை ஆராய்வது அவசியம்.

ஆதார சத்தியம்

"ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்." (எபே. 5:1-2)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
ஏசாயா பழைய ஏற்பாட்டின் 23ஆவது புத்தகம் தீர்க்கதரிசனப் புத்தகத்தில் முதலாவது புத்தகம்		

மேசியாவின் வருகை

நாள் 179

ஆகாஸ்
11இராஜா 16:1-4; 11நாளா 28:1-4

பெக்காவின் வெற்றி
11நாளா 28:5-8

வருங்கால நம்பிக்கை
ஏசா 7:10-16

வருங்கால இராஜா
ஏசா 9:1-7

யூதாவுக்கு விரோதமான படையெடுப்பு
ஏசா 7:17-25; 8:5-22

வரப்போகும் சிட்சை
ஏசா 9:8-10:4

ஓபேதின் விண்ணப்பம்
11நாளா 28:9-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சமீப காலத்தில்தான் ஒரு குழந்தை பிறக்கு முன்பே அது ஆணா அல்லது பெண்ணா என்று கண்டுகொள்ளும் வழி கைகூடியுள்ளது. ஆனால் ஏசாயாவோ, கிறிஸ்து பிறப்பதற்கு நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் என்று தீர்க்கதரிசனமாகக் கூறினார். இப்படித் தவறே இல்லாத தீர்க்க தரிசனங்களைக் கொண்ட வேதாகமம் உண்மையைச் சரிவரக் கூறுகிறதா என்ற கவலை உனக்குள் தோன்ற வேண்டியதேயில்லை.

ஆதார சத்தியம்

"அதிக உறுதியான தீர்க்க தரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்." (11பேதுரு 1:19,21)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
ஏசாயா 52:13 முதல் 53:12 வரை இயேசுவின் தியாகமரணத்தை விபரிப்பதாக 53ஆம் அதிகாரத்தில் உள்ளவைகள் புதிய ஏற்பாட்டில் 85 தடவைகள் மேற்கொள்ளப்படுகிறது.	ஏசாயா தேவனுடைய இரட்சிப்பின் செய்தி தேவனுடைய மக்களை ஏனைய ஜாதியாருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. என்கிறார். ஏசாயா தேவனைக் குறித்து அதிகம் போதிக்கிறார்	ஏசாயா 53:6

நாள் 180 அசீரியாவின் வெற்றிகள்

சதித்திட்டம்
11இராஜா 16:5-6; ஏசா 7:1-2

இஸ்ரவேல் உடைபடப்போகுதல்
ஏசா 7:3-9

யூதாவுக்கு விரோதமான படையெடுப்பு
11நாளா 28:17-19

உண்மையான ஆராதனை
சங் 50:1-23

தமக்கு நியாயந் தீர்க்கப்பட வேண்டும்
ஏசா 8:1-4; 17:1-1

அசீரியா சீரியரைத் தோற்கடித்தல்
11நாளா 28:16,21; 11இராஜா 16:7-9

கிழக்குக் கோத்திரங்கள் நாடு கடத்தப்படல்
11இராஜா 15:29; 1நாளா 5:25-26

யூதாவுக்கு எச்சரிப்பு
ஏசா 1:2-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனையறியாத அசீரியா போன்ற தேசத்தை பயன்படுத்தியாவது, தேவன் தம்முடைய பிள்ளைகளைச் சுத்திகரித்து அதிகக் கனி தருமாறு சிட்சிக்கிறார். அந்த நோக்கத்தை நிறைவேற்ற யாவரையும் அவர் பயன்படுத்திக் கொள்வார். இந்த நிமிடத்தில், யாராவது கிறிஸ்தவரல்லாத ஒருவர் உன்னை நச்சரித்து, துன்புறுத்திக் கொண்டிருக்கிறாரா? ஆண்டவரிடம் 'ஏன்?' என்று கேள். ஒருவேளை உன்னைத் தமது சித்தத்தின்படியும் அழைத்த நோக்கத்தின்படியும் செய்ய வைக்கக் கூடிய ஒரே ஒரு வழி இதுவாகத்தானிருக்கலாம்.

ஆதார சத்தியம்

"அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." (1பேது. 1:7)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
மீகா பழைய ஏற்பாட்டில் 33 ஆவது தீர்க்கதரிசனப் புத்தகம் இது 11ஆவது புத்தகம்		

எசேக்கியாவின் தேவ பயம் நிறைந்த ஆட்சி நாள் 181

பாவம் நிறைந்த பட்டணம்
ஏசா 1:21-31

எருசலேம் கொள்ளையடிக்கப்படுதல்
11இராஜா 16:10-18;
11நாளா 28:20, 22-25

பெக்கா கொலை செய்யப்படல்
11இராஜா 15:31, 30;

ஓசெயா
11இராஜா 17:1-2

எசேக்கியா
11இராஜா 18:1-3;5-6; 11நாளா 29:1-2

தேவாலயம் மறு பிரதிஷ்டை செய்யப்பட்டு, சுத்திகரிக்கப்படல்
11நாளா 29:3-19

ஆலய ஆராதனை மீண்டும் ஆரம்பிக்கப்படுதல்
11நாளா 29:20-36

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவாலயம், ஆராதனைக்குத் தயாராக இருக்கிறதென்று கேள்விப்பட்டவுடனே, எசேக்கியா, காலதாமதமின்றி பரிகாரமாகப் பலிசெலுத்த ஆரம்பித்துவிட்டான். பலிபீடத்தில் பலி படைக்கப்பட்ட உடனே, லேவியர்கள் பாட ஆரம்பித்தனர். பாவத்திற்காக நீ படும் துக்கம், நாளடைவில், நீ ஆண்டவரைத் துதிப்பதையும் தடை செய்துவிடாதபடி, கவனமாகப் பார்த்துக்கொள்.

ஆதார சத்தியம்

"நாங்கள் உமது இரட்சிப்பினால் மகிழ்ந்து, எங்கள் தேவனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம்: உமது வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றுவாராக." (சங். 20:5)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
5ஆம் அதிகாரம் 2ஆம் வசனத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் மத்தேயு 2:5-6இல் தெளிவாக இரட்சகரின் பிறப்பைக் குறித்துக் காட்டுகின்றது.	மனந்திருந்துதலுக்கும் சமூகத்திற்குமான தேவனுடைய அழைப்பை மக்களுக்கு எடுத்துக் கூறுகிறார்.	மீகா 6:8

அரசர்களும் தீர்க்கதரிசிகளும்

கி.மு.	இஸ்ரவேல்	தீர்க்கதரிசிகள்	யூதா
945			
940	எரோபெயாம் I		ரெகோபெயாம்
930			அபியா
920	நாதாப் பாஷா		ஆசா
910			
900	ஏலா ஜிம்ரி		
890	ஓம்ரி		
880	ஆகாப்		யோசபாத்
870	அகசியா		
860	யோராம்	ஓபதியா	யோராம் அகசியா
850	ஜெஹு		அத்தலியா
840			யோவாஸ்
830	ஜெஹோஅஹாஸ்	ஜோயல்	
820			
810	ஜெஹோஹாஸ்		அமசியா
800	எரோபெயாம் II		
790			உசியா
780			
770		ஆமோஸ்	
760	சகரியா சல்லூம்	யோனா	
750	மனாகீம்	ஓசியா	
740	பெக்காயா பெக்கா	ஏசாயா மீகா	யோதாம்
730			ஆகாஸ்
720	ஓசேயா அசீரியர்களிடம் சமாரியாவின் வீழ்ச்சி கி.மு. 721		எசக்கியா
710			
700			
690			மனாசே
680			
670			
660			
650			
640			ஆமோன்
630		நாகூம்	யோசியா
620		செப்பனியா	
610		எரேமியா	
600		ஆபகூக்	யோவாகாஸ் யோயாக்கிம் யோயாக்கின்
590		புலம்பல்	சிதேக்கியா
580			எருசலேமின் வீழ்ச்சி கி.மு. 586 பாபிலோனுக்கு சிறைப்படுதல்

தீர்க்கதரிசிகள்	சேருமிடம்
ஏசாயா	தெற்கு
எரேமியா	தெற்கு
ஓசியா	வடக்கு
ஆமோஸ்	வடக்கு
மீகா	தெற்கு
செப்பனியா	தெற்கு
யோனா	நினிவே
ஓபதியா	ஏதோம்
நாகூம்	நினிவே
யோவேல்	தெற்கு
ஆபகூக்	தெற்கு
புலம்பல்	தெற்கு

பஸ்கா புதுப்பிக்கப்படல்

நாள் 182

ஒரு எச்சரிப்பு
ஏசா 28:1-6

யூதாவின் மீது வெறி கொண்ட தீர்க்கதரிசிகள்
ஏசா 28:7-13

சீயோனுக்கு ஒரு மூலைக்கல்
ஏசா 28:14-22

தேவனின் ஞானம்
ஏசா 28:23-29

விக்கிரக வணக்கத்துக்கு எதிரான எச்சரிப்பு
ஓசியா 5:1-7

யூதா இஸ்ரவேல் மீது வந்த தீர்ப்பு
ஓசி 5:8-15

மக்களின் உண்மையற்ற மனஸ்தாபம்
ஓசி 6:1-11

பஸ்காவுக்கு ஆயத்தங்கள்
11நாளா 30:1-12

பஸ்கா கொண்டாடப்படுதல்
11நாளா 30:13-22

இரண்டாவது கொண்டாட்டம்
11நாளா 30:23-27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நாம் ஒரு பொழுதும் பாவத்தை அலட்சியமாக எளிதானதாக நினைக்கக் கூடாது. பஸ்கா என்பது, தேவன் மனிதனது குற்றங்களையும், தவறுகளையும் பொருட்படுத்தாது. விட்டு விடுவதைக் குறிக்கிறது என்று எண்ணுபவர்கள் மிகவும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தேவன் பாவத்தைப் பொருட்படுத்தாமலிருப்பவரல்ல: அவர் பாவியையோ, பாவத்தையோ கூர்ந்து நோக்காமல், பாவத்திற்குப் பதிலாக செலுத்தப் பட்ட பலியின் மீதே தமது பார்வையைப் பதித்துக் கொள்ளுகிறார். மன்னிப்பு இலவசமே: ஆனால் அது ஒருபொழுதும் மலிவாகக் கிடைப்பதில்லை.

ஆதார சத்தியம்

"நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால், பாவங்களை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நிக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நிதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவா . 1:8,9)

	யாக்கோபு			
கி.மு. 1000 தாவீது	1ஆவது ஆலயம்	கி.மு. 900	ஒபதியா. யோவேல். யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

இதயத்திற்கு இதயம்

ஜீன்

மிகவும் நல்லது! முழு வேதாகமத்தினதும் அரைப்பங்கினை வாசித்து விட்டீர்கள். சிலர் போராட்டத்தோடு இதை நிறைவு செய்திருக்கலாம். தாமதத்தோடு இதைச் செய்திருக்கலாம். அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம். உங்களை நீங்களே தைரியப்படுத்திக் கொள்ளுங்கள் நீங்கள் இவ்வளவு தூரம் நிறைவு செய்ததைக் குறித்து மகிழ்ச்சியடையுங்கள். நீங்கள் தாமதித்திருந்தால் உங்களுடைய வழிபாட்டு நாளில் வாசியாத வைகளை வாசித்து நிறைவு செய்யுங்கள்.

7

இந்தப் பகுதியில் .....

ஆசீரியர் இஸ்ரவேலை வெற்றி கொள்ளல்.
எசேக்கியாவின் வாழ்வில் தேவனின் தலையிடு.
நம்பிக்கையும், வெற்றியும் நிறைந்த ஏசாயாவின் செய்தி.
புனரமைப்பிற்கான யோசியாவின் நிகழ்ச்சித் திட்டம்.
மனந்திரும்புதலுக்கான எரேமியாவின் வேண்டுதல்.

நாள் 183 எசேக்கியாவின் சீர்திருத்தங்கள்

ஒரு பண்டிகை கீதம்
சங் 81:1-16

விக்கிரகங்கள் அழிக்கப்படல்
11நாளா 31:1 , 11 இராஜா 18:4

எசேக்கியாவின் மற்ற சீர்திருத்தங்கள்
11நாளா 31:2-21

இஸ்ரவேலின் தலைவர்கள் வெளிப்படையாகக் கடிந்து கொள்ளப்படல்
மீகா 7:8-16

ஓசெயா சிறைப்படல்
11இராஜா 17:3-4

இஸ்ரவேலின் துன்மார்க்கம்
ஓசி 7:1-2

அரண்மனையில் சதித்திட்டம்
ஓசி 7:3-7

இஸ்ரவேலும் பிற தேசங்களும்
ஓசி 7:8-16; II நாளா 31:1-4

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

பஸ்கா ஆசரிப்பைத் தொடர்ந்து இஸ்ரவேலில் பெரிய அளவில் ஆவிக்குரிய சிர்திருத்தங்கள் நடைபெற்றன. எப்பொழுதுமே இருக்க வேண்டிய ஒழுங்கு இதுவே ஞாயிறு தோறும் கர்த்தரின் வீட்டில் நாம் பங்குகொள்ளும் ஜெபம், திருவிருந்து கேட்கும் அல்லது பகிர்ந்து கொள்ளும் கர்த்தரின் வார்த்தை ஆகிய காரியங்கள் தொடர்ந்து திங்கள், செவ்வாய் போன்ற வார நாட்களிலும், நமது சொந்த வீடுகளிலும் செயல்படுத்தப்பட வேண்டும்.

ஆதார சத்தியம்

"... அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப் படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்.". (பிலி. 2:12,13)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1000	
	தெபோரா, பாரக்		சாமுவேல்

இஸ்ரவேலின் தண்டனை

நாள் 184

கர்த்தர் இஸ்ரவேலை கடிந்து ஒதுக்குதல்
ஓசி 8:1-14

ஓசியாவின் அறிவிப்பு
ஓசி 9:1-9

இஸ்ரவேலின் பாவத்தின் விளைவு
ஓசி 9:10-14

கர்த்தரின் நியாயத் தீர்ப்பு
ஓசி 9:15-16

தீர்க்கதரிசி பேசுதல்
ஓசி 9:17;10:1-8

கர்த்தர் தீர்ப்பு கூறுதல்
ஓசி 10:9-15

தேவனின் அன்பு
ஓசி 11:1-11

இஸ்ரவேல் யூதா வெறுத்து ஒதுக்கப்படல்
ஓசி 11:12; 12:1-6

தொடர்ந்து தீர்ப்புகள் கூறப்படுதல்
ஓசி 12:7-14

இஸ்ரவேல் மீது வரும் இறுதி நியாயத் தீர்ப்பு
ஓசி 13:1-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தமது மக்களின் பாவத்திற்காகத் தேவன் தரும் தீர்ப்புகள் பழிவாங்குபவை அல்ல, மாறாக, சீர்திருத்தக் கூடியவை என்பதை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டியது மிக முக்கியமான காரியம். அவர் நமது பாவத்திற்காக, நமக்கு எதிராக அல்ல, நமக்காக, நமது பாவத்துக்கு எதிராக நிற்கிறார். இதை ஆழ்ந்து சிந்தித்துப் பார். இது நாள் முழுவதும் நமது உள்ளங்களில் பதித்து வைக்கத் தகுதியான ஒரு சிந்தனையாகும்.

ஆதார சத்தியம்

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5:8)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப், எலியா, எலிசா,யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 185 இஸ்ரவேல் சிறை பிடிக்கப்படுதல்

இஸ்ரவேலின் மீது இறுதித் தீர்ப்பு
ஓசி 13:9-16

ஓசியா பரிந்து பேசுதல்
ஓசி 14:1-5

இஸ்ரவேல் மீண்டும் விடுவிக்கப்படல்
ஓசி 14:1-3

சமாரியா முற்றுகையிடப்படல்
11இராஜா 17:6; 18:9

இஸ்ரவேல் சிறைப்பட்டுப் போகுதல்
11இராஜா 17:6; 18:10-11

இஸ்ரவேலின் வீழ்ச்சிக்குக் காரணங்கள்
11இராஜா 17:7-23; 18:12

இஸ்ரவேல் மீண்டும் விடுவிக்கப்பட ஜெபம்
சங் 80:1-19

ஆகாசின் மரணம்
11இராஜா 16:19-20, 11 நாளா 28:26-27

பாபிலோனின் வீழ்ச்சிக்கு குறித்த தரிசனம்
ஏசா 21:1-10

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தமது சொந்தப் பிள்ளைகளைத் தண்டிக்க, தேவன் எதற்காக தேவ நம்பிக்கையற்ற மனிதரையோ, தேசங்களையோ பயன்படுத்துகிறாரென்பது வாழ்க்கையில் புரிந்து கொள்ள முடியாத பெரிய புதிர்களில் ஒன்றாகும். ஒரு காரணம் யாதெனில், நாம் நமது இருதயங்களைச் சோதித்து ஆராய மறக்கும்போது, அவர் நமக்காக அந்தப் பணியைச் செய்ய வேண்டியதாகிறது. அவர் உபயோகிக்கும் 'பரிசோதனைக் குழு' நமக்கு விருப்பமில்லாதவர்களைக் கொண்டதாக அமையலாம்.

ஆதார சத்தியம்

"கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகின்ற எந்த மகனையும் தண்டிக்கிறார்..." (எபி 12:6)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 100	
	தெபோரா, பாரக்		சாமுவேல்

தேசங்கள் நியாயந் தீர்க்கப்படல்

நாள் 186

ஏதோமைப் பற்றி ஒரு செய்தி
ஏசா 21:11-12

அரேபியாவைப் பற்றி ஒரு செய்தி
ஏசா 21:13-17

பெலிஸ்தியர் மீது வரும் தீர்ப்பு
ஏசா 14:28-32

மோவாபின் மேல் வரும் தீர்ப்பு
ஏசா 15:1-9

மோவாபின் நம்பிக்கையற்ற நிலைமை
ஏசா 16:1-14

எசேக்கியா அசீரியனை எதிர்த்து நிற்குதல்
11இராஜா 18:7-8

அமலேக்கியர் சங்கரிக்கப்படுதல்
1நாளா 4:39-43

எத்தியோப்பியாவுக்கு எதிரான தீர்ப்பு
ஏசா 18:1-7

எகிப்துக்கு விரோதமான தீர்ப்பு
ஏசா 19:1-15

எகிப்து கர்த்தரை வணங்கும்
ஏசா 19:16-25

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் தெளிவாகத் தெரிகின்ற நியாயத் தீர்ப்பு என்ற பொருள், தற்கால கிறிஸ்தவ சிந்தனைகளில் அடிக்கடி இடம் பெறுவதேயில்லை. ஆயினும், இதைக் குறித்து நீங்கள் தவறிப் போக வேண்டாம். நியாயத் தீர்ப்பு வருவது நிச்சயம். யாரோ ஒருவர் கூறியது போன்று "தேசங்களை அவர்கள் பாவங்களுக்குத் தக்கதாகத் தேவன் நியாயந் தீர்க்காவிட்டால் நிச்சயமாக சோதோம், கொமாராவிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டிதாய் இருக்குமே?"

ஆதார சத்தியம்

"அவர் (கர்த்தர்) ... பூமியை நியாயந் தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந் தீர்ப்பார்."
(சங். 96:13)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	 கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப், எலியா. எலிசா.யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 187 அசீரியன் மீது வரும் அழிவு

எகிப்துக்கும் எத்தியோப்பியாவுக்கும் அடையாளங்கள்
ஏசா 20:1-6

தீருவுக்கு விரோதமான தீர்ப்பு
ஏசா 23:1-18

அசீரியாவுக்கு எதிரான தீர்ப்பு
ஏசா 10:24-27

படையெடுப்பவன் தாக்குதல்
ஏசா 10:28-34

அமைதலான, சமாதானம் நிறைந்த இராஜ்ஜியம்
ஏசா 11:1-9

அசீரியா, தேவனின் கருவி
ஏசா 10:5-19

இஸ்ரவேலில் மீதியானவர்கள் இரட்சிக்கப்படுதல்
ஏசா 10:20-23

நாடு கடத்தப்பட்டவர்கள் மீண்டும் வருவார்கள்
ஏசா 11:10-16

நன்றியறிதலின் கீதம்
ஏசா 12:1-6

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் தமது பிள்ளைகளை துன்பத்துக்குள் கடந்து செல்ல அனுமதிக்கும் போது, அவர்களைத் தாழ்த்தவும் அவர்கள் பாவங்களை உணர்த்தவுமே அவ்வாறு செய்கிறாரென்பதை நாம் மறந்து விடக் கூடாது. தேவனின் நியாயத் தீர்ப்புகளின் முடிவான நோக்கம் அவரது மக்களைப் பொறுத்தவரையில், அவர்களது பாவங்களை விலக்குவதேயாகும். நம்மைச் சரியாக நிறுத்துவதற்காகவே அவர் நம்மை தள்ளாடித் தவிக்க விடுகின்றார்.

ஆதார சத்தியம்

"நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீறாப்பும் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்." (ஏசா 2:11)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1000	
	தெபோரா, பாரக்		சாமுவேல்

கர்த்தரின் தீர்ப்புகள்

நாள் 188

பாபிலோன் மீது தேவனின் தீர்ப்பு
ஏசா 13:1-16

சிறையிலிருந்து திரும்புதல்
ஏசா 14:1-3

பாபிலோன் மன்னனின் வீழ்ச்சி
ஏசா 14:4-11, 18-21

தேவன் பாபிலோனை அழிப்பார்
ஏசா 14:22-23

தேவன் அசீரியரை அழிப்பார்
ஏசா 14:24-27

உலகத்தின் மீது வரும் தீர்ப்பு
ஏசா 24:1-23

ஒரு துதியின் கீதம்
ஏசா 25:1-5

தேவன் ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணுதல்
ஏசா 25:6-9

தேவன் மோவாபைத் தண்டிப்பார்
ஏசா 25:10-12

தேவனின் வெற்றி பெற்ற மக்கள்
ஏசா 26:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

மேலும், மேலும் நியாயத் தீர்ப்புகள். தேவன் எப்பொழுதுதான் நிறுத்துவார்? மக்கள் தங்கள் பாவங்களை விட்டு விலகி, நீதியின் பாதையில் செல்லும் போதுதான் என்பதே நிச்சயமான விடையாகும். பாவத்தை விட்டு விலகி, தெய்வீகக் கட்டளைக்குக் கீழ்ப்படிபவர்கள், ஒரு உற்சாக மளிக்கும் சத்தியத்தைக் கண்டு கொள்வார்கள் சர்வ வல்லவர் நியாயத் தீர்ப்பு செய்வதில் எவ்வளவு பெரியவரோ, அதே அளவு இரக்கத்திலும் பெரியவர்.

ஆதார சத்தியம்

"... நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லோரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் " (லூக் 13:3)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப். எலியா. எலிசா.யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

தேவனின் வெற்றியுள்ள மக்கள்
ஏசா 26:12-19

நியாயத் தீர்ப்பும், மீண்டும் நிலை நிறுத்தப்படுதலும்
ஏசா 26:20-21; 27:1-13

வரப்போகும் முற்றுகை
ஏசா 22:1-14

தேவன் தனது எதிரிகளைத் தண்டிப்பார்
ஏசா 34:1-17

கிடைக்கப் போகும் வெற்றி
ஏசா 35:1-10

எசேக்கியா பெற்ற தெய்வீகசுகம்
11இராஜா 20:1-11

எசேக்கியாவின் பெருமை
11நாளா 32:24-26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் வழி பரிசுத்த வழியென்பதை ஒரு நாளும் மறந்து விடாதே. பரிசுத்தத்தின் ஆழ்ந்த அர்த்தம் 'ஆரோக்கியம்' என்று உனக்குத் தெரியுமா? ஒரு வேளை இதுவே உனது ஆவிக்குரிய ஆரோக்கியத்தை தணிக்கை செய்யும் நல்ல தருணம். நாம் பரிசுத்தத்தை இழக்கும் போது ஆரோக்கியத்தையும் இழக்கிறோம். இந்த வினாடியில், நீ எந்த அளவுக்கு ஆரோக்கியமுள்ள நிலையிலிருக்கிறாய்?

ஆதார சத்தியம்

"ஆதலால் நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தராயிருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்." (லேலி. 20:7)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1000	
	தெபோரா, பாரக்		சாமுவேல்

ஒப்புவமையியில்லாத தேவன்

நாள் 190

எசேக்கியாவின் நோயும் குணமாகுதலும்
ஏசா 38:1-8, 21-22

எசேக்கியா நன்றியுள்ளவனாயிருத்தல்
ஏசா 38:9-20

நம்பிக்கையின் வார்த்தைகள்
ஏசா 40:1-9

தேவனின் கரிசனையும் பாதுகாப்பும்
ஏசா 40:10-11

இஸ்ரவேலின் இணையில்லாத தேவன்
ஏசா 40:12-26

தேவன் தமது மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையளித்தல்
ஏசா 40:27-31

இஸ்ரவேலருக்குத் தேவனின் வாக்குறுதி
ஏசா 41:1-20

கர்த்தரின் சவால்
ஏசா 41:21-29

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நாம் தேவனை எவ்வாறு காண்கிறோமோ அதைப் பொறுத்துத்தான் நமது ஆவிக்குரிய முன்னேற்றம் இருக்குமென்ற உண்மையை சிந்தித்துப் பார்ப்பது நலம். இருதயங்களில் அவரை அரைகுறையாகவோ, எல்லைக்குட்பட்ட விதத்திலோ சித்தரித்துக் கொண்டிருந்தோமானால், அது நமது வாழ்க்கையிலும் பிரதிபலிக்கும். நாம் அவரிடம் கேட்கும் காரியங்களையும் பாதிக்கும். ஏசாயா தேவனை வல்லமையுள்ளவராக அல்ல, சர்வ வல்லமையுள்ளவராகக் கண்டான். நீ அப்படிக் காண்கிறாயா?

ஆதார சத்தியம்

"ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது: பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது." (கொலோ. 1:16)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப், எலியா. எலிசா.யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 191 இஸ்ரவேல் - தேவனின் சாட்சி

தேவனின் பணிவிடைக்காரன்
ஏசா 42:1-9

ஒரு துதியின் பாடல்
ஏசா 42:10-13

தேவன் தனது உதவியை வாக்களிக்கிறார்
ஏசா 42:14-17

இஸ்ரவேல் கற்றுக் கொள்ளத் தவறுதல்
ஏசா 42:18-25

தேவனின் வாக்குப் பண்ணப்பட்ட விடுதலை
ஏசா 43:1-7

இஸ்ரவேல் தேவனின் சாட்சி
ஏசா 43:8-13

பாபிலோனிலிருந்து தப்பித்தல்
ஏசா 43:14-21

இஸ்ரவேலின் பாவம்
ஏசா 43:22-28

ஒரே தேவன்
ஏசா 44:1-8

விக்கிரக வணக்கம் பரியாசம் பண்ணப்படுதல்
ஏசா 44:9-20

சிருஷ்டிகரும் இரட்சகரும்
ஏசா 44:21-27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

காலா காலமாக, தேவன் தமது கிருஷ்டிப்பில், தனது நாமத்துக்குக் கனமும் புகழும் கொண்டு வரக்கூடிய சாட்சி ஒன்றைத் தேடுவதுண்டு. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவரது முக்கியமான சாட்சி இஸ்ரவேலரே. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அவரது கனத்துக்கும் புகழுக்கும் முக்கியமான சாட்சி அவரது சபையே. இஸ்ரவேல் சாட்சியாக இருப்பதில் பரிதாபமாகத் தோல்வியடைந்தது. நாம் (சபையாக) எப்படி இருக்கிறோம்?

ஆதார சத்தியம்

"பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:8)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப், எலியா, எலிசா,யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

ஏசாயாவின் புறஜாதி தேசங்கள் குறித்த தீர்க்க தரிசனங்கள்



நாள் 192 எல்லோருக்கும் மேலான கர்த்தர்

கோரேஸ், தேரிந்து கொள்ளப்பட்ட பாத்திரம்
ஏசா 45:1-8

சிருஷ்டிக்கும் சரித்திரத்துக்கும் கர்த்தர்
ஏசா 45:9-17, 19

எல்லோருக்கும் மேலான கர்த்தர்
ஏசா 45:20-25

பாபிலோனிலிருந்து விடுதலை
ஏசா 46:1-13

பாபிலோன் மீது நியாயத் தீர்ப்பு
ஏசா 47:1-15

தேவன் வருங்காலத்துக்கும் தேவன்
ஏசா 48:1-11

கோரேஸ் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தலைவர்
ஏசா 48:12-16

தமது ஜனங்களுக்குரிய கர்த்தரின் திட்டம்
ஏசா 48:17-22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சரித்திரம் என்பது, ஒருவர் கூறியது போல் கர்த்தரின் வரலாறுதான் (His/Story) மனிதர் புரிந்து கொள்ளாவிட்டாலும், தெய்வீகக் கரத்தினால்தான் இடை கட்டப்பட்டு, வழிநடத்தப் படுகிறார்கள். ஆகவே இதை நினைவில் வைத்துக் கொள். ஒவ்வொரு தேசத்துக்கும் பின்னால் ஒரு தலைவருண்டு; ஒவ்வொரு தலைவரின் பின்னாகவும் கர்த்தர் உண்டு. மனிதனல்ல. கர்த்தரே தேசங்களுக்குரிய இறுதி முடிவுகளை எடுக்கிறவர். ஆம், கர்த்தர் நமது கர்த்தரே ஆளுகிறவர்.

ஆதார சத்தியம்

"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது." (ரோமர். 13:14)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	தெபோரா, பாரக்		சாமுவேல்

எருசலேமின் மறுவாழ்வு

நாள் 193

இஸ்ரவேல் தேசங்களுக்கு ஒரு ஒளி
ஏசா 49:1-7

எருசலேமின் மறுவாழ்வு
ஏசா 49:8-26 ஏசா 50:1-3

கர்த்தருடைய ஊழியக்காரனுக்குக் கீழ்ப் படிதல்
ஏசா 50:4-11

உண்மையானவர்கள் உற்சாகப் படுதல்
ஏசா 51:1-16

எருசலேமின் துன்பங்களுக்கு முடிவு
ஏசா 51:17-23

தேவன் எருசலேமைக் காப்பாற்றுவார்
ஏசா 52:1-12

துன்பப்படும் ஊழியக்காரன்
ஏசா 52:13-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனுடைய பிள்ளைகள் மனஸ்தாபப்பட்டு தங்கள் பாவங்களை அறிக்கை செய்த உடனேயே, மறுமலர்ச்சியும், புதுவாழ்வும் தானாகப் பின்தொடருகின்றன. உலகெங்கிலுமுள்ள அவருடைய பிள்ளைகள் இவ்வித மாகவே மனஸ்தாபத்துடன் பாவ அறிக்கை செய்து அவரது முகத்தைக் கருத்தாகத் தேடினால் என்ன நடக்குமென்று சற்றுக் கற்பனை செய்து பாருங்கள் அப்பொழுது அவருடைய சபையின் மூலமாகப் பாய்ந்து வரும் மகிமையும் வல்லமையும் எருசலேமின் சுகவாழ்வை விட எத்தனையோ மடங்கு அதிகமாக இருக்கும். எருசலேமுக்கு எற்பட்ட வாழ்வு ஒன்றுமில்லை என்று கூறக்கூடிய அளவுக்கு சபை மூலம் கர்த்தரின் மகிமையும் வல்லமையும் விளங்கும்.

ஆதார சத்தியம்

"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன். " (11 நாளா. 7:14)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப், எலியா, எலிசா,யூதா கி.மு. 800	ஊசியா, வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 194 கர்த்தருடைய பிள்ளைகள் தேற்றப்படுதல்

பாவங்களைச் சுமக்கும் கிறிஸ்து
ஏசா 53:1-12

கர்த்தரின் முடிவற்ற அன்பு
ஏசா 54:1-10

வருங்கால எருசலேம்
ஏசா 54:11-17

தேவன் இரக்கம் தர முன்வருதல்
ஏசா 55:1-13

உலகம் தழுவிய கர்த்தரின் அழைப்பு
ஏசா 56:1-8

இஸ்ரவேலின் தலைவர்கள் கடிந்து கொள்ளப்படுதல்
ஏசா 56:9-12

இஸ்ரவேலின் விக்கிரக வணக்கம் கடிந்து கொள்ளப்படுதல்
ஏசா 57:1-13

உதவியும், ஆரோக்கியமும் தருவதாகக் கர்த்தரின் வாக்குறுதி
ஏசா 57:14-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தின் தலை சிறந்த வசனம் என்று அழைக்கப்பட்டுள்ள ஏசாயா 53:5ஆம் வசனத்தை இன்று ஆழமாகச் சிந்தனையில் இருத்திக் கொள். ஆயினும் விசுவாசத்தினால் இதை உனக்குச் சொந்தமாக்கிக் கொண்டால் தான், இந்த வசனம் உனக்கு அர்த்தமுள்ளதாகத் தோன்றும் அவர் என்னுடைய மீறுதல்களுக்காகக் காயப்பட்டார். என்னுடைய பாவங்களுக்காக காயப்பட்டார் என்று உன்னால் கூறமுடியுமா? இதுவரை இதை உனக்கு சொந்தமாக்கிக் கொள்ளாதிருந்தால் இன்றே இப்பொழுதே கர்த்தராகிய இயேசுவை உன் இருதயத்தில் ஏற்றுக் கொள்.

ஆதார சத்தியம்

"ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக, நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒரு தரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்தில் கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்." (1 பேது. 3:18)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1000	
	தெபோரா, பாரக்		சாமுவேல்

எருசலேமின் வருங்கால மேன்மை

நாள் 195

உண்மையான ஆராதனை
ஏசா 58:1-12

ஓய்வு நாளை கைக் கொள்வதன் பயன்கள்
ஏசா 58:3-14

மக்களின் பாவங்கள் தீர்ப்பு பெறுதல்
ஏசா 59:1-8

மக்களின் பாவ அறிக்கை
ஏசா 59:9-15

கிறிஸ்துவின் வருகை
ஏசா 59:16:21

எருசலேமின் வருங்கால மகிமை
ஏசா 60:1-5

தேவனின் மக்களை எல்லாத் தேசங்களும் கனம் பண்ணுதல்
ஏசா 60:6-9

தேவனின் இரக்கமும் தயவும்
ஏசா 60:10-22

விடுதலையின் நற்செய்தி
ஏசா 61:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் பிள்ளைகள் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு அவரண்டை வருங்காலம் உண்மையிலேயே பிரகாசமாக இருக்கும் இந்த உண்மை இயற்கையான எருசலேமைச் சேர்ந்த யூதருக்கு மட்டுமல்ல ஆவிக்குரிய எருசலேமாகிய அவரது சபையின் பிள்ளைகளுக்கும் பொருந்தும். தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தி மனஸ்தாபப்படுவதே எல்லா மக்களுக்கும் நித்திய மகிழ்ச்சியைத் திறந்து கொடுக்கும் திறவு கோல் ஆகும்.

ஆதார சத்தியம்

"ஆனபடியினாலே கர்த்தருடைய சந்திதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், ... உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்." (அப்.3:19,20)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	கி.மு. 900 யெரோபெயாம்	ஆகாப். எலியா. எலிசா.யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 196 கர்த்தருடைய இரக்கம்

தேவனின் பாரமரிப்பு
ஏசா 62:1-5

உண்மையுள்ள காவற்காரன்
ஏசா 62:6-9

இரட்சிப்பின் அறிவிப்பு
ஏசா 62:10-12

கிறிஸ்துவின் வெற்றி
ஏசா 63:1-6

இஸ்ரவேலுக்கு அவரது இரக்கம்
ஏசா 63:7-14

விண்ணப்பத்தின் மன்றாட்டு ஜெபம்
ஏசா 63:15-19, 64:1-5

ஒரு பாவ அறிக்கை
ஏசா 64:6-12

புற ஜாதியாரை அழைத்தல்
ஏசா 65:1-7

மீதியானவர்கள் காக்கப்படுதல்
ஏசா 65:8-10

துன்மார்க்கர் மேல் வரும் தீர்ப்பு
ஏசா 65:11-16

புதிய எருசலேம்
ஏசா 65:17-25

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உனது ஆவிக்குரிய ஜீரண மண்டலத்தை தூண்டி விடக்கூடிய ஒரு முன்றடுக்கு உண்மை இதோ! இன்று ஒவ்வொரு ஓய்வு நேரத்திலும் இதை சிந்தித்துப் பார். எருசலேமின் ஒளியாகிய மேசியா வரும்போது (60:1) உலக தேசங்களுக்கு நீதி வெளிப்படும் (62:1) எருசலேம் 'பூமியிலே புகழ்ச்சியாக' இருக்கும். (62:7)

ஆதார சத்தியம்

"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது." (மத் 5:14)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1000	
	தெபோரா. பாரக்		சாமுவேல்

மீகாவின் தீர்க்கதரிசனங்கள்

நாள் 197

பழிவாங்குவதாகப் பயமுறுத்தல்
ஏசா 66:1-4

எருசலேமின் வருங்கால மகிமை
ஏசா 66:5-14

தேவனை நம்பாதவர்களின் இறுதி அழிவு
ஏசா 66:15-24

ஆயிரம் வருஷ அரசாட்சி
மீகா 4:1-8

இஸ்ரவேலின் இறுதி வெற்றி
மீகா 4:9-13

கிறிஸ்துவின் பிறப்பு முன்னறிவிக்கப்படுதல்
மீகா 5:1-6

விடுதலையும் தண்டனையும்
மீகா 5:7-15

இஸ்ரவேலுடன் கர்த்தரின் வாக்குவாதம்
மீகா 6:1-5

தேவனுக்குத் தேவையான கடமைகள்
மீகா 6:6-8

இஸ்ரவேலின் துன்மார்க்கம்
மீகா 6:9-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் தங்கள் மேசியாவின் வருகைக்காக ஆவலுடன் காத்தி ருந்து வாழ்ந்தார்கள். நீ வருகைக்காகக் காத்திருக்கிறாயா? நாம் எவ்வளவுக்கு அதிகமாக அவரது வருகையை வாஞ்சிக்கிறோமோ அவ்வளவுக்கு அதிகமாக அவரது பிரசன்னத்தை நமது வாழ்வில் இப்பொழுது பெற்றுக் கொள் வோம். வாஞ்சை தானாக பிரசன்னத்தைப் பிறப்பிக்கும்.

ஆதார சத்தியம்

"இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன். என்கிறார். ஆமென் கர்த்தராகிய இயேசுவே. வாரும்" (வெளி. 22:20)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப். எலியா. எலிசா.யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 198 எருசலேம் பயமுறுத்தப்படுதல்

இஸ்ரவேலின் நேர்மையற்ற நடத்தைகள்
மீகா 7:1-7

கர்த்தர் இரட்சிப்பு கொண்டு வருதல்
மீகா 7:8-13

கர்த்தரின் மனதுருக்கம்
மீகா 7:14-20

சனெகரிப்பும் எசேக்கியாவும்
11நாளா 32:1; ஏசா 36:1;
11 இராஜா 18:13-16

எருசலேமின் தற்பாதுகாப்புக்கு ஆயத்தம்
11நாளா 32:2-8

சனெகரிப் எருசலேமைப் பயமுறுத்தல்
11இராஜா 18:17-26; 11 நாளா 32:9-14; ஏசா 36:2-11

ரப்சாக்கேயின் மரியாதையற்ற எதிர்ப்புப் பேச்சு
11இராஜா 18:27-35 11நாளா 32:15-16, 18-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலின் சரித்திரம் ஒரு தொடர்ச்சியான மேல், கீழ் அனுபவங்கள். ஒரு நாளில் மனஸ்தாபம் மறுநாளோ பிடிவாதமாக எதிர்த்து நிற்குதல்; ஆயினும் தேவன் அவர்கள் மீது வைத்திருந்த அபரீதமான அன்பு அவர்களை ஒருபோதும் விட்டு விடவில்லை. அவரது அன்பின் விளைவாகத்தான் கட்டுப்பாடும் ஒழுங்கும் கொண்டு வருகிறாரே தவிர, கட்டுப்பாட்டும் ஒழுங்கும் செலுத்துவதற்காக அவர் அன்பு காண்பிக்கவில்லை. இதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆதார சத்தியம்

"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்." (யூதா. 21)

	ரூத்	கிதியோன்	சிம்சோன்
கி.மு. 1300	கி.மு. 1200	கி.மு. 1000	
	தெபோரா. பாரக்		சாமுவேல்

இஸ்ரவேல் உதவி நாடுதல் நாள் 199

ரப்சாக்கேயின் வெளிப்படையான எதிர்ப்புப் பேச்சு
ஏசா 36:12-20

எருசலேமின் முற்றுகை முன்னறிவிக்கப்படல்
ஏசா 29:1-8

யூதர்களின் மாய்மாலம்
ஏசா 29:9-16

எதிர்கால ஆசீர்வாதங்கள்
ஏசா 29:17-24

யூதர்கள் கண்டிக்கப்படல்
ஏசா 30:1-7

கீழ்ப்படியாத மக்கள்
ஏசா 30:8-17

தேவனின் இரக்கங்கள்
ஏசா 30:18-26

அசீரியரின் இறுதி அழிவு
ஏசா 30:27-33

உதவி கேட்டுப் போவதின் மதியீனம்
ஏசா 31:1-3

எருசலேமுக்கு தேவனின் பராமரிப்பு
ஏசா 31:4-9

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

யூதாவின் தலைவர்கள், தங்களைக் குழந்தைகள் போல் பாவித்து ஏசாயா போதித்ததைக் குறித்து வெறுப்படைந்தார்கள். "கற்பனையின் மேல் கற்பனையும், பிரமாணத்தின் மேல் பிரமாணமும்..." (ஏசா 28:9-11) என்று கூறி அவனது எச்சரிப்புக்களை முற்றிலும் புறக்கணித்தார்கள். அதற்குப் பதிலாக அவர்களது அசீரிய எதிரிகளின் பலமான சத்தத்தை அவர்கள் கேட்க வேண்டியிருந்தது. ஆவியனவரின் மென்மையான கண்டிப்புகளை அசட்டை செய்வதைக் குறித்து எச்சரிக்கையாயிரு. அப்படிச் செய்தால் சூழ்நிலைகளின் பலத்த சத்தங்களுக்குச் செவி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஆதார சத்தியம்

"வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்கள், உங்கள் பிதாக்களைப் போல நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்." (அப்.7:51)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப். எலியா. எலிசா.யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

இஸ்ரவேலின் காலநிலைகள்



எசேக்கியா ஆலோசனை கேட்டல் நாள் 200

சமாதான காலம்
ஏசா 32:1-8

துன்ப காலம்
ஏசா 32:9-14

ஆசீர்வாத காலம்
ஏசா 32:15-20

உதவி கேட்டு ஜெபம்
ஏசா 33:1-9

கர்த்தரின் எச்சரிப்பு
ஏசா 33:10-16

மகிமையான வருங்காலம்
ஏசா 33:17-24

எசேக்கியா தன்னைத் தாழ்த்துகிறான்
11இராஜா 18:36-37; 19:1;
ஏசா 36:21-22; 37:1

எசேக்கியா, ஏசாவைக் கலந்தாலோசித்தல்
11இராஜா 19:2-7;
ஏசா 37:2-7

பாதுகாப்புக்காக ஜெபம்
சங் 44:1-26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ரப்சாக்கேயின் துணிகரமான தேவ நிந்தனையினால் மனம் நொந்து போன வேளையில் தனது மனப்பாரத்தை தேவனின் ஊழியக்காரனான ஏசாயாவுடன் பகிர்ந்து கொள்ளக் கூடிய நிலையிலிருந்து எசேக்கியாவுக்கு எவ்வளவு ஆறுதலளித்திருக்கும். நீ நம்பிக்கை வைக்கக் கூடிய ஒரு ஜெப வீரர் துணை உனக்கு உண்டா? அப்படியில்லாவிடில் இன்றே கர்த்தரிடம் அதைக் கேள்.

ஆதார சத்தியம்

"ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்." (மத் 18:20)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன் 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப். எலியா. எலிசா.யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 201 எசேக்கியாவின் ஜெபம் கேட்கப்படுதல்

சனெகரிப்பின் கடிதங்கள்
11நாளா 32:7

அவன் தேவனை நிந்தித்தல்
11இராஜா 19:8-13; ஏசா 37:8-13

எசேக்கியாவின் ஜெபம்
11நாளா 32:20; 11 இராஜா 19:14-19, ஏசா 37:14-20

சங்கீதக்காரனின் சோதனை
சங் 73:1-14

அவன் வெற்றி பெற்ற விதம்
சங் 73:15-20

அவன் நன்மை பெற்ற விதம்
சங் 73:21-28

எசேக்கியாவுக்கு ஏசாயாவின் மறுமொழி
11இராஜா 19:20-34; ஏசா 37:21-35

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஏசாயா மூலமாக, எசேக்கியா தேவனிடம் மன்றாடிய மன்றாட்டு கேட்கப்பட்டது. மாத்திர மல்ல அதற்கு உத்தரவும் அருளப்பட்டது. தேவன் கேட்டது மட்டுமல்ல மறு உத்தரவும் அருளினார். சிலர், ஜெபமென்றால ஆண்டவரிடம் பேசுவது மட்டுமென எண்ணுகிறார்கள். ஆனால் அது அதைவிடக் கூடுதலான காரியம் ஜெபம் என்பது சம்பாசணை. நீ தேவனிடமும் அவர் உன்னிடமும் பேசுவதே ஜெபம். உன் ஜெப வாழ்க்கை அவ்வாறு அமைந்துள்ளதா?

ஆதார சத்தியம்

"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." (யாக் 4:8)

கி.மு. 1300	ரூத்	கிதியோன்	சிம்சோன்
	தெபோரா, பாரக்		சாமுவேல்

எசேக்கியாவின் இறுதி நாட்கள்

நாள் 202

அசீரியப்படை அழிக்கப்படல்
11 இராஜா 19:35-36; 11 நாளா 32:21-22; ஏசா 37:36-37

தேவனின் நியாயாதிபதி
சங் 75:1-10

தேவன், வெற்றி வீரர்
சங் 76:1-12

எசேக்கியாவின் செழிப்பு
11 நாளா 32:23, 27-30; 11 நாளா 20:20

பாபிலோனிய ஸ்தானாதிபதிகள்
11 இராஜா 20:12-19; ஏசா 39:1-8; 11 நாளா 32:31

எசேக்கியாவின் மரணம்
11 இராஜா 20:21; 11 நாளா 32:32-33

அசீரியர் சமாரியாவில் குடியேறுதல்
11 இராஜா 17:24-41

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் கிருபையாக, எசேக்கியாவின் ஆயுசு நாட்களை 15 ஆண்டுகள் கூட்டிக் கொடுத்தார். அவனோ வருந்தத்தக்க விதத்தில் அந்த நாட்களை ஆண்டவரை மகிமைப்படுத்துவதை விடத் தன் சொந்த சுயநலமான முயற்சிகளுக்காகவே பயன்படுத்தினான். தெய்வீக தயவு இவ்விதமாகத் தன்னலமான காரியங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்தப்படுவது எவ்வளவு வருந்தத்தக்க காரியம்

ஆதார சத்தியம்

"நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக் 4:3)

	யாக்கோபு			
சவுல் கி.மு. 1000 தாவீது	சாலமோன 1ஆவது ஆலயம்	கி.மு. 900 பொரோபெயாம்	ஆகாப். எலியா. எலிசா.யூதா கி.மு. 800	ஊசியா. வீழ்ச்சி கி.மு. 1400 எரிகோ

நாள் 203 மனாசே தேவனிடம் திரும்புதல்

மனாசேயின் பாவ வழிகள்
11இராஜா 21:1-9; 11 நாளா 33:1-9

தேவனின் வெறுப்பு
11 இராஜா 21:10-15; 11 நாளா 33:10

செப்னாவுக்கு எச்சரிப்பு
ஏசா 22:15-25

சனகெரிப்பின் மரணம்
11 இராஜா 19:37; ஏசா 37:38

மனாசேயின் பாவமும் மனஸ்தாபமும்
11 இராஜா 21:16; 11 நாளா 33:11-13

அவனது சீர்திருத்தங்கள்
11 நாளா 33:14-17

அவனது மரணம்
11 இராஜா 21:17-18; 11நாளா 33:18-20

ஆமோனின் தீய வாழ்க்கையும் மரணமும்
11 இராஜா 21:19-22; 11 நாளா 33:21-23; 11இராஜா 21:25; 23-26 11நாளா 33:24

யோசியா இராஜாவாகுதல்
11இராஜா 21:24; 11நாளா 33:25

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உலகத்தில் வாழ்ந்தவர்களில் மிக மோசமான துன்மார்க்கரில் இருவர் மனாசேயும் ஆமோனும் தேவன் ஏன் இப்படிப்பட்ட துன்மார்க்கரை தமது பிள்ளைகளின் மீது அதிகாரம் செலுத்த அனுமதித்தாரென்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. ஆனால் ஒரு காரியம் மட்டும் நிச்சயம். தேவனின் வழிகளில் நடக்க மறுப்பவர்கள் இறுதியில் அழிந்து மடிந்து போவார்கள்.

ஆதார சத்தியம்

"ஆகையால் துன்மார்க்கர் நியாயத் தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலை நிற்பதில்லை கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்." (சங். 1:5, 6)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

நினிவேயின் வீழ்ச்சி

நாள் 204

யோசியாவின் தெய்வீக நடத்தை
11நாளா 34:1-2; 11 இராஜா 22:1-2; 23:25

தேவனின் வல்லமையும் நீதியும்
நாகூம் 1:1-8

அசீரியர் தோல்வியடைதல்
நாகூம் 1:9-15

நினிவேயின் அழிவு முன்னறிவிக்கப்படல்
நாகூம் 2:1-10

அதன் காரணம்
நாகூம் 2:11-13

நினிவேயின் வீழ்ச்சி
நாகூம் 3:1-19

யோசியாவின் முந்திய சீர்திருத்தங்கள்
11 நாளா 34:3-7

எரேமியாவின் அழைப்பும் ஆதி தரிசனமும்
ஏரே 1:1-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு தேசம் தேவனால் நியாயத் தீர்க்கப்படும் பொழுது எவ்வளவு வலிமை வாய்ந்த படைகளும் அதன்முன் பலனற்றுப் போகும். ஒரு நாளில் கர்த்தர் இவ்வுலக நாடுகளனைத்தையும் அவரது கட்டளைக்குக் கீழ்ப்படியாதது குறித்து நியாயத் தீர்ப்பது நிச்சயமென்ற எண்ணம் நமக்கு மன அமைதியைத் தருகிறது. அவ்வாறு அவர் செய்யும் பொழுது அவரது உக்கிரத்துக்கு எதிராக நிற்க முடியாமல் எவ்வளவு வலிமை வாய்ந்த அணு ஆயுத பாதுகாப்புத் திட்டமும் வலிமையிழந்து போகும்.

ஆதார சத்தியம்

"உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத் தீர்ப்புக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்." (1பேது. 4:5)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ், சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 205 எரேமியாவின் முதல் செய்தி

இஸ்ரவேலர் தேவன் மீது கொண்ட அன்பு *எரே 2:1-3*	அவர்களது தவறான நம்பிக்கை *எரே 2:29-37*
இஸ்ரவேல் தலைவர்களின் பாவங்கள் *எரே 2:4-8*	மனந்திரும்பத் தூண்டும் செய்திகள் *எரே 3:1-5*
கர்த்தரின் கெஞ்சுதல் *எரே 2:9-13*	வரப்போகும் நி யாயத் தீர்ப்பு *செப்னியா 1:1-18*
உண்மையில்லாததின் விளைவுகள் *எரே 2:14-19*	மனந்திரும்பக் கெஞ்சி அழைத்தல் *செப் 2:1-3*
யூதாவின் பாவங்கள் *எரே 2:20-28*	தேசங்களுக்கு எதிரான தீர்ப்பு *செப் 2:4-15*

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"எனக்குச் செய்ய வேண்டுமென்று தோக்றினால் தான் செய்வேன்." தூரதிருஷ்டவசமாக, இந்தக் கொள்கையை அநேக கிறிஸ்தவர்கள் தேவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் விஷயத்தில் கடைபிடிக்கிறார்கள் இப்படி எரேமியா செய்தி ருந்தால் பழைய ஏற்பாட்டு சரித்திரத்தின் ஒரு பகுதியே வேறுவிதமாக மாறியிருந்திருக்கும் நீயும் தேவன் சொன்னார். ஆனால் எனக்கு அதைச் செய்ய வேண்டும் என்று தோன்றவில்லை! என்ற யுத்தத்தில் ஈடுபட்டுள்ளாயா? அப்படியானால் இப்பொழுதே தேவன் கேட்பதை உனக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற உணர்வு எழுந்தாலும் எழாவிட்டாலும் செய்வேன் என்று தீர்மானம் எடுத்துக் கொள்.

ஆதார சத்தியம்

"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

ஏரேமியாவின் தீர்க்க தரிசனங்கள்

01. எருசலேமின் வீழ்ச்சி

(1:14-16, 4:5-9, 5:15-17, 6:1-6, 32:2-3, 38:17-18)

02. ஆலயம் அழிக்கப்படுதல் (7:11-15; 26:6-9)

03. எகிப்திலே இராஜஸ்தானத்திலிருந்து நீக்கப்பட யோவகாசின் மரணம்

(2 நாளா 36:1,2; 2 இரா 23:31, 32; எரே 22:10-12)

04. புலம்புவாரில்லாமல் மரித்த யோயாக்கீம் இராஜா (36:27-30)

05. இராஜா பரம்பரை யோயாக்கீம் இராஜா வோடு துண்டிக்கப்படுதல் (22:24-30)

06. பாபிலோனில் வாழ்ந்த மூவரில் இரண்டு கள்ளத் தீர்க்கதரிசிகளின் மரணமும் மற்றவர்களுக்கு வந்த தண்டணையும் (29:20-32)

07. எருசலேமிலிருந்து வந்த கள்ளத் தீர்க்கத ரிசியின் மரணம் (28:13-17)

08. எரேமியாவின் நண்பன் செராயா சிறைப் பட்டு நாடு கடத்தப்படுதல் (51:61-64)

09. பாபிலோனுக்கு எதிராக உருவான எகிப்திய யூதேயா கூட்டணியின் தோல்வி (37:5-10)

10. எகிப்தியபடை பாபிலோனிலுள்ள கர்கே மிசிலே அடைந்த தோல்வி (46:1-12)

11. எகிப்தின் மேல் பாபிலோனிய ஆக்கிரமிப்பு (43:9-13)

12. பாபிலோனின் யூதாவின் 70 வருட அடிமைத்தனம் (25:11; 29:10)

13. 70 வருடங்களுக்குப் பிறகு எருசலேம் புதுப்பிக்கப்படல் (27:19-22; 30:3,10,11; 18:21 31:9, 12, 38, 39: 33:3-9)

14. 70 வருடங்களுக்குப் பிறகு பாபிலோன அடைந்த தோல்வி (25:12; 27:7)

15. சிதேக்கியா சிறைப்படுதல் (21:3-7; 34:1-5; 37:17)

16. பாபிலோனிலுள்ள தேவபக்தியுள் சிறைப்பட்ட வர்களுக்கு தேவனுடைய நல்லெண்ணங்கள் (24:1-7)

17. இஸ்ரவேல் ஜனங்கள் முடிவாகக் கூட்டிச் சேர்க்கப்படுதல் (30:3,10; 31:8-12)

18. முடிவாக இஸ்ரவேல் தேசம் திரும்பக் கட்டப்படுதல் (30:18-21; 31:38, 39;33:7-9)

நாள் 206 யோசியாவின் தேவ பயம் நிறைந்த ஆட்சி

பாவத்தைக் குறித்த கண்டிப்புகள் தொடருதல்
செப் 3:1-7

தேவனின் இரக்கம்
செப் 3:8-13

இஸ்ரவேல், எருசலேமின் மறுவாழ்வு
செப் 3:14-20

யோசியா ஆலயத்தைப் பழுது பார்த்தல்
11இராஜா 22:3-7; 11 நாளா 34:8-13

நியாயப் பிரமாண புஸ்தகம் கண்டுபிடிக்கப்படல்
11 இராஜா 22:8-10 11 நாளா 34:14-18

யோசியா உல்தாளைக் கலந்தாலோசித்தல்
11 இராஜா 22:11-20; 11 நாளா 34:19-28

இராஜாவின் உடன்படிக்கை
11இராஜா 23:1-3; 11நாளா 34:29-32

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கேள்வி: ஏன் இஸ்ரவேலில் சில இராஜாக்கள் நீதியாக ஆட்சி செய்த போதிலும் சிலர் தீமையானவற்றைச் செய்யும் துன்மாக்கராக இருந்தனர்? பதில் இது அவர்களது வளர்ப்பையோ குணத்தையோ, வாழ்க்கைக் கண்ணோட்டத்தையோ பொறுத்ததல்ல. கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய அவர்கள் எவ்வளவு விருப்பத்துடனிருந்தனர் என்பதையே பொறுத்தது. பாவம் துன்மார்க்கம் இவற்றின் போராட்டத்தில் முக்கிய பங்கு வகிப்பது மனிதனின் சித்தம் விருப்பம் தெய்வீக சித்தத்துக்குக் கீழ்ப்படிய நான் எந்த அளவு விருப்பம் கொண்டுள்ளேன்?

ஆதார சத்தியம்

"அது நன்மையானாலும் தீமையானாலும் சரி, எங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்கு நாங்கள் கீழ்ப்படிவதினால் எங்களுக்கு நன்மையுண்டாகும்படி நாங்கள் உம்மை அனுப்புகிற எங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்போம்." (எரே 42:6)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
செப்னியா பழைய ஏற்பாட்டில் 36ஆவது புத்தகம் தீர்க்க தரிசனங்களில் 14ஆவது புத்தகம்		கர்த்தருடைய நாளின் முக்கியத்துவமும் முன்னுரிமையும்

ஏரேமியாவின் இரண்டாவது செய்தி

நாள் 207

இஸ்ரவேல் யூதாவைவிட சிறந்தது
எரே 3:6-11

மன்னிப்பு உறுதியாக்கப்படுதல்
எரே 3:12-20

இஸ்ரவேலின் மனஸ்தாபம்
ஏரே 3:21-25

மனஸ்தாபத்துக்கு அறைகூவல்
ஏரே 4:1-4

யூதா பயமுறுத்தப்படல்
எரே 4:5-12

யூதா சூழ்ந்து கொள்ளப்படுதல்
எரே 4:13-18

எரேமியாவின் துக்கம்
ஏரே 4:19-22

எரேமியாவின் தரிசனம்
ஏரே 4:23-31

எருசலேமின் பாவம்
ஏரே 5:1-11

இஸ்ரவேலின் பகைவர்
ஏரே 5:12-19

தேவனின் எச்சரிப்பு
ஏரே 5:20-31

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் தமது வார்த்தையில் கூறுகிறபடி அவ்வளவு கண்டிப்பாக இருக்க மாட்டாரென்று தேவனுடைய பிள்ளைகள் அநேகர் தவறாக நம்புவதால்தான் அவர்களது ஆவிக்குரிய கப்பற் பயணம் சேதமடைகிறது. ஆதாம் ஏவாள் இப்படித் தான் தவறிப் போனார்கள். இன்று நாம் வாசித்த வேத பகுதிகள் கூறுவது போன்று இஸ்ரவேல் மக்களும் இதனால்தான் இடறி விழுந்தனர். இப்பொழுதே என்னைக் கேட்டுக் கொள். எனனிடத்திலும் இதே மனநிலை காணப்ப டுகிறதா?

ஆதார சத்தியம்

"என் வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரே 23:29)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசு தனது இரண்டாவது வருகை குறித்துக் கூறினார் இது செப்னியாவின் கர்த்தரின் நாள் என்ற செய்தியோடு தொடர்புடையது. மத்தேயு 24:42	செப்னியா கர்த்தரின் நியாயத் தீர்ப்பு நாள் எரு சலேமுக்கு வரும் என்று வலியுறுத்துகிறார். ஏனைய தீர்க்க தரிசிகளைப் போல தேவன் பாவத்தை தண்டிப்பார் என்று சொல்லுகிறார்.	செப்பனியா 2:3

நாள் 208 பஸ்கா ஆசரிக்கப்படுதல்

எருசலேமின் மீது படையெடுப்பு
ஏரே 6:1-8

முரட்டாட்டமுள்ள இஸ்ரவேல்
ஏரே 6:9-15

தேவனின் வழியை இஸ்ரவேல் புறக்கணித்தல்
ஏரே 6:16-21

வடக்கிலிருந்து படையெடுப்பு
எரே 6:22-30

யோசியா பஸ்காவை ஆசரித்தல்
11 இராஜா 23:21-23, 26-27;
11 நாளா 35:1- 19

யோசியாவின் பிற சீர்திருத்தங்கள்
11 இராஜா 23:4-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

முந்திய ஆட்சிகளில் புறக்கணிக்கப்பட்டிருந்த பஸ்கா ஆசரிக்கும் நியமனத்தை யோசியா மீண்டும் ஆசரிக்கத் தீர்மானித்தது. கர்த்தருக்கு மகிழ்ச்சியையும், மக்களுக்கு பேரானந்தத்தையும் அளித்தது. சர்வ வல்லவர் அவர்களது பொருத்தனைக்குத் தமது தயவையும் சம்மதத்தையும், வெளிப்படுத்தும் காரியங்களைக் காண்பித்து, தக்க பலன் கொடுத்தார். நாம் அவரண்டை கிட்டிச் சேரும் பொழுது அவரும் நமது அருகில் வர ஒரு பொழுதும் தவறுவதில்லை.

ஆதார சத்தியம்

"துன்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்." (எபி. 10:22)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
எரேமியா பழைய ஏற்பாட்டில் 24ஆவது புத்தகம் தீர்க்க தரிசனத்தில் 2ஆவது புத்தகம்		சுயசரிதைப்பாணியில் எழுதப்பட்டது.

எரேமியாவின் 3 ஆவது செய்தி

நாள் 209

யோசியாவின் சீர்திருத்தங்கள்
11இராஜா 23:15-20; 11நாளா 34:33

எரேமியா ஆலயத்தில் பிரசங்கித்தல்
எரே 7:1-15

மக்களின் கீழ்ப்படியாமை
ஏரே 7:16-28

பழிவாங்குதல் பயமுறுத்தப்படல்
ஏரே 7:29-34

எலும்புகள் புதைக்கப்படாமலிருக்க வேண்டும்
ஏரே 8:1-3

மக்களின் மதியீனம்
எரே 8:4-13

படையெடுப்பின் அபாய ஒலி
ஏரே 8:14-17

ஏரேமியாவின் புலம்பல்
ஏரே 8:18:22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலின் மிகப் பெரிய பாவம் விக்கிரக வணக்கம் அதாவது தேவனுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை அவர்களிடத்தில் எந்த ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் எதிர்பார்க்காத மற்றப் பொருட்களுக்குக் கொடுத்து, அவற்றை வழிபட்ட பாவம். ஆனால் தேவனள் தமது பிரபஞ் சத்தில் எந்த ஒரு போட்டியாளரும் தமது இடத் தைப் பொறுத்துக் கொள்ள மாட்டார்: ஆகவே சிக்கிரக வணக்கம் கண்டிப்பாக அகற்றப்பட வேண்டும். நாமே முன்வந்து நமது வாழ்க்கை யிலுள்ள விக்கிரகங்களை அகற்றாவிட்டால் தேவனுக்கு அவராகவே அவற்றை தட்டி விட்டு அப்புறப்படுத்துவதைத் தவிர வேறு வழியே இல் லை. நிச்சயமாகவே அவற்றைக் கீழே தள்ளுவார்.

ஆதார சத்தியம்

"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமா யிருக்கின்றன.... விக்கிரகாரதனை, பில்லி, சூனியம்" (கலா 5:19-20)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசுவின் மரணத்தால் ஏற்படும் புதிய உடன்படிக்கை ஏரே 31:31-34 எரேமியா எதிர்த்தார். இதை இயேசு உறுதிப்படுத்தினார் மத் 26:27-28	இஸ்ரவேலின் ஒழுக்கக்கேடும் விக்கிரக வணக்கமும் மனந்திரும்பி தேவனிடத்திற்கு போவதால் மட்டமே மன்னிக்கப்படும் என்று எரேமியாஸ் கூறுகின்றார்.	எரேமியா 31:33

நாள் 210

இன்றுமொரு செய்தி

மக்கள் திருத்தப்படுதல்
ஏரே 9:1-11

சிறைப்பட்டவர்கள் துன்பமடைதல்
ஏரே 9:12-22

தேவனின் அன்பும் பாசமும்
ஏரே 9:23-24

அநீதி செய்பவர்கள் மீது வரும் தண்டனை
ஏரே 9:25-26

விக்கிரக வணக்கமும், உண்மையான ஆராதனையும்
ஏரே 10:1-11

ஒரு துதியின் கீதம்
ஏரே 10:12-16

வரப்போகும் சிறையிருப்பு
ஏரே 10:17-25

கீழ்ப்படியாத யூதர் கடிந்து கொள்ளப்படுதல்
ஏரே 11:1-10

அவர்களது முழுமையான அழிவு
ஏரே 11:11-17

ஏரேமியாவின் உயிரைப் பறிக்க சதி
ஏரே 11:18-23

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உனக்குத் தெரிந்த உன்னால் நேசிக்கப்படும் ஒருவரின் வாழ்க்கையில் தேவனின் ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்ட கரம் அமர்ந்து செயல்படும் போது, உன் உணர்ச்சிகள் எவ்வாறு இருக்கும்? நீ அதைப் பொருட்படுத்தாதது போல் இருந்து கொள்வாயா? அல்லது எரேமியா செய்தது போல், அதைக் குறித்து அழுவாயா? ஒரு நிமிடம் நினைத்துப் பார். வழிவிலகிச் செல்லும் ஒரு சகோதரன் அல்லது சகோதரிக்காக நீ பரிந்து பேசி விண்ணப்பம் செய்ய வேண்டுமென்று உன்னிடம் தேவன் இன்று எதிர்பார்க்கிறாரா? ஏரேமியாவுக்குப் பிறர் மீது இருந்த ஆழ்ந்த கரிசனை உனக்கு முன் மாதிரியாக இருக்கட்டும்.

ஆதார சத்தியம்

"சகோதரரே ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர் பொருத்தப் பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப் படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு." (கலா. 6:1)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

காளை நுகத்தடியின் அடையாளம்

நாள் 211

பாபிலோன் - உலக வல்லரசு கி. மு. 612-539

எரேமியாவின் கேள்வியும் தேவனின் பதிலும்
ஏரே 12:1-6

கர்த்தரின் துக்கம்
ஏரே 12:7-13

அவரது வாக்குறுதி
ஏரே 12:14-17

யோசியா வெட்டப்படுதல்
11 இராஜா 23:28-30; 11 நாளா 35:20-24

யோசியாவுக்காகப் புலம்புதல்
11நாளா 35:25-27

யோவாகாசின் தீய வாழ்க்கை
11 இராஜா 23:31:32; 11 நாளா 36:1-2

யூதா புகழாரம் செலுத்துதல்
11 இராஜா 23:33; 11 நாளா 36:3

யோவகாஸின் மரணம்
11 இராஜா 23:34; எரே 22:10-12; 1 11 நாளா 36:4

யோயாக்கீம் இராஜாவாகுதல்
11 இராஜா 23:36:37, 35; 11 நாளா 36:5

நுகத்தடியின் அடையாளம்
ஏரே 27:1-11

ஏரேமியா ஆலய பிரகாரத்தில்
ஏரே 26:1-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஏரேமியாவின் நுகத்தடியின் அடையாளம் மக்களை அவர்கள் பாபிலோன் மன்னனுக்கு அடிமையாவார்கள் என்ற உண்மையை உணர வைக்கத் தூண்டியது. இந்தக் கடினமான இழிவான திருப்பத்துக்கும். அவர்கள் தாழ்மையோடு அடிபணிவதன் மூலம் தாம்பயன்படுத்தக் கூடிய காரியங்களையே, தமது பிள்ளைகளின் வாழ்வில் தேவன் அனுமதிக்கிறார். இந்த உண்மையை அவர்கள் நம்புவதை இவ்விதமாக நிரூபிக்க வேண்டு மென்று ஏரேமியா தூண்டுகிறார்.

ஆதார சத்தியம்

"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோம 8:28)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 212 ஆபகூக்கின் செய்தி

ஏரேமியா துரோகி என்று அழைக்கப்படுதல்
ஏரே 26:8-19

ஆபகூக் அநீதி குறித்து புகார்
ஆபகூ 1:1-4

கர்த்தரின் பதில்
ஆபகூ 1:5-11

ஆபகூக்கின் புகார் தொடருகிறது
ஆபகூ 1:12-17

ஆபகூக் காத்திருக்க வேண்டும்
ஆபகூ 2:1-4

அநீதியுள்ளவர்கள் மீது வரும் தீர்ப்பு
ஆபகூ 2:5-20

ஆபகூக் கெஞ்சுதல்
ஆபகூ 3:1-2

அவனது ஜெபமும் துதியும்
ஆபகூ 3:3-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஏறத்தாழ எல்லா பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் தேவனுடைய திட்டங்களையும், வழிகளையும் புரிந்து கொள்ள முடியாமல் குழம்பித் தவித்ததாக அறிக்கை செய்துள்ளனர். ஆனால் அவர்கள் அவருக்கு முன்பாகக் காத்திருக்கும் போது குழப்பம், நம்பிக்கையாக மாறியது. தேவனின் வழிகளைப் புரிந்து கொள்ளும் இரகசியம், காத்திருப்பதே இறுதியில் எப்படி யாவது உத்தரவு வந்தே தீரும்.

ஆதார சத்தியம்

"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." (ஏசா 55:8-9)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
ஆபகூக் 35ஆவது பழைய ஏற்பாட்டில் புத்தகம், 13வது தீர்க்கதரிசனப் புத்தகம்		இரண்டு சுற்றுக் கேள்விகளும் விடைகளும்

முதலாவது நாடு கடத்தல்

நாள் 213

ரேகாபியரின் கீழ்ப்படிதல்
ஏரே 35:1-11

யூதரின் கீழ்ப்படியாமை
ஏரே 35:12-19

உக்கிர கோபத்தின் மதுபான பாத்திரம்
ஏரே 25:15-38

நேபுகாத் நேச்சார் எருசலேமை முற்று கையிடல்
தானி 1:1

கொஞ்சம் இஸ்ரவேலர் நாடு கடத் தப்படுதல்
தானி 1:2-3

இஸ்ரவேலின் சிறையிருப்பு பற்றிய தீர்க்கதரிசனம்
ஏரே 25:1-11

எழுதப்பட வேண்டிய தீர்க்கதரிசனம்
ஏரே 36:1-8

பாருக்குக்கு தேவனின் வாக்குறுதி
ஏரே 45:1-5

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எதற்காகத் தேவன் தமது பிள்ளைகள் சிறைபிடிக்கப்பட்டு, நாட்டை விட்டு வெளியேறுவதை அறுமதிக்கிறார்? ஒரே ஒரு காரணம் தான் இருக்க முடியும். அவருடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் மூலமாக அவர் கொடுக்கும் மெண்மையான ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கு அவர்கள் செவி கொடுக்காமலிருக்கும் போது அவர் கடினமான சூழ்நிலைகள் மூலம் பயங்கரமான ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்கு அவர்கள் தலைவணங்கும் நிலையை எற்படுத்துகிறார். புரிகிறதா?

ஆதார சத்தியம்

"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்பு உண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது." (1 கொரி . 10:11)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
ஆபகூர் தேவன் தனது இரட்சகர் என்று கூறுகிறார். (3:18) இயேசு என்றால் கர்த்தாவே என்னை இரட்சியும் என்பதாகும். இயேசு உலகின் இரட்சகர் அவர் தன்னுடைய ஜனங்களை மீட்டுக்கொள்வார்	ஆபகூக் அநீதியான பாடுகளை காண்கிறார் யூதா மோசமான காலத்துக்குள்ளாகும் என்ப தை தேவன் வெளிப்படுத்துகிறார். பாபிலோ யரால் நசுக்கப்படுவார்கள் தேவனுக்கு விசுவாசமாயிருக வேண்டும் எனப் போதிக்கின்றார்.	ஆபகூக் 3:18

இதயத்திற்கு இதயம்

ஜூலை

உங்களில் பலர் கோடை காலத்தின் - சூடான இம்மாதத்தில் அவிந்து கொண்டிருக்கலாம். தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கும் போது அது நமக்கு ஆறுதலாகவும், தேற்றுதலாகவும், உற்சாகப்படுத்துவதாகவும் இருக்கிறது. வேதாகமத்தை முழுமையாக வாசிப்பது ஒரு வர்த்தகத்திட்டமல்ல. வாழ்வை வளப்படத்தி அதை மாற்றியமைக்கும் ஒரு அனுபவமாகும். தேவன் தனது வார்த்தையை எமது இருதயத்திற்கும் ஆத்துமாவிக்கும் தந்துள்ளார். புத்திபூர்வமானதாக இது கொடுக்கப்படவில்லை.

8

இந்தப் பகுதியில் .....

யூதாவை பாபிலோனியர் கைப்பற்றல்.
பாபிலோனில் சிறையிருப்பு.
எருசலேமுக்காகப் புலம்புதல்.
தானியேல் அதிகாரத்தில் உயர்தல்.
புதுவாழ்விற்கான எசேக்கியேலின் தீர்க்கதரிசனங்கள்

நாள் 214 பாபிலோனில் தானியேலின் ஊழியம்

எகிப்தின் தோல்வி
ஏரே 46:1-12

நேபுகாத் நேச்சாரின் வெற்றிகள்
11இராஜா 24:7

தானியேல், அனரியா, மிஷாவேல் அசரியா
தானி 1:4-7

அவர்களது மறுப்பு
தானி 1:8-16

ஞானத்தில் அவர்கள் பெற்ற தேர்ச்சி
தானி 1:17-20

உரியா இரத்த சாட்சியாகக் கொலை செய்யப்படல்
ஏரே 26:20-24

ஏரேமியாவின் புலம்பல்
எரே 22:13-19

ஒரு உபவாசம் அறிவிக்கப்படல்
ஏரே 36:9

நேபுகாத் நேச்சாரின் கனவு
தானி 2:1-13

சொப்பனம் தானியேலுக்கு வெளிப் படுத்தப்படல்
தானி 2:14:35

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

தானியேல் பாபிலோனில் மூன்று சோதனை களைச் சந்தித்தான். (1) உணவில் சோதனை தேவனின் பிரமாணத்துக்கு அவனது கீழ்ப்ப டிதலை நிரூபித்தது (2) சொப்பனத்தின் வழியாக வந்த சோதனை. தேவன் எப்படியும் உதவுவார் என்று மனப்பூர்வமாக அவன் நம்பியதை நிரூபித் தது. (3) சிங்கக் கெபியின் சோதனை. தேவனின் வார்த்தைக்கு அவன் கட்டுப்பட்டதை நிரூபித்தது உன்னால் இந்த மூன்று சோதனைகளையும் மேற்கொண்டிருக்கக் கூடுமா?

ஆதார சத்தியம்

"அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். ". (1 பேது 1:7)

வேதாகமத்தில்	பிரதானமானவாகள்	விசேஷதன்மை
தானியேல் பழைய ஏற்பாட்டின் 24ஆவது புத்தகம்	தானியேல், நேபுகாத்நேச்சார்	தரிசனங்களும், கனவுகளும்

சணற் கச்சையின் அடையாளம்

நாள் 215

தானியேலின் (சொப்பன) அர்த்தம்
தானி 2:36-45

அரசன் தானியேலுக்கு வெகுமதி தருதல்
தானி 2:46-49

கர்த்தரின் வார்த்தை வாசிக்கப்படுதல்
ஏரே 36:10-19

அரசன் சுருளை அழித்தல்
ஏரே 36:20-26

ஏரேமியா அதற்குப் பதில் வேறொன்றை உருவாக்குதல்
ஏரே 36:27-32

சணற் கச்சையில் அடையாளம்
ஏரே 13:1-11

திராட்ச ரச ஜாடி
ஏரே 13:12-14

எரேமியாவின் எச்சரிப்பு
ஏரே 13:15-27

வறட்சி
ஏரே 14:1-12

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சணல் கச்சையின் அடையாளத்தின் மூலம், இஸ்ரவேல் புத்திரர் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற நிலை ஏற்படுமளவுக்குத் தங்கள் விக்கிரங்களினால் தங்களைக் கறைப்படுத்திக் கொண்டுள்ளனர் என்பதை ஏரேமியா காண்பிக்கிறார். எப்படிப்பட்ட குற்றச்சாட்டு! இன்றைய நாளிலுள்ள கிறிஸ்தவ சபைகளின் உண்மையான நிலையைக் காண்பிக்க, எரேமியா இன்று உயிருடனிருந்தால், என்ன அடையாளம் காண்பிப்பார் என்று நினைக்கிறீர்கள்?

ஆதார சத்தியம்

"நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங் காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்தில் அது துவக்கினால், தேவனுடைய சுவிஷேசத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்." (1 பேது 4:17)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
தானியேலும் இயேசுகிறிஸ்துவும் கடைசிகாலங்களைப பற்றி தீர்க்க தரிசனங்கள் கூறுவார்கள். மாற்கு 13:26- 27 ஐப் பார்க்க	யுத்த கைதியான தானியேல், தேவனிடத்தேயுள்ள விசுவாசத்தை சிங்கக் குகையில் நடந்த சம்பவம் கனவுகளுக்கு விளக்கமளித்தல் என்பவற்றால் சிறைப் பிடித்தல்	தானியேல் 2:20-22

நாள் 216 பாவத்திற்குத் தண்டனை

கள்ளத் தீர்க்க தரிசிகள்
ஏரே 14:13-18

ஜனங்களின் உருக்கமான வேண்டுகோள்
ஏரே 14:19-22

துன்மார்க்கரின் அழிவு
ஏரே 15:1-9

ஏரேமியாவின் புகார்
ஏரே 15:10-18

கர்த்தரின் பதில்
ஏரே 15:19-21

ஏரேமியாவைப் பற்றி தேவனின் சித்தம்
ஏரே 16:1-9

சிறையிருப்பிலிருந்து திரும்புதல் குறித்து தீர்க்க தரிசனம்
ஏரே 16:10-15

வரப்போகும் தண்டனை
ஏரே 16:16-18

எரேமியாவின் ஜெபம்
ஏரே 16:19:21

யூதாவின் பாவமும் தண்டனையும்
ஏரே 17:1-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

மனிதனது பிரச்சினைகளின் இருதயம், உண்மையில் இருதயத்தின் பிரச்சினையே (17:9) என்று நமக்கு நினைப்பூட்டியதற்காக நாம் எரேமியாவுக்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம். இதற்குத் தீர்வு என்ன? "நான் இருதயங்களை ஆராய்கிற கர்த்தர்." (17:10) அவரை நம்பக் கூடாத வகையில் தொந்தரவு கொடுக்கிற உன் இருதயத்தின் பாகங்களில், கர்த்தர் அவரது பிரகாசமான ஆராய்ந்து பார்க்கும் ஒளியாகிய பரிசுத்த ஆவியானவரை, இன்றே செலுத்த இடங்கொடு.

ஆதார சத்தியம்

"சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்." (சங் 51:10)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

பாபிலோன்

அசீரிய சாம்ராஜ்யம் பாபிலோனிய சாம்ராஜ்யமாக மாறிற்று. அதன் பெயர் பெற்ற இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கி. மு. 597ல் யூதாவை முடியறித்து அதனுடைய அரசனையும் தொழில் நுட்பம் அறிந்த அனைவரையும் பாபிலோனுக்கு சிறைக்கைதிகளாகக் கூட்டிச் சென்றான். பாபிலோன் நகரம் 200 சதுர மைல்கள் கொண்டது என பெரடோட்டஸ் என்பவர் கூறியுள்ளார். எட்டு அலங்கார வாசல்களும் மிக அழகான கட்டிடங்களும், அகலமான தெருக்களும், அதன் இரு பக்கங்களிலும் வளர்ந்த மரங்களும் பட்டணத்தைக் காக்க, பலமிக்க இரண்டு சுவர்களும் உள்ளதோர் பட்டணமாகும். தன் மனைவிக்கென நேபுகாத்நேச்சார் கட்டிய தொங்கு தோட்டங்களும் (Hanging Gardens) பழங்காலத்தில் உலக அற்புதங்களில் ஒன்றாக விளங்கிற்று. ஏசா 13ல் கூறிய தீர்க்கதரிசனத்தின்படி "கவிழ்க்கப்பட்ட பாபிலோனில் ஒருவரும் குடியேறுவதில்லை. தலைமுறை தோறும் அதில் ஒருவரும் தங்கி தரிப்பதுமில்லை. அங்கே காட்டு மிருகங்கள் படுத்துக்கொள்ளும்" என்பது அப்படியே எழுத்தின்படியே நிறைவேறிற்று. செழிப்பாய் இருந்த நிலங்கள் சதுப்பு நிலமாக மாறிற்று. புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் சிலபகுதிகளை வெட்டியெடுத்து கட்டிடங்கள் சிலவற்றைக் கட்டினாலும் மாகா பாபிலோன் பட்டணமாகத் திருப்பிக் கட்டப்படவில்லை.



நாள் 217 மேலும் அடையாளங்கள்

எரேமியாவின் ஜெபம்
எரே 17:14-18

ஓய்வு நாள்
எரே 17:19-27

குயவனின் மண்பாண்ட அடையாளம்
எரே 18:1-10

மக்களின் நிராகரிப்பு
எரே 18:11-17

எரேமியாவுக்கு விரோதமான சதி
எரே 18:18-23

உடைந்த ஜாடி
எரே 19:1-13

பஸ்கூருடன் எரேமியாவின் மோதல்
எரே 19:14-15; 20:1-6

அவனது புகார்
எரே 20:7-18

யோயாக்கீமின் முரட்டாட்டம்
11 இராஜா 24:1

பெலிஸ்தியாவுக்கு விரோதமான செய்தி
எரே 47:1-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

உன் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு தோல்வியை உணருகிறாயா? உடைந்து போன அல்லது பழுதுபட்ட பாத்திரமாக இருக்கிறாயா? எரேமியா, குயவனின் வீட்டில் கற்றுக் கொண்ட பாடத்தை உற்றுக் கவனி தேவன் உன்னை ஒரு புதிய மகிமையான பாத்திரமாக மீண்டும் வனைய முடியும். உன்னை இப்பொழுதே மீண்டும் புதிதாக்கும்படி கேள்; அவர் மீண்டும் உன்னை வனையும் சக்கரத்தில் வைத்து சுழற்றும் போது அவரது தொடுதலின் கீழ் அமைதியாக இரு. இன்றே அவர் சித்தப்படி உன்னை உருவாக்க இடம் கொடு.

ஆதார சத்தியம்

"அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்." (சங் 23:3)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

தேவனின் நியாயத் தீர்ப்புகள்

நாள் 218

மோவாபின் அழிவு
எரே 48:1-10

மோவாபின் பட்டணங்கள் அழிக்கப்படல்
எரே 48:11-25

மோவாப் தாழ்த்தப்படும்
எரே 48:26-39

மோவாப்புக்கு தப்பிக்க வழியில்லை
எரே 48:40-47

அம்மோன் மீது ஆண்டவரின் தீர்ப்பு
எரே 49:1-6

ஏதோமின் மீது அவரின் தீர்ப்பு
எரே 49:7-22

தமஸ்குவின் மீது அவரது தீர்ப்பு
எரே 49:23-27

கேதார், காத்சோர் மீது அவரது தீர்ப்பு
எரே 49:28:33

எலோமின் மீது அவரது தீர்ப்பு
எரே 49:34-39

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

புதிய ஏற்பாடு, தேவனின் இரக்கம் எவ்வளவு அற்புதமானது என்று காண்பிப்பது போலவே, பழைய ஏற்பாடு அவர் நீயாயத் தீர்ப்பதில் எவ்வளவு பயங்கரமானவர் என்று காண்பிக்கிறது. நியாயத் தீர்ப்பு இல்லாவிட்டால், கிருபை வெறும் உணர்ச்சிகள் நிறைந்து நலிந்ததாக மாறிவிடும். இரக்கமில்லாவிட்டால் நியாயத் தீர்ப்பு பயங்கரமானதாகவும் அழுத்தி விடும் பாரமாகவும் மாறிவிடும். தேவனைச் சரியாகப் புரிந்து கொண்டு சேவிக்க வேண்டுமானால், தேவன் இரு கோணங்களிலும் பார்க்கப்பட வேண்டும்.

ஆதார சத்தியம்

"ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம். " (ரோமர் 9:16)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ், சகரியா, ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 219 இரண்டாவது மூன்றாவது நாடு கடத்தல்கள் கி. மு 598

யோயாக்கமின் பகைவர்
11இராஜா 24:2-4

2ஆவது நாடு கடத்தல்: 3023 கைதிகள்
11நாளா 36:6-7; எரே 52:28

யோயாக்கீமின் மரணம்
11இராஜா 24:5-6; 11நாளா 36:8

யோயாக்கீன்
11இராஜா 24:8-9; 11நாளா 36:9

அவனது சிறையிருப்பு முன்னறிவிக்கப்படல்
எரே 22:24-30

3ஆவது நாடு கடத்தல் 10, 000 கைதிகள்
11இராஜா 24:10-16; 11நாளா 36:10; எஸ்தர் 2:6

சிதேக்கியா
11இராஜா 24:17-20;11நாளா 36:11-16; எரே 37:1-2; 52:1-2

இஸ்ரவேலரின் சிறையிருப்பு முன்னறிவிக்கப்படல்
எரே 21:1-14

இராஜாவுக்கு ஏரேமியாவின் செய்தி
எரே 22:1-9; 20-23

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

முற்கால இஸ்ரவேல், சமாதான காலங்களில் பெருமை நிறைந்ததாகவும், துன்ப காலங்களில் பயம் நிறைந்ததாகவும் அடிமைத்தன நுகத்தடியின் கீழ் மனச் சோர்புள்ளதாகவும், முடிந்த அளவு கடைசி நேரம் வரை பாவம் விக்கிரக வணக்கம் இவற்றிலிருந்து விடுபட மனமற்றதாகவும் பிறருக்குக் காட்சியளித்தது. இன்றைய சபைகளிலும் இதைப் போன்ற அநேகர் இருப்பது போல் தெரிகிறதல்லவா? நீ ஒத்துக் கொள்கிறாயா?

ஆதார சத்தியம்

"சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்." (எபி. 3:12)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

நல்ல, கெட்ட அத்திப் பழங்கள்

நாள் 220

உண்மையற்ற மேய்ப்பர்கள் கண்டிக்கப்படுதல்
எரே 23:1-4

இஸ்ரவேலின் எதிர்கால சுகவாழ்வு
எரே 23:5-8

தீர்க்கதரிசிகளுக்குச் செய்தி
எரே 23:9-32

கர்த்தரின் பாரம்
எரே 23:33-40

இரண்டு கூடை அத்திப் பழங்கள்
எரே 24:1-10

சிதேக்கியாவுக்கு எரேமியாவின் ஆலோசனை
எரே 27:12-22

சிறையிருப்பிலிருந்தவர்களுக்கு எரேமியாவின் கடிதம்
எரே 29:1-14

தங்கியிருந்தவர்களுக்குச் செய்தி
எரே 29:16-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அன்று இஸ்ரவேலில் இருந்ததைப் போலவே, இன்றும் சபையில் நல்ல, கெட்ட அத்திப் பழங்கள் உண்டு. தங்களைத் திருத்திக் கொள்ள தரப்படும். ஒழுக்கக் கட்டுப்பாடுகளிலிருந்து படித்துக் கொள்ள வேண்டிய பாடங்களைக் கற்றுக் கொள்பவர்கள் நல்ல அத்திப் பழங்கள் கெட்ட, அத்திப் பழங்களோ தொடர்ந்து தங்கள் சுய சித்தத்தின்படியே செய்பவர்கள். தேவன் உன்னைக் எந்தக் கூடையில் வைப்பாரென்பதை சிந்தித்துப் பார்த்தாயா?

ஆதார சத்தியம்

"நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால், தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? " (எபி 12:7)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 221 இஸ்ரவேலின் - பிரகாசமான எதிர்காலம்

சிறையிலிருப்பவருக்கு ஏரேமியாவின் கடிதம்
எரே 29:20,15, 21-23

சொமாயாவுக்கு செய்தி
எரே 29:24-29

செமாயாவின் தண்டனை
எரே 29:30-32

வரப்போகும் துன்பம்
எரே 30:1-7

கர்த்தரின் வாக்குறுதிகள்
எரே 30:-8-17

வருங்கால சுகவாழ்வு
எரே 30:18-24

இஸ்ரவேல் தாய்நாடு திரும்புதல்
எரே 31:1-14

கர்த்தரின் இரக்கம்
எரே 31:15-22

வருங்கால செழிப்பு
எரே 31:23-30

இஸ்ரவேலுடன் தேவனின் புதிய உடன்படிக்கை
எரே 31:31-34

அவரது நித்திய இரக்கம்
எரே 35:40

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒருமுறை தமது மக்கள் பாடுகிளினாலும் நாடு கடத்தலினாலும் சுத்தரிக்கப்பட்ட பின்பு சர்வ வல்லவர் உடனே அவர்களை மீண்டும் நிலை நிறுத்தி அவர்களுக்கும் புனர்வாழ்வளிக்கிறார்; இது அவரது மாறாத குணாதிசயம் இப்பொழுது கர்த்தரின் சபைகள், எல்லாவித விக்கிரக வணக் கத்தையும், அனலும் குளிருமற்ற நடத்தையையும், சோம்பறித்தனத்தையும் தூர எறிந்து விட்டு அவரது முகத்தைத் தேடினால் என்ன நடக்குமென்று யோசித்துப் பார்த்தீர்களா? ஒரே ஒரு விடைதான் அதுதான் எழும்புதல்.

ஆதார சத்தியம்

"உமது இரட்சனியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து; உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள். "
(சங் 51:12, 13)

வேதாகமத்தில்	பிரதானமானவாகள்	விசேஷதன்மை
எசேக்கியேல் பழைய ஏற்பாட்டின் 26 ஆவது புத்தகம் நான்காவது தீர்க்க தரிசனப் புத்தகம்		தரிசனங்கள் இப்புத்தக த்தின் விசேட அம்சங் களாக இருக்கிறது.

எசேக்கியேலின் தரிசனம்

நாள் 222

அனனியாவின் பொய்யான தீர்க்க தரிசனம்
எரே 28:1-16

அவனது மரணம்
எரே 28:17

செராயாவும், சிதேக்கியாவும் பாபிலோனுக்கு வருதல்
எரே 51:59

எசேக்கியேலின் ஆயத்தம்
எசே 1:1

தேவனைப் பற்றிய அவனது தரிசனம்
எசே 1:2-14

நான்கு சக்கரங்கள்
எசே 1;15-21

தேவனின் சிங்காசனம்
எசே 1:22-28

ஆவியினால் நிரம்புதல்
எசே 2:1-2

தீர்க்கதரிசியாக, எசேக்கியேலின் பணி
எசே 2:3-10; 3:1-9

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எசேக்கியேல் பாபிலோனில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களுக்கு தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்த போது, எருசலேமில் மீதியான யூதருக்கு எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்துக் கொண்டிருந்தான். தேவனின் செய்தி ஒன்றே; ஆனால் செய்தியைச் சுமந்து செல்பவர்கள் அநேகர். உனது சொந்த சபையில் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்காமல் நீ ஓடும்போது, அதே செய்தி இன்னொரு சபையிலும் உன்னை எதிர்நோக்கி வரும். இது சிந்திக்க வேண்டிய ஒரு காரியமல்லவா?

ஆதார சத்தியம்

"உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்?" (சங் 139:7)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
எசேக்கியேல் 34ஆம் அதிகாரத்தில் நல்ல மேய்ப்பனும் கவலைமீனமாக மேய்ப்பனுக்கும் ஒப்பிடப்படுகிறார்கள் யோனா 10:11 இல் இயேசு தன் ஜீவனை அளிக்கிற நல்ல மேய்ப்பன் என்று விபரிக்கிறார்.	சிறையிருப்பில் சேர்ந்து போன யூதர்களின் ஆறு தரிசனங்கள் மூலமும். ஆறு உவமைகள் மூலமும் இஸ்ரவேலுக் தண்டனை அளிப்பதையும் அவர் தமது ஆவியானவர் மூலம் புதிய ஜீவனை அளிக்கிறார்.	எசேக்கியேல் 36:26-27

நாள் 223 எசேக்கியேல் முற்றுகையை சித்தரித்தல்

எசேக்கியேல் காவற்காரனாக நியமிக்கப்படுதல்
எசே 3:10-21

தேவனின் மகிமை
எசே 3:22-23

மீண்டும் ஆவியினால் நிரப்பப்படுதல்
எசே 3:24-27

ஓட்டின் அடையாளம்
எசே 4:1-17

கூர்மையான கத்தியின் அடையாளம்
எசே 5:1-17

விக்கிரக வணக்கம் கண்டிக்கப்படல்
எசே 6:1-7

மீதியானவர்கள் இரட்சிக்கப்படல்
எசே 6:8-10

பாழாக்குதல் வருதல்
எசே 6:11-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வெற்றியுள்ள ஊழியம் செய்ய இரு முக்கியமான தேவைகள் சந்திக்கப்பட வேண்டும். அவை (1) தேவனின் வல்லமை உயர்ந்த தன்மை இவற்றைக் குறித்து நிறைந்து வழிந்தோடும் அளவுக்கு தரிசனம் (2) உலகத்தைக் குறித்த தேவனின் திட்டத்தில் நாம் எந்த இடத்தில் பொருத்துகிறோமென்பதை புரிந்து கொள்ளுதல். எசேக்கியேல் இந்த இரண்டையும் குறித்து அறிந்திருந்தான் நீ அறிந்து கொண்டாயா?

ஆதார சத்தியம்

"எப்படியெனில் சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை; வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீகமான வைகளைத் தெரிந்து கொண்டார்."
(1 கொரி. 1:26, 27)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

எசேக்கியேலின் இரண்டாவது தரிசனம் நாள் 224

தேசம் பாழாக விடப்படல்
எசே 7:1-15

ஒரு சிலரின் துன்பம்
எசே 7:16-22

சிறைப்படுதல்
எசே 7:23-27

எருசலேமில் விக்கிரக வணக்கம்
எசே 8:1-6

சுவரிலுள்ள துவாரம்
எசே 8:7-12

தம் மூச்சுக்காக அழுதல்
எசே 8:13-14

சூரிய நமஸ்காரம் செய்பவர்கள்
எசே 8:15-16

கர்த்தரின் மறுமொழி
எசே 8:17-18

குறியிடப்பட்ட மனிதர்
எசே 9:1-111

கர்த்தர் விலகிச் செல்லுதல்
எசே 10:1-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாங்கள் இருட்டில் செய்வதைக் கர்த்தரால் பார்க்க முடியாதென்று இஸ்ரவேலின் மூப்பர்கள் எண்ணியது, அவர்களது மதியீனத்தை வெளிப்படுத்துகிறது. பாவம் தான் மிகச் சிறந்த துப்பறிவாளர் என்று ஒருவர் கூறியது மிகச் சரியானதே" உன் பாவம் உன்னைக் கண்டுபிடிக்குமென்பதை நிச்சயமாக அறிந்து கொள்.

ஆதார சத்தியம்

"ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள். இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்."
(1 கொரி. 4:5)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 225 கர்த்தரின் ஆக்கினைத் தீர்ப்பு

கர்த்தர் விலகிச் செல்லுதல்
எசே 10:16-22

எருசேலம் ஆக்கிணைத் தீர்ப்படைதல்
எசே 11:1-13

சிறைப்பட்டவர்களுக்கு கர்த்தரின் வாக்குறுதி
எசே 11:14-21

மகிமை எருசலேமை விட்டு நீங்குதல்
எசே 11:22-25

அகதியாக எசேக்கியேல்
எசே 12:1-7

நெருங்கி வரும் சிறையிருப்பு
எசே 12:8-12, 15-16

நடுங்கும் தீர்க்க தரிசியின் அடையாளம்
எசே 12:17-20

மறுப்புகளுக்குப் பதில் உத்தரவு
எசே 12:21-28

பொய்யான ஆண் தீர்க்கதரிசிகளின் ஆக்கினைத் தீர்ப்பு
எசே 13:1-16

பொய்யான பெண் தீர்க்கதரிசினிகள் மீது வரும் ஆக்கினை
எசே 13:17-23

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலின் வீழ்ச்சிக்குப் பெருமளவில் காரணமாயிருந்தது அதன் மேய்ப்பர்கள் தவறியதே மந்தையைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அதைக் கொள்ளையிட்ட மேய்ப்பர்கள் அவர்கள். அர்ப்பணம் நிறைந்த சீடர்களை உருவாக்க அர்ப்பணித்த தலைவர்கள் தேவையென்பது எவ்வளவு உண்மை! உனது ஆவிக்குரிய மேய்ப்பனுக்காக இன்று ஜெபி.

ஆதார சத்தியம்

"உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்க மாட்டாதே" (எபி 3:17)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

எருசலேமின் விபசாரம்

நாள் 226

மாய்மாலக்காரர் பயமுறுத்தப்படல்
எசே 14:1-11

தேவனின் தண்டனை
எசே 14:12-23

திராட்சக் கொடியின் உவமை
எசே 15:1-8

கர்த்தரின் உடன்படிக்கை
எசே 16:1-8

கர்த்தரின் ஆசீர்வாதம்
எசே 16:9-14

எருசலேமின் உண்மையின்மை
எசே 16:15-22

அதன் விபசாரம்
எசே 16:23-34

எருசலேமின் மீது தேவனின் தீர்ப்பு
எசே 16:35-43

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எசேக்கியேலிலுள்ள திராட்சச் செடியை யோவான் 15ஆம் அதிகாரத்திலுள்ள திராட்சச் செடியுடன் சில வினாடிகள் ஒப்பிட்டுப் பார். இரு உதாரணங்களிலும் திராட்சச் செடியின் மதிப்பு அது தரும் கனிகளிலேயே இருக்கிறது. ஆனால் அதை மரப்பலகையாகப் பயன்படுத்த முடியாது. (எசே 15:3) திராட்சச் செடியாகிய உன்னில் எவ்வளவு கனிகள் உருவாயிருக்கின்றன?

ஆதார சத்தியம்

"நானே திராட்சச் செடி நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது." (யோவா 15:5)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 227 ஒரு உவமை விளக்கப்படுதல்

தாயைப் போல பிள்ளை
எசே 16:44-45

யூதா சோதோமையும் சமாரியாவையும் விட மோசம்
எசே 16:46-52

சோதோம் சமாரியாவின் வருங்கால செழிப்பு
எசே 16:53-58

புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கை
எசே 16:59-63

கழுகுகள், திராட்சச் செடியின் உவமை
எசே 17:1-10

உவமை விளக்கப்படுதல்
எசே 17:11-21

தேவனின் வாக்குறுதி
எசே 17:22-24

தேவன் பட்சபாதமுள்ளவரல்ல
எசே 18:1-20

கர்த்தரின் நியாயம் நிலை நிறுத்தப்படல்
எசே 18:21-29

மனஸ்தாபப்பட ஒரு அழைப்பு
எசே 18:30-32

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆவிக்குரிய காரியங்களில் தீவிரமாக இருப்பது போல் காண்பித்து உண்மையில்லாதவர்களின் செயலை விவரிக்கப் பொருத்தமான வார்த்தை ஒன்றே ஒன்றுதான் - விபசாரம். அது ஒரு பயங்கரமான கடினமான மகிழ்ச்சியற்ற வார்த்தைதான். ஆயினும் தன்னிடம் விசுவாசமாக இருப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டு அதை விட்டுப்பின் வாங்கித் தங்கள் ஒப்படைப்பை மறந்து விடுபவர்களைக் கர்த்தர் வேறு எந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடும்?

ஆதார சத்தியம்

"மேலும் உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்." (1 கொரி 4:2)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

கர்த்தர் நினைவுபடுத்தல்

நாள் 228

இஸ்ரவேல் பிரபுகளுக்காக ஒரு புலம்பல்
எசே 19:1-9

இன்னொரு புலம்பல்
எசே 19:10-14

தலைவர்களுக்கு ஒரு நினைப்பூட்டுதல்
எசே 20:1-9

வனாந்தரத்தில்
எசே 20:10-26

கானானில்
எசே 20:27-32

மன்னிப்பும் புனர்வாழ்வும்
எசே 20:33-44

எருசலேமுக்கு விரோதமான தீர்க்க தரிசனம்
எசே 20:45-49

கர்த்தரின் பட்டயம்
எசே 21:1-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஏன் நாம் காரியங்களைக் கடினமான வழியிலேயே கற்றுக் கொள்ள நேரிடுகிறது? தேவனிடமிருந்து எத்தனையோ எச்சரிப்பு களைப் பெற்ற போதிலும். இஸ்ரவேல் தொடர்ந்து தனது பிடிவாதமான. சுயசித்தத்தின் பாதையி லேயே சென்று கொண்டிருந்தது. இதைப்போல் யாராவது இருப்பது உன் மனதில் தோன்று கிறதா?

ஆதார சத்தியம்

"ஆகையால். நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு. அவைகளை மிகுந்த ஜாக்கிர தையாய்க் கவனிக்க வேண்டும். " (எபி 2:1)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 229 தேவனின் சுத்திகரிப்பு ஆலை

பட்டயத்தினால் வரும் தீர்ப்பு
எசே 21:8-17

பாபிலோனிய மன்னன் நெருங்குதல்
எசே 21:18-27

அம்மோனியரின் அழிவு
எசே 21:28-32

எருசலேமின் பாவங்கள்
எசே 22:1-16

கர்த்தரின் உலைக்களம்
எசே 22:17-22

இஸ்ரவேல் மூப்பர்களின் பாவங்கள்
எசே 22:23-31

மாம்ச இச்சையுள்ள சகோதரிகள்
எசே 23:1-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலர் அதிகமான நேரத்தைக் கர்த்தரின் சுத்திகரிப்பு ஆலையிலேயே கழித்தனர். நாம் ஏற்னவே பார்த்தபடி அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுக்காததே காரணமாகும். தேவனின் சுத்திகரிப்பு ஆலையில் எப்பொழுதாவது மாட்டியிருக்கிறாயா? ஒருவேளை இப்பொது நீ அதில் தானிருக்கிறாயா? தாங்க முடியாத அளவு வெப்பமும். இரக்கமற்ற விதத்தில் தரப்படும். அழுத்தமும் உன் மீது வைக்கப் பட்டாலும். அதனால் கிடைக்கும் விளைவுகள் மிகுந்த நன்மை தருபவை. நீயே அதை உன் அனுபவத்தில் காண்பாய்.

ஆதார சத்தியம்

"தேவனே. எங்களைச் சோதித்தீர்: வெள்ளியைப் புடமிடுகிறது போல எங்களைப் புடமிட்டீர்." (சங் 66:10)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

யூதர்கள் சிதறடிக்கப்படுதல்

யூதர்கள் சிதறப்படுதல் (Diaspora) இந்த diaspora என்னும் வார்த்தை பலஸ்தீனாவுக்கு (இப்போது "இஸ்ரவேல்") வெளியே வசிக்கும் யூதரைக் குறிக்கின்றது. உண்மையான தேவனை விட்டுவிட்டு, விக்கிரங்களை வழிபட்டால், இஸ்ரவேலர் புற ஜாதிகளுக்குள் சிதறடிக்கப்படுவார்களென்று மோசே அவர்களை எச்சரித்திருந்தான். இந்த சிதறடிப்பு அசீரியர், பாபிலோனியர் சிறையிருப்புகள் மூலம் ஆரம்பித்து; தொடர்ந்து கி. பி. 70 ம் ஆண்டில் எருசலேமும், தேவாலயமும் அழிக்கப்பட்ட பின்பு இந்த சிதறடித்தல் உலகம் முழுவதும் பரவியது.



ஏரேமியாவின் கீர்த்தி வாய்ந்த மொழிகள்

"கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ?
இரண வைத்தியனும் அங்கே இல்லையோ?" (8:22)

"எத்தியோப்பியன் தன் தோலையும்,
சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக் கூடுமோ?" (13:23)

"எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது?" (17:9)

"என் வார்த்தை அக்கினியைப் போலும்,
கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ?" (23:29)

"என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உனக்கு உத்தரவு கொடுப்பேன்" (33:3)

நாள் 230 நான்காவது நாடு கடத்தல் கி. மு 588

அகோலிபாள் மீது தேவனின் தீர்ப்பு
எசே 23:22-35

அகோலா. அகோலிபாள் மீது வரும் தேவனின் தீர்ப்பு
எசே 23:36-49

எசேக்கியேலின் மனைவி இறத்தல்
எசே 24:15-18

832 சிறைக் கைதிகள் பிடிபடல்
எசே 52:29

கொதித்துக் கொண்டிருக்கும் கொப்பரை
எசே 24:1-14, 19-27

நகரம் பிடிபடுதல் நெருங்கி வருதல்
எரே 52:3-5; 11 இராஜா 25:1-2

எரேமியாவின் முதல் சிறையிருப்பு
எரே 32:1-5

அடிமைகளை ஏமாற்றி நடத்துதல்
எரே 34:8-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இப்பொழுது தேவனின் வழியைத் தெரிந்து கொள்: அல்லது விளைவுகளைச் சந்தித்துக் கொள். என்ற செய்தி சந்தேகத்துக்கிடமின்றி உன் உள்ளத்தில் ஊன்றியிருக்கும் உன் வாழ்க்கையின் ஏதேனும் ஒரு பகுதியில் உன் வழியில் சென்று கொண்டிருந்தால் அதைப் பிரித்து எடுத்து தேவனின் திட்டத்திற்கிசைந்த ஒரு மாற்றுப் பாதையை உருவாக்கிக் கொள். அதன்பின்னர் உன் முன்னேற்றத்தை நாட் குறிப்பில் குறித்துக் கொண்டு காரியங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன. என்பதைக் கவனித்துப்பார்.

ஆதார சத்தியம்

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார். நீ. உன்னை ஞானி யென்று எண்ணாதே: கர்த்தருக்குப் பயந்து. தீமையை விட்டுவிலகு." (நீதி. 3:6, 7)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட்	நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எசேக்கியல்	பாபிலோனில் சிறையிருப்பு

தீருவின் வீழ்ச்சி

நாள் 231

கண்ணியமில்லாது நடத்தப்பட்டதற்கு தண்டனை
எரே 34:12-22

எகிப்துக்கு விரோதமான தீர்க்க தரிசனம்
எசே 29:1-7

எகிப்தின் அழிவு
எசே 29:8-16

தீருவின் மனமகிழ்ச்சி
எசே 26:1-2

தீருவின் பகைவன்
எசே 26:3-6

தீருவைத் தாக்குபவன்
எசே 26:7-8

தீருவின் அழிவு
எசே 26:9-14

ஒரு பயங்கரமான எடுத்துக்காட்டு
எசே 26:15-21

தீருவின் மரணகீதம்
எசே 27:1-25

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வாழ்க்கையில் நாம் சந்திக்க்க கூடிய மிகப் பெரிய அபாயங்களில் ஒன்று செழிப்பு அது பண விஷயத்திலோ, சமூக அந்தஸ்திலோ அல்லது ஆவிக்குரிய விஷயத்திலோ இருக்கலாம். வெற்றியுள்ள மனிதன் தேவனின் மீது சார்ந்து கொள்ள வேண்டிய அவசியத்தை மறந்துவிடக் கூடிய அபாயத்தில் சிக்கிக் கொள்ளுகிறான். தீருவை 'தனக்கு எல்லாம் இருக்கிறது' என்ற நிலைதான் அழிவுக்குத் தள்ளியது. உன் வாழ்க்கையிலும் அதே காரியம் நேரிட்டு விடாதபடி பார்த்துக் கொள்.

ஆதார சத்தியம்

"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." (1 கொரி 10:12)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 232 மேலும் தீர்க்கதரிசனங்கள்

தீருவின் மரண கீதம்
எசே 27:26-36

தீரு அரசனின் வீழ்ச்சி
எசே 28:1-12, 19

பார்வோனுக்கு எதிரான தீர்க்க தரிசனம்
எசே 30:20-26

எகிப்துக்கு விரோதமான இன்னும் அதிக தீர்க்க தரிசனங்கள்
எசே 31:1-18

ஏரேமியாவின் புத்திமதி கேட்கப்படல்
எரே 37:3-4

எகிப்தியரின் தலையீடு
எரே 37:5

எகிப்திய படை தாயகம் திரும்ப வேண்டும்.
எரே 37:6-10

ஏரேமியா கைது செய்யப்பட்டு விடுதலை பெறுதல்
எரே 37:11:21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சந்தோஷமாயிரு கவலைப் படாதே இதைவிட மோசமாகக் காரியங்கள் நிகழ்ந்திருக்கக் கூடுமே! இதைக் கேட்டதும் நீங்களும் உற்சாகமடைந்தீர்கள்.... கூறியது போலவே உண்மையாகவே காரியங்கள் மோசமாகி விட்டன. எரேமியாவின் வாழ்க்கையிலும் இது போலவே காரியங்கள் நிகழ்ந்தன. ஆனால் அவன் எப்படி சமாளித்துக் கொண்டான்? தனது சூழ்நிலைக்குள் மூழ்கிவிடாமல் சூழ்நிலைக்கு மேலாகத் தன்னை உயர்த்திக் கொண்டான். இந்த இரகசியத்தை நீ கற்றுக் கொண்டு விட்டாயா?

ஆதார சத்தியம்

"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி. என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைப் பாராட்டுவேன்." (11 கொரி 12:9)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

வாக்குப் பண்ணப்பட்ட மேசியா

நாள் 233

எரேமியா ஒரு நிலம் வாங்குதல்
எரே 32:6-15

எரேமியாவின் ஜெபம்
எரே 32:16-25

கர்த்தரின் மறு உத்தரவு
எரே 32:26-35

கர்த்தரின் வாக்குறுதி
எரே 32:36-44

யூதர்களின் புனர்வாழ்வு
எரே 33:1-33

வாக்குப் பண்ணப்பட்ட மேசியா
எரே 33:14-26

சிதேக்கியாவுக்கு ஒரு செய்தி
எரே 34:1-7

கிணற்றில் எரேமியா
எரே 38:1-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வாழ்க்கையின் சூழ்நிலைகள் உன்னையும் எரேமியாவைப் போல் கிணற்றுக்குள் தள்ளியிருக்கிறதோ? அதாவது கிணற்றில் விழுந்து விட்டது போன்ற அனுபவத்தில் இருக்கிறாயோ? மனந்தளராமல் ஏறிட்டுப் பார். பகற்பொழுதில் கூட கிணற்றினடியிலிருந்து மேலே நோக்கினால் நட்சத்திரங்களைக் காணக் கூடுமெனச் சொல்லப்படுகிறது. அவை நம்மிடம் என்ன கூறுகின்றன? கர்த்தர் பரலோகத்தில் இருக்கிறார். ஆகவே உலகத்தில் எல்லாமே நன்மையாக இருக்கும்.

ஆதார சத்தியம்

"என் சகோதரரே. நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." (யாக் 1:2-4)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 234 எருசலேமின் வீழ்ச்சி

யூதாவின் வீழ்ச்சி கி. மு. 586

சிதேக்கியா ஆலோசனை தேடுதல்
எரே 38:14-27

எபெத்மெலேக்கு செய்தி
எரே 39:15-18

எருசலேமின் வீழ்ச்சி
எரே 38:28

பஞ்சம்
11இராஜா 25:3; எரே 52:6

பாபிலோனிய பிரபுக்கள்
எரே 39:2-3

சிதேக்கியாவின் ஓட்டமும் சிறைப்படுதலும்
11 இராஜா 25:4-5; எரே 39:4-5; 52:7-8

படுகொலை
11 நாளா 36:17

சிதேக்கியாவின் குமாரன் வெட்டப்படுதல்
எரே 52:9-10, 39:6

அவன் குருடனாகுதல்
எசே 12:13-14; 11இராஜா 25:6-7; எரே 39:7; 52:11

தேவாலயமும் சுவர்களும் அழிக்கப்படுதல்
11 இராஜா 25:8-10; 11நாளா 36:19; எரே 39:8; 52:12-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எருசலேமின் வீழ்ச்சி மிகுந்த துக்கமான காரியமாக இருந்தாலும் தேவனின் பார்வைக் கோணத்திலிருந்து அந்த சுவர்கள் அவருக்கு முன்பாக எப்பொழுதும் நேராக நிமிர்த்த நிலையிலேயே இருந்தன. (ஏசா 49:16) இது நாம் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் தேவன் எப்பொழுதுமே இரண்டு விதங்களில் பார்க்கிறார். காரியங்கள் எவ்வாறு இருக்கிறது. என்பது மட்டுமல்ல எவ்வாறு இருக்கக் கூடுமென்றும் பார்க்கிறார். நமது நம்பிக்கை அவரது நம்பிக்கையாக் இருக்க வேண்டும்.

ஆதார சத்தியம்

"முந்திப் பூர்வ காலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்; நானே தேவன் வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும் இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும். எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்." (ஏசா 46:9-10)

வேதாகமத்தில்		விசேட தன்மை
புலம்பல் 25ஆவது பழைய ஏற்பாட்டுப் புத்தகம். தீர்க்கதரிசனப் புத்தகளில் மூன்றாவதாகும்.		புலம்பல்

ஐந்தாம், ஆறாம் நாடு கடத்தல்கள் நாள் 235

ஐந்தாவது நாடு கடத்தல்: ஏழைகள் பின்னால் விடப்படல்
11இராஜா 25:11-12; 11 நாளா 36:20-21; எரே 39:9-10; 52:15-16

தேவன் யாவருக்கும் நியாயதிபதி
சங் 94:1-23

ஆலயம் சூறையாடப்படல்
11 இராஜா 25:13-17 ; 11 நாளா 36:18; எரே 52:17-23

ஆசாரியர் நாடு கடத்தப்படல்
11 இராஜா 25:18; எரே 52:24

தேச விடுதலைக்காக ஜெபம்
சங் 74:1-23; 79:1-13

முக்கியமான மனிதர்கள் கொல்லப்படல்
11 இராஜா 25:19-21; எரே 52:25-27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அழிவு சடுதியான ஆபத்துக்கள் மத்தியில் ஒருவர் எங்கே திரும்பக் கூடும்? கர்த்தரை அறிந்தவர்களோ அவரது மார்பில் முற்றிலுமாகச் சாய்ந்து கொள்ளலாம். இதைக் குறித்து நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். (சங் 74) பழைய காலத்து வழக்கச் சொல் இன்றும் நம்மைத் தைரியப் படுத்தக் கூடியதாக இருக்கிறது. வெளியே பார்க்கையில் யாவும் இருட்டாக சோர்பு தருவதாக இருந்தால். மேலே பார்த்து உற்சாகமடைவதை முயற்சி செய்து பார்.

ஆதார சத்தியம்

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலை மாறினாலும், மலைகள் நடுச் சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், நாம் பயப்படோம்." (சங் 46:1-3)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
ஆரம்ப கவிதை அழிந்துதலோ நகாமற்காகவும். தேவாலயத் திற்காகவும் எருசலேமுக்கு கொண்டு போவதை விபரிக்கிறது. இகேவும் எருசலேமிற்காக அழுதார். அங்கிருந்த கலக்கக்கார ஜனங்களுக்காக மனதுருகிறார்.	கி. மு. 586இல் எருசலேம் கைப்பற்றப்பட்டபோது பெரிதான அழிவு ஏற்பட்டது. அவர்களுக்கென்று நிலமோ தேவாலயமோ இருக்கவில்லை. தேவையற்றவர்களைப் போலவே இருந்தார்கள்.	புலம்பல் 3:22-23

நாள் 236 எரேமியா, எருசலேமின் முடிவை நினைத்துப் புலம்புதல்

எருசலேமின் பரிதாபமான நிலை
புல 1:1-11

எருசலேமின் துக்கம்
புல 1:12-22

கர்த்தரின் பயங்கரமான தண்டனை
புல 2:1-10

எரேமியாவின் ஆழ்ந்த துக்கம்
புல 2:11-22

அவனது துன்பம்
புல 3:1-20

அவனது நம்பிக்கை
புல 3:21-30

கர்த்தரின் இரக்கம்
புல 3:31-36

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"இஸ்ரவேலரின் துன்பங்களை எரேமியா எவ்வளவுக்கு அதிகமாகப் பார்த்தானோ அவ்வளவுக்கு அதிகமாக அவன் கவலைப் பட்டான். அதே சமயத்தில் எவ்வளவாகக் கர்த்தரின் இரக்கத்தை உணர்ந்தானோ அவ்வளவாக அவனது ஆவி உயிர்த்தது. உனது கஷ்டங்களையும் பிரச்சனைகளையும் நோக்குவது தவறல்ல. ஆனால் அவற்றை மட்டமே நோக்குவது தவறு. ஒரு பக்தன் கூறியது போல் என் கஷ்டங்களை லேசாக்க ஒரு பார்வை பார்க்கிறேன்; ஆனால் கர்த்தரையோ கூர்ந்து உற்று நோக்குகின்றேன்.

ஆதார சத்தியம்

"இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோம 8:31)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட்	நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எசேக்கியல்	பாபிலோனில் சிறையிருப்பு

எதிர்பாராத தயவு

நாள் 237

எரேமியா பரிந்து பேசுதல்
புல 3:37-66

வீழ்ச்சிக்குப் பின் எருசலேம்
புல 4:1-22

இரக்கத்திற்காக ஒரு ஜெபம்
புல 5:1-22

கெதலியா அதிகாரியாகுதல்
11 இராஜா 25:22-24

எரேமியாவுக்குக் காண்பிக்கப்பட்ட தயவு
எரே 39:11-13

எரேமியா கெதலியாவுடன் தங்குதல்
எரே 39:14; 40:1-5

கெதலியா ஏழைகளுக்கு அளித்த பராமரிப்பு
எரே 40:6-12

சிறையிருப்பு
கி. மு. 586-516

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எரேமியாவுக்கு உதவி தேவைப்படும் பொழுது அவனது சொந்த ஜனங்கள் மூலமாக அல்ல அவர்களைத் துன்புறுத்திய மக்களில் ஒருவனாக இருந்த நெபுசராதன் மூலமாகத்தான் உதவி கிடைத்தது. அநேக சமயங்களில் தேவனின் மக்களுக்கு, கிறிஸ்தவ சகோதர சகோதரிகளை விட அவிசு வாசிகளே அதிக அன்பு காட்டி உதவு செய்கின் றனர். இது துக்கமான சிந்திக்க வைக்கும் காரியமே இதற்காக நாம் கரிசனையுடன் அதிகமாக ஜெபிக்க வேண்டாமா?

ஆதார சத்தியம்

"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற் றுங்கள் " (கலா 6:2)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 238 எகிப்தில் உதவியில்லை

கெதலியா கொல்லப்படுதல்
எரே 40:13-16; 41:1; 41:2-9 11இராஜா 25:25

இஸ்ரவேல் தப்பித்துக் கொள்ளுதல்
எரே 41:10-15

எகிப்துக்கு யாத்திரை
11 இராஜா 25:26; எரே 41:16-18

எரேமியாவின் உதவி கேட்கப்படுதல்
எரே 42:1-6

யூதாவில் பாதுகாப்பு
எரே 42:7-12

எகிப்தில் அழிவு
எரே 42:13-22

எரேமியா எகிப்துக்குக் கொண்டு போகப் படுதல்
எரே 43:1-7

எகிப்தின் மேல் வெற்றி முன்னறிவிக்கப்படல்
எரே 43:8-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எரேமியாவின் செய்தியை ஒன்று திரட்டி இவ்வாறு கூறலாம். எகிப்துக்கு ஓடிப் போகாதேயுங்கள். பாபிலோனியருக்கு விரோதமாக உங்கள் நிலையில் நிலைத்து இருந்து உண்மையுடன் அவர்களை எதிர் கொள்ளுங்கள் நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள். இந்த வினாடியில் எதை யாவது எதிர்கொள்ளப் பயந்து ஓடிக் கொண்டிருக்கிறாயா? நில் தேவனின் பெலத்தில் உன் பிரச்சனையை எதிர் கொள் எரே 42:11 இன்று கர்த்தர் உனக்கருளும் சிறப்பு செய்தியாகும்.

ஆதார சத்தியம்

"சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து. சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள். வாலிபரும் இடறி விழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழுப்புவார்கள்: அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள். " (ஏசா 40:29-31)

	நாகூம்		செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்		யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

எகிப்தில் யூதர்கள்

நாள் 239

நேபுகாத் நேச்சாரின் வருகை
எரே 46:13

எரேமியாவுக்கு ஆண்டவரின் செய்தி
எரே 46:14-18

எகிப்தின் வலிமை தள்ளப்படுதல்
எரே 46:19-26

யூதருக்குத் தேவனின் வாக்குறுதி
எரே 46:27-28

எகிப்தில் அவர்களது விக்கிரக வணக்கம்
எரே 44:1-14

சீர்திருந்த அவர்கள் மறுத்தல்
எரே 44:15-19

எரேமியா கடுமையாகச் சாடித் தாக்குதல்
எரே 44:20-30

எருசலேமின் வீழ்ச்சியை எசேக்கியேல் கேள்விப்படுதல்
எசே 33:21-33

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலுக்கு ஒருவித வியாதி இருந்தது. அதாவது இந்த வியாதி அநேக மக்களைத் தாக்கும் ஒரு நிலை. இந்த நிலையடைந்த மக்கள். தப்பித்து ஓட முடியாத அளவுக்கு எந்தப் பிரச்சினையும் மிகப் பெரிதாகவோ. சிக்கல் நிறைந்ததாகவோ இருக்க முடியாது. நேற்று நாம் வாசித்தோம். பிரச்சனைகளை விட்டுத் தூர ஓடுதல் அவற்றை ஒருநாளும் தீர்க்க முடியாது. மீண்டும் ஒருமறை ஏரே 44:1-14 வாசியுங்கள் ஏனென்று புரியும்.

ஆதார சத்தியம்

"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ள வராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங் கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்." (1 கொரி 10:13)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 240 ஏழாவது நாடு கடத்தல்

அம்மோனுக்கு எதிரான தீர்க்கதரிசனம்
எசே 25:1-7

யோவாபுக்கு எதிராக
எசே 25:8-11

ஏதோமுக்கு எதிராக
எசே 25:12-14

பெலிஸ்தருக்கு விரோதமாக
எசே 25:15-17

சீதோனுக்கு விரோதமாக
எசே28:20-23

இஸ்ரவேலுக்கு ஆசீர்வாதம்
எசே 28:24-26

எகிப்தின் வீழ்ச்சி
எசே 32:1-16

இறந்தவர்கள் உலகம்
எசே 32:17-32

இன்னும் 745 சிறைக் கைதிகள்
எரே 52:30

நேபுகாத் நேச்சாரின் பொற்சிலை
தானியேல் 3:1-7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒவ்வொரு முறை மனிதன் தவறும் போதும் தேவன் ஒரு உற்சாகமான ஊக்கமளிக்கக் கூடிய வாக்குறுதியுடன் உள்ளே பிரவேசிக்கிறார். இதைக் கவனித்திருக்கிறாயா? மேலேயுள்ள பகுதிகளில் இதைக் காண முடிகிறதா? (இது 6ஆவது வாசிப்பு) உனது வாழ்க்கையின் தோல்விகள் இக்கட்டான சூழ்சிலைகளின் மத்தியிலும் ஆண்டவருடைய வாக்குறுதிகளைத் தேடிக் கண்டுபிடிக்கக் கற்றுக் கொண்டு விட்டாயா என்பதே முக்கியமான காரியம். அவரது வாக்குறுதிகள் எப்பொழுதுமே இருக்கின்றன. அவற்றைத் தேடிப் பார்த்துக் கொண்டேயிரு.

ஆதார சத்தியம்

"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய கூபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும். பொருட்டு மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. "
(எபி. 10:22)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

அக்கினி உலைக்களம்

நாள் 241

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ
தானி 3:8-18

அக்கினி நிறைந்த உலைக்களம்
தானி 3:19-25

நேபுகாத் நேச்சார் தேவனை அறிக்கை செய்தல்
தானி 3:26-30

அவனது அறிவிக்கப்பட்ட கட்டளை
தானி 4:1-3

ஜாமக்காரன்
எசே 33:1-9

தனிமனிதனின் பொறுப்பு
எசே 33:10-20

உண்மையற்ற மேய்ப்பருக்குச் செய்தி
எசே 34:1-10

நல்ல மேய்ப்பன்
எசே 34:11-16

மந்தை தீர்ப்புப் பெறுதல்
எசே 34:17-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தானியேலுக்கும் அவன் நண்பர்களுக்குமிருந்த விசுவாசம் "ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. அதற்கு விசுவாசம்" என்று பெயர் என அவர்கள் கூறினார்கள். "எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவர் அவர் தப்புவிக்காவிட்டாலும் நாங்கள் சிலையை வணங்க மறுக்கிறோம். தேவன் தப்புவித்தாரோ இல்லையோ அதைக் குறித்துக் கவலைப்படாமல் தங்களது முடிவு சரியானது என்பதில் உறுதியாக இருந்தார்கள். தேவன் இவ்விதமான விசுவாசம் உனக்கும் தரவேண்டுமெனக் கேள். இதைவிட மேலானது ஒன்றுமில்லை.

ஆதார சத்தியம்

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." (எபி 11:1)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாய். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

அநேக கள்ள மேய்ப்பர்கள் நல்ல மேய்ப்பனாகிய கிறிஸ்து

நல்ல மேய்ப்பனாகிய கிறிஸ்து

அவர் காணாமற் போன ஆட்களைத் தேடுவார். (34:11)

அவர்களைப் பகைவன் கைக்கு நீக்கலாக்கி இரட்சிப்பார். (34:12)

அவர்களை எல்லாத் தேசங்களிலி ருந்தும் கூட்டிச் சேர்ப்பார். (34:13)

இஸ்ரவேல் மலைகளில் அவர்களைப் போஷிப்பார். (34:14)

அவர்களுக்கு புல்லுள்ள இடங்களில் இளைப்பாறுதல் கொடுப்பார். (34:15)

அவர் எலும்பு முறிந்ததைக் காயம் கட்டிக் குணப்படுத்துவார். (34:16)

நசல் கொண்டதைளைக் குணமாக் குவார் (43:16)

அவர்களுடன் நித்திய உடனபடிக்கை செய்வார் (34:25)

அவர்கள் பாதுகாப்புக்கு உத்தரவா தமளித்து அவர்களைப் பூரணமான பரதீசில் வைப்பார் (34:25-28)

அநேக கள்ள மேய்ப்பர்கள்

அவர்கள் மந்தையைப் போஷிப்பதற்குப் பதிலாக தங்களையே போஷித்தார்கள். (34:2, 3)

அவர்கள் பலவீனமானவர்களைப் பலப்படுத்தாமலும், நசல் கொண்ட வைகளைக் குணமாக்காமலும் எலும்பு முறிந்தவைகளைக் காயம் கட்டாமலும் காணாமற் போனவைகளைத் தேடா மலும் இருந்தார்கள். (34:4)

மேய்ப்பன் இல்லாததினால் ஆடுகள் சிதறுண்டு போயின. (34:5)

அவை காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. (34:5)

ஆகவே மேய்ப்பர்கள் தண்டிக்கப்படு வார்கள். (34;10)

அவர்கள் மேய்ப்பர் ஸ்தானத்திலிருந்து தள்ளுண்டு போவார்கள். (34:10)

அவர்கள் பெரிய மேய்ப்பனால் போதிக் கப்பட மாட்டார்கள். (34:10)

கர்த்தரின் மந்தை
எசே 34:20-31

ஏதோமுக்கு விரோதமான தீர்க்கதரிசனம்
எசே 35:1-15

இஸ்ரவேலின் மீது தேவ ஆசீர்வாதம்
எசே 36:1-15

இஸ்ரவேலின் முந்திய பாவங்கள்
எசே 36:16-23

இஸ்ரவேலின் புதுவாழ்வு
எசே 36:24-32

அண்டை நாடுகளுக்கு ஒரு சாட்சி
எசே 36:33-38

உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு
எசே 37:1-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவனின் மக்கள் கர்த்தருக்கு முன்பாக சரியான பாதையில் உறுதியாக நிற்கும் போது. அதனால் பொங்கி வருகிற ஆசீர்வாதங்கள் கணக்கிலடங் காதவை. இவற்றில் சிலதை எசேக். 36:24-31இல் காணலாம். உன்னால் எத்தனை கண்டுபிடிக்க முடிகிறது? குறைந்தது பத்து ஆசீர்வாதங்களை உள்ளன.

ஆதார சத்தியம்

"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்." (நீதி 10:22)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

நாள் 243

கோகு அழிக்கப்படுதல்

இரு கோல்களின் அடையாளம்
எசே 37:15-19

யூதாவும் இஸ்ரவேலும் ஒரே நாடாக மாறுதல்
எசே 37:20-28

கோகின் தீங்கான கெட்ட எண்ணம்
எசே 38:1-13

தேவன் கோகுக்கு தண்டனையளித்தல்
எசே 38:14-23

கோகு தோல்வியடைதல்
எசே 39:1-10

கோகைப் புதைத்தல்
எசே 39:11-20

இஸ்ரவேலின் புனர்வாழ்வு
எசே 39:21-29

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எசேக்கியேல் தீர்க்கனால் முன்னறிவிக்கப் பட்டபடி இஸ்ரவேல் தேசத்தின் புனர்வாழ்வு நமது கண்களுக்கு முன்பாக இப்பொழுத நடந்து கொண்டிருக்கிறது. என்று அநேகர் நம்புகி றார்கள். இனி அடுத்து என்ன நடக்கும்? என் விரலை எசேக்கியேல் 38 மீது வைத்துக் கொள். நாம் நினைப்பதை விட அதிகமாக இந்த சந்த தியில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு பொருந்து கின்றது.

ஆதார சத்தியம்

"எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள்; உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக உன் அலங்கத்திற்கு ள்ளே சமாதானமும், உன் அரமனைகளுக் குள்ளே சுகமும் இருப்பதாக" (சங் 122:6-7)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

வருங்கால ஆலயத்தைக் குறித்ததரிசனம் நாள் 244

எசேக்கியேலின் தரிசனம்
எசே 40:1-5

கிழக்கு வாசல்
எசே 40:6-16

வெளிப்பிரகாரம்
எசே 40:17-19

வடக்கு, தெற்கு வாசல்
எசே 40:20-27

உட்பிரகாரம்
எசே 40:28-37

வடக்கு வாசலின் அருகேயுள்ள கட்டிடங்கள்
எசே 40:38-47

ஆலயத்தின் மண்டபம்
எசே 40:48-49

மகா பரிசுத்த ஸ்தலம்
எசே 41:5-12

ஆலயக் கட்டுமானத்திற்குரிய முக்கிய குறிப்புகளும், மொத்த அளவுகளும்
எசே 41:13-26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சற்றே உற்று நோக்குவோம்: தமது மகத்தான கிரியைகளுக்கடுத்த ஒவ்வொரு சிறிய காரியத்தையும், ஆண்டவர் எவ்வளவு கவனமாக தெளிவாகத் திட்டமிடுகிறார்! உன் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்தைக் குறித்தும் அவர் இவ்விதமாகவே நேரிடைத் திட்டமிடுகிறார். ஆகவே இனி உன் வாழ்க்கையில் நேரிடும் சிறிய காரியங்களையெல்லாம் அவர் பொருட்படுத்த மாட்டாரென்ற தவறான எண்ணம் உன் உள்ளத்தில் சோதனையாகத் தலைதூக்கும் பொழுதெல்லாம் இதை நினைத்துக் கொள்.

ஆதார சத்தியம்

"ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது." "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது." " ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" (மத் . 10:29-31)

செருபாவும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

ஆகஸ்ட்

மரதன் ஓட்டக்காரர்கள் களைப்படைந்ததும் ஓட்டத்தை நிறுத்த யோசிப்பார்கள். ஆனால் அனேகமான சக போட்டியாளர்கள் அவர்களை உற்சாகப்படுத்தி ஓடச் செய்வார்கள். நீங்கள் இதுவரை நன்றாக முயற்சித்திருக்கிறீர்கள். களைப்படைந்தால் பங்காளர் ஒருவரிடம் சென்று உங்களுக்காக உற்சாகமாக செபிக்கும்படி கேளுங்கள். நீங்கள் தொடங்கியதை நிறைவு செய்ய கர்த்தர் கிருபை செய்வார்.

9

இந்தப் பகுதியில் .....

எருசலேமுக்குத் திரும்புதல்.
தேவாலயம் மீண்டும் கட்டப்படல்.
எஸ்றா, நெகேமியா ஆகியோரால் ஆற்றப்பட்ட சேவைகள்.
எஸ்தரால் தவிர்க்கப்பட்ட இனப்படுகொலை.

நாள் 245 கர்த்தர் திரும்பி வருதல்

ஆலயத்தினருகிலுள்ள இரு கட்டிடங்கள்
எசே 42:1-14

ஆலயத்தின் எல்லைகளைக் குறிக்கும் அளவுகள்
எசே 42:15-20

ஆண்டவர் ஆலயத்திற்குத் திரும்பி வருதல்
எசே 43:1-12

பலிபீடம்
எசே 43:13-17

பலிபீடத்தைப் பிரதிஷ்டை செய்தல்
எசே 43:18-27

கிழக்கு வாசலின் பயன்
எசே 44:1-3

ஆலயத்தினுள்ளே அனுமதிபெற விதிமுறைகள்
எசே 44:4-9

லேவியர் தனிப்படுத்தப்படுதல்
எசே 44:10-14

ஆசாரியர்கள்
எசே 44:15-31

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

இந்தப் புதிய ஏற்பாட்டின் காலத்தில், கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் ஆண்டவரின் மகிமை வாசமாயிருப்பதில்லை. ஆனால் அவரை உண்மையாகத் தங்கள் ஆண்டவராக ஏற்றக் கொள்ளும் மக்களின் இருதயங்களில் அவர் வாசம் செய்கிறாரென்பதை இன்று ஆழ்ந்த சிந்தனை செய்வோம். நீயும் அவர்களில் ஒருவரா?

ஆதார சத்தியம்

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் அறியீர்களா? கியத்துக்குக் கொள்ளப் பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையனவுகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்". (1கொரி. 6:19,20)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

ஆலய வழிபாடு

நாள் 246

நிலத்தில் கர்த்தருக்குரிய பங்கு
எசே 45:1-6

அதிபதிக்குரிய பங்கு
எசே 45:7-8

நிறை கற்களும் அளவுகோல்களும்
எசே 45:9-15

அதிபதியின் கடமைகள்
எசே 45:16-17

பண்டிகைகள்
எசே 45:18-25

வழிபாட்டின் விதிமுறைகள்
எசே 46:1-12

அன்றாடக பலி
எசே 46:13-15

அதிபதியின் நிலம்
எசே 46:16-18

பலிகளைச் சமைக்கும் இடம்
எசே 46:19-24

ஆலயத்திலிருந்து பாய்ந்து செல்லும் நதி
எசே 47:1-12

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"நீங்கள் எங்கே ஆண்டவரைத் தொழுது கொள்ளுகிறீர்கள்?" இந்தக் கேள்வியை ஒரு கிறிஸ்தவர் இன்னொரு கிறிஸ்தவ நண்பரிடம் கேட்டார். அவர் கூறிய பதில், கேள்வி கேட்ட வரைத் திடுக்கிடச் செய்தது.
"நானா? நான் உல்ஸ்வொர்த்தில்: மேட்டு தெருவில், பேரூந்தில்: புகைவண்டித் தொடரில், அலுவலகத்தில்... என் வீட்டில் எங்கும், எவ்விடத்திலும்!" ஆம்! எங்கும் எவ்விடத்திலும் உன்னால் ஆண்டவரைத் தொழுது கொள்ள முடியாவிட்டால், ஒரு குறிப்பிட்ட இடத்திலும் உன்னால் அவரைத் தொழுது கொள்ளவே முடியாது.

ஆதார சத்தியம்

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்." (யோவான் 4:24)

செருபபேலும் குழுவினரும் திரும்புதல் சைரஸ், சகரியா, ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 247 நிலத்தைப் பங்கிடுதல்

நிலத்தின் எல்லைகள்
எசே 47:13-23

கோத்திரங்களுக்குள் நிலத்தைப் பங்கிடுதல்
எசே 48:1-9

ஆசாரியருக்கும் லேவியருக்குமுரிய பங்கு
எசே 48:10-20

அதிபதியின் பங்கு
எசே 48:21-22

பிற கோத்திரங்களுக்குரிய நிலம்
எசே 48:23-29

எருசலேமின் வாசல்கள்
எசே 48:30-35

எகிப்துக்கு விரோதமாக மேலும் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம்
எசே 29:17-21;30:1-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவருடைய தெய்வீக ஒழுங்கின்படி, எப்பொழுதும் ஆராதனை வேலைக்கு முன்னதாக அமையவேண்டும். முதலாவது ஆராதனைக்குரிய கட்டளைகள் கொடுக்கப்படுகின்றன. அதன்பின்னரே நிலத்தைப் பங்கிட்டுக் குடியிருக்கும் விதிமுறைகள் தரப்பட்டுள்ளன. உன் வாழ்க்கையில் எது முதலிடம் பெற்றுள்ளது? வேலையா? ஆராதனையா? முதலாவதாக நாம் ஆராதிக்க அழைக்கப்படுகிறோம்; பின்னரே உழைப்பாளிகளாக மாறவேண்டும். இந்த வரிசையை மாற்றியமைத்தால், ஆவிக்குரிய அனுபவங்கள் திவாலாகிப் போகும் நிலையடைவாய்!

ஆதார சத்தியம்

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோமர் 12:1)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

நேபுகாத் நேச்சாருடன் தேவன் இடைபடுதல் நாள் 248

நேபுகாத் நேச்சார் கண்ட இரண்டாவது கனவு
தானியேல் 4:4-18

தானியேல் கனவுக்குக் கொடுத்த விளக்கம்
தானி 4:19-27

நேபுகாத் நேச்சாரின் புத்தி சுவாதீனமற்ற ஏழு ஆண்டுகள்
தானி 4:28-33

அவன் புத்தி தெளிந்து ஆண்டவரைப் புகழுதல்
தானி 4:34-37

யோயாக்கீனுடைய விடுதலை
11இராஜா 25:27-30; எரே 52:31-34

நான்கு ஜீவன்களைப் பற்றிய தானியேலின் தரிசனம்
தானி 7:1-8

நித்தியமான ஆண்டவரைக் குறித்து தானியேலின் தரிசனம்
தானி 7:9-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதிமொழி 16:18) என்று கூறும் வேதவசனம் எவ்வளவு சத்தியமானது! லூசிபரின் பெருமை, மோட்சத்தில் அவனுக்கிருந்த உன்னதமான இடத்தை இழக்கச்செய்து, நித்திய ஆக்கினையடையவும் வழிவகுத்தது. நேபுகாத் நேசாரின் பெருமை ஏழு ஆண்டுகள் அவனது சிம்மாசனத்தையும் இராஜ்ய பாரத்தையும் இழக்கச்செய்தது. உன் வாழ்க்கையில் பெருமை எதை இழக்கச் செய்துள்ளது?

ஆதார சத்தியம்

"...ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்." (யாக்கோபு. 4:6-7)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ், சகரியா, ஆகாய். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 249 சிறையிருப்பின் சங்கீதங்கள்

தரிசனங்களின் விளக்கம்
தானி 7:15-28

சிறையிருப்பின் சங்கீதங்கள்
நன்றி கூறிப்பாடும் ஒரு பாடல்
சங் 67:1-7

இரக்கத்திற்காக ஜெபம்
சங் 123:1-4

உதவிகோரிச் செய்யும் ஒரு ஜெபம்
சங் 130:1-8

இஸ்ரவேலரின் புலம்பல்
சங் 137:1-9

ஒரு ஆட்டுக்கடா, ஒரு வெள்ளாட்டுக்கடா பற்றிய தானியேலின் தரிசனம்
தனி 8:1-14

அத்தரிசனத்தின் விளக்கம்
தானி 8:1-14

அத்தரிசனத்தின் விளக்கம்
தானி 8:15-27

பாபிலோனின் வீழ்ச்சி பற்றிய தீர்க்க தரிசனம் கூறப்படுதல்
ஏசா 13:17-22; எரே 25:12-14; 50:1-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சில உன்னதமான சங்கீதங்கள் உபத்திரவத்தின் உச்சக்கட்டத்தில் பிறந்தவை. இப்பொழுது, இந்த வினாடியில், உபத்திரவத்தின் பிடியில் இருக்கிறீர்களா? நீங்களும் சங்கீதக்காரனின் முன்மாதிரியைப் பின்பற்றக் கூடாதா? அவரது சங்கீதங்கள் முதலில் அவரது துன்பத்தைப் பிரதிபலிப்பவையாகத் துவக்கப்பட்டாலும், இறுதியில், தேவனையே மையமாகக் கொண்டு, அவரைப் பிரதிபலிப்பவையாகவே முடிவடைகின்றன. இவை, உங்கள் வேதனைகளைத் துதியின் பாடல்களாக மாற்றியமைக்க உதவும்.

ஆதார சத்தியம்

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர். சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். " (சங் 46:1,11)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

இரண்டு ஏற்பாடுகள்



பழைய ஏற்பாடு
அ) மோசேயினால் மத்தியஸ்தம் செய்யப்பட்டது. (யாத். 19; யோவான் 1:17; கலா. 3:19) ஆ) நிபந்தனைக்குட்பட்டது. (உபா. 28) இ) நீதியைப் பிறப்பிக்க முடியாதது. (எபி. 8:8) ஈ) கற்பலகையில் எழுதப்பட்டது. (யாத். 32:15)



புதிய ஏற்பாடு
அ) கிறிஸ்துவினால் மத்தியஸ்தம் செய்யப்பட்டது. (எபி. 9:15; யோவான் 1:17) ஆ) நிபந்தனையற்றது. (எபி. 8:9) இ) நீதியை உண்டாக்கக் கூடியது. (எபி. 8:11) ஈ) ஜீவனுள்ள இருதயத்தில் எழுதப்பட்டது. (எபி. 8:10)

நாள் 250 பாபிலோன் நியாயத் தீர்ப்புப் பெறுதல்

பாபிலோனின் வீழ்ச்சி பற்றிய தீர்க்க தரிசனம்
எரே 50:9-16

இஸ்ரவேல் திரும்பி வருவதைக் குறித்த தீர்க்கதரிசனம்
எரே 50:17-20

பாபிலோனுக்கு ஆண்டவரின் நியாயத் தீர்ப்பு
எரே 50:21-46

பாபிலோனுக்கு இன்னும் தொடர்ந்து கிடைக்கும் நியாயத்தீர்ப்பு
எரே 51:1-14

தேவனுக்கு ஒரு துதியின் கீதம்
எரே 51:15-19

ஆண்டவரின் தண்டாயுதம்
எரே 51:20-23

பாபிலோனின் தண்டனை
எரே 51:24-35

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"பாவம், தேவ பயமற்ற செயல்களை தேவன் ஏன் உடனுக்குடன் கண்டிக்காது, சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கிறார்?" இந்தக் கேள்வி உங்கள் உள்ளத்தில் எப்போதாவது தோன்றியதுண்டா? அப்படியானால், இதையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் - தேவனுக்கு விரோதமாக எழும்பும் எந்தச் சாம்ராஜ்யமும் ஒருநாள் வீழ்ச்சியடைந்தே தீரும். பாபிலோனின் முடிவு தான், இன்றைய தேவனற்ற நாடுகளுக்கும் நிச்சயமாக நிகழும். தேவனின் பொறுமையைக் குறித்துப் பொறுமையாக இருக்கக் கற்றுக் கொள்.

ஆதார சத்தியம்

"துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." (சங். 1:1,2)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

பெல்ஷாத்சார் அளித்த விருந்து

நாள் 251

இஸ்ரவேலுக்கு உதவி
எரே 51:36-40

பாபிலோனின் விதி
எரே 51:41-49

தேவனின் செய்தி
எரே 51:50-53

பாபிலோனின் அழிவு நிறைவடைதல்
எரே 51:54-58, 60-64

பெல்ஷாத்சாரின் விருந்து
தானி 5:1-4

சுவர்மீது எழுதப்பட்ட எழுத்துக்கள்
தானி 5:5-12

பெல்ஷாத்சார் தானியேலை அழைத்தல்
தானி 5:13-16

தானியேல் அளித்த விளக்கம்
தானி 5:17-29

தரியு ஆட்சிக்கு வருதல்
தானி 5:30-31

கோரேஸ், தரியுவின் ஆட்சிக் காலம்
ஏசா 44:28; தானி 1:21;11:1

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தேவன் தமது சொந்த விரலினாலேயே, முக்கியமான சிறப்புச் செய்திகளை மனிதனுக்கு மூன்று தருணங்களில் எழுதியளித்ததாக வேதத்தில் காண்கிறோம். உங்களால் அவற்றை நினைவுக்குக் கொண்டுவர முடிகிறதா? அவற்றில் ஒன்றுதான் பெல்ஷாத்சார் விருந்து சமயத்தில் தேவனால் எழுதப்பட்ட செய்தி. மற்றத் தருணங்களை யாத். 31:18 லும், யோவான் 8:6 லுமாகக் காண்கிறோம். அவற்றை உடனே எடுத்துப்பாருங்கள்.

ஆதார சத்தியம்

"அந்த நாட்களுக்குப் பின்பு நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்த பின்பு, அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்." (எபி. 10:16-17)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
செருபாவும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 தெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 252 ஆலயத்தைத் திரும்பக் கட்டுவதற்கான கட்டளை

தானியேலின் ஜெபம்
தானி 9:1-19

காபிரியேல் அளித்த விளக்கம்
தானி 9:20-27

கலங்கி நின்ற ஒரு இளைஞனின் ஜெபம்
சங் 102:1-28

ஆலயத்தை மீண்டும் கட்டுமாறு மக்களுக்குச் சவால் கொடுத்தல்
எஸ்றா 5:13; 11நாளா 36:22-23; எஸ்றா 1:1-4

விடுதலைக்காக ஏறெடுக்கப்பட்ட ஒரு ஜெபம்
சங் 126:1-6

தேசத்தின் நலனுக்காக ஏறெடுக்கப்பட்ட ஒரு ஜெபம்
சங் 85:1-13

சவாலுக்கு மக்கள் அளித்த பதில்
எஸ்றா 1:5-6

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பழைய ஏற்பாட்டுப்புத்தகங்களைப் படிக்கும்போது வலியுறுத்தப்படும் ஒரு சத்தியம் எதுவெனில், தேவனின் அளவுகடந்த பொறுமையும், முடிவற்ற இரக்கமுமே. மீண்டும், மீண்டும் பலமுறைகளில் அவரது மக்களால் அவர் ஏமாற்றமடைந்த போதிலும், அவர் அவர்களைத் தள்ளிவிடவே இல்லை. அவர் எப்படியிருந்தாரோ அப்படியே இன்றும் இருக்கிறார்: என்றும் அவ்வாறே இருப்பார். அல்லேலூயா!

ஆதார சத்தியம்

"தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய், நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்." (எபேசி. 2:4,5)

வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேட தன்மை
எஸ்றா நெகேமியா பழைய ஏற்பாட்டில் 1ஆம் 15ஆம் புத்தகங்கள் 10ஆம் 11ஆம் வரலாற்றுப் புத்தகங்கள்	எஸ்றா. நெகேமியா	தேவ வாக்குத்தத்தின் பிரகாரம் சில யூதர்கள் தேவாலயத்தை கட்டுவதற்காகத் திரும்பினார்கள் மக்கள் முழுமையாகக் சீழ்ப்படிய வேண்டுமென்று வேண்டினர்.

சிங்கங்களின் கெபியில் தானியேல் நாள் 253

ஆலயத்தின் பாத்திரங்கள் திரும்பப் பெறுதல்
எஸ்றா 1:7-11; 5:14-16

கோரேஸின் கட்டளை
எஸ்றா 6:3-5

தானியேல் சிங்கங்களுக்கு இரையாகப் போடப்படுதல்
தானி 6:1-18

அவனது விடுதலையும், விளைவும்
தானி 6:19-28

தானியேலின் மூன்று வார துக்கம்
தானி 10:1-3

இதெக்கேல் ஆற்றங்கரையில் தானியேல் கண்ட தரிசனம்
தானி 10:4-20

விளக்கம் வெளிப்படுத்தப்பட வாக்குறுதி
தானி 10:21

வருங்கால இராஜ்ஜியங்களைக் குறித்த வெளிப்பாடு
தானி 11:2-4

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சிங்கங்களின் கெபியில் ஒரு இரவைக் கழிக்க வேண்டிய அனுபவம் உங்களுக்கு இல்லாதிருக்கலாம்; ஆயினும், 'எவனை விழுங்கலாமென்று வகைதேடிச் சுற்றித்திரிகின்ற' 'கெர்ச்சிக்கிற சிங்கமாகிய' சாத்தானை நிச்சயமாக சந்தித்திருப்பீர்கள். மனந்தளரவேண்டாம் - திடன் கொள்ளுங்கள். தானியேலுக்குச் செய்த காரியத்தை கர்த்தர் உங்களுக்கும் செய்வார்.

ஆதார சத்தியம்

"இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே." (ரோமர். 8:37)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
எலுசலேமைக் கட்டும் பொழுது நெகேமியாஇழிவுகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் யேசுவைப் பின்பற்றுகிறவர்களும் இதை எதிர் பார்க்க வேண்டும் மத் 5:11	எஸ்றாவும் நெகேமியாவும் தேவ பின்னுக்கென்று கட்டுகிறார்கள் ஆசாரியான எஸ்றா வழிபாடு பரிசுத் தம் தேவனுக்கென்ற முழுமையான சீழ்ப்படிவு ஆகும். என்பவைகளைப் போதிக்கின்றார்.	நெகேமியா 9:5-6

நாள் 254 கடைசி காலங்கள்

எகிப்து, சீரியா இராஜ்யங்கள்
தானி 11:5-20

சீரியாவின் பொல்லாத இராஜா
தானி 11:21-24

அவன் எகிப்தின் மீது படையெடுப்பான்
தானி 11:25-30

பாழாக்கும் அருவருப்பு
தானி 11:31-35

அந்திக் கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்க தரிசனம்
தானி 11:36-39

அவனது இறுதி மணிநேரம்
தானி 11:40-45

கடைசி காலங்கள்
தானி 12-1-13

திரும்பி வரும் அகதிகளின் பட்டியல், இஸ்ரவேல் மக்கள்
எஸ்றா 2:1-20

பற்பல பட்டணத்து மக்கள்
எஸ்றா 2:21-35

ஆசாரியர்கள்
எஸ்றா 2:36-39

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எந்தவிதத் தவறும் புரியாதவனாக வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெகுசிலரில் தானியேலும் ஒருவன் என்ற கூற்று உண்மையானது. அவனது அற்புதமான வாழ்க்கையின் இரகசியம் என்ன? அநேக காரணங்கள் கூறலாம்; ஆயினும் குறிப்பாகக் கூறவேண்டியது அவனது ஜெப வாழ்க்கை. உன் ஜெப வாழ்க்கையைக் குறித்த திருப்தி உனக்கு உண்டா? இல்லையெனில், இன்றே, அதைச் செவ்வையாக்கக் கூடிய நல்ல காரியங்களைத் திட்டம் செய்துகொள்.

ஆதார சத்தியம்

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பறு நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்." (1யோவா 5:14,15)

செருலேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

திரும்பி வருதல்



கோரேஸ் ராஜ்ய பாரம் பண்ணும் முதல் வருடத்தில், யூதர்கள் திரும்பி வரவும், தேவாலயத்தை மீண்டும் கட்டவும் அனுமதியளிக்கும் ஆணையைப் பிறப்பித்தான்.

சிறையிருப்பின் காலம் எவ்வளவு என்பதை எரேமியா ஏற்கனவே முன்னறிவித்திருந்தான். (கவனியுங்கள்: எரே. 25:11,12; 29:10)

170 ஆண்டுகளுக்கு முன்னரே ஏசாயா, கோரேசைப் பெயர் குறிப்பிட்டுத் தீர்க்க தரிசனம் கூறியுள்ளான். (கவனியுங்கள்: ஏசா. 44:28;45:1)

யூதரில் மீதியானவர்கள் தனித் தனியாக மூன்று பிரிவுகளாகத் திரும்பி வருகின்றனர்.

முதல் பிரிவு கி. மு. 536இல் செருபாபேலின் கீழ் திரும்பியது. கி.மு. 458இல் எஸ்றா, இரண்டாவது பிரிவை வழி நடத்தினான். கி.மு. 445இல் நெகேமியா மூன்றாவது அணியைக் கொண்டு வந்தான்.

கி.மு. 535இல் ஆலயக் கட்டுமானப் பணி துவங்கியது. ஆயினும் சாத்தானின் பல்வேறு நடவடிக்கைகளினால், அப்பணி சிலகாலம் தடைப்பட்டது. இந்தக் காலகட்டத்தில், ஆகாய், சகரியா என்பவர்கள் தளர்ந்து போன மீதியான யூத மக்களைத் திடப்படுத்தி, ஊழியம் செய்தனர்.

நாள் 255 நெகேமியா பட்டியலைத் தணிக்கை செய்கிறான்

லேவியர், பாடகர், வாயிற்காப்போர்
எஸ்றா 20:40-42

ஆலயப் பணியாளரும், சாலமோனின் வேலைக்காரரின் பிள்ளைகளும்
எஸ்றா 2:43-58

நெகேமியா குடும்ப வரலாறுகளைச் சரி பார்க்கிறான்
நெகே 7:5-7

சிறையிருப்பிலிருந்து திரும்பியவர்களின் இன்னொரு பட்டியல்
நெகே 7:8-69

முன்னோர்களைப் பற்றிய ஆதாரம் இல்லை
எஸ்றா 2:59-63

சிறையிருப்பிலிருந்து திரும்பியவர்கள் ஆலயத்திற்கு வருதல்
எஸ்றா 2:64-70

ஆலயத்தின் திருப்பணிக்கு அநேகர் அள்ளிக் கொடுத்தனர்
நெகே 7:70-72

ஆசாரியர், லேவியரின் பட்டியல்
நெகே 12:1-23

கடமைகள் குறிக்கப்படுதல்
நெகே 12:24-26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எருசலேமுக்குத் திரும்பிவந்த ஒவ்வொருவரும் தேவனின் உரிமை பெற்றவர்களாகத் தானிருக்க வேண்டுமென்பதில் நெகேமியா மிகக் கவனம் செலுத்துகிறான்: ஆகவே தான் ஒவ்வொரு பெயரையும் தணிக்கை செய்யும் மிகக் கடினமான வேலையை மனந்தளராது செய்கிறான். புதிய எருசலேமுக்குள் செல்லத் தேவன் தந்த உரிமை உனக்குக் கிடைத்திருக்கிறதா? அந்த நேரம் நெருங்கும்போது உன் நிலை என்ன? உன் பெயர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் பட்டியலில் உண்டா?

ஆதார சத்தியம்

"...ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்." (லூக். 10:20)

	நாகூம்		செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்		யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

ஆலயத்தைப் புதுப்பிக்கும் பணிக்குரிய திட்டங்கள் துவங்குகின்றன **நாள் 256**

சிறையிருப்பிலிருந்து திரும்பியவர்கள் பலிபீடத்தை மீண்டும் கட்டுகின்றனர்
எஸ்றா 3:1-7

எருசலேமுக்குப் புகழாரம்
சங். 87:1-7

ஆலயம் புதுப்பிக்கும் பணி துவங்குதல்
எஸ்றா 3:8-9

ஆசாரியரும் லேவியரும் தேவனைப் புகழுதல்
எஸ்றா 3:10-13

ஆண்டவரின் ஆலயத்தைக் குறித்த வாஞ்சை
சங் 84:1-12

தேவனின் நன்மைகளைப் போற்றுதல்
சங் 107:1-43

நன்றி ஏறெடுத்துத் துதிக்கும் ஒரு பாடல்
சங் 66:1-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எருசலேமுக்குத் திரும்பி வந்த இஸ்ரவேலர் செய்த முதல் காரியம். பலிபீடத்தை செப்பனிட்டதாகும். மற்ற வேலைகளுக்கெல்லாம் முன்னதாக ஆராதனைக்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டுமென்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இன்று நீங்கள் செய்யவேண்டிய ஒவ்வொரு காரியத்தையும் குறிப்பெடுங்கள். அவற்றைச் செய்ய ஆரம்பிக்கு முன்னர், ஒவ்வொரு காரியத்தையும் தேவனின் கரத்தில் ஒப்படையுங்கள். இதைப் பின்பற்றினால், வாழ்க்கை எளிதாக, நல்ல முறையில் அமைவதைக் காண்பீர்கள்.

ஆதார சத்தியம்

"நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து, குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள். அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே." (சங். 95:6-7)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்சியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 257

வேலைக்கு எதிர்ப்பு

சமாரியரின் இடையூறு
எஸ்றா 4:1-5

ஆகாயும், சகரியாவும்
எஸ்றா 5:1

ஆலயத்தை அலட்சியப்படுத்தியதற்காக மக்கள் கடிந்துகொள்ளப்படல்
ஆகாய் 1:1-10

தேவனின் பிள்ளைகளின் பாதுகாப்பு
சங் 125:1-5

குற்றஞ் சாட்டும் கடிதங்கள்
எஸ்றா 4:6-16

செருபாபேலும், யோசுவாவும்
எஸ்றா 5:2; ஆகாய்: 1:11-15

வருங்கால ஆலயத்தின் மகிமை
ஆகாய் 2:1-9

சகரியாவின் விண்ணப்பம்
சகரி 1:1-6

அர்த சஷ்டாவின் உத்தரவு
எஸ்றா 4:17-22

வேலை தடைப்பட்ட ஏழு ஆண்டுகள்
எஸ்றா 4:23-24

இஸ்ரவேலரின் பகைஞருக்கு எதிராக ஒரு ஜெபம்
சங் 129:1-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவரின் வேலைகள் ஒவ்வொன்றும் எதிர்ப்புக்குள்ளாவது உறுதி. ஒருவேளை, உங்கள் வாழ்க்கையில், இந்த வினாடியில், நீங்கள் இதை அனுபவித்து உணர்ந்து கொண்டிருக்கலாம். மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். எதிர்ப்புகள் உங்களுக்கு எதிராகச் செயல்படுவது போலத் தோன்றினாலும், உண்மையில் அவை உங்களுக்காகவே செயல்படுகின்றன. இந்த எதிர்ப்புகளே, நீங்கள் சுயபெலத்தைச் சாராமல், ஆண்டவர் மீது அதிகமாகச் சார்ந்து கொள்ள உதவுகின்றன.

ஆதார சத்தியம்

"இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால், நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்		விசேடதன்மை
ஆகாய்த் சகரியா 37 ஆவது 38ஆவது புத்தகங்கள் தீர்க்க தரிசனப் புத்தகங்களில் 15ஆவதும், 16ஆவதும் புத்தகங்கள்		ஆகாய் கர்த்தர் யூத மக்களை தனது பிள்ளைகளாகத் தெரிந்தெடுத்துள்ளார் என்பதில் தெளிவாயிருந்தார். அது போல கிறிஸ்து தனது சீடர்களைத் தெரிந்து கொண்டார். 15:16

சகரியாவின் தரிசனங்கள் நாள் 258

ஆகாய் ஆசாரியரிடம் நேருக்கு நேர் இடைபடுகிறான்
ஆகாய் 2:10-14

ஆண்டவர் ஆசீர்வாதத்தை வாக்குப் பண்ணு கிறார்
ஆகாய் 2:15-23

குதிரைகளைப் பற்றிய சகரியாவின் தரிசனம்
சகரி 1:7-17

செருபாபேலுக்கு ஆண்டவரின் வாக்குறுதி
சக 4:6-10

கொம்புகளைக் குறித்த சகரியாவின் தரிசனம்
சகரி 1:18-21

அளவு நூலைக் குறித்த அவரது தரிசனம்
சகரி 2:1-13

பிரதான ஆசாரியனைக் குறித்த அவரது தரிசனம்
சகரி 3:1-10

பொன் குத்துவிளக்கைக் குறித்த அவரது தரிசனம்
சுக 4:1-5, 11-14

பறக்கும் சுருளைப் பற்றிய அவரது தரிசனம்
சக 5:1-4

மரக்காலிலுள்ள பெண்ணைப் பற்றிய அவரது தரிசனம்
சக 5:5-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் 'கர்த்தர் சொல்லுகிறதாவது' என்ற பதம் 1904 தடவைகள் வருகின்றன: சகரியா மட்டும் இந்தப் பதம் அல்லது இதற்கு ஒத்த கருத்துள்ள பதத்தை ஏறத்தாழ 90 முறைகள் பயன்படுத்துகிறார். இன்றோ, எத்தனையோ பேர் நவீன பிரசங்க பீடங்களிலிருந்து 'கர்த்தர் சொல்லுகிறதை' அதிகாரத்துடன் மக்களுக்குக் கூறமுடியாத நிலையிலிருப்பது எத்தனை விசனமான காரியம்! தற்கால சபைகளுக்கும், 'கர்த்தர் சொல்லுவதை', பழைய ஏற்பாட்டின் அதிகாரத்துடன் கூறும் நிலையை ஆண்டவர் தாமே அருளிச் செய்ய வேண்டுமென்று பாரத்துடன் ஜெபியுங்கள்.

ஆதார சத்தியம்

"இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப் போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்." (மத். 7:28,29)

இயேசுவும் தீர்க்கதரிசனமும்	போதனை	மனன வசனம்
சகரியா பல தடவைகள் இயேசுவைக் குறித்துப் பேசியுள்ளார். இராஜ ஆகாரியன் 6:13 கழுதையில் ஏறிவரும் தாழ்மையான இராஜா 9:9-10 30 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்ட மேய்ப்பன் (11:4-13) உருவப்பட்டான்	ஆகாய் யூதர்களை பலப்படுத்தி தேவாலயத்தை கட்ட முயற்சித்தார். சகரியாவை இதை நிலைப்படுத்தி தேவனுடைய மக்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறார்.	ஆகாப் 2:23

நாள் 259 கட்டளை கண்டுபிடிக்கப்பட்டது

நான்கு இரதங்களைக் குறித்த தரிசனம்
சக 6:1-8

யோசுவாவுக்கு கிரீடம் சூட்டப்படுதல்
சக 6:9-15

தத்னாயும் சேத்தார் பொஸ்னாயும் கேட்ட கேள்விகள்
எஸ்றா 5:3-4

தரியுவிடம் முறையிடுதல்
எஸ்றா 5:5-12 :17

கோரேசின் கட்டளை கண்டுபிடிக்கப்படுதல்
எஸ்றா 6:1-2

தரியு அத்துடன் சேர்த்துக்கொண்டவை
எஸ்றா 6:6-12

தத்னாய், சேத்தார் பொஸ்னாயின் ஒத்துழைப்பு
எஸ்றா 6:13-14

உண்மையற்ற உபவாசம் கண்டிக்கப்படுதல்
சக 7:1-7

சிறையிருப்பின் காரணம்
சக 7:8-14

கர்த்தரின் வாக்குத்தத்தம்
சக 8:1-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு சிறந்த தகப்பனுக்கு இருக்கவேண்டிய அத்தியாவசியமான தனித்தன்மைகள் இரண்டு: பிள்ளைகளின் ஒழுக்கத்தில் கண்டிப்பான உறுதி: ஆனால் அதேசமயம் தேவைப்படும்போது ஊக்க மளித்து உற்சாகப்படுத்த முன்வருதல் மிக அவசியம். தேவனை ஒழுக்கத்திக்கடுத்த காரி யத்தில் கண்டிப்புள்ளவராக மட்டுமே சிலர் எண்ணிவிடுகின்றனர். ஆனால் மீண்டுமொரு முறை சகரியா 8:15 ஐப் பாருங்கள். ஆம்! தேவன் கண்டித்து ஒழுக்கம் கற்றுக்கொடுக்கும் தகப்பன் மட்டுமல்ல; அதேசமயம் அவர் ஊக்கமும் உற்சாக முமளிக்கும். சரிசனையுள்ள ஒரு தகப்பனும் ஆவார்.

ஆதார சத்தியம்

"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல கர்த்தர், தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்... கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும். அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது." (சங். 103:13,17)

	நாகூம்		செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்		யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

ஆலயப்பணி நிறைவு பெறுதல்

நாள் 260

ஆண்டவர் இஸ்ரவேலை மீண்டும் கட்டுமாறு வாக்குறுதி அளித்தல்
சக 8:16-23

ஆலயம் கட்டி முடிவு பெறுதல்
எஸ்றா 6:15

ஆலயப் பிரதிஷ்டை
எஸ்றா 6:16-18

பஸ்கா ஆசரிப்பு
எஸ்றா 6:19-22

இரட்சகராகிய தேவனைத் துதித்தல்
சங் 146:1-10

கர்த்தரைத் துதித்தல்
சங் 111:1-10

நீதிமானின் மகிழ்ச்சி
சங் 112:1-10

தேவனின் நற்குணத்தைப் புகழ்ந்து துதித்தல்
சக 113:1-9

மரணத்தின் பிடியிலிருந்து விடுபட்ட மனிதனொருவன் தேவனைத் துதித்தல்
சக 116:1-19

கர்த்தரைத் துதித்துப் போற்றுதல்
சக 117:1-2

அண்டை நாடுகளின் மீதுவரும் நியாயத் தீர்ப்பு
சக 9:1-8

ஒரு தெய்வீக விடுதலையளிப்பவர்
சக 9:9-17

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒருவழியாக ஆலயக் கட்டுமானப்பணி, ஆரம்பிக்கப்பட்டு 23 முழு ஆண்டுகள் கடந்த பின்னர் நிறைவு பெற்றுவிட்டது. தேவனின் திட்டங்களும் நோக்கங்களும் தடைசெய்யப்படலாம்: பிற்காலத்துக்கு ஒத்திவைக்கப்படலாம்: ஆயினும் இறுதியில் அது நிறைவேறியே தீரும். உன் வாழ்க்கையில் ஆண்டவருடைய திட்டம் நிறைவேறாதவாறு தடைகள் எழும்பியிருக்கின்றனவா? மனந்தளராமல், அவரையே பற்றிக்கொள். நிச்சயமாக அது நிறைவேறும் நாளொன்று வந்தே தீரும்.

ஆதார சத்தியம்

"உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுக் கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி...." (பிலிப். 1:5)

செருபாவும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ், சகரியா, ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்சியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 261 இஸ்ரவேலின் விடுதலை

கர்த்தர் விடுதலையை வாக்குப்பண்ணுதல்
சக 10:1-12

வரப்போகும் அழிவு
சக 11:1-3

இரு மேய்ப்பர்கள்
சக 11:4-17

இஸ்ரவேலின் பகைஞரின் தண்டனை
சக 12:1-8

இஸ்ரவேலின் மனஸ்தாபமும் துக்கமும்
சக 12:9-14

இஸ்ரவேலின் சுத்திகரிப்பு
சக 13:1-6

கர்த்தரின் மேய்ப்பனைக் கொல்லக் கட்டளை
சக 13:7-9

எருசலேமும் பிறதேசங்களும்
சக 14:1-15

இஸ்ரவேல் மறுபடியும் கட்டப்படுதல்
சக 14:16-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அணு ஆயுத அழிவினால், உலக சரித்திரம் அதன் உச்ச கட்டத்தையடையுமென்று மனிதர் முன்னறிவிக்கின்றனர். ஆனால், தனது குமாரனின் வருகையின் போதுதான், உலக சரித்திரம் அதன் உச்சகட்டத்தை அடையுமென்று தேவன் முன்னறிவிக்கிறார். நீங்கள் யாரை நம்புகிறீர்கள். மனிதரையா? தேவனையா? சகரியா 14:1-9 வசனங்களை உங்கள் முன்னதாக வைத்துக்கொள்ளுங்கள். எந்தப் பெரிய அணு ஆயுதத்தின் பயமுறுத்தலின் மத்தியிலும். அது உங்களை உறுதியாக நிற்குமாறு காத்துக்கொள்ளும்.

ஆதார சத்தியம்

"ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு...." (1 தெச. 4:16-17)

வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
எஸ்தர் 17ஆவது பழைய ஏற்பாட்டுப் புத்தகம் வரலாற்றுப் புத்தகங்களில் 12ஆவது ஆகும்.	அகஸ்வேருராஜா அரசியான வஸ்தி எஸ்தர். மொர்தெகாய். ஆமான்	தேவனைப் பற்றி இப்புத்தகத்தில் எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. ஆனால் ஆரம்பம் தொடக்கம் முடிவுவரை தேவனுடைய கரம் செயற்படுகின்றது.

ஒரு அழகுப் போட்டி!

நாள் 262

அகாஸ்வேருவின் கருத்து
எஸ்தர் 1:1-8

வஸ்தியின் எதிர்ப்பும் மறுப்பும்
எஸ்தர் 1:9-12

வஸ்தி இராஜமேன்மையை இழத்தல்
எஸ் 1:13-22

எஸ்தர் ராணியாக்கப்படுதல்
எஸ் 2:12-17

எஸ்தரைக் கனம்பண்ண விருந்து
எஸ் 2:18-20

புதிய ராணியைத் தேடுதல்
எஸ் 2:1-4

எஸ்தர் ஆசான் அரண்மனைக்குக் கொண்டுவரப்படுதல்
எஸ் 2:5,7-11

மன்னனின் உயிரை மொர்தேகாய் காப்பாற்றுதல்
எஸ் 2:21-23

ஆமானின் சூழ்ச்சி
எஸ் 3:1-7

ஆமான் மன்னனின் ஆதரவைப் பெறுதல்
எஸ் 3:8-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

முதன் முதலாக நடந்த உலக அழகிப் போட்டியில், மிகச்சிறந்த வெற்றியையடைகிறாள் எஸ்தர். ஆயினும், அவளது உண்மையான அழகு, அவளது தோற்றத்திலல்ல, அவளது குண நலனிலேயே அமைந்துள்ளது. மனிதன் முகத்தைப் பார்க்கிறான்: கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் (1சாமு. 16:7).

ஆதார சத்தியம்

"...புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது: அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது." (1 பேது. 3:3-4)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
எஸ்தர் தனது வாழ்வில் பெரிய தொரு ஆபத்து நிறைந்த தீர்மானத்தை செய்கிறாள் அதுபோன்று இயேசு தன் ஜீவனைக் கொடுத்தார்.	இப்புத்தகம் யூத பண்டிகையான பூர்வ வரலாற்றை விளக்குகிறது மொர்கயின் சாதுர்யமும் தைரியமும் இல்லாவிட்டால் யூத இனம் அழிந்திருக்கும்	எஸ்தர் 4:14

தேவனுடைக்காக கட்டுதல்

கி.மு. 446இல் ஆனானி என்ற யூதன் மூலமாக, எருசலேமின் பரிதாபமான நிலையைக் குறித்து நெகேமியா அறிந்து கொள்ளுகிறான். அச்செய்தி அவன் உள்ளத்தை உடைக்கிறது (1:3,4). தனது மக்களுக்காக மன்றாடுமாறும், பாவமன்னிப்புக்கோருமாறும், நெகேமியா ஜெபத்தில் போராட ஆரம்பிக்கிறான் (1:6-11).

கி.மு. 445இல், ஏப்ரல் மாதத்தில், யூதாவுக்குச் செல்லத் தனக்கு அனுமதி தருமாறு மன்னனிடம் கேட்கிறான் (2:5). இதற்குச் சம்மதமளித்த மன்னன் அர்தசஷ்டா, அவனுக்கு இரு கடிதங்களையும் கொடுக்கிறான். ஒரு கடிதம், நெகேமியாவுக்கு நாட்டினுள் நுழையும் அதிகாரமளிக்கும் பாஸ்போர்ட்; இது பெர்சிய அதிகாரிகளுக்கு எழுதப் பட்டது. அவர்கள் ஐபிராத்து நதியின் மேற்புறமிருந்தார்கள். அடுத்த கடிதம், கட்டுமானப் பணிக்குத் தேவையான மரங்களைக் கொடுக்குமாறு, ஆசாப் என்ற வனத்துறை அதிகாரிக்கு எழுதப் பட்டிருந்தது.

எருசலேமைச் சென்றடைந்த உடனே, நெகேமியா நகரத்தினுள் நள்ளிரவு சுற்றுப் பயணமாகச் செல்லுகிறான். மறுநாட் காலையிலேயே, தனது பாரத்தை யூதாவின் அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளுகிறான். (2:17,18)

யூதரில் மீதியானவர்கள் தனித் தனியாக மூன்று பிரிவுகளாகத் திரும்பி வருகின்றனர்.

முதல் பிரிவு கி. மு. 536இல் செருபாபேலின் கீழ்த் திரும்பியது. கி.மு. 458ல் எஸ்றா, இரண்டாவது பிரிவை வழி நடத்தினான். கி.மு. 445இல் நெகேமியா மூன்றாவது அணியைக் கொண்டு வந்தான்.

கி.மு. 535இல் ஆலயக் கட்டுமானப் பணி துவங்கியது. ஆயினும் சாத்தானின் பல்வேறு நடவடிக்கைகளினால், அப்பணி சிலகாலம் தடைப்பட்டது. இந்தக் காலகட்டத்தில், ஆகாய், சகரியா என்பவர்கள் தளர்ந்து போன மீதியான யூத மக்களைத் திடப்படுத்தி, ஊழியம் செய்தனர்.



திட்டங்கள் திருப்பமடைகின்றன

நாள் 263

சகல யூதரையும் சங்கரிக்கக் கட்டளை
எஸ் 3:12-15

மொர்தேகாய் எஸ்தரின் உதவியை நாடுதல்
எஸ் 4:1-17

எஸ்தரின் அழைப்பு
எஸ் 5:1-8

மொர்தேகாய் மீது ஆமானின் சீற்றம்
எஸ் 5:9-14

மன்னனின் தூக்கமற்ற இரவு
எஸ் 6:1-3

மொர்தேகாய் கனம் பண்ணு தல்
எஸ் 6:4-14

ஆமான் குற்றஞ் சாட்டப்படுதல்
எஸ் 7:1-6

ஆமான் தூக்கிலிடப்படுதல்
எஸ் 7:7-10

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஜெபத்தில் உனக்கு நம்பிக்கையுண்டா? உண்மையான நம்பிக்கை இருக்கிறதா? நடைமுறையிலில்லாத ஒரு விண்ணப்பத்தை, மன்னனைப் பார்க்கக் கூடாத வேளையில் சென்று பார்த்து, நிறைவேற்றும்படி கேட்டும் அரியதொரு காரியத்தைச் செய்வதற்கு எஸ்தருக்குத் துணிவளித்தது. ஜெபத்தின் மீது அவள் கொண்டிருந்த நம்பிக்கையே. விசுவாசம் காணக்கூடாததைக் காண்கிறது; நம்பக் கூடாததை நம்புகிறது; பெறக்கூடாததைப் பெற்றுக் கொள்கிறது என்பதை வலியுறுத்தும் வசனங்கள் எஸ்தர் 5:1-8இல் காணப்படுகின்றன: அவற்றை உங்கள் வேதாகமத்தில் கோடிட்டுக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். அது உங்கள் விசுவாசத்தை எப்பொழுதும் தூண்டிக் கொண்டிருக்கும்.

ஆதார சத்தியம்

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால் கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிற வனுக்குத் திறக்கப்படும்." (மத். 7:7-8)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ், சகரியா, ஆகாய். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 264 யூதர்களின் வெற்றி

மன்னனின் ஆணை
எஸ் 8:1-14

யூதரின் மகிழ்ச்சி
எஸ் 8:15-17

அவர்களது பழிவாங்குதலும் வெற்றியும்
எஸ் 9:1-15

மகிழ்ச்சியின் நாட்கள்
எஸ் 9:16-19

பூரிம் பண்டிகை
எஸ் 9:20-27

அதன் கொண்டாட்டம் நிலைப்படுதல்
எஸ் 9:28-32

மொர்தேகாயின் பதவி உயர்வு
எஸ் 10:1-3

எஸ்றா பெற்ற கட்டளை
எஸ்றா 7:11-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"தேவன் இருக்கிறாரா என்பதே எனக்குத் தெரியவில்லை; ஆகவே அவர் இக்காரியத்தை எனக்காகச் செயல்படுத்துவாரா?" என்ற சந்தேகம் உங்களை இனி ஒருமுறை வாட்டி வதைக்குமானால் எஸ்தரின் சரித்திரத்தை மீண்டும் வாசியுங்கள்: அவர் மறைந்திருந்து காரியங்களைச் செயல்படுத்துகிறவரென்பதை உணர்ந்துகொள்ளுங்கள். இப்புத்தகம் அற்புதமாக வெளிப்படுத்தும் உண்மை "சரித்திரம் என்பது உண்மையில் தேவனின் செயல்பாடுகளே ஆகும்." (History is really His - Story)

ஆதார சத்தியம்

"அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோம. 8:28)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

எருசலேமுக்குத் திரும்பி வருதல் நாள் 265

எஸ்றா எருசலேமுக்குத் திரும்பி வருதல் கி. மு. 458

அர்தசஷ்டாவின் ஆணை
எஸ்றா 7:21-26

எஸ்றா நன்றி செலுத்துதல்
எஸ்றா 7:27-28

சிறையிருப்பிலிருந்து எஸ்றாவுடன் திரும்பி வந்தவர்கள்
எஸ் 8:1-14

ஆலயப் பொக்கிஷங்கள்
எஸ் 8:24-30

பயணம் துவங்குகிறது
எஸ் 8:31

பாளயம்
எஸ்றா 7:9;8:15

எஸ்றா ஆசாரியரை சந்தித்துப் பேசுதல்
எஸ் 8:16-20

உபவாசமும் ஜெபமும்
எஸ் 8:21-23

எஸ்றா எருசலேமை வந்தடைதல்
எஸ் 7:6-8,10:8,32-36

எஸ்றாவின் துயரம்
எஸ் 9:1-4

எஸ்றாவின் ஜெபம்
எஸ் 9;5-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எஸ்றாவின் ஊழிய வெற்றியின் இரகசியம் எஸ்றா 7:10ல் காணப்படுகிறது. அவன் தான் செய்ய வேண்டியது இன்னதென்று அறிந்திருந்தது மட்டுமல்ல: அதை அப்படியே செயல்படுத்தவும் செய்தான். "ஏற்கனவே நீ அறிந்தவற்றைக் கொண்டு நீ ஏதாவது செய்ய ஆரம்பிக்காது. மேலும் மேலும் அறிவை மட்டும் பெருக்கிக் கொண்டேயிருப்பதில் பயனே இல்லை" என்பது உண்மையான கூற்று.

ஆதார சத்தியம்

"என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?... விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தான் செத்ததாயிருக்கும்." (யாக். 2:14,17)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 266 எஸ்றாவும் நெகேமியாவும்

நெகேமியா எருசலேமுக்குச் செல்லுதல் கி. மு. 444

எஸ்றா தேச மக்களைக் கூட்டிச் சேர்க்கத் திட்டமிடுதல்
எஸ்றா 10:1-8

எஸ்றாவின் பிரசங்கமும், மக்களின் மனஸ்தாபமும்
எஸ் 10:9-15

அந்நிய ஸ்திரீகள் விவாகரத்துப் பெறுதல்
எஸ் 10:16-44

நெகேமியாவின் துயரம்
நெகே 1:4

நெகேமியாவின் ஜெபம்
நெகே 1:5-11

அவனது வேண்டுகோள்
நெகே 2:1-6

நெகேமியா அதிபதியாக நியமனம் பெறுதல்
நெகே 5:14

கடிதங்களும் வழிகாட்டியும் கிடைக்கப் பெறுதல்
நெகே 2:7-9

சன்பல்லாத், தொபியாவின் சீற்றம்
நெகே 2:10

நெகேமியா எருசலேமை வந்தடைதல்
நெகே 2:11-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இஸ்ரவேலின் ஜெப வாழ்க்கையின் மையமான தேவாலயம் ஸ்தாபிக்கப்பட்டு விட்ட போதிலும் அலங்கத்தைக் கட்டியெழுப்பும் வேலை இன்னும் நடைபெற வேண்டியதாயிருக்கிறது. ஜெபம் முக்கியமானது அதே சமயம் செய்ய வேண்டிய வேலையும் முக்கியமானது எல்லாம் தேவனால் எல்லாதான் முடியுமென்பது போன்று நாம் ஜெபிக்க வேண்டும். அதே சமயத்தில் எல்லாம் நம்மைப் பொறுத்தேயிருக்கிறது போன்ற எண்ணத்துடன் உழைக் கவும் வேண்டும். இது யாரோ ஒருவர் கூறிய உண்மையான கூற்று.

ஆதார சத்தியம்

"ஆதலால் எனக்கப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்பகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும் பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டக்குகிறவராயிருக்கிறார்." (பிலி 2:12,13)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

அலங்கத்தை மீண்டும் கட்டுதல் நாள் 267

மீண்டும் கட்டவதைக் குறித்து நெகேமியா ஊக்குவித்தல்
நெகே 2:17-18

சன்பல்லாத், அவனுடன் சேர்ந்த பிறரின் இகழ்ச்சி வார்த்தைகள்
நெகே 2:19-20

நெகேமியா பரிகாசங்களை மேற்கொள்ளுதல்
நெகே 4:1-6

சதித் திட்டம்
நெகே 4:7-15

நெகேமியாவின் முன்னெச்சரிக்கையான காரியங்கள்
நெகே 4:16-23

கட்டுபவர்களின் பெயர்ப் பட்டியல்
நெகே 3:1-16

லேவியர்கள்
நெகே 3:17-21

ஆசாரியர்கள்
நெகே 3:22-26

கட்டுமானப் பணியில் ஈடுபட்ட மற்றவர்கள்
நெகே 3:27-32

மக்களின் முறையீடு
நெகே 5:1-5

நெகேமியா கடிந்து கொள்ளுதல்
நெகே 5:6-11

பரிகாரம்
நெகே 5:12-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

புதிய ஏற்பாட்டின் காலத்திலும் பழைய ஏற்பாட்டின் காலத்திலும் தேவ ஜனங்களிடம் காணப்பட்ட ஒரு பெரிய குறைபாடு எதிரியுடன் போராட வேண்டிய சமயத்தில் அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒருவருக்கு விரோதமாக ஒருவர் யுத்தம் செய்ய ஆரம்பித்து விடுவதே! எதிரியை மறந்து விடுவர்! இக்காட்சி சாத்தானுக்கு எவ்வளவு மகிழ்ச்சியும், ஊக்கமுமளித்திருக்கும்! இது எவ்வளவு முட்டாள்தனமான காரியமென்பதை கிறிஸ்தவ மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஜெபியுங்கள்

ஆதார சத்தியம்

"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது... எர்மோன் மேலும் சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும்.ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிருகிறார். " (சங் 133:1,3)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாப். 2ம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 268 மறுபடியும் கட்டும் பணி நிறைவு பெறுதல்

நெகேமியாவின் தன்னலமற்ற தியாகம்
நெகே 5:15-19

நெகேமியாவுக்கு விரோதமான சதித் திட்டங்கள்
நெகே 6:1-14

மறுபடி கட்டும்பணி முற்றுப் பெறுதல்
நெகே 6:15-19

ஆனானியும், அனனியாவும் எருசலேமைக் காவல் காத்தல்
நெகே 7:1-4

முதன் முதலாகத் திரும்பி வந்தவர்கள்
1 நாளா 9:2-9

ஆசாரியர்கள்
1 நாளா 9:10-13

வேலியர்கள்
1நாளா 9:14:16

தேவாயல வாசல் காவலாளர்
1நாளா 9:17-27

லேவியரின் இதர பணிகள்
1நாளா 9:28-34

எருசலேமின் குடிகள்
நெகே 11:1-9

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நெகேமியாவின் மேற்பார்வை தத்துவங்கள் என்று எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தேவனின் பணி மக்கள் மூலமாகவே எவ்வளவு சிறந்த முறையில் நடைபெற்றது. என்பதையறிய இப்புத்தகத்தைக் கருத்தாய் வாசியுங்கள். சரியான மேற்பார்வையென்பது 'சாதாரண மக்களை அசாதாரண வேலைகளைச் செய்ய வைக்கும் கலை இவற்றின் மூலம் ஆண்டவர் உன்னுடன் ஏதோ பேச விரும்புகிறார் அல்லவா?

ஆதார சத்தியம்

"ஏனெனில் நமக்கு ஒரே சரீரத்தில் அநேக அவயவங்கள் இருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறு வரங்களுள்ளவர்கள்..." (ரோமர். 12:4-6)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ், சகரியா, ஆகாப், 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

இஸ்ரவேல் கட்டப்படுதல்

மீண்டும் கட்டப்பட்ட மதில்கள் அதி 1-7	- திட்டங்கள் பெற்றுக் கொள்ளப்படுதல் - கட்டிடப் பணி ஆரம்பமாகுதல் - வேலை முடிவு பெறுதல்

புதுப்பிக்கப்பட்ட ஆராதனை அதி 8-10	- நியாயப் பிரமாணம் வாசிக்கப்படுதல் - மனந்திரும்புதல் பிறக்கிறது - உற்சாகமான ஆராதனை

கட்டப்பட்ட தேசம் அதி 11:13	- மக்கள், பட்டணங்களில் குடியேறுதல் - மதிற் சுவர்கள் பிரதிஷ்டை செய்யப்படுதல் - தேவாலயம் சுத்திகரிக்கப்படுதல்

ஏறத்தாழ 25 ஆண்டு காலம்

நாள் 269 நியாயப் பிரமாணம் வாசிக்கப்படுதல்

ஆசாரியர்கள்
நெகே 11:10-14

லேவியர்கள்
நெகே 11:15-18

தேவாலய வாயிற்காப்போர்
நெகே 11:19

பிற இடங்களில் பரவியிருந்த மக்கள்
நெகே 11:20-36

எஸ்றா நியாயப் பிரமாணத்தை வாசித்தால்
நெகே 7:73; 8:1-12

கூடாரப் பண்டிகை
நெகே 8:13-18

மக்கள் தங்கள் பாவங்களை அறிக்கை செய்தல்
நெகே 9:1-4

தேவனின் தயவு நினைவு கூரப்படுதல்
நெகே 9:5-31

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கடந்த காலங்களில் தேவன் தங்களுக்குச் செய்த நன்மைகளை மீண்டும் நினைவு படுத்தி ஆண்டவரைத் துதிப்பது பழைய ஏற்பாட்டு ஆராதனைகளில் கைக்கொள்ளப்பட்டு வந்த ஒரு வழிபாட்டு முறையாகும். அவர்களது இந்த முன்மாதிரியை இன்று கற்றுக் கொள்ளுங்கள். கடந்த ஆண்டில் கர்த்தர் உங்களது வாழ்வில் செய்த பத்து நன்மைகளையாவது மீண்டும் எண்ணிப் பார்த்துச் சொல்லித் துதியுங்கள்.

ஆதார சத்தியம்

"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1கொரி 10:11,12)

	நாகூம்	செப்னியா யோசியா நேபுகாட் நேச்சார்
கி.மு. 700	கி.மு. 600 தானியேல் பாபிலோனுக்கு எடுத்துச் செல்லப்படுதல்	யூதாவின் வீழ்ச்சி எருசலேமின் அழிப்பு எசேக்கியேல் பாபிலோனிய சிறையிருப்பு

உடன்படிக்கை

நாள் 270

தேவனின் தயவும் இரக்கமும் நினைவு கூரப்படுதல்
நெகே 9:32-37

உடன்படிக்கை செய்யப்படுதல்
நெகே 9:38

மக்கள் உடன்படிக்கையில் கையெழுத்திடுதல்
நெகே 10:1-27

உடன்படிக்கை
நெகே 10:28-39

அலங்கப் பிரதிஷ்டை
நெகே 12:27-43

சர்வவல்ல தேவனைத் துதித்தல்
சங் 147:1-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவருக்கு ஏதாவது வாக்குறுதி கொடுத்துள்ளாயா? பொருத்தனை செய்துள்ளாயா? இன்றைக்கு வாசித்த வேதப்பகுதியின் அடிப்படையில் அவற்றைப் புதுப்பித்துக் கொள்ள இதுவே சிறந்த தருணம். சில வினாடிகள் அவரது சமூகத்தில் அமைதியாக அமர்ந்து உனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள். நீ. திருமணமாகாத தனி நபரா? அப்படியானால் உன் முழுக் கவனத்தையும் ஒருங்கே செலுத்தி அவரையே சேவிக்க உன்னை ஒப்புக் கொடு. (1 கொரி 7:32-34)

ஆதார சத்தியம்

"நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே, ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணின சமாதானத்தின் தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு, தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்களைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக, ஆமென்." (எபி. 13:20-21)

செருபேலும் குழுவினரும் திரும்புதல் கி. மு 500 சைரஸ். சகரியா. ஆகாய். 2ஆம் தேவாலயம்	பிரித்தானியாவில் இரும்பு யுகம் ஆரம்பம்	எஸ்றா திரும்புதல் மல்கியா கி. மு. 400 நெகேமியா எருசலேமின் சுவர்களைக் கட்டுதல்

நாள் 271 கர்த்தரின் நியாயப் பிரமாணம்

ஆண்டவரைத் துதிக்க ஒரு அழைப்பு
சங் 148:1-14

துதியின் சங்கீதங்கள்
சங் 149:1-9; 150:1-6

ஆலயத்தின் அறையில் தொபியா
நெகே 13:4-5

ஆலய ஒழுங்கு சீரமைக்கப்படுதல்
நெகே 12:44-47

புற ஜாதியாரிடமிருந்து பிரித்தெடுக்கப்படுதல்
நெகே 13:1-3

கர்த்தரின் பிரமாணங்கள்
சங் 119:1-8

அதற்குக் கீழ்ப்படிதல்
சங் 119:9-24

கீழ்ப்படியத் தீர்மானம்
சங் 119:25-32

உணர்வடையக் கோரி ஜெபம்
சங் 119:33:40

தேவனின் கட்டளைகளை நம்புதல்
சங் 119:41:56

அவற்றிற்கு அடிபணிதல்
சங் 119:57:64

கட்டளைகளின் விலைமதிப்பும் நீதியும்
சங் 119:65:80

விடுதலை கோரி ஒரு ஜெபம்
சங் 119:81:88

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தொபியா ஆலயத்தில் வசித்து வந்த நாள்வரை இஸ்ரவேலுக்கு மறுமலர்ச்சி ஏற்பட முடியவே இல்லை. கர்த்தரின் வீட்டில் ஒரு தொபியா தங்கியிருப்பது ஆலயத்தின் ஒரு பகுதியில் சாத்தானைக் குடியிருக்கச் செய்வதற்கு ஒப்பாகும். இன்றுங்கூட தேவனின் சபை மக்கள் நடுவிலிருந்து, அவருக்குப் பிரியமில்லாத அத்தனை காரியங்களையும் நெகேமியாவின் மாதிரியைப் பின்பற்றி அகற்றக் கூடிய சபை மூப்பர்களை ஆண்டவர் எழும்பித் தந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்.

ஆதார சத்தியம்

"இயேசு... ஆலயத்தில் விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி காசுக்காரருடைய பலகையையும், புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து: 'என்னுடைய வீடு ஜெப வீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்."
(மத். 21:12,13)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
சங்கீதம் பழைய ஏற்பாட்டின் 19ஆவது புத்தகம் கவிதை ஞான நூலின் 2ஆவது புத்தகம்		இஸ்ரவேலின் கவிதைப் புத்தகம் பலரகப் பாடல்களுடையது சில தேவனைப் போற்றுகின்றன சில தேசத்தின் பாவங்களுக்காகப் புலம்புகின்றன

நெகேமியாவின் சீர்திருத்தங்கள் நாள் 272

ஆலயத்தைச் சுத்திகரித்தல் கி. மு. 432

தேவனின் பிரமாணங்கள் மீது விசுவாசம்
சங் 119:89-96

அதன்மீது அன்பு கூடுதல்
சங் 119:97-112

அது தரும் பாதுகாப்பு
சங் 119:113-128

அதற்குக் கிழ்ப்படிய வாஞ்சை
சங் 119:129-136

அதன் நீதி
சங் 119:137-144

உதவி கேட்டு ஒரு விண்ணப்பம்
சங் 119:145-176

உண்மையான மகிழ்ச்சி
சங் 1:1-6

நெகேமியா தேவாலயத்தைச் சுத்திகரித்தல்
நெகே 13:6-9

தசம பாகம், ஆராதனை மீண்டும் ஸ்தாபிக்கப்படுதல்
நெகே 13:10-14

ஓய்வு நாள் ஆசரிப்புமீறப்படுதல்
நெகே 13:15-22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆசாரியர்களைத் தாங்குவதற்காக தசமபாகம் செலுத்தும் ஒழுங்கு முறையை மீண்டும் அமுல்படுத்தியது. நெகேமியா செய்த பெரிய சீர்திருத்தங்களில் ஒன்றாகும். ஆலயப் பணியாளர்கள் சரிவர உதவிகள். கவனிப்பு பெறாததால் ஆண்டவரின் பணி புறக்கணிக்கப்பட்டது. உங்கள் ஆலயத்திலும் இந்த சீர்திருத்தம் தேவைப்படுகிற நிலையா? அப்படியானால் அதில் உங்கள் பங்கு எது? நிங்கள் எதைச் செய்ய ஆண்டவர் விரும்கிறாரென்று ஆண்டவரிடம் கேளுங்கள்.

ஆதார சத்தியம்

"அவனவன் விசனமாயுல்ல, கட்டயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். " (11 கொரி 9:7)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனனவாக்கியம்
தாவீதால் பாடப்பட்ட பல சங்கீதங்கள் இயேசுவில் நிறைவேறுகின்றன.	சங்கீதம் தேவனை சிருஷ்டிகராவும் விடுவிக்கிறவராகவும், பாதுகாப்பவராகவும், மன்னிப்பளிப்பவராகவும் ஏற்பாடு செய்பவராகவும், வழிகாட்டியாகவும் காட்டுகிறது	சங்கீதம் 18:2

நாள் 273 மல்கியாவின் தீர்க்க தரிசனம்

பிற ஜாதிகளுடன் விவாக சம்பந்தம் கொண்டது கண்டிக்கப்பட்டது
நெகே 13:23-29

ஆசாரியப் பட்டம் சுத்திகரிக்கப்படுதல்
நெகே 13:30, 31

இஸ்ரவேல் மீது தேவனின் அன்பு
மல்கியா 1:1-5

கர்த்தர் ஆசாரியரைக் கடிந்து கொள்ளுதல்
மல் 1:6-14; 2:1-9

மக்களின் துரோகம்
மல் 2:10-16

கர்த்தர் ஜனங்களை நியாயந் தீர்ப்பார்
மல் 3:6-12

தசமபாகம் செலுத்தப்படுதல்
மல் 3:6-12

இரக்கம் தருவதாகக் கர்த்தரின் வாக்குறுதி
மல் 3:13-18

கர்த்தரின் வருகையின் நாள்
மல் 4:1-6

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பழைய ஏற்பாட்டின் கடைசி அதிகாரம் கீழ்ப்படியாத உண்மையற்ற மக்கள் மீது வரப் போகும் சாபத்தைக் குறித்த வாக்குறுதியாகும். ஆனால் புதிய ஏற்பாட்டின் கடைசி வார்த்தை யோ பாவமறக் கழுவப்பட்ட அண்ட சராசரங்க ளுக்கும் வாக்களிக்கப்பட்ட நித்திய மகிழ்ச்சி நிலையான சமாதானம் இவற்றைப் பற்றியது. இரண்டிற்கும் எவ்வளவு வேறுபாடு!

ஆதார சத்தியம்

"மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நிங்கலாக்கி மீண்டுக் கொண்டார். ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கும் வரும்ப டியாக..." (கலா 3:13,14)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடதன்மை
மல்கியா பழைய ஏற்பாட்டி ன் 39ஆவது புத்தகம் தீர்க்க தரிசனங்களில் 17ஆவது புத்தகம்		

இரு அறிவிப்புகள்

நாள் 274

அநேக ஒற்றுமைகளைக் கொண்ட சுவிசேஷங்களுக்கு முன்னுரை
மத 1:1; மாற 1:1; லூக 1:1-4

யோவான் சுவிஷேத்திற்கு முன்னுரை
யோவா 1:4,5

இயேசு கிறிஸ்துவின் இரு வம்ச வரலாறுகள்
மத் 1:2-17; லூக் 3:23-38

யோவான் ஸ்நானகனின் பிறப்பு முன்னறிவிக்கப்படல்
லூக 1:5-25

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முன்னறிவிக்கப்படுதல்
லூக் 1:26-38

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு விறுவிறுப்பற்ற சுவை குன்றிய பகுதியென்று அநேக கிறிஸ்தவர்கள் அதைக் கடந்து சென்று விடுவதுண்டு ஆனால் அது அற்புதமாக வலியுறுத்தும் ஒரு சத்தியம் உண்டு. கிறிஸ்து நம்மை இரட்சிக்க வந்தபோது ஏறத்தாழ மனித வர்க்கத்தினரைப் போன்றல்ல: மனித வர்க்கத்தினுள்ளேயே நம்மில் ஒருவராகவே வந்தார் என்ற சத்தியத்தை இந்த வம்ச வரலாறுகள் கோடிட்டுக் காண்பிக்கின்றன. மனுஷ குமாரர் தேவ குமாரராக மாறும்படி தேவ குமாரன் மனுஷ குமாரனாக அவதரித்தார்.

ஆதார சத்தியம்

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்: கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்: அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும்." (ஏசாயா. 9:6)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
மல்கியா மேசியாவுக்கு முன்னர் தீர்க்கதரிசி எலியா வருவார் என்று கூறுகிறது. இயேசு யோவான் ஸ்நானகனை அவ்வாறு இனங்கண்டு கொண்டார்.	கடின இருதயம் வறியவர்களை துஷ்பிரயோகித்தல். விக்கிரக ஆராதனை என்பவற்றில் தேசம் நிறைந்திருக்கிறது. தேவனுடைய மக்களுக்கு மீட்பர் இருந்தார்.	மல்கியா 3:10

இதயத்திற்கு இதயம்

செப்டம்பர்

மீண்டும் உங்களை வாழ்த்து கிறோம். இப்பொழுது நீங்கள் வேதாகமத்தில் முக்கால் பங்கினை வாசித்து விட்டீர் கள். இதனால் புதிய ஏற்பாட்டில் நல்லதொரு அஸ்திபாரத்தைப் போட்டிருக்கிறீர்கள் சீ. டபிள்யூ ஆர் ஸ்தாபனத்தில் நீங்கள் இக்கற்கை நெறியை நிறைவு செய்ய வேண்டுமென்று மக்கள் ஜெபிக்கிறார்கள். நீங்கள் சற்றுத் தாமதமாகினாலும் மனம் தளராமல் தொடர்ந்து முன் னேறி இலக்கை அடைய வேண்டும்.

10

இந்தப் பகுதியில் .....

இயேசுவின் பிறப்பும் குழந்தைப் பருவமும்.
யோவான் ஸ்நானகனின் செய்தி.
தனது சீஷர்களை இயேசு அழைத்தமை.
அவருடைய போதனையும் சுகமளிக்கும் ஊழியமும்.
எருசலேமிற்குள் வெற்றி சிறக்கப் பிரவேசித்தல்.

நாள் 275 இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

யோவான் ஸ்நானகனின் பிறப்பு கி. மு. 6

மரியாளிடம் எலிசபெத்தின் கீதம்
லூக் 1:39-45

மரியாள் கர்த்தரைத் துதித்தல்
லூக் 1:46:55

மரியாள் எலிசபெத்துடன் தங்குதல்
லூக் 1:56

யோவான் ஸ்நானகனின் பிறப்பு
லூக் 1:57-66

சகரியாவின் தீர்க்கதரிசனம்
லூக் 1:67-79

யோவானின் ஆரம்ப வருடங்கள்
லூக் 1:80

யோசேப்புக்கு அறிவிப்பு
மத் 1:18-24

இயேசுவின் பிறப்பு
லூக் 2:1-7; மத் 1-25

தேவ தூதரும் மேய்ப்பரும்
லூக் 2:8-20

இயேசுவின் விருத்தசேதனம்
லூக் 2:21

ஆலயத்திற்கு இயேசு கொண்டு போகப்படுதல்
லூக் 2:22-38

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

கிறிஸ்தவின் முதலாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்களை நன்கு அறிந்திருந்தவர்களுக்கு தேவன் மிக நிதானமாக, அவசரம் எதுவுமின்றி செயற்படுவது போன்றே தோன்றியிருக்கும் ஆயினும் தேவன் எப்பொழுதும் எந்தக் காரியத்திலும் சரியான சமயத்தில் செயற்படுபவர் ஒரு வினாடி முன்னதாகவோ அல்லது பிந்தியோ அவர் செயற்படுவதில்லை. அவர் சரியான சமயத்தைக் கைக்கொள்ளுபவர். சர்வ வல்லவரின் திட்டங்கள் சரியான சமயத்தில் நிறைவேற்றப்படவில்லையோ என்ற தவறான எண்ணம் சோதனையாக உங்களைத் தாக்கும் நேரத்தில் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆதார சத்தியம்

"நாம் புத்திர சுவிகாரத்தையடையும்படி நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப் பிரமாணத் திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.". (கலா 4:4,5)

வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேஷதன்மை
லுக்கா புதிய ஏற்பாட்டில் 3 ஆவது நற்செய்தி நூல்	லூக்கா	வைத்தியர் லூக்காவின் பார்வையில் மக்களுக்கும் சில சம்பவங்களுக்கும்அவருடைய நற்செய்தி நூலில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இயேசுவின் இளமைப் பருவம்

நாள் 276

பவுலின் பிறப்பு ஏறத்தாழ கி. மு. 10-15

ஞானசாஸ்திரிகள்
மத் 2:1-12

எகிப்துக்கு ஓடிப் போகுதல்
மத் 2:13-18

எகிப்திலிருந்து நசாரேத்துக்கு
மத் 2:19-23; லூக் 2:39

நாசரேத்தில் இயேசுவின் இளமைப் பருவம்
லூக் 2:40

தேவாலயத்தில் இயேசு
லூக் 2:41-50

இயேசுவின் இளமைப் பருவ வாழ்க்கை
லூக் 2:51-52

யோவான் ஸ்நானகனின் ஊழியம்
மத் 3:1-6; மாற் 1:2-6; லூக் 3:1-6
யோ 6:18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

குழந்தைகள் வளர்ந்து வரும் போது நாம் கண் கூடாகக் கண்டுகொள்ளும் காரியங்களில் ஒன்று கீழ்க்கண்ட வேத வசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும். (நீதிமொழி 22:15) ஆம்! அவர்கள் சொல்வது செய்வது எல்லாவற்றிலும் மதியீனம் வெளிப்படும் ஆனால் இயேசு கிறிஸ்துவின் குழந்தைப் பருவத்தில் எவ்வளவு வேறுபாடு. அவரது ஞானம் அவரது காலத்திலுள்ள சிறந்த ஞானிகளுக்கே பிரமிப்பூட்டியது. ஏனெனில் அது தேவஞானம்.

ஆதார சத்தியம்

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறான வருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. " (யோவா 1-14)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
லூக்கா இயேசு மக்களிடம் மனமுருகிறவர் என்றும் பாவிகளைத் தேடி இரட்சிக்க வந்தவரென்றும் காட்டுகிறார் தேவனின் விலை மதிப்பற்ற இட்சிப்பை அவர் கொண்டிருந்தார்.	லூக்கா கிரமமாக இயேசுவின் ஜீவியம் மரணம், உயிர்த் தெழுதல் என்பவைகளை விரிக்கின்றார். அவருடைய நோக்கம் 1:3-4 ல் கூறப்படுகிறது. பற ஜாதியினரின் விசுவாசம் பலப்படுத்தப்பட்டு இயேசுகிறிஸ்து இட்சகராக இருக்கிறார் என்று காட்டப்படுகிறது.	லூக்கா 19:10

நாள் 277 இயேசுவின் சோதனைகள்

யோவான் ஸ்நானகனின் செய்தி
மத் 3:7-10; லூக் 3:7-14

அவர் கிறிஸ்துவை அறிமுகப்படுத்துதல்
மத் 3:11-12; மாற் 1:7-8; லூக் 3:15-18; யோவா 1:19-28

இயேசுவின் ஞானஸ்நானம்
மத் 3:13-17; மாற் 1:9-11; லூக் 3:21-22

யோவானின் அறிக்கை
யோவா 1:29-34

வனாந்தரத்தில் சோதனை
மத் 4:1-11; மாற் 1:12-13; லூக் 4:1-13-

முதல் மூன்று சீஷர்கள்
யோவா 1:35-42

பிலிப்புவும் நாத்தான்வேலும்
யோவா 1:43-51

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

முதலாம் ஆதாம் தன் சோதனையை எதிர் கொண்டதற்கும் இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து சோதனையை எதிர் கொண்டதிற்கும் எத்தனை வேறுபாடு! முதலாம் ஆதாம் தோட்டத் தில் விருந்து புசிக்கும் போது (Feasting) தவறி னான். ஆனால் இரண்டாம் ஆதாமோ வனாந் தரத்தில் உபவாசிக்கும் போது (Fasting) வெற்றி கண்டார். அவர் வெற்றி கொண்டபடியினால், நீயும் நானும் வெற்றி கொள்ள முடியும்!

ஆதார சத்தியம்

"அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது.: பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானவர். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்ம சரீரமே முந்தினது: ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிந்துண்டான மண்ணானவன்: இரண்டாம் மனுஷன் வானத்தி லிருந்து வந்த கர்த்தர். " (1 கொரி 15:45-47)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்ராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

இயேசுவும் யோவானும்

நாள் 278

கானாவூர் கலியாணம்
யோவா 2:1-11

கப்பர் நாகூமில் இயேசு
யோவா 2:12

தேவாலயத்தில் இயேசு
யோவா 2:13-22

மனிதனது தன்மைகளைப் பற்றிய இயேசுவின் அறிவு
யோவா 2:23-25

இயேசுவும் நிக்கொதேமுவும்
யோவா 3:1-21

இயேசுவும் யோவானும்
யோவா 3:22-24

யோவானின் சாட்சி
யோவா 3:25-26

யோவான் காவலில் அடைக்கப்படுதல்
லூக் 3:19-20

இயேசு யூதேயாவை விட்டுச் செல்லுதல்
மத் 4:12; யோவா 4:1-3

இயேசுவும் ஸ்திரீயும் கிணற்றினருகில்
யோவா 4:4-26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வாழ்நாளில் என்றாவது ஒருநாள் நம் ஒவ்வொருவருக்கும் வரக்கூடிய ஒரு போராட்டம் யோவான் ஸ்நானகனுக்கும் வந்தது. யாருக்கு முதலிடம் இயேசுவுக்கா? எனக்கா? யோவான் எடுத்த முடிவென்ன என்பது உங்களுக்குத் தெரியும். இயேசுவுக்கே! அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும். இந்த முக்கியமான காரியத்தில் நீங்கள் எடுத்துள்ள தீர்மானமென்ன?

ஆதார சத்தியம்

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." (கலா 2:20)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நிகோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 279 இயேசுவின் ஊழியத்தின் ஆரம்ப நாட்கள்

சமாரியாவில் இயேசு
யோவா 4:27-42

இயேசு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்
மத் 4:17; மாற் 1:14-15; லூக் 4:14-15; யோவா 4:43-45

நாசரேத்தூரில் இயேசு புறக்கணிக்கப்படுதல்
லூக் 4:16-30

இயேசு இராஜாவின் மனுஷன் மகனைச் சுகமாக் குதல்
யோ 4:46-54

இயேசு நாசரேத்தை விட்டுப் புறப்படுதல்
மத் 4:13-16

இயேசு நான்கு மீனவர்களை அழைத்தல்
மத் 4:18-22; மாற் 1:16-20; லூக் 5:1-11

இயேசு ஆலயத்தில் போதனையளித்தல்
மாற் 1:21-22; லூக் 4:31-32

அசுத்த ஆவி பிடித்த மனிதன்
மாற் 1:23-28

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வெற்றிகரமான ஊழியம் செய்யும் ஒவ்வொரு வரும் கண்டிப்பாக ஏதாவது ஒரு நாளில் அனுபவிக்க வேண்டிய ஒரு காரியம் புறக்கணிக்கப்படுதல் இயேசுவும் இதை அனுபவித்தார். நீங்களும் அனுபவிப்பீர்கள். ஆனால் உங்கள் ஊழியத்தின் முன்னேற்றமோ அல்லது தோல்வியோ நீங்கள் இந்தப் புறக்கணிப்பை எவ்வாறு கையாளுகிறீர்களென்பதைப் பொறுத்தே அமையும். இயேசு ஊழியத்தின் பாதையில் முன்னேறிச் சென்றார். ஆகவே. அவரது பலத்தில் நீயும் வெற்றியுடன் முன்னேறிச் செல்ல முடியும்.

ஆதார சத்தியம்

"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும். பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபி 4:15)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்ராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

கிறிஸ்துவின் வாழ்க்கையிலுள்ள முக்கியமான சிறப்பு நிகழ்ச்சிகள்

01. அவர் பிறப்பு (லூக் 2:1-7)
02. மேய்ப்பர்கள் பணிந்து கொள்ளுதல் (லூக் 2:8:20)
03. எருசலேம் ஆலயத்தில் பிரதிஷ்டை (லூக் 2:21:38)
04. ஞானிகள் தொழுது வணங்குதல் (மத் 2:1-12)
05. எகிப்துக்கு ஓடிப் போகுதல் (மத் 2:13-23)
06. 12 வயதில் தேவாலயம் செல்லுதல் (லூக் 2:41-50)
07. அவரது ஞானஸ்நானம் (மத் 3:13-17)
08. அவரது சோதனைகள் (மத் 4:1-11)

09. யோவான் ஸ்நானகன் அவரை அறிமுகப்படுத்தல் (யோவா 1:29)
10. முதலாவது தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா 2:13-25)
11. நிக்கேமு மனமாற்றமடைதல் (யோவா 3:1-21)

12. 12 சீஷரைத் தெரிந்தெடுத்தல் (மத் 10:1-4)
13. யோவான் ஸ்நானகன் சிறைப்படுதலும், சிரச்சேதமும் (மத் 14:1-12)
14. பேதுருவின் அறிக்கை (மத் 16:13-20)
15. மறுரூபமாகுதல் (மத் 17:1-13)
16. அவரது வெற்றிப் பவனி (மத் 21:1-11)
17. எருசலேமைப் பார்த்துக் கண்ணீர் விடுதல் (மத் 23:37-39; லூக் 19-41)

18. மேலறையில் (யோவான் 13-14)
19. கெத்சேமனெயில் (யோவான் 18:1-11)
20. அவர் கைதானதும் விசாரணையும் (யோவா 18:12-19:15)
21. சிலுவையிலறைப்படுதல் (யோவா 19:16-18)
22. உயிர்த்தெழுதல் (மத் 28:1-7)
23. பத்து முறைகள் காட்சியளித்தல்
24. பரத்திற்கு ஏறுதல் (லூக் 24:51)

நாள் 280 இயேசு அநேகரை சொஸ்தமாக்குதல்

அசுத்த ஆவியுள்ள மனிதன்
லூக் 4:33-37

இயேசு அநேகரை சொஸ்தமாக்குதல்
மத் 8:14-17; மாற் 1:29-34; லூக் 4:38-41

கலிலேயாவில் இயேசு
மத் 4:23-25; மாற் 1:35-39; லூக் 4:42-44

இயேசு ஒரு குஷ்டரோகியைச் சொஸ்தமாக்குதல்
மத் 8:2-4; மாற் 1:40-45; லூக் 5:12-16

இயேசு ஒரு திமிர்வாதக்காரனைக் குணமாக்குதல்
மத் 9:1-8; மாற் 2:1-12; லூக் 5:17-26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆண்டவராகிய இயேசு இவ்வுலகத்தை விட்டு நீங்கி, பரத்திற்கு எழுந்தருளியபின்னர் அவரது குணமாக்கும் ஊழியம் நின்று போனதா? அநேகர் இவ்வாறு எண்ணுகிறார்கள். நீ எதை விசுவாசிக்கிறாய்? இதைக் குறித்த சந்தேகம் உனக்கு இருக்குமாயின் எபிரேயர் நிருபம் 13:8ஆம் வசனத்தைப் பார்த்து இந்தச் சந்தேகத்தை உடன் தானே தீர்த்துக் கொள்.

ஆதார சத்தியம்

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்மடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்." (1பேது . 2:24)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகுஸராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

இயேசுவின் அதிகாரம்

நாள் 281

இயேசு மத்தேயுவை அழைத்தல்
மத் 9:9-13; மாற் 2:13-17; லூக் 5-27-32

உபவாசிப்பதைப் பற்றிய கேள்வி
மத் 9:14-17; மாற் 2:18-22; லூக் 5:33-39

குளத்தருகே குணமாக்குதல்
யோவான் 5:1-9

யூதர்களின் வெறுப்பு
யோவா 5:10-18

இயேசுவின் பதில்
யோவா 5:19-23

தனது அதிகாரத்தைக் குறித்துப் பேசு கிறார்.
யோவா 5:24-29

அவரது சாட்சி
யோவா 5:30-47

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

'வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் உள்ள வேறுபாடு உங்களுக்குத் தெரியுமா? பிரதான வீதி வழியாகக் கடந்து வரும் ஒரு பெரிய வாகனத்தைக் கற்பனை செய்து பாருங்கள். அது வல்லமையைக் காண்பிக்கிறது. போக்கு வரத்தைக் கண்காணிக்கும் ஒரு பொலீஸ் அதி காரி முன்வந்து தனது கரத்தை உயர்த்தி அந்தப் பெரிய வாகனத்தை நிறுத்துமாறு கட்டளையி டுவதையும் எண்ணிப்பாருங்கள் அதுதான் அதி காரம். கிறிஸ்து அதே அதிகாரத்தை உனக்கும் எனக்கும் தந்துள்ளார். (லூக் 9:1 பார்க்கவும்)

ஆதார சத்தியம்

"ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டி க்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்ப டுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவகங்ளானாலும், துரைத்தனங்க ளானாலும், அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைத்தி ருக்கிறது. " (கொலோ 1:16,17)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 282 இயேசு பன்னிருவரைத் தெரிந்தெடுத்தல்

ஓய்வுநாளைப் பற்றிய கேள்வி
மத் 12:1-8; மாற் 2:23-28; லூக் 6:1-5

சூம்பின கையையுடைய மனிதன்
மத் 12:9-14; மாற் 3:1-6; லூக் 6:6-11

திரளான ஜனங்கள் குணமடைதல்
மத் 12:15:21; மாற் 3:7-12

இயேசு 12 அப்போஸ்தலரைத் தெரிந் தெடுத்தல்
மாற் 3:13-19; லூக் 6:12-16

இயேசு போதனையளித்து சுகமளித்தல்
லூக் 6:17-19

மலைப்பிரசங்கம்
மத் 5:1-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு தனிப்பட்ட சிறப்பான ஊழியத்தை நிறை வேற்றி முடிப்பதற்குத் தேவையான வழிமுறைகள் அத்தனையையும் அருளிச் செய்யாது தேவன் யாரையும் அந்த ஊழியத்திற்கு அழைப்பதே யில்லை. இதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள் உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள வேலை எவ்வளவு கடினமானதாக. பாரமான தாக இருந்த போதிலும் உங்களுக்குப் பின்னால் நின்று உங்களைத் தாங்கும் வல்லமையை விட அது பெரியதே அல்ல.

ஆதார சத்தியம்

"சகோதரரே நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநே கரில்லை.... ஞானிகளை வெட்கப்ப டுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமான வைகளைத் தெரிந்து கொண்டார்: பலமுள்ளவைகளை வெட் கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமான வைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவை களை அவமாக்கும்படி. உலகத்தின் இழிவான வைகளையும். அற்பமாய் எண்ணப்பட்டவைக ளையும். இல்லாதவைகளையும். தேவன் தெரிந்து கொண்டார்." (1 கொரி 1:26-28)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

மலைப்பிரசங்கம்

நாள் 283

கோபம், விபசாரம், விவாகரத்து இவற்றைப் பற்றி ஆண்டவரின் போதனை
மத் 5:21-32

சத்தியம் பண்ணுதலும் பழிவாங்குதலும்
மத் 5:33-42

பகைவர் மீது அன்பு
மத் 5:43-48

கொடுப்பதைப் பற்றிய போதனை
மத் 6:1-4

ஜெபம், உபவாசத்தைப் பற்றிய போதனை
மத் 6:5-18

பரலோகத்தில் பொக்கிஷம்
மத் 6:19-23

தேவனும் நமக்குச் சொந்தமான பொருட்களும்
மத் 6:24-34

மற்றவர்களைக் குற்றம்சாட்டுதல்
மத் 7:1-6

நமது பரலோக பிதா
மத் 7:7-12

இன்னும் அநேக போதனைகள்
மத் 7:13:23

புத்தியுள்ள மனிதனும் புத்தியில்லாதவனும்
மத் 7:24:27

இயேசுவின் அதிகாரம்
மத் 7:28:29

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சில கிறிஸ்தவர்கள் தங்கள் நடத்தையை விடத் தாங்கள் நம்பிக்கை வைக்கும் உபதேசங்களுக்கு அதிக முக்கியத்துவமளிப்பார்கள் மற்றும் சிலர் தங்கள் நடத்தைக்கு உபதேசங்களைவிட அதிக முக்கியத்துவம் அளிப்பார்கள். மலைப் பிரசங்கமோ இவ்விரண்டின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. சற்று சிந்தித்துப் பாருங்கள் உங்கள் வாழ்க்கையில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் உபதேசங்களை சரியாக புரிந்து கொண்ட போதிலும் உங்கள் செயல்கள் தவறாக இருக்கிறதா? அப்படியானால் உபதேசமும் செயலும் ஒத்துப் போகுமாறு மாற்றியமைக்க செய்ய வேண்டிய காரியங்களை உடனே செய்து விடுங்கள்.

ஆதார சத்தியம்

"சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்." (யாக் 1:25)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் திகோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 284 இயேசுவின் போதனைகள்

இன்ப துன்பங்களைப் பற்றிய இயேசுவின் போதனை
மத் 8:1; லூக் 6:20-26

பகைவரை நடத்த வேண்டிய முறை
லூக் 6:27-36

குற்றஞ் சுமத்தாதிருங்கள்
லூக் 6:37-42

ஒரு மரமும் அதன் கனியும்
லூக் 6:43-45

புத்தியோடும், புத்தியற்ற முறையிலும் கட்டிடம் கட்டுபவர்கள்
லூக் 6:46-49

நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை இயேசு சொஸ்தமாக்குதல்
மத் 8:5-13; லூக் 7:1-10

அவர் விதவையின் மகனை எழுப்புதல்
லூக் 7:11-17

இயேசு யோவான் ஸ்நானகனைப் புகழுதல்
மத் 11:12-15; லூக் 7:18-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சத்தியத்தின்படி ஒருவன் நடக்க ஆரம்பிக்கும் வரை அச்சத்தியம் அவனுக்குள் வாசமாயிருக்க முடியாதென்பது மறுக்க முடியாத உண்மைகளில் ஒன்று. ஆகவே கிறிஸ்துவின் போதனைகளை, உங்கள் வாழ்வின் சாதனைகளாக மாற்றிக் கொண்டால்தான் நீங்கள் அவரது போதனைகளைப் பெயரளவுக்கு சரியென்று ஏற்றுக்கொள்ளும் நிலை மாறும். நிலை அவற்றை நீங்கள் முழுமனதோடே ஏற்றுக் கொள்ளும் நிலை அப்பொழுதுதான் உருவாகும். நீங்கள் அவரது போதனைகளைக் கேட்கிறவர்களாக மட்டுமிருக்கிறீர்களா? அல்லது அவற்றின்படி நடக்கிறீர்களா? இதில் நீங்கள் எந்த அளவுக்குத் தேறியிருக்கிறீர்கள்?

ஆதார சத்தியம்

"இயேசு சொன்னார்: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"(யோவா 8:31-32)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

இயேசுவும் பெயல்செபூலும்

நாள் 285

இயேசு துன்மார்க்கத்தைக் கண்டிக்கிறார்
மத் 11:16-19; லூக் 7:31-35

விசுவாசமில்லாத நகரங்கள்
மத் 11:20-24

இளைப்பாறுதலுக்கு அழைப்பு
மத் 11:25-30

சீமோனின் வீட்டில் இயேசு
லூக் 7:36-50

இயேசுவைப் பின்பற்றின பெண்கள்
லூக் 8:1-3

இயேசுவைப் பைத்தியம் பிடித்தவனென்று குற்றம் சாட்டுதல்
மாற் 3:20-21

இயேசுவும் பெயல்செபூலும்
மத் 12:22-30; மாற் 3:22-27

மன்னிக்க முடியாத பாவம்
மத் 12:31-37; மாற் 3:28-30

அடையாளம் தேடும் முட்டாள்தனம்
மத் 12:38-45

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்குமிடையில் எவ்விதமான இரகசியமான உடன்பாடோ ஒத்துப் போகுதலோ இருக்கவே முடியாது. அது போலவே கிறிஸ்துவின் அடியார் ஒவ்வொருவருக்கும், சாத்தானுக்குமிடையில் எவ்விதத் தொடர்பும் இருக்கக் கூடாது. நீ தேவனுக்காக நிற்பதென்றால், சாத்தானுக்கு எதிராகத்தான் நிற்க வேண்டும். உன் வாழ்க்கையில் சாத்தானுடன் ஒப்புரவாகும் காரியங்கள் ஏதாவது இருக்கிறதா என்று தற்பரிசோதனை செய்து பார். அப்படியிருந்தால் அதைக் குறித்து என்ன செய்து சரி செய்யலாமென்பதை இப்பொழுதே தீர்மானம் செய்து கொள்.

ஆதார சத்தியம்

"ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." (யாக் 4:7-8)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருப்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நிகோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 286 இயேசுவின் உவமைகள்

இயேசுவின் தாயும் சகோதரரும்
மத் 12:46-50; மாற் 3:31-35; லூக் 8:19-21

விதைக்கிறவன் உவமை
மத் 13:1-9; மாற் 4:1-9; லூக் 8:4-8

உவமைகளின் நோக்கம்
மத் 13:10-17; மாற் 4:10-12; லூக் 8:9-10

உவமையின் விளக்கம்
மத் 13:18-23; மாற் 4:13-20; லூக் 8:11-15

மரக்காலின் கீழ்வைக்கப்பட்ட விளக்கு
மாற் 4:21-25; லூக் 8:16:18

வளரும் விதை
மாற் 4:26-29

களைகளைப் பற்றிய உவமை
மத் 13:24-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

போதிக்கும் ஊழியம் செய்யும் போது இயேசு கொண்டிருந்த ஒரே நோக்கம் கேட்பவர்களுக்குச் சரியான போதனையளிப்பதே அவர்களைக் கவர்ச்சிக்க வேண்டுமென்பது. அவரது நோக்கமேயல்ல: ஆழ்ந்த சத்தியங்களைத் தெளிவாகவும் சுற்றி வளைக்காத முறையிலும் பிறருக்குக் கொடுப்பதில் உங்களுக்குத் திறமையுண்டா? அதில் எந்த அளவுக்குத் தேர்ச்சியடைந்துள்ளீர்கள்? ஒரு நவீன உவமையைக் கற்பனை செய்து கொண்டு அதன் சத்தியத்தை இன்றே யாரிடமாவது பகிர்ந்து கொள்ளுங்கள்.

ஆதார சத்தியம்

"அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும் படியாக..." (எபே 4:15)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்ராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

இயேசுவின் உவமைகள்

தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய செய்தியினை எளிமையாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் படமாக விபரிப்பதே இயேசுவின் உவமைகளின் நோக்கமாகும். இயேசு உவமைகளை அதிகமாகப் பயன்படுத்தியதினால் மாற்கு "அவர் உவமைகளினாலன்றி அவர்களிடம் பேசவில்லை" என்று கூறுகிறார். (மாற்கு 4:34)

	மத்தேயு	மாற்கு	லூக்கா
மரக்காலுக்குள் விளக்கு	5:14-15	4:21-22	8:16;11:33
கன்மலை. மணல் மீது கட்டப்பட்ட வீடு	7:24-27		6:47-49
பழைய வஸ்திரமும் புதிய துணியும் இணைக்கப்படுதல்	9:16	2:21	5:36
பழைய துருத்தியில் புதிய இரசம்	9:17	2:22	5:37-38
விதைக்கிறவன்	13:3-8	4:3-8	8:5-8
கடுகு விதை	13:31-32	4:30-32	13:18-19
களைகள்	13:24-30		
புளித்த மாவு	13:33		13:20-21
ஒளித்து வைக்கப்பட்ட பொக்கிஷம்	13:44		
விலைமதிப்பற்ற முத்து	13:45-46		
மீன்பிடி வலை	13:47-48		
காணாமற் போன ஆடு	18:12-13		
மன்னிக்காத வேலைக்காரன்	18:23-24		
திராட்சைத் தோட்டத்தில் வேலைக்காரர்கள்	20:1-16		
இரண்டு குமாரர்கள்	21:28:31		
துன்மார்க்கரான குத்தகைக்காரர்	21:33-41	12:1-9	20:9-16
திருமண விருந்து அழைப்பு	22:2-14		
அத்திமரம் கோடை காலம்	24:22-33	13:28-29	21:29-32
பத்து கன்னிகைகள்	25:1-13		
தாலந்துகள்	25:14-30		19:12-27
வெள்ளாடு செம்மறியாடு	25:31-36		
அறுவடை நேரம்		4:26-29	
கடன் வாங்கியவர்களும். கொடுத்தவனும்			7:41-43
நல்ல சமாரியன்			10:30-37
ஆபத்தில் உதவும் நண்பன்			11:5-8
ஐசுவரியமுள்ள முட்டாள்			12:16-21
விழிப்புள்ள வேலைக்காரர்கள்			12:35-40
உண்மையுள்ள உக்கிராணக்காரன்			12:42-48
பழமில்லாத அத்திமரம்			13:6-9
திருமண விருந்து			14:7-14
மாபெரும் விருந்து			14:16-24
செலவினைக் கணக்கிடுதல்			14:28-33
இழந்து போன நாணயம்			15:8-10
கெட்ட குமாரன்			15:11-32
உண்மையில்லாத உக்கிராணக்காரன்			16:1-8
ஐசுவரியவான். லாசரு			16:19-31
எஜமான். வேலைக்காரன்			17:7-10
சோர்ந்து போகாத விதவை			18:2-5
பரிசேயரும் ஆயக்காரரும்			18:10-14

நாள் 287 இன்னும் அநேக உவமைகள்

கடுகு விதை, புளித்த மாவு பற்றிய உவமைகள்
மத் 13:31-33; மாற் 4:30-32

இயேசு உவமைகளைப் பயன்படுத்துதல்
மத் 13:34-35; மாற் 4:33-34

களைகளைப் பற்றிய உவமையின் விளக்கம்
மத் 13:36-43

புதைக்கப்பட்ட பொக்கிஷத்தின் உவமை
மத் 13:44

முத்தின் உவமை
மத் 13:45-46

வலை பற்றிய உவமை
மத் 13:47-50

வீட்டெஜமான்
மத் 13:51-53

இயேசு புயலை அமர்த்துதல்
மத் 8:18,23-27; மாற் 4:35-41; லூக் 8:22-25

இயேசு பிசாசுகளைத் துரத்துதல்
மத் 8:28-34; மாற் 5:1-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்துவின் உவமைகள் நம்மைத் தாலாட்டித் தூங்க வைக்கும் படுக்கை நேரக் கதைகளல்ல; ஆனால் அவை நம்மை விழித்தெழுச் செய்யும் "தீங்குழலின் அழைப்புகள்" இது மிகச் சரியான கூற்று. ஏதாவது ஒரு உவமையிலிருந்து துள்ளிப் புறப்பட்ட ஒரு சத்தியம் உன்னை உலுக்கி எழுப்பி விட்டிருக்கிறதா? மிக்க நல்லது; ஒரு வினாடி கூடத் தாமதிக்காது அந்த சத்தியத்தை உன் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்து.

ஆதார சத்தியம்

"அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்ய தவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்: அவன் தன்னைத் தானே பார்த்து, அவ்விடம் விட்டுப் போனவுடனே தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான்" (யாக் 1:22:24)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்தவின் பிறப்பு		அகஸ்தியரின் மரணம்	கிறிஸ்ராவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

இன்னும் அநேக வியாதிகளைக் குணமாக்குதல் நாள் 288

இயேசு பிசாசுகளைத் துரத்துதல்
லூக் 8:26-39

இயேசுவைத் தொட்ட பெண்மணி
மத் 9:18-22; மாற் 5:21-34; லூக் 8:40-48

இயேசு யவீருவின் மகளை எழுப்புதல்
மத் 9:23:-26; மாற் 5:35-43; லூக் 8:49-56

இயேசு இரு குருடரைச் சொஸ்த மாக்குதல்
மத் 9:27-31

ஒரு ஊமையன் மீண்டும் பேசுதல்
மத் 9:32-34

இயேசு மீண்டும் நாசரேத்தில் புறக்கணிக்கப்படுதல்
மத் 13:54-58; மாற் 6:1-6

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"விசுவாசம் கேள்வியினாலே வரும்: கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்று பரிசுத்த வேதம் ரோமர் 10:17இல் கூறுகிறது. எத்தனையோ உதவிகளை நாடியும் சற்றேனும் அசையாது இருந்து உங்களை வேதனைப் படுத்தும் சரீர அல்லது மனது சம்பந்தமான பிரச்சனைகளை உங்கள் வாழ்வில் உண்டா? அவ்வாறாயின் புதுப்பிக்கப்பட்ட விசுவாசத்துடன் இந்த நாளை உங்கள் விடுதலையின் நாளாக மாற்றித் தருமாறு ஆண்டவரிடம் கேளுங்கள்.

ஆதார சத்தியம்

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமா யிருக்கிறது. " (எபி 11:1)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நிகோவின் மரணம்			யோவானின் மரணம்

இயேசு பன்னிரு சீஷரையும் வெளியே அனுப்புதல்
மத் 9:35-38; 10:1-4; மாற் 6:7; லூக் 9:1-2

அவர்களுக்கு அவர் கொடுத்த அறிவுரைகள்
மத் 10:5-15; மாற் 6:8-11; லூக் 9:3-5

சீஷர்களடையும் உபத்திரவம்
மத் 10:16-33

சீஷத்துவத்தின் விலைக்கிரயமும் வெகுமதியும்
மத் 10:34-42; 11-1; மாற் 6:12-13;லூக்9:6

யோவான் ஸ்நானகனின் மரணம்
மத் 14:1-12; மாற் 6:14-29; லூக்9:7-9

யோவான் ஸ்நானகனின் மரணம்
கி. பி. 27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாம் செய்தது போலவே செய்யுமாறு கூறி சீஷர்களை கிறிஸ்து அனுப்பும் போது எவ்வளவு பெரிய சவாலை அவர்கள் முன் வைக்கிறார்! மனிதனால் செய்து முடிக்கவே கூடாத காரியங்களை நமது வாழ்க்கையில் சந்திக்கும் வரை தேவனின் முழு வல்லமையையும் சக்தியையும் நாம் ருசித்து அறிந்து கொள்ளவே முடியாது.

ஆதார சத்தியம்

"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி. 4:13)

வேதாகமத்தில்	எழுதியது	விசேடதன்மை
மத்தேயு புதிய ஏற்பாட்டின் முதலாவது புத்தகம். முதலாவது நற்செய்தி நூல்	மத்தேயு	இயேசுவின் போதனைகள் 5 முக்கிய பிரிவுகளாகும் மலைப்பிரசங்கம் பன்னிருவர் அனுப்பப்படல். இராச்சியத்தைக் குறித்த உவமைகள். சீஷத்துவம். வருகின்ற இராஜ்யம் என்பவைகளாகும்.

ஐயாயிரம் பேரைப் போஷித்தல் நாள் 290

ஐயாயிரம் பேரைப் போஷித்தல்
மத் 14:13-21; மாற் 6:30-44;
லூக் 9:10-17; யோவா 6:1-13

இயேசு கூட்டத்தை விட்டு விலகுதல்
மத் 14:22-23; மாற் 6:45-46;
யேவா 6:14-15

இயேசு தண்ணீரில் மேல் நடத்தல்
மத் 14:24-33; மாற் 6:47-52;
யோவா 6:16-21

கெனசரேத்தில் நோயாளிகளைக் குணமாக்குதல்
மத் 14:34-36; மாற் 6:53-56

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

'அற்புதம் என்றால் என்ன? இயற்கை சாதரணமாக செயல்படுவதைத் தேவன் தமது பொறுப்பில் எடுத்து அதை விரைவாகச் செயல்படுத்துதல் என்பதே அற்புதமாகும். இவ்வாறு சி. எஸ். லூயிஸ் விளக்கமளிக்கிறார். பொதுவாக ரொட்டி தயாரிக்க வேண்டுமெனில் இயற்கை எத்தனையோ காலங்களைக் கடக்க வேண்டியதிருக்கிறது. கோதுமைப் பயிர் கோதுமை. மணிகள் மாவு தயாரித்தல் என்று பல கட்டங்கள். ஆனால் இதை இயேசு நொடிப் பொழுதில் செய்து காண்பிக்கிறார். தாம் உண்டாக்கிய இந்த உலகத்தை விட ஆண்டவர் மிகப் பெரியவர் என்ற உற்சாகமளிக்கும் உண்மையை இன்று முழுவதும் எங்கு சென்றாலும் உங்களுடனயே எடுத்துச் செல்லுங்கள்

ஆதார சத்தியம்

"இயேசு, அவர்களைப் பார்த்து: மனஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்." (மத் 19:26)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
பழைய ஏற்பாடு 55 தடவைகள் மேசியாவில் காட்டப்பட்டுள்ளது. மத்தேயு இயேசு எங்கோ தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார் என்பதை விளக்குகிறார். பெரியக வந்து மீட்து உயிர்த்தெழுவார். மத்தேயுவிலுள்ள 10:71 ஆவது வசனங்களில் 55% மானவை இயேசு பேசிய வசனங்களாகும்.	மத்தேயு இயேசுவை யூதர்களின் ராஜாவாக் காட்டுகிறார். இவரது பிறப்பு (மத் 2:2) மனம் மாகச்த்தாது ராஜ்யத்தின் உண்மையான தன்மையை விளக்குவதே மத்தேயுவின் நோக்கமாகும். விசேடமாக உவமைகளுடாக நற்செய்தி இயேசுவின் ஆணையோடு முடிவடைந்தது.	மத் 16:16.... நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து

ஜீவ அப்பம்

ஜனங்கள் இயேசுவைத் தேடுதல்
யோவா 6:22-24

இயேசு ஆவிக்குரிய ஆகாரத்தைப் பற்றி போதித்தல்
யோவா 6:25-33

ஜீவ அப்பமாகிய இயேசு
யோவா 6:34-58

அநேக சீஷர் இயேசுவை விட்டு விலகுதல்
யோவா 6:59-71

பரிசேயர், சதுசேயரின் மாய் மாலம்
மத் 15:1-9: மாற் 7:1-13

மனிதனைத் தீட்டுப்படுத்தும் காரியங்கள்
மத் 15:10-20; மாற் 7:14-23

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தாங்கள் விரும்புவதை இயேசு அவர்களுக்குக் கொடுப்பதினால் அவரைப் பின்பற்றுபவார்கள் ஆயிரக்கணக்கானோர்; அதே சமயத்தில் அவர் தங்களிடம் விரும்புவதை அவருக்குக் கொடுத்து அவரைப் பின்பற்றத் தயாராயிருப்போர் வெகுசிலர் இது எவ்வளவு உண்மை! உனது சிஷத்துவம் எந்த வகையைச் சேர்ந்தது? நீ அவரிடமிருந்து என்ன பெற்றுக் கொள்ளலா மென்பதை விட அவர் உன்னிடத்திலிருந்து என்ன பெற்றுக் கொள்ள விரும்புகிறா ரென்பதைக் குறித்த கரிசனை உனக்கு உண்டா?

ஆதார சத்தியம்

"நீங்கள் உன்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." (யோவா 14:15)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்தவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

பேருதுவின் மிக மிக்கியத்திவம் வாய்ந்த அறிக்கை நாள் 292

சீரோபேனிக்கேய நாட்டுப் பெண்
மத் 15:21-28: மாற் 7:24-30

இயேசு அநேகரை சொஸ்தமாக்குதல்
மத் 15:29-31; மாற் 7:31-37

இயேசு 4000 பேரைப் போஷித்தல்
மத் 15:32-38; மாற் 8:1-9

ஒரு அடையாளம் கேட்குதல்
மத் 15:39:16-1-4; மாற் 8:10-12

பரிசேயர், சதுசேயரின் புளித்த மாவு
மத் 16:5-12; மாற் 8:13-21

இயேசு ஒரு குருடனைக் குணமாக்குதல்
மாற் 8:22-26

பேதுருவின் உறுதியான அறிக்கை
மத் 16:13-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சீமோன் பேதுரு செய்த அதே காரியத்தை நீயும் எப்போதாவது செய்வதை உணர்ந்திருக்கிறாயா? ஒரு வினாடி தேவனின் குரலுக்கு செவி சாய்த்தால் மத் 16:16 மறுவினாடியே சாத்தானின் குரலுக்குச் செவி சாய்த்தல் (மத் 16:22) உண்மைதான் சாத்தானின் குரலைக் கேட்பதை தவிர்க்க முடியாதுதான்? ஆயினும் நிச்சயமாக அக்குரலைப் பொருட்படுத்தாமலிருக்க நீ தீர்மானம் செய்து கொள்ளலாமே.

ஆதார சத்தியம்

"தெளிந்த புத்தியுள்ளவராயிருங்கள் விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்..." (1 பேது 5:8-9)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் திகோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 293 மறுரூபமாகுதல்

பேதுருவின் உறுதியான அறிக்கை
மாற் 8:27-30; லூக் 9:18-21

இயேசு தன்னைத்தான் வெறுப்பதைக் குறித்துப் பேசுதல்
மத் 16:24-28; மாற் 8:34-38; 9:1
லூக் 9:23-27

மறுரூபமாகுதல்
மத் 17:1-8; மாற் 9:2-8; லூக் 9:28:36

இயேசு தமது பாடு மரணத்தைக் குறித்துப் பேசுதல்
மத் 16:21-23; மாற் 8:31-33; லூக் 9:22

எலியாவைப் பற்றிய கேள்வி
மத் 17:9-13; மாற் 9:9-13

இயேசுவின் குணமாக்கும், விடுதலை யளிக்கும் ஊழியம்
மத் 17:14-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

லூக்காவின் கூற்றுப்படி இயேசு மலைமீது மறுரூபமாவதற்காக அல்ல ஜெபிப்பதற்காகவே ஏறிச் சென்றார் என்பதை ஜி. காம்பல் மார்கன் சுட்டிக்காட்டுகிறார். அவர் சென்ற நோக்கம் ஜெபிப்பதற்கு; விளைவோ மறுரூபமாகுதல். ஆண்டவரோடு ஒன்றித்து ஜெபிப்பதன் விளைவுக ளென்வென்பதை நான் குறிப்பிட்டு முன்னறி விக்கவே முடியாது. இன்று உங்கள் ஜெப நேரத்தின் விளைவு எப்படிப்பட்டதாக இருக்கு மென்பதை யாராலும் கூற முடியுமோ?

ஆதார சத்தியம்

"நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக் குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி அந்தரங் கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" (மத் 6:6)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் திகோவின் மரணம்			யோவானின் மரணம்

யார் பெரியவன்?

நாள் 294

இயேசுவின் குணமாக்கும், விடுதலையளிக்கும் ஊழியம்
மாற் 9:14-29; லூக் 9:37-43

இயேசு மீண்டும் தமது மரணத்தைக் குறித்துப் பேசுதல்
மத் 17:22-23; மாற் 9:30-32; லூக் 9:44-45

ஆலயத்திற்கு வரி செலுத்துதல்
மத் 17:24-27

யார் பெரியவர்?
மத் 18:1-5; மாற் 9:33-37; லூக் 9:46-48

பாவத்தின் காரணங்கள்
மத் 18:6-9; மாற் 9:42-50

காணாமற் போன ஆட்டைப் பற்றிய உவமை
மத் 18:10-14

யோவான் கடிந்து கொள்ளப்படுதல்
மாற் 9:38-41; லூக் 9:49-50

மன்னிப்பு, ஜெப இவற்றைப் பற்றிய போதனை
மத் 18:15-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஆவிக்குரிய உயர்வடைதல் என்பதைக் குறித்து உங்கள் கருத்து என்ன? தலமேப் பொறுப்பிலிருப்பதா? பிறருக்கு மேலதிகாரியாக இருந்து காரியங்களை நடத்துவதா– இவையெல்லாம் பெரிய காரியங்களல்ல. இவை மிகச் சிறிய காரியங்களே பிறரைக் கட்டுப்படுத்துவதல்ல. பிறருக்கு சேவை செய்யும் திறமையிலேதான் பெரியவராகும் மந்திரம் மறைந்துள்ளது. இது தேவனைப் பற்றியும் உன்னைப் பற்றியும், பிறரைப் பற்றியும் நீ கொண்டுள்ள சரியான கருத்துக்களைப் பொறுத்தே வளரமுடியும். உனது சேவை மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள நீ எவ்வளவு நேரம் செலவழிக்க வேண்டியதாயிருக்கிறது.

ஆதார சத்தியம்

"உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு உழியக்காரனாயிருக்கக்கடவன் தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." (மத் 23:11-12)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருப்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 295 மன்னிக்காத ஆவி

மன்னிக்காத வேலைக்காரனின் உவமை
மத் 18:21-35

இயேசுவின் மீது விசுவாசமில்லாத அவரது சகோதரர்கள்
யோவா 7:1-9

கூடாரப் பண்டிகையில் இயேசு
யோவா 7:10-13

தேவாயத்தில் பிரசங்கித்தல்
யோவா 7:14-31

அவரைக் கைது செய்ய காவலாளர் அனுப்பப்படுதல்
யோவா 7:32-36

ஜீவ தண்ணீர்
யோவா 7:37-39

வாக்குவாதம்
யோவா 7:40-53

விபசாரத்தில் பிடிபட்ட ஸ்திரீ
யோவா 8:1-11

உலகத்தின் ஒளி
யோவா 8:12-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பிறரை மன்னிக்க மறுக்கும் ஆவியின் மிகப் பயங்கரமான விளைவு யாதெனில் அது அவர்களது சொந்த இரட்சிப்பின் நிச்சயத்திற்கே இடையூறு விளைவிக்கும் பிறருக்கு மன்னிக்க மறுப்பவன் தேவனின் மன்னிப்பு தனது இருதயத்திற்குக் கடந்து வரும் பாலத்தையே அழித்துக் கொள்ளுகிறான். என்று யாரோ ஒருவர் கூறியது எவ்வளவு சரியான மனதில் பதியக் கூடிய வார்த்தைகள்! அவற்றை இன்றே உன் இருதயத்தில் எழுதிக் கொள்.

ஆதார சத்தியம்

"ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே 4:32)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

70 பேரும் திரும்பி வருதல் நாள் 296

இயேசுவும் யூதா அதிகாரிகளும்
யோவா 8:21-30

ஆவிக்குரிய விடுதலை
யோவா 8:31-38

ஆபிரகாமின் குமாரர்
யோவா 8:39-41

பிசாசின் பிள்ளைகள்
யோவா 8:42-47

இயேசு தனது உரிமைகளைக் கூறுதல்
யோவா 8:48-59

சமாரியரின் எதிர்ப்பு
லூக் 9:51-56

இயேசுவைக் பின்பற்றுவதன் விலைக் கிரயம்
மத் 8:19-22; லூக் 9:57-62

இயேசு 70 பேரை வெளியே அனுப்புதல்
லூக் 10:1-12

விசுவாசிக்காத நகரங்கள்
லூக் 10:13-16

எழுபது பேரும் திரும்பி வருதல்
லூக் 10:17-20

இயேசு களிகூருதல்
லூக் 10:21-24

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நீங்கள் எதற்காக மிகவும் அதிகமாக மகிழ்ச்சியடைவதுண்டு. உங்கள் ஜெபங்களுக்கு மறுஉத்தரவு கிடைப்பதற்காகவா? இயேசுவின் நாமத்தில் பிசாசுகள் உங்களுக்குக் கீழ்ப்படிவதற்காகவா? நீங்கள் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை நடத்துவதைக் குறித்தா, நாம் அதிக மகிழ்ச்சியடைய வேண்டிய காரியம் உண்டென்றால் அது நமது நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளதற்காகவே (லூக் 10:20) இந்த மிகப் பெரிய உண்மைக்காக எவ்வளவு நேரம் இன்று பரமபிதாவைத் துதிக்க முடியுமோ அவ்வளவு நேரமும் துதிப்போம்.

ஆதார சத்தியம்

"அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது. கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்." (பிலி 4:3-4)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 297

நல்ல மேய்ப்பன்

நல்ல சமாரியன் உவமை
லூக் 10:25-37

மார்த்தாள், மரியாளை இயேசு சந்தித்தல்
லூக் 10:38-42

பிறவிக் குருடன் பார்வை பெறுதல்
யோவா 9:1-41

மேய்ப்பனின் உவமை
யோவா 10:1-6

இயேசுவாகிய நல்ல மேய்ப்பன்
யோவா 10:7-21

பிரதிஷ்டைப் பண்டிகையில் இயேசு
யோவா 10:22-38

அநேகர் அவரை விசுவாசித்தல்
யோவா 10:39-42

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"நானே நல்ல மேய்ப்பன்" என்ற வார்த்தைகள் உவமானம் மட்டுமல்ல தமது பிள்ளைகளுக்குக் கிறிஸ்து ஒரு அன்பான கரிசனையுள்ள பாது காவலர் என்பதையே இவை காண்பிக்கின்றன. கவலையும், சோர்வும் உன்னை மேற்கொண் டுள்ளதா? இரவில் தூக்கம் வரமறுக்கிறதா? அப்படியானால் தூக்கம் வருவதற்காக ஆடுகளை எண்ணுவதற்குப் பதிலாக மேய்ப்பனிடம் பேச முயற்சித்துப் பார்.

ஆதார சத்தியம்

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன். அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்த்த தண்ணீர்க ளண்டையில் என்னைக் கொண்டு போய் விடுகிறார்." (சங் 23:1-2)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

எச்சரிப்புகளும் உற்சாக வார்த்தைகளும் நாள் 298

ஜெபத்தைக் குறித்த இயேசுவின் போதனை
லூக் 11:1-13

சாத்தானின் இராஜ்யத்தைக் குறித்த அவரது போதனை
லூக் 11:14-26

உண்மையான மகிழ்ச்சி
லூக் 11:27-28

ஒரு அற்புதத்தைக் கேட்குதல்
லூக் 11:29-32

சரீரத்தின் விளக்கு
லூக் 11:33-36

குருடரான வழிகாட்டிகள்
லூக் 11:37-54

மாய்மாலத்தைக் குறித்து எச்சரிப்பு
லூக் 12:1-3

தேவனின் கரிசனை
லூக் 12:4-7

பாவ அறிக்கை அல்லது புறக்கணிப்பு
லூக் 12:8-12

பணக்கார மூடனைக் குறித்த உவமை
லூக் 12:13-21

தேவனை நம்புதல்
லூக் 12:22-31

பரலோகத்தில் பொக்கிஷம்
லூக் 12:32-34

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கோடிக்கணக்கான மக்கள் தங்களைக் குறித்த தாழ்வு மனப்பான்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை சமீப காலத்திய ஆராய்ச்சிகள் காண்பிக்கின்றன. அநேகர் தங்களை மின்கணிப்பில் (Computer) பதிக்கப்பட்ட ஒரு பெயராகவோ அல்லது ஒரு அடையாள அட்டையில் பதிக்கப்பட்ட எண்ணாகவோ மட்டுமே கருதுகின்றார்கள். ஆனால் தேவனின் பார்வையிலோ ஒவ்வொரு மனித ஜென்மமும் விலை மதிப்பற்றது. லூக் 12:7ஐ ஒரு அட்டையில் எழுதி வைத்துக் கொண்டு ஒரு நாளைக்குக் குறிந்தது 12 முறையாவது தொடக்கம் வாசியுங்கள்.

ஆதார சத்தியம்

"என் கருவை உம்முடைய கண்கள் கண்டது.: என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாத போதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.
தேவனே உமது ஆலோசனைகள் எனக்கு எத்தனை அருமையானவைகள்: அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்" (சங் 139:16-17)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 299 ஆண்டவரின் இராஜ்ஜியம்

விழித்திருக்கம் வேலைக்காரர்
லூக் 12:35-40

உண்மையுள்ள, உண்மையற்ற வேலைக்காரர்
லூக் 12:41-48

பிரிவினை காரணராக இயேசு
லூக் 212:49-53

காலங்களை முன்னறிவித்தல்
லூக் 12:54-59

மனந்திரும்பு அல்லது மடிந்து போ
லூக் 13:1-5

கனியற்ற அத்திமரம்
லூக் 13:6-9

இயேசு ஓய்வுநாளில் சொஸ்தமாக்குதல்
லூக் 13:10-17

பரலோக இராஜ்ஜியத்தைக் குறித்த உவமைகள்
லூக் 13:18-21

இடுக்கமான வாசல்
லூக் 13:22-30

எருசலேமின் மீது இயேசு கொண்ட அன்பு
லூக் 13:31-35

இயேசு ஒரு வியாதிஸ்தனை சொஸ்தமாக்குதல்
லூக் 14:1-6

தாழ்மையும் பிறரை உபசரித்தலும்
லூக் 14:7-14

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்துவின் பூலோக ஊழியத்தை விபரிக்கும் சம்பவங்களையெல்லாம் வாசிக்கும் போது அவர் தனது தனிப்பட்ட சொந்தத் தேவைகளைக் குறித்து சிறிதளவும் அக்கறை காண்பித்தாகத் தெரியவேயில்லை. இதை எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? ஹட்சன் டெய்லர் சுருக்கமாக ஆனால் விளக்கமாகக் கூறுவது போல் தேவனின் ஊழியத்தைதேவன் விரும்பும் வழியில் செய்ம்போது தேவன் தரும் உதவியும் சற்றும் குறைவு படாது.

ஆதார சத்தியம்

"முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். " (மத் 6:33)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

இயேசுவின் நாட்களில் பாலஸ்தீனம்



நாள் 300 சீஷத்துவத்தின் சவால்

மிகப்பெரிய கலியாண விருந்தைப் பற்றிய உவமை
லூக் 14:15-24

சீஷத்துவத்தின் விலைக்கிரயம்
லூக் 14:25-35

காணாமற் போன ஆடு
லூக் 15:1-7

காணாமற் போன வெள்ளிக்காசு
லூக் 15:8-10

காணாமற் போன மகன்
லூக் 15:11-32

அநீதியுள்ள உக்கிரணக்காரன்
லூக் 16:1-13

மேலும் அதிக போதனைகள்
லூக் 16:14-18

ஐசுவரியனும் லாசருவும்
லூக் 16:19-31

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சீஷத்துவம் என்ற வார்த்தைக்கு ஒரு புதிய விளக்கவுரை இன்றைய கிறிஸ்தவ சபைகளுக்கு மிக அத்தியாவசியமான அவசரத் தேவையாகும். பல ஆண்டுகளாகத் தவறாகப் பயன்படுத்தப்பட்டதனால் இந்த வார்த்தை கறைபடிந்து மாசு நிறைந்து நிறமிழந்து மங்கிய நிலையில் உள்ளது. லூக் 14:25-35 வசனங்களில் கிறிஸ்து சீஷத்துவத்தை விளக்குவதை மீண்டும் வாசித்துப் பார்த்து விட்டு உங்களையே கேட்டுக் கொள்ளுங் கள் நான் உண்மையிலேயே அவருடைய சீஷனா?

ஆதார சத்தியம்

"அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகவே பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதுபோலவே அறிந்திருக்கின்றோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். " (1 யோவா. 2:5-6)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

உயிர்த்தெழுதலும் ஜீவனும்

நாள் 301

பயனற்ற ஊழியக்காரன்
லூக் 17:1-10

லாசருவின் மரணம்
யோவா 11:1-16

இயேசுவே உயிர்த்தெழுதலும் ஜீவனும்
யோவா 11:17-27

இயேசு கண்ணீர் விடுதல்
யோவா 11:28-37

லாசருவை உயிருடன் எழுப்புதல்
யோவா 11:38-44

இயேசுவுக்கு விரோதமான சதித் திட்டம்
யோவா 11:45-53

இயேசு எப்பிராயிமுக்குப் போகுதல்
யோவா 11:54

பத்து குஷ்டரோகிகளைக் குணமாக்குதல்
லூக் 17:11-19

பரலோக இராஜ்ஜியத்தின் வருகை
லூக் 17:20-37

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்ற வசனத்தை இயேசு தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு சொல்லாமல் அதற்கு முன்னதாகவே சொன்னார் என்பதை நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? அது எதைக் காண்பிக்கிறது? அவர் மரித்தோரிலிருந்து எழுந்ததினால் அவர் உயிர்த்தெழுதல் ஆகவில்லை.மாறாக அவரே உயிர்த்தெழுதலாக இருக்கிறபடியினால் தான் அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார். உங்களுக்குப் புரிந்து விட்டதா?

ஆதார சத்தியம்

"அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்."
(ரோம 8:11)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 302 இயேசுவும் விவாகரத்தும்

விடாப்பிடியாக கேட்டுப் பெற்ற விதவையின் உவமை
லூக் 18:1-8

பரிசேயன் ஆயக்காரன் பற்றிய உவமை
லூக் 18:9-14

விவாகரத்து பற்றி இயேசுவின் போதனை
மத் 19:1-12; மாற் 10:1-12

இயேசு குழந்தைகளை ஆசீர்வதித்தல்
மத் 19:13-15; மாற் 10:13-16;
லூக் 18:15-17

பணக்கார வாலிப அதிபதி
மத் 19:16-30; மாற் 10:17-31

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

விவாகரத்து பற்றிய உங்கள் கருத்து என்ன? பழைய ஏற்பாட்டில் ஆண்டவர் அதை வெறுக்கிறேன் எனக் கூறியிருக்கிறார். (மல் 2:16) பிரிட்டனில் மட்டுமே ஏறத்தாழ 150, 000 விவாகரத்துகள் ஆண்டுதோறும் நடைபெறு கின்றன. இப்படி பிரிட்டனில் உடைந்து சிதறும் குடும்பங்களைத் தடுத்து நிறுத்தும்படியாக நான் ஏதாவது செய்யக் கூடுமா ஆண்டவரே? என்று கேட்டு அவருடைய பாதத்தில் சில நிமிடங்க ளாவது இன்று காத்திருங்கள்.

ஆதார சத்தியம்

".... தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். "
(11 கொரி 5:19)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

கனத்தையடையத் துடிக்கும் சீஷர்கள் நாள் 303

பணக்கார இளம் அதிபதி
லூக் 18:18-30

திராட்சைத் தோட்ட வேலைக்காரர் பற்றிய உவமை
மத் 20:1-16

சிலுவைப்பாடுகளைக் குறித்து இயேசு பேசுகிறார்
மத் 20:17-19; மாற் 10:32-34; லூக் 18:31-34

யாக்கோபு, யோவானின் அளவுக்கு அதிகமான ஆர்வம்
மத் 20:20-28; மாற் 10:35-45

இரு குருடர்கள் சுகமடைதல்
மத் 20:29-34

பர்திமேயு குணமடைதல்
மாற் 10:46-52; லூக் 18:35-43

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கனமடையத் துடித்து நின்ற தனது சீஷர்கள் சிலரைப் போன்று பிரச்சினைகளை உருவாக்கிய மக்களைக் கிறிஸ்து எவ்விதமாகத் தனது வாழ்க்கையில் சமாளித்தார்? அப்படிப்பட்ட தருணங்கள் ஒவ்வொன்றையும் ஒரு புதிய ஆழ்ந்த ஆவிக்குரிய சத்தியத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பமாக இயேசு பயன்படுத்திக்கொண்டார். இதே கொள்கையை உங்கள் வாழ்விலும் நீங்கள் கடைப்பிடிக்க ஆரம்பியுங்கள். பிறருடன் நீங்கள் கொள்ளும் உறவில் அது ஒரு பெருத்த மாறுதலைக் கொண்டுவரும் தோல்விகள் வெற்றிகளாக மாறும்.

ஆதார சத்தியம்

"மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்: ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது" (நீதி 15:23)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 304 வெற்றிப் பவனி

சகேயுவின் மனமாறுதல்
லூக் 19:1-10

பொற்காசுகளைப் பற்றிய உவமை
லூக் 19:11-28

இயேசு பெத்தானியாவுக்கு வருதல்
யோவா 11:55-57; 12:1

லாசருவுக்கு விரோதமான சதி
யோவா 12:9-11

இயேசு பெத்தானியாவில் தைல அபிஷேகம் பண்ணப்படுதல்
யோவா 12:2-8

எருசலேமுக்கு வெற்றிப் பவனி
மத் 21:1-11; மாற் 11:1-11; லூக் 19:29-44; யோவா 12:12-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

குருத்தோலைகளுடன் மகிழ்ச்சி ஆரவாரத்தி தோடும் ஒரு நாளில் வரவேற்கப்பட்ட அதே இயேசுவை மறுநாளிலேயே சிலுவையிவறைப் பட்ட அதே இயேசுவை மறுநாளிலேயே சிலுவை யில் அறைப்பட அனுப்பி வைப்பதுதான் மனித னின் இயற்கை சுபாவம் திரள் கூட்டமான மக்கள் இயேசுவைப் புகழ்ந்து, வாழ்த்தினாலும், வெகு சிலநேர நிலையான சீடராக மாறுகிறார்கள். உனது காரியமென்ன? நீ கிறிஸ்தவை வாழ்த்தி இரசித்து மட்டும் நிற்கும் கூட்டத்தில் ஒருவனா? அல்லது மெய்யான சீடனா?

ஆதார சத்தியம்

"என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலு மல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக் கடவோம்." (1 யோ 3:18)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

இயேசுவின் அதிகாரம்

நாள் 305

தேவாலயம் இரண்டாம் முறையாக சுத்திகரிக்கப்படுதல்
மத் 21:12-17; மாற் 11:15-19; லூக் 10:45-48

அத்தி மரத்தைச் சபித்தல்
மத் 21:18-19; மாற் 11:12-14

அத்திமரம் பட்சித்துப் போகுதல்
மத் 21:20-22; மாற் 11:20-26

இயேசுவின் அதிகாரத்திற்குச் சவால்
மத் 21:23-27; மாற் 11:27-33; லூக் 20:1-8

இரு குமாரரைப் பற்றிய உவமை
மத் 21:28-32

பொல்லாத குத்தகைகாரனின் உவமை
மத் 21:33-46; மாற் 12:1-12 லூக் 20:9-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இன்றுகூட கிறிஸ்துவின் அதிகாரத்தைக் குறித்துக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. கிறிஸ்தவர்கள் கூட குழப்பமடைகிறார்கள். பொதுவாக கிறிஸ்துவின் வார்த்தைகளை மக்கள் மூன்று விதமாக ஏற்றுக் கொள்வதுண்டு. கவனம் செலுத்தவேயில்லை. அல்லது. அதைக் குறித்து எரிச்சலடைவது அல்லது உடனடியாகக் கிழ்ப்படிதல். இந்த மூன்று விதங்களில் எவ்விதத்தில் நீ கிறிஸ்துவின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்கிறாய்?

ஆதார சத்தியம்

"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவா 14:15)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

இதயத்திற்கு இதயம்

ஒக்டோபர்

நற்செய்தி நூல்களில் அருமையான ஆண்டவர் இயேசு நோயாளர்களுக்கு சுகமளித்தும் துன்பத்தில் காணாமற் போனோரை தேடியும், சோர்வானவர்களுக்கு தைரியம் அளித்தும் வந்தார் என்று பார்க்கிறோம். நீங்கள் ஒரு வரலாற்று புருஷனைக் குறித்து மட்டும் வாசிக்கவில்லை; அவர் இன்றும் வாழ்கிறவர். இயேசு நேற்றும், இன்றும், என்றும் ஜீவனுள்ளவர், இயேசுவின் நாமத்திற்கு ஸ்தோத்திரம்

11

இந்தப் பகுதியில் .....

இயேசுவின் இறுதிவாரம்.
அவருடைய வழக்கும், சிலுவையிலறைதலும்,
உயிர்த்தெழுந்த தரிசனங்களும்
பெந்தகொஸ்து வல்லமை.
துன்புறுத்தப்படுதலும் முன்னேற்றமும்.
பவுல் புதிய சபைகளை ஸ்தாபித்தல்.

நாள் 306 இயேசு எதிர்ப்பை அமைதிப்படுத்துகிறார்

கலியான விருந்து பற்றிய உவமை
மத் 22:1-14

வரி செலுத்துவது பற்றி இயேசுவிடம் கேள்வி கேட்குதல்
மத் 22:15-22; மாற் 12:13-17; லூக் 20:20-26

உயிர்த்தெழுதலைப் பற்றி
மத் 22:23-33; மாற் 12:18-27; லூக் 20:27-38

பிரதான கற்பனையைக் குறித்து
மத் 22:34-40; மாற் 12:28-34; லூக் 20:39-40

இயேசு கேட்ட ஒரு கேள்வி
மத் 22:41-46; மாற் 12:35-37; லூக் 20:41-44

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

நாம் கேள்வி கேட்கத் தகுந்த வயது வந்த பெரியவர்களாக நம்மைக் குறித்து எண்ணிக் கொள்ளுகிறோம்; ஆனால் அதே சமயத்தில், அக்கேள்விகளுக்குரிய பதில்களைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு இல்லை; இதன் விளைவாக, நமது மனதின் அடித்தளத்தில் போராட்டங்கள் எழுகின்றன. எல்லாக் கேள்விகளுக்கும் நித்தியத்தில் பதில் கிடைக்கும். இந்த உண்மையை உங்கள் மனக்குழப்பங்களின் மத்தியிலும் இறுகப் பற்றிக் கொண்டால், வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையின் இரகசியத்தைப் புரிந்து கொண்டவர்களாவோம்.

ஆதார சத்தியம்

"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது."

(ஏசா. 55:8-9)

வேதாகமத்தில்	எழுதியது	விசேடதன்மை
மாற்கு புதிய ஏற்பாட்டில் 2ஆவது புத்தகம். நற்செய்தி நூல்களில் 2 ஆவது	மாற்கு	மாற்கு மிகவும் சிறிய சுவிசேஷம் ஆனால் அதிக சம்பவங்கள் நிறைந்தது. ஒவ்வொரு நிகழ்வுகளையும் விரைந்து எழுதும் இவர் யேசுவை நிதர்சனமாகக் காட்டுகிறார்.

முடிவு காலத்தின் அடையாளங்கள் நாள் 307

இயேசு பரிசேயர், சதுசேயரைக் கடுமையாகக் கண்டித்தல்
மாத் 23:1-31; மாற் 12:38-40 லூக் 20:45-47

இயேசு நியாயத் தீர்ப்பை முன்னறிவித்தல்
மாத் 23:32-36

எருசலேமைப் பார்த்து புலம்பியழுதல்
மாத் 23:37-39

விதவையின் இரு காசுகள்
மாற் 12:41-44 லூக் 21:1-4

'தேவாலயம் அழிக்கப்படும்'
மாத் 24:1-2

கடைசிக்கால அடையாளங்கள்
மத் 24:3-31

அத்தி மரத்தைப் பற்றிய உவமை
மத் 24:32-35

மனுஷ குமாரனின் வருகை
மத் 24:36-51

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தீர்க்க தரிசனத்தின் நோக்கமும் குறிக்கோளும் இயேசு மீண்டும் வருகிறார் என்பதை மட்டுமல்ல, நாம் அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்க வேண்டுமென்பதையும் வழியுறுத்துவதே. சில கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் வருகையை ஒரு மதக்கோட்பாடாக மட்டும் கருதுகின்றனர். மற்றும் சிலர் அதுவே தங்கள் வாழ்க்கையின் நோக்கமெனக் கருதுகின்றனர். இந்த உண்மை உன்னைப் பொறுத்த மட்டில் எந்தவிதத்தில் உன்னைப் பாதிக்கிறது?

ஆதார சத்தியம்

"இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென். கர்த்தராகிய இயேசுவே. வாரும்." (வெளி. 22:20)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
மாற்கு மன உருக்கம் நிறைந்த இயேசுவை தேவனுடைய குமாரனாகவும் மனித குமாரனாகவும் காண்பிக்கிறார். இயேசு மனதுருகிக் கலங்கினார்.	இயேசு தன் வாழ்வை சுற்பித்தல், சுகமளித்தல் ஏனையவர்களைக் கவனித்தல் என்பவைகளுக்கு அர்ப்பணித்த ஒரு வேலையாளனாகக் காட்டப்படுகிறார்.	மாற்கு 10:45

நாள் 308 விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

தேவாலயத்தின் அழிவு
மாற் 13:1-2; லூக் 21:5-6

கடைசிக் கால சம்பவங்கள்
மாற் 13:3-27; லூக் 21:7-28

அத்திமரத்தின் உவமை
மாற் 13:28-31; லூக் 21:29-33

ஆயத்தமாயிருக்க எச்சரிப்பு
மாற் 13:32-37; லூக் 21:34-36

இயேசு தேவாலயத்தில் போதித்தல்
லூக் 21:37-38

புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகளின் உவமை
மத் 25:1-13

தாலந்துகளின் உவமை
மத் 25:14-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு சவாலுக்கு தயாரா? அப்படியானால் ஒரு வெள்ளைத் தாளையும் பேனாவையும் எடுத்து க் கொள்ளுங்கள். கீழ்க்கண்ட இரு கேள்விகளுக்கும் பதில் எழுதுங்கள். 'தேவன் உனக்கு எத்தனை தாலந்துகள் கொடுத்துள்ளார்? நீ அவற்றை எவ்வாறு பயன்படுத்துகிறாய்? இதைக் குறித்து சிந்திக்கும் போது ஒன்றை மட்டும் மறந்து விடாதே – நீ எதைப் பயன்படுத்தவில்லையோ அதை இழந்து போவாய்.

ஆதார சத்தியம்

"அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம். நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்கள்." (ரோமர் 12:5-6)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி 40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும்
மத் 25:31-46

இயேசுவுக்கு விரோதமான சதித்திட்டம்
மத் 26:1-5; மாற் 14:1-2; லூக் 22:1-2

மரியாள் இயேசுவை தைலத்தால் அபிஷேகித்தல்
மத் 26:6-13; மாற் 14:3-9

யூதாஸ் துரோகியாக மாறுதல்
மத் 26:14-16; மாற் 14:10-11; லூக் 22:3-6

புற ஜாதிகள் இயேசுவைப் பார்க்க விரும்புதல்
யோவா 12:20-36

யூதர் அவரைப் புறக்கணித்தல்
யோவா 12:37-43

இயேசு. உலகத்தின் ஒளி
யோவா 12:44-50

பஸ்காவுக்கு ஆயத்தம்
மத் 26:17-19; மாற் 14:12-16; லூக் 22:7-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இயேசுவின் மற்ற ஊழிய நாட்களைவிட அவரது பூலோக வாழ்வின் கடைசி நாட்கள் அதிக அளவில் சுவிசேஷங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. தேவன், அவரது குமாரனின் இந்தக் காலத்தை அவ்வளவு முக்கியமானதாகக் கருதும் பொழுது, நாமும் அதற்கு அதிக முக்கியத்துவமளிக்க வேண்டாமா? மீண்டும் கல்வாரியை நோக்கிச் செல்லும் பாதையில் நாம் நடந்து, அவரது வேதனைகளுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தை நமக்கு அருளுமாறு, தேவனிடம் மன்றாடுவோம்.

ஆதார சத்தியம்

"அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்; நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்." (11 தீமோ. 2:12-13)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 310 கடைசி இராவிருந்து

இயேசு, துரோகியை அடையாளம் காட்டுதல்
மத் 26:20-25; மாற் 14:17-21; யோவா 13:21-30

இயேசுவின் புதிய கட்டளை
யோவா. 13:31-35

அவர் திருவிருந்தை ஸ்தாபித்தல்
மத் 26:26-29; மாற் 14:22-25;
லூக் 22:14-23; 1கொரி 11:23-26

சீஷர்களின் வாக்குவாதம்
லூக் 22:24-30

இயேசு சீஷர்களின் கால்களைக் கழுவுதல்
யோவா 13:1-20

பேதுருவின் மறுதலிப்பை முன்னறிவித்தல்
மத் 26:31-35; மாற் 14:27-31;
லூக். 22:31-38; யோவா 13:36-38

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்து, தமது சீஷரின் கால்களைக் கழுவுவதையும், அப்பத்தைக் கரத்தில் எடுத்துப் பிட்பதையும் நோக்கும் போது . உனக்குக் கிடைக்கும் செய்தி என்ன? வாழ்க்கையின் மிகப் பெரிய போதனைகள், வார்த்தைகளினாலல்ல, செய்கைகளினாலேயே கற்றுக் கொடுக்கப்படுகின்றன என்பதை இவை தெளிவாகக் காட்டுகின்றன அல்லவா? கிறிஸ்துவைக் குறித்த உனது சாட்சி எப்படிப்பட்டது போதனை மட்டுமா? அல்லது சாதனையா?

ஆதார சத்தியம்

"அப்படியே விசுவாசமும், கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்."
(யாக் 2:17)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

கிறிஸ்துவால் குறிப்பிடப்பட்ட பழைய ஏற்பாட்டு மனிதர்களும் இடங்களும்

பழைய ஏற்பாட்டு குறிப்பு	சம்பவம்	புதிய ஏற்பாட்டு குறிப்பு
1 ஆதி. 1:27; 2:23-24	ஆதாம், ஏவாள் சிருஷ்டிப்பு	மாற்கு 10:6-8
ஆதி. 4:10	ஆபேல் கொலை	லூக்கா 11:51
ஆதி. 6:5-11	நோவாவின் நாட்களின் பாவம், வெள்ளம்	லூக்கா 17:26-27
ஆதி. 18:20; 19:24	லோத்தின் நாட்களின் பாவம், அக்கினி	லூக்கா 17:28, 29
ஆதி. 19:26	லோத்தின் மனைவி	லூக்கா 17:32
யாத் 3:1-6	மோசே, முட்செடி	லூக்கா 20:37
யாத் 16:15	மோசே, பரலோக மன்னா	யோவான் 6:31
எண். 21-8	மோசே, வெண்கல சர்ப்பம்	யோவான் 3:14
1 சாமு. 21:6	தாவீது, சமூகத்தப்பம்	மத். 12-3, 4
1 இராஜா 10:1	சாலமோன், சேபா ராணி	மத். 12-42
1 இராஜா 17:1,9	எலியா, விதவை, பஞ்சம்	லூக்கா 4:25, 26
2 இராஜா 5	நாகமானின் குஷ்டரோகம்	லூக்கா 4:27
2 நாளா 24:20;21	சகரியாவின் கொலை	லூக்கா 11:51
தானி 9:27;11:31;12:11	தானியேல் அருவருப்பு	மத். 24:15
யோனா 1:17	யோனா, மீன்	மத்தேயு 12:40;16:4
யோனா 3:4-10	நினிவே மனந்திரும்புதல்	லூக்கா 11:30மத். 12:41

நாள் 311 இயேசு தமது சீடர்களை ஆறுதல்படுத்துதல்

இயேசு பிதாவிடம் செல்லும் வழி
யோவா 14:1-14

பரிசுத்த ஆவியானவர் வாக்குப் பண்ணப்படுதல்
யோவா 14:15-31

மெய்யான திராட்சச் செடி
யோவா 15:1-17

பாடுகளைக் குறித்த எச்சரிக்கை
யோவா 15:18-27; 16:1-4

இயேசு, தேற்றரவாளனைக் குறித்துப் போதித்தல்
யோவா 16:5-15

அவர் பிதாவைக் குறித்துப் பேசுதல்
யோவா 16:16-28

சீடர்களின் மறுமொழி
யோவா 16:29-30

இயேசு சமாதானத்தை வாக்குப் பண்ணு தல்
யோவா 16:31-33

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பரிசுத்த ஆவியானவர் நமது சோதனை, துன்ப நேரங்களில் எவ்வாறு நம்மை ஆறுதல்படுத்தி வருகிறார் என்பதைக் குறித்து நீங்கள் என்றாவது வியப்படைந்ததுண்டா? யோவான்0 14இல் இயேசு அவருக்கு வைத்துச் சென்றுள்ள மாதிரியை அவர் அப்படியே பின்பற்றுகிறார். இந்த இணையற்ற அதிகாரத்தில், கிறிஸ்து தமது சீஷரை எவ்விதமாகத் தேற்றி அறுதலளிக்கிறார் என்பதை ஆழ்ந்து சிந்திக்க சற்று நேரம் செலவழியுங்கள்-அதன் பின்னர், உங்கள் உள்ளத்திலும் வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியானவர் ஆறுதலளித்து வரும் விதத்தையும் எண்ணி, ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஆதார சத்தியம்

"தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்."

(II கொரி. 1:4)

வேதாகமத்தில்	எழுதியது	விசேடதன்மை
புதிய ஏற்பாட்டில் 4ஆவது புத்தகம் நற்செய்தி நூல்களில் 4ஆவது	யோவான்	யோவான் தொடர்ந்து இயேசுவின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்வுகளின் கருத்தை விளக்குகிறார். இயேசுவின் உபமானங்கள் இவர் குறிப்பிடவில்லை

மிகவும் இருண்ட வேளை

நாள் 312

இயேசு தனக்காக ஜெபித்தல்
யோவா 17:1-5

இயேசு தமது சீடருக்காக ஜெபித்தல்
யோவா 17:6-19

எல்லாக் கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக ஜெபித்தல்
யோவா 17:20-26

கெத்சமனே தோட்டத்தில்
மத். 26:30, 36-46; மாற் 14:26, 32-42; லூக் 22:39-46; யோவா 18:1

இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு, கைது செய்யப்படுதல்
மத். 26:47,55; மாற் 14:43-49; லூக் 22:47-53; யோவா 18:2-11

சீடர்கள் அவரை விட்டுவிட்டு ஓடிப்போகுதல்
மத் 26:56 மற் 14:50-52

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"அடுத்த அறையில் கிறிஸ்து எனக்காக ஜெபித்துக் கொண்டிருப்பதை நான் கேட்கக் கூடுமானால், கோடிக்கணக்கான பகைவருக்கும் கூட நான் பயப்பட மாட்டேன்" என்று பிரபலப் போதகர் ராபர்ட் மக்ஷெயின் (Robert Mecheyne) ஒருமுறை கூறினார். கவனியுங்கள்-இப்பொழுது. அவர் உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறார். உனது பக்கத்து அறையிலிருந்து ஜெபிக்காவிட்டாலும். கிருபாசனத்துக்கு முன்பாக ஜெபிக்கிறார். இதை உறுதியாக நம்பு-அவருக்கு தூரம் ஒரு பொருட்டல்ல: அது ஜெபத்தைப் பாதிக்காது!

ஆதார சத்தியம்

"... மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால், அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்." (எபி. 7:25)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
யோவான் இயேசுகிறிஸ்துவை தேவனாகக் காண்பிக்கிறார். 'நானே' என்று எட்டுத் தடவைகள் இயேசு சொல்லுகிறார்.	யோவானுடைய நோக்கம் 20:31இல் கூறப்பட்டிருக்கிறது. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் விசுவாசித்து அவருடைய நாமத்திலேயே நித்திய ஜீவனை அடைய இலைகள் எழுதப்பட்டுள்ளது	யோவான் 3:16 தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளினார்.

நாள் 313 யூதர்கள் செய்த விசாரணை

அன்னா காய்பா முன்பாக இயேசு
யோவா 18:12-14, 19-23

சனகெரிம் சங்கத்தினர் முன் விசாரிக்கப்படுதல்
மத். 26:57, 59-66; மாற் 14:53, 55-64
லூக் 22:54; யோவா 18:24

அவர் பரிகசிக்கப்பட்டு துன்பப்படுதல்
மத். 26:67-68; மாற் 14:65,
லூக் 22:63-65

பேதுரு மறுதலித்தல்
மத். 26:58, 69-75; மாற் 14:54;66-72
லூக் 22:55-62; யோவா 18:15-18, 25-27

இயேசு ஆக்கினையடைதல்
மத். 27:1-2; மாற் 15:1
லூக் 22:66-71

யூதாவின் மனம் அவனை வாதித்தல்
மத். 27:3-10; அப் 1:18-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சிக்கலான தருணங்களில், தன்னையே விடுவித்துக் கொண்டு, அங்கிருந்து மறைந்து செல்லும் சக்தி பெற்றிருந்த தேவகுமாரண், வேதனைகளை அனுபவிப்பதைத் தெரிந்து கொண்டு, அமைதியாக இருப்பது எவ்வளவு பெரிய ஆச்சரியமும், அதிர்ச்சியுமளிக்கும் காட்சி! வில்லியம் பென்ன் கூறுவது போன்று, வேதனையின்றி வெற்றிக் குருத்தோலை இல்லை; முட்களின்றி சிம்மாசனமில்லை; மனக்கசப்பின்றி மகிமை இல்லை. சிலுவையின்றி கிரீடமும் இல்லை".

ஆதார சத்தியம்

"...ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்" (மத். 16:24,25)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

பிலாத்துவுக்கு முன்பாக விசாரணை

நாள் 314

இயேசு பிலாத்துவிடம் அனுப்பப்படுதல்
மத். 27:11-14; மாற் 15:2-5,
லூக் 23:1-5; யோவா 18:28-38

ஏரோது இயேசுவைக் கேள்வி கேட்குதல்
லூக் 23:6-10

மீண்டும் பிலாத்துவிடம்
லூக் 23:11-12

பிலாத்துவின் போர்ச் சேவகர், இயேசுவைப் பரிகசித்தல்
மத். 27:27-31; மாற் 15:16-19;
யோவா 19:2-3

பரபாஸ் விடுதலை செய்யப்படுதல் இயேசு வாரினால் அடிக்கப்படுதல்
மத். 27:15-26; மாற் 15:6-15,
லூக் 23:13-25; யோவா 18:39-40; 19:1

பிலாத்து, இயேசுவை விடுவிக்க வகை தேடுதல்
யோவா 19:4-12

பிலாத்துவின் இறுதித் தீர்ப்பு
யோவா 19:13-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்து, பொந்தியு பிலாத்துவின் முன் நிற்கும் போது அவர் 'நல்ல அறிக்கை செய்தார்' என்று பவுலப்போஸ்தலன் கூறுகிறார் (1 தீமோ. 6:12) இதன் பொருளென்ன? தமது செய்கைகளைத் தீர்மானிக்க, அவர் பிலாத்துவுக்கு இடமளிக்கவி ல்லை. அவர் பிலாத்துவின் செய்கைக்குப் பதில் செய்கை எதுவும் செய்யவில்லை: தனது செய்கையைத் தொடர்ந்து செய்து கொண்டி ருந்தார்: அமைதியாக இருக்க தீர்மானித்தார்: நேசித்துக் கொண்டேயிருக்கத் தீர்மானித்தார். நாமும் வாழ்க்கையில் இவ்விதமாகப் பிறரது செய்கைகளினால் பாதிக்கப்படாது. இயேசு செய்தது போன்று நமது செய்கைகளைத் தொடர்ந்து, அமைதியாக செய்யும் போது, நாமும் 'நல்ல அறிக்கை' செய்கிறோம்.

ஆதார சத்தியம்

"மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத். 10:32)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 315 இயேசுவின் மரணம்

இயேசு கொல்கதாவுக்கு நடந்து செல்லுதல்
மத். 27:32-34; மாற் 15:20-23; லூக் 23:26-32; யோவா 19:17

இயேசு சிலுவையிலறையப்படுதல்
மத். 27:35-44; மாற் 15:24-32; லூக் 23:33-43; யோவா 19:18-27

மூன்று மணிநேர காரிருள்
மத். 27:45-49; மாற் 15:33-36; லூக் 23:44-45; யோவா 19:28, 29

இயேசுவின் மரணம்
மத். 27:50; மாற் 15:37; லூக். 23:46; யோவா 19:30

அவரது விலாவில் குத்தப்படுதல்
யோவா 19:31-37

இயேசுவின் மரணத்தின் போது நிகழ்ந்த அற்புதமான காரியங்கள்
மத். 27:51-56; மாற் 15:38-41; லூக் 23:47-49

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இன்றைய வேதப்பகுதிக்கு மிகப் பொருத்தமான விளக்கம் வேல்ஷ் போதகர் ஒருவரின் கல்லறையில் எழுதப்பட்டுள்ள ஒரு வாசகமேயாகும். "மரணத்திற்கு மரிக்கும் மரணத்தின் மரணத்தை (தாம்) மரித்ததன் மூலம் கிறிஸ்து தராதிருந்தால் ஜீவ வாசல் மனிதருக்காக ஒருபொழுதும் திறந்திருக்கவே முடியாது".

ஆதார சத்தியம்

"மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1 கொரி. 15:21,22)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகுஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

உயிர்த்தெழுதல் நாள் 316

இயேசுவின் சரீரம் கல்லறையில் வைக்கப்படுதல்
மத். 27:57-61; மாற் 15:42-47; லூக் 23:50-56; யோவா 19:38-42

போர்ச் சேவகர் காவலுக்கு வைக்கப்படுதல்
மத். 27:62-66

ஸ்திரீகள் கல்லறைக்கு வருதல்
மத். 28:1-4; மாற் 16:1-4; லூக் 24:1-2; யோவா 20:1

தேவ தூதரின் செய்தி
மத். 28:5-8; மாற் 16:5-8; லூக். 24:3-8

பேதுருவும் யோவானும் கல்லறைக்குச் செல்லுதல்
லூக் 24:9-12; யோவா 20:2-10

மகதலேனா மரியாளுக்கு இயேசு காட்சியளித்தல்
மாற் 16:9-11; யோவா 20:11-18

மற்றப் பெண்களுக்கும் காட்சியளித்தல்
மத் 28:9-10

சேவகருக்கு லஞ்சம் கொடுக்கப்படுதல்
மத் 28:11-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

யோசேப்பின் கல்லறையைக் குறித்து அநேகருக்குத் தெரியாத, ஆனால் மிக முக்கியமானதொரு உண்மை உண்டு–அது ஒரு கல்லறையே அல்ல, நித்தியரான கிறிஸ்து, தாம் மீண்டும் மகிமை பெற எழுந்தருளும் வழியில், ஒரு சில இரவுகளைக் கழித்த ஒரு அறைதான் அது. H.R.L. ஷெப்பர்ட் கூறுவது போல், "கிறிஸ்துவின் மரணம் தவிர்க்க முடியாத ஒன்று: அவர் உயிர்த்தெழுதலும் தவிர்க்க முடியாத ஒன்றே. இதற்குக் குறைவான ஒன்றை தேவனிடமிருந்து எதிர்பார்க்க முடியாது.

ஆதார சத்தியம்

"மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1 கொரி. 15:55)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

உயிர்த்தெழுந்து அளிக்கப்பட்ட 10 தரிசனங்கள்

முதல் நாள்

1. மகதலேனா மரியாளுக்குத் தோட்டத்தில்
   மாற். 16:9, யோவா. 20:11-18

2. கல்லறையிலிருந்து திரும்பிய பெண்களுக்கு
   மத். 28:9,10

3. எம்மாவூருக்குப் போகும் வழியில் இரு சீடருக்கு
   லூக். 24:13-32; மாற். 16:12,13

4. எருசலேமில் பேதுருவுக்கு
   லூக். 24:34; 1 கொரி 15:5

5. மேலறையில் தமது 10 அப்போஸ்தலருக்கு
   லூக். 24:36-43; யோவா. 20:19-23

மீதியான 40 நாட்கள்

6. மேலறையில் பதினொருவருக்கு
   யோவா. 20:24-29

7. கலிலேயாக் கடற்கரையில் 7 அப்போஸ்தலருக்கு
   யோவா. 21:1-24

8. தபோர் (Tabor) மலையில் பதினொரு சீஷருக்கும் 500 விசுவாசிகளுக்கும்
   மத். 28:16-20; 1கொரி. 15:6

9. இயேசுவின் சகோதரன் யாக்கோபுக்கும் பதினொருவருக்கும் எருசலேமில்
   மாற். 16:14-18; லூக் 24:44-49; 1கொரி. 15:7

10. ஒலிவ மலைமீது பதினொருவருக்கும்
    லூக். 24:50-53

இயேசு அநேகருக்குத் தரிசனமாகுதல் நாள் 317

எம்மாவூருக்குப் போகும் வழியில்
மாற் 16:12-13; லூக் 24:13-32;

அந்த சீடர், மற்ற சீடருக்கு அறிவித்தல்
லூக். 24:33-35

இயேசு, மற்ற சீடருக்குத் தரிசனமளித்தல்
1 கொரி 15:5; மாற் 16:14;
லூக் 24:36-43; யோவா 20:19-25

தோமாவுக்குத் தரிசனமளித்தல்
யோவா 20:26-29

கலிலேயாக் கடலருகில் காட்சியளித்தல்
யோவா 21:1-14

இயேசு, பேதுருவை மீண்டும் சேர்த்துக் கொள்ளுதல்
யோவா 21:15-24

மிகப்பெரிய கட்டளை
மத். 28:16-20 மாற் 16:15-18; 1 கொரி 15:6

இயேசு, யாக்கோபுக்குத் தரிசனமாகுதல்
1 கொரி 15:7

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து சந்தேகப்படும் சோதனை சீஷருக்கு வருமென்று நன்கறிந்திருந்த இயேசு, 40 நாட்கள் வரை அவர்களுக்கு மீண்டும், மீண்டும் தரிசனமளித்தார் - இவ்விதமாக உயிர்த்தெழுதலைத் தெளிவாக்கி, அதை நிரூபிக்கும் உண்மைகளைக் குவித்தார். தனது விருப்பங்களுக்கு முன்னுரிமையளிக்காது, பிறரது தேவைகளை முதலாவது இடத்தில் வைக்கும் இயேசுவின் குணம் உன்னிடத்திலுமுண்டா?

ஆதார சத்தியம்

"அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது." (பிலி. 2:4-5)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 318 பெந்தேகோஸ்தே நாள்

சீஷர்களைக் காத்திருக்கக் கூறுதல்
லூக் 24:44-49; அப் 1:3-8

இயேசு பரத்திற்கு எழுந்தருளுதல்
மாற் 16:19-20; லூக் 24:50-53; அப் 1:9-12

யோவான் சுவிசேஷத்தின் நோக்கம்
யோவா 21:25; 20:30-31

அப்போஸ்தலர் நடபடிக்கை அறிமுகமாகுதல்
அப் 1:1-2

மேலறையில் சீடர்கள்
அப் 1:13-17, 20-26

பரிசுத்த ஆவியானவரின் வருகை
அப் 2:1-13

இயேசுவே, கிறிஸ்து என்று பேதுரு பிரசங்கித்தல்
அப் 2:14-36

கேட்ட மக்களின் மனம் இணங்குதல்
அப் 2:37-40

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பெந்தேகோஸ்தே நாளில், பரிசுத்த ஆவியானவர் அருளப்படவில்லையென வைத்துக் கொள்ளுவோம். எந்தவிதமான கிறிஸ்தவம் உலகத்தை எதிர்நோக்கியிருக்கும்? யோவா. 20:19இல் காணப்படும் நிலைதான் இருந்திருக்கக் கூடும். பெந்தேகோஸ்தே நாள்தான் சீஷரிடம் மகத்தான பெரியதொரு மாறுதலைக் கொண்டு வந்தது. பயந்த மனிதர்களை, கனல் பறக்கும் அக்கினி மனிதராக அது மாற்றியது. உன் வாழ்க்கையில் அந்த மாறுதல் ஏற்பட்டுள்ளதா? அப்படியில்லையெனில், உனக்கே சொந்தமான பெந்தேகோஸ்தே அனுபவத்தை ஆண்டவர் உனக்கு அருளிச் செய்யுமாறு இன்றே ஜெபிக்க ஆரம்பி.

ஆதார சத்தியம்

"துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து"

(எபே. 5:18)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்		விசேடதன்மை
அப்போஸ்தலர் நடபடிக்கைகள் புதிய ஏற்பாட்டில் 5ஆவது புத்தகம் முதலாவது வரலாற்றுப் புத்தகம்	லூக்கா	இயேசு பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமைக்கு சபையின் பரம்பலுக்குமிடையே நடைபெற்றவைகள் இப்புத்தகத்தில் மாத்திரம் தான் விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதித்திருச்சபையின் வல்லமை

நாள் 319

மூவாயிரம் பேர் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுதல்
அப் 2:41-47

ஒரு முடவன் குணமடைதல்
அப் 3:1-11

பேதுருவின் இரண்டாம் பிரசங்கம்
அப் 3:12-26

பேதுருவும் யோவானும் கைது செய்யப்படுதல்
அப் 4:1-4

அவர்களது தைரியமான சாட்சி
அப் 4:5-14

அவர்கள் அமைதியாயிருக்க மறுத்தல்
அப் 4:15-22

விசுவாசிகளின் ஜெப ஐக்கியம்
அப் 4:23-31

விசுவாசிகளின் தியாகம்
அப் 4:32-37

அனனியா, சப்பீராளின் மரணம்
அப் 5:1-11

அநேக அடையாளங்களும், அற்புதங்களும்
அப் 5:12-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

20ஆவது நூற்றாண்டு திருச்சபையும் கட்டுக் கடங்காது பெருகிக் கொண்டிருந்த போதிலும், நாம் அதைக் குறித்துத் திருப்திய டைந்து விடாதபடி, ஆதித்திருச்சபைக்கும், இன்றைய திருச்சபைக்கும் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக, அன்று ஒரே பிரசங்கம் 3000 பேர் குணப்பட ஏதுவாயிருந் தது. இன்றோ ஒரே ஒரு ஆத்துமா இரட்சிக்கப்பட 3000 பிரசங்கங்கள் செய்ய வேண்டியிருக்கிறது! இன்னும் எத்தனை வேறுபாடுகள் நீங்கள் காணக்கூடுமென்று சிந்தித்துப் பாருங்கள் - தேவன் இந்தப் பிளவுகளைச் சரிசெய்ய வேண்டுமென்று ஜெபியுங்கள்

ஆதார சத்தியம்

"கர்த்தாவே, நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன், எனக்குப் பயமுண்டாயிற்று; கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே, உம்முடைய கிரியையை உயிர்ப்பியும்..." (ஆபகூக். 3:2)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
அப்போஸ்தலர் நடபடிக்கைகளில் உள்ள பிரசங்கங்களில் பரிசுத்த சபைக்கு கொடுத்த வல்லமை விளங்குகி ன்றது. இதில் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை ஒரே இரட் சகராக காட்டப்பட்டுள்ளது.	அப்போஸ்தலர் நடபடிக்கைகள் லூக்கா சுவிசேஷ த்தின் இரண்டாம் பகுதியாகும். இது இயேசு வின் செய்தி எருசலேம் முதல் ரோமாபுரி வரை பரம்பியமை குறித்து விளங்குகிறது.	அப்போஸ்தலர் நடபடிக்கைகள் 2:42

நாள் 320 முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவான்

ஸ்தேவானின் இரத்த சாட்சியான மரணம் கி. பி. 35

அப்போஸ்தலர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்படுதல்
அப் 5:17-25

அவர்கள் ஆலோசனை சங்கத்தில் சாட்சியாக நின்றது
அப் 5:26-33

கமாலியேலின் ஆலோசனை
அப் 5:34-39

ஆலோசனைச் சங்கத்தில் அவனது வாதம்
அப் 7:1-50

யூத மதத்தலைவர்களை அவன் கண்டித்துப் பேசுதல்
அப் 7:51-33

அப்போஸ்தலர் விடுதலை அடைதல்
அப் 5:40-42

உதவிக்காரர்கள் ஏற்படுத்தப்படுதல்
அப் 6:1-7

ஸ்தேவான் குற்றஞ்சாட்டப்படுதல்
அப் 6:8-15

ஸ்தேவானின் இரத்த சாட்சி
அப் 7:54-60

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

'யாராவது ஒருவர், வேதனைக்குட்படாமல், இந்த பூமிக்கு உப்பாக இருக்கவே முடியாது' என்ற கூற்று மிகச் சரியானது! ஸ்தேவான் சத்தியத்திற்காகத் தைரியமாக நின்று, அதினிமித்தம் தன் ஜீவனையே இழந்தான். சத்தியம் உனக்கு எந்த அளவுக்கு முக்கியமானது? சத்தியத்தின்படி நீ ஒரு வேளை ஜீவிக்கலாம், ஆனால் அதற்காக நீ மரிக்குமளவுக்கு அது முக்கியத்துவம் வாய்ந்ததா?

ஆதார சத்தியம்

"...கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (II தீமோ 3:12)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

சவுலின் மனந்திரும்புதல்

நாள் 321

சவுலின் மனமாற்றம் கி. பி. 37

சவுல் சபையைத் துன்புறுத்துதல்
அப் 8:1-4

சமாரியாவில் பிலிப்பின் ஊழியம்
அப் 8:5-13

சீமோனின் மாய் மாலம்
அப் 8:14-25

பிலிப்பும் எத்தியோப்பிய அண்ணகனும்
அப் 8:26-40

சவுல் மனந்திரும்புதல்
அப் 9:1-9

சவுல் கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்
அப் 9:10-22

அவன் தப்பியோடுதல்
அப் 9:23-25

அவனது ஆதி அனுபவங்கள்
கலா 1:17-19

பர்னபா அவனுடன் பட்சமாகுதல்
அப் 9:26-29

அவன் தர்சுவுக்கு அனுப்பப்படுதல்
அப் 9:30-31

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

நீ எவ்வாறு மனந்திரும்பினாய்? பவுலைப் போன்று நம்பமுடியாத அனுபவங்களின் மூலமாகவா? அல்லது அமைதியாக மனதில் குத்தப்பட்டு, மரணத்தை விட்டு ஜீவனுக்குள் பிரவேசித்த அனுபவத்தின் மூலமா? நாம் மனந்திரும்பும் முறைகள் வேறுபடலாம்: ஆனால் அதன் விளைவு எப்போதுமே ஒன்றுபோல் தானிருக்கும். கிறிஸ்துவுக்குள், உனக்கும் பவுல் அனுபவித்த அதே ஆவிக்குரிய உரிமை உண்டு.

ஆதார சத்தியம்

"... என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." (யோவா. 6:37)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 322 முதலில் மனந்திரும்பிய புறஜாதிகள்

ஜனேயா குணமடைதல்
அப் 9:32-35

தொற்காள் உயிருடன் எழுப்பப்படுதல்
அப் 9:36-43

கொர்நேலியு பேதுருவை அழைப்பித்தல்
அப் 10:1-8

பேதுருவின் தரிசனம்
அப் 10:9-18

அவன் கொர்நெலியுவிடம் செல்லு தல்
அப் 10:19-33

பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்
அப் 10:34-43

புறஜாதியார் பரிசுத்த ஆவியானவரைப் பெற்று ஞானஸ்நானம் எடுத்தல்
அப் 10:44- 48

அப்போஸ்தலர் பேதுருவுடன் தர்க்கம் பண்ணு தல்
அப் 11:1- 3

பேதுரு தனக்காக வாதாடுதல்
அப் 11:4- 18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சுவிசேஷத்தைப் பரப்புவதற்குத் தடையாக எழும்பக்கூடிய மிகப்பெரிய காரியங்களில் ஒன்று- புத்தியீனமான, பிடிவாதமான கொள்கைப் பிடிப்பு! தேவன் உண்மையாக, நல்லமுறையில் கற்றுக் கொடுக்கும் வரை, பேதுருவும் புறஜாதிகளுக்கு இரட்சிப்பில் பங்கு உண்டு என்பதை ஒத்துக் கொள்ள மறுத்து வந்தான். உன்னிடமும் இவ்வாறான ஏதாவது கொள்கைப் பற்று உண்டா? எச்சரிக்கையடைவோம்; தேவன் ஒருவேளை உன்னையுங்கூட தலைகீழாக மாற்றும் நிலை ஏற்படலாம்!

ஆதார சத்தியம்

"உன்னிடத்தில் நீ என்பு கூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று வேத வாக்கியம் சொல்லு கிற இராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள். பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப் பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்." (யாக். 2:8,9)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடம்
யாக்கோபு புதிய ஏற்பாட்டில் 20ஆவது புத்தகம் 15ஆவது நிருபம்	இயேசுவின் சகோதரர் என்று எண்ணப்பட்ட யாக்கோபு	

யாக்கோபு எழுதிய நிருபம்

நாள் 323

அந்தியோகியாவில் சபை ஸ்தாபிக்கப்படுதல்
அப் 11:19-24

பவுல் அந்தியோகியாவுக்குக் கொண்டு வரப்படுதல்
அப் 11:25-26

எருசலேமுக்கு வெகுமதி அனுப்பப்படுதல்
அப் 11:27-30

யாக்கோபு (யோவானின் சகோதரன்) கொல்லப்படுதல்
அப் 12:1-2

பட்சபாதமுள்ளவரல்ல
யாக் 2:1-13

நற்கிரியைகளின் தேவை
யாக் 2:14-26

சோதனைகள் விசுவாசத்தைப் பரிசோதிக்கின்றன
யாக் 1:1-15

தேவனின் நன்மையான வரங்கள்
யாக் 1:16-18

வசனத்தின்படி செய்பவர்கள்
யாக் 1:19-27

நாவைப் பயன்படுத்துதல்
யாக் 3:1-12

மெய்யான ஞானம்
யாக் 3:13-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

யாக்கோபின் நிருபத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய மிகப்பெரிய பாடம்-நாவின் வல்லமையை அவர் நினைவு படுத்து வதில் உள்ளது. மார்ட்டின் லூத்தரினால், 'தாடைகளுக் கிடையில் அமைந்துள்ள அந்தச் சிறிய மாம்சத்துண்டு' என அழைக்கப்படும் நாவு அடக்கப்பட வேண்டும். மனிதனால் இது கூடாது: ஆனால் தேவனால் எல்லாம் கூடும். உன் நாவு அடக்கப்படுமாறு அதை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்து விட்டாயா?

ஆதார சத்தியம்

"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித் தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம்" (நீதி. 25,11)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசுவின் மலைப்பிரசங்கத்தின் 15பிரதிபிம்பங்களாக இந்நிருபம் அமைந்துள்ளது. மத்தேயு 5:10-12 யாக்கோபு 1:2 இல் பிரதிபலிக்கிறது.	கிறிஸ்தவ விசுவாசம் கிறிஸ்தவ வாழ்க்கையோடு ஒத்திருக்க வேண்டுமென்று யாக்கோபு சுட்டிக் காட்டுகிறார். யாக்கோபு விசுவாசத்தையும் கிரியையும் இணைத்துக் காட்டுகிறார்.	யாக்கோபு 2:14, 17

நாள் 324 பேதுருவின் விடுதலை

மெய்விசுவாசத்தைப் பாதிக்கும் தீமைகள்
யாக் 4:1-17

பணக்கார அவிசுவாசிகள் கடித்து கொள்ளப்படுதல்
யாக் 5:1-6

பொறுமையாயிருக்குமாறு போதனை
யாக் 5:7-12

குற்றங்களை அறிக்கையிட்டு, ஜெபிக்குமாறு ஊக்குவிக்கப்படுதல்
யாக் 5:13-20

மீண்டும் பேதுரு கைதாகி, விடுதலையாக்கப்படுதல்
அப் 12:3-17

ஏரோதின் சீற்றம்
அப் 12:18:19

ஏரோதின் மரணம்
அப் 12:20-23

பவுலும், பர்னபாவும் வெளியே அனுப்பப்படுதல்
அப் 12:24-25; 13:1-3

சீப்புரு தீவில் பிரசங்கித்தல்
அப் 13:4-12

மாற்கு விலகிச் செல்லுதல்
அப் 13:13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சபையார் பேதுருவின் அற்புத விடுதலைக்காக ஜெபித்த போதிலும், தேவன் அந்த அற்புதத்தைச் செய்து முடித்த போது, அதை நம்ப முடியாமல் தவிக்கிறார்கள்; இது மனித சுபாவத்தைக் காண்பிக்கும் விசனமான காரியம் அல்லவா? பேதுரு சிறையிலிருந்து வெளியேறியதை விட, சபையாரின் ஜெபக் கூட்டத்திற்குள் போய்ச் சேருவதற்கே அதிக நேரமெடுக்கிறது; கடினமான காரியமாகத் தோன்றுகிறது. இது விந்தையல்லவா? அற்புதங்களைப் பெற்றுக் கொள்ள நீங்கள் எந்த அளவிற்குத் தயாராக இருக்கிறீர்கள்?

ஆதார சத்தியம்

அதற்கு இயேசு, "மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்" என்றார். (லூக். 18:27)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகுஸ்தியரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

பவுலின் முதலாம் சுவிசேஷப் பயணம்



நாள் 325 பவுலின் முதலாம் சுவிசேஷப் பயணம்

பவுல் அந்தியோகியாவில் பிரசங்கத்தில் (பிசிதியா)
அப் 13:14-41

புறஜாதியார் செய்தியைப் பெற்றுக் கொள்ளுதல்
அப் 13:42-49

யூதர்கள் பவுல், பர்னபாவை விரட்டியடித்தல்
அப் 13:50-52

இக்கோனியம், லீஸ்திராவில் ஊழியம் செய்தல்
அப் 14:1-18

பவுல் கல்லெறியப்பட்டு, பிழைத்து எழுதல் எழுதல்
அப் 14:19-20

அவர்கள் அந்தியோகியாவுக்குத் திரும்புதல்
அப் 14:21-26

திருச்சபைக்குத் திரும்பிவந்து அறிக்கை கொடுத்தல்
அப் 14:27-28

எருசலேமில் நடந்த ஆலோசனைக் கூட்டம்
அப் 15:1-12; கலா 2:7-10

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு சுவிசேஷகனை உருவாக்குவது எது? கடலைக் கடந்து செல்லும் பயணமா? இல்லை! சிலுவையைக் காண்பதே. சுவிசேஷகன் என்றபதம் (வேதத்தில் இந்த வார்த்தை காணப்படவில்லை) 'ஒரு விசேஷத்தை கொண்டு வருபவர்' என்று பொருள்படும். பவுலின் மிஷனெரித் திட்டங்களையும், செயல்படுத்தும் வழிமுறைகளையும் பார்க்கும் போது, உனது சொந்த சுவிசேஷப் பணியை ஒரு வினாடி சிந்தித்துப் பார்! அது கடல் கடந்தும் இருக்கலாம்; அல்லது ஒரே ஒரு தெருவைக் கடந்தும் இருக்கலாம்!

ஆதார சத்தியம்

"... பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்." (பிலி. 3:13-14)

வேதாகமத்தில்	எழுதியது	விசேடதன்மை
1, 2 தெசலோனிக்கேயா புதிய ஏற்பாட்டின் 13ஆம், 14ஆம் புத்தகங்கள் 8ஆம், 9ஆம் நிருபங்கள்	பவுல்	இயேசுவின் இரண்டாம் வருகை

பவுலின் இரண்டாவது சுவிசேஷப் பயணம் நாள் 326

2ஆம் சுவிஷேசப் பயணம் கி. பி. 50-54

எருசலேம் ஆலோசனை சங்கத்தினரின் தீர்மானம்
அப் 15:13-35

பேதுரு அந்தியோகியாவுக்கு வருகை தருதல்
கலா 2:11-14

பவுலும் பர்னபாவும் பிரிந்து விடுதல்
அப் 15:36-41

பவுல் மக்கதோனியாவுக்குச் செல்லுதல்
அப் 16:1-15

குறி சொல்லும் ஆவியைத் துரத்துதல்
அப் 16:16-21

பவுலும், சீலாவும் சிறையிலடைக்கப்படுதல்
அப் 16:22-26

பிலிப்பிய சிறைக் காவலர்
அப் 16:27-34

பவுலு ம் சீலாவும் விடுவிக்கப்படுதல்
அப் 16:35-40

தெசலோனிக்கே, பெராயாவில் பிரசங்கித்தல்
அப் 17:1-13

பவுல் அத்தேனேக்குச் செல்லுதல்
அப் 17:14-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பவுல் ஒரு வெற்றியுள்ள சீஷன் மட்டுமல்ல; பிறரை வெற்றிகரமாக சீஷராக்குபவரும் ஆவார். சுவிசேஷப் பணியின் சரியான முறைகளை சீலாவுக்குக் கற்றுக் கொடுத்தார். நேற்று, உங்களது தனிப்பட்ட சுவிசேஷப் பணியின் திட்டமிட்ட வழிமுறைகளைச் சற்று எண்ணிப் பார்க்குமாறு உங்களிடம் கேட்டோம். அதன் ஒரு பகுதி ஒரு வேளை புதிய ஒரு கிறிஸ்தவனை விசுவாசத்தில் நிலைநிறுத்தும் பணியாக இருக்கலாம். நீங்கள் சீஷனாக மாற்றக்கூடிய ஒருவரை உங்களுக்குக் காண்பிக்குமாறு தேவனிடம் கேளுங்கள்; அவருக்காக ஜெபிக்க ஆரம்பியுங்கள்; உங்களால் முடிந்த அளவு, அடிக்கடி அந்த நபருடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

ஆதார சத்தியம்

"உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு." (1தீமோ. 4:12)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசுவின் வருகை புதிய ஏற்பாட்டில் 300 தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. 1தெசலோனிகோர் 4:17-18 ஆம்வசனங்கள் பவுல் வாசர்களை உற்சாகப்படுத்துகிறார்.	பவுல் 1 தெசலோனிக்கேயர் நிருபத்தை புதிய கிறிஸ்தவர்களான ஒரு குழுவைத் தைரியப் படுத்தி எழுதினார்.	1தெசலோனிக்கேயர் 5:14

பவுலின் இரண்டாவது, மூன்றாவது சுவிசேஷப் பயணங்கள்



பவுல் கிரேக்க தேசத்தில் போதித்தல் நாள் 327

பவுல் உண்மையான தேவனைப் பற்றிப் போதித்தல்
அப் 17:16-34

பவுல் கொரிந்துவுக்குச் செல்லுதல்
அப் 18:1-11

கல்லியோவின் முன்னால் பவுல்
அப் 18:12-17

தெசலோனிக்கேயருக்கு எழுதிய முதல் நிருபம்-அவர்களது விசுவாசம், அன்பு, பொறுமை
I தெச 1:1-10

பவுலின் உண்மை
I தெச 2:1-12

அவர்கள் பவுலின் செய்தியை ஏற்றுக் கொண்ட விதம்
I தெச 2:13-20

அவர்களை உற்சாகப்படுத்த தீமோத்தேயு அனுப்பப்படுதல்
I தெச 3:1-8

பவுலின் ஜெபம்
I தெச 3:9-13

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

'புதிய ஏற்பாட்டில் பவுலின் சுவிசேஷப் பயணங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதென்பது, அடிபட்டு, இரத்தம் சிந்திக் கொண்டு, பனிக்கட்டிகள் மீது கடந்து சென்ற ஒரு முயலைத் தேடுவது போன்றது' என்ற கூற்று மிகச் சரியானது! அவர் சென்ற இடங்களிலெல்லாம், பயங்கரமான பாடுகளை அனுபவித்தது மட்டுமல்ல, சில சமயங்களில் அவரது சரீரமும் தாக்குதலுக்குள்ளாகி, காயங்களும் வேதனைகளுமடைந்தார். அவரது ஆவிக்குரிய இந்த ஆழந்த திட சித்தத்தின் இரகசியம் தானென்ன? IIகொரி.5:14ஐத் திருப்பிப் பாருங்கள். இது உங்கள் இரகசியமுமா?

ஆதார சத்தியம்

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்." (IIதீமோ. 4:7)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் த்ரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 328 தெசலோனிக்கேயருக்கு நிருபங்கள்

பரிசுத்தத்திற்கும் அன்புக்கும் தூண்டும் போதனைகள்
I தெச 4:1-12

மரித்தவர்களைக் குறித்த ஆறுதல்
I தெச 4:13-18

கர்த்தரின் வருகை
I தெச 5:1-11

பிற விதிகளும் முடிவுரையும்
I தெச 5:12-28

தெசலோனிக்கேயருக்கு 2ஆம் நிருபம்: பாடுகளின் மத்தியில் ஆறுதல்
II தெச 1:1-12

கிறிஸ்துவின் வருகை
II தெச 2:1-12

நல்நடத்தைக்குரிய விதிமுறைகள்
II தெச 2:13-17, 3:1-15

இறுதி ஜெபம்
II தெச 3:16-18

பவுலின் 2ஆம் பயணத்தின் முடிவு
அப் 18:18-22

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தெசலோனிக்கேயிலிருந்த கிறிஸ்தவர்கள்; நம்முடன் ஒப்பிடப்படும் போது, அவர்கள் புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட இளம் விசுவாசிகள் என்பதை உணர்ந்திருக்கிறோமா? ஆயினும் ஒரு கடிதம் தரக்கூடிய குறுகிய இடவசதியில், பவுல் விசுவாசத்துக்குரிய எவ்வளவு அழமான ஆவிக்குரிய சத்தியங்களை அவர்களுக்குப் போதிக்கிறார். இன்றைய பரம்பரை கிறிஸ்தவர்களில் அநேகர் இன்றும் 'பால்' உண்ணும் பருவத்திலுள்ள 'ஆவிக்குரிய குழந்தை' களாகவே இருக்கிறார்களல்லவா? வளர்ச்சியடைந்து 'திட உணவு' உட்கொள்ள வேண்டாமா? நீங்கள் வளர்ச்சியடைந்து விட்டீர்களா? வளர்ச்சிக்குரிய நேரம் வந்து விட்டதா?

ஆதார சத்தியம்

"நான் குழந்தையாயிருந்த போது குழந்தையைப் போலப் பேசினேன், குழந்தையைப் போல சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்."

(Iகொரி. 13:11)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	பிரதானமானவர்கள்	விசேடம்
1 கொரிந்தியர் புதிய ஏற்பாட்டில் 7ஆவது புத்தகம் 2ஆவது நிருபம்	பவுல்	

பவுலின் மூன்றாவது சுவிசேஷப் பயணம் நாள் 329

அந்தியோகியாவிலிருந்து எ்பேசுவுக்கு
அப் 18:23-28

பவுல் எபேசுவில் போதித்தல்
அப் 19:1-12

யூத மந்திரவாதிகள் அவமானப்படுதல்
அப் 19:13-20

தெமெத்திரியு கலகம் உண்டாக்குதல்
அப் 19:21-32

பட்டணத்து சம்பிரதி அமளியை அடக்குதல்
அப் 19:33-41

கொரிந்தியருக்கு முதல் நிருபம் பவுலின் வாழ்த்துதல்
I கொரி 1:1-9

சபையில் பாகுபாடுகள், பிரிவினைகள்
I கொரி 1:10-16

சுவிசேஷத்தின் வல்லமை
I கொரி 1:17-31

பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட தேவஞானம்
I கொரி 2:1-16

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பவுல் சென்ற இடங்களிலெல்லாம், சந்தித்த ஆண்கள், பெண்கள் உள்ளத்தில் பெருமளவில், ஆவிக்குரிய தூண்டுதல்களையும் எழுப்புதல் களையும் கொடுத்துச் சென்றார். நீங்கள் பவுல் செய்த அளவில் மக்களைத் தொட முடியாவிட் டாலும், சிறிதளவாவது மக்களைத் தொடும் வகையில் நடந்து கொள்வது நலம். "உலகத்தி ற்குத் தேவை–மதத்தைப் பற்றிய விளக்கவுரைகள் அல்ல; நடைமுறையில் வாழ்ந்து காட்டும் மதமே தேவை" நீங்கள் அன்றாடகம் சந்திக்கும் மக்களின் வாழ்வில் எந்த அளவிற்கு ஆவிக்குரிய விழிப்புணர்வு உண்டுபண்ணுகிறீர்கள்?

ஆதார சத்தியம்

"என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப் பட்டதாயிருந்தது" (Iகொரி. 2:5)

கண்ணோட்டம்		
இயேசுவும் புத்தகமும்	போதனை	மனனவாக்கியம்
இயேசு கிறிஸ்தவ வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அவசியமா னவராக இருக்கிறார். அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்	கொரிந்துவிலுள்ள பிரச்சனைகளான கிறிஸ்தவர்களுடைய பிணக்குகள் வழி பாட்டு துஷ்பிரயோகம் போனறவை விபரிக்க ப்பட்டு கிறிஸ்து எல்லாவற்றிக்கும் நடுவில் இருக்க வேண்டுமென்று பவுல் வலியுறுத்துகிறார்.	1 கொரிந்தியர் 6:19-20

நேருக்கு நேர் பேசுதல்

கிறிஸ்தவ ஊழியம் மதிப்பிடப்படுதல்
I கொரி 3:1-15

தேவனுடைய ஆலயம்
I கொரி 3:16-17

எல்லாம் நம்முடையவை
I கொரி 3:18-23

பவுலின் அப்போஸ்தலப் பட்டம்
I கொரி 4:1-13

கிறிஸ்துவில் தந்தையாக, பவுல்
I கொரி 4:14-21

விபசாரத்தைக் குறித்துக் கொரிந்தியர் கடிந்து கொள்ளப்படுதல்
I கொரி 5:1-8

பாவத்தில் விழுந்த விசுவாசிகளைக் குறித்த ஒழுங்கு முறை
I கொரி 5:9-13

நீதிமன்றங்களுக்குச் செல்லுதல் கண்டிக்கப்படுதல்
I கொரி 6:1-8

சரீரத்தின் பரிசுத்தம்
I கொரி 6:9-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பெரிய அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியம் ஆத்தும ஆதாயம் செய்வது மட்டுமல்ல; சபையிலிருந்து பதரைப் பறக்கடித்தலும் கூட! சபையின் அங்கத்தினர் தொடர்ந்து தங்கள் பாவங்களில் நிலை கொண்டிருந்தால் அது வளர்ச்சியடைவே முடியாதென்பதை நன்கு உணர்ந்திருந்த பவுல், அவர்களிடம் முகங்களைக் கருகச் செய்யுமளவிற்கு சவால்களை எழுப்பி அவர்களை கடிந்து கொள்ளுகிறார். பவுலின் வார்த்தைகள் ஏதாவது உன் வாழ்க்கையின் காரியங்களைத் தாக்குவதாக அமைந்துள்ளதா? அப்படியானால், அதை மாற்றியமைக்கச் செய்ய வேண்டியவற்றைச் செய்துவிடு.

ஆதார சத்தியம்

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழைய வைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின." (II கொரி. 5:17)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

பவுல் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் நாள் 331

விவாகத்தைப் பற்றிய கேள்விகள்
I கொரி 7:1-16

அழைக்கப்பட்ட நிலையில் நிலைத்திருக்க அறிவுரை
I கொரி 7:17-31

விவாகம் செய்யாதிருப்பதால் நன்மைகள்
I கொரி 7:32-40

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவு குறித்து
I கொரி 8:1-6

உன் சகோதரன் இடற ஏதுவாக எதுவும் செய்ய வேண்டாம்
I கொரி 8:7-13

பவுலுக்கு அப்போஸ்தலனாக உரிமைகள்
I கொரி 9:1-14

அவர் அதைப் பெரிதுபடுத்தாதிருத்தல்
I கொரி 9:15-23

அவரது வாடாத கிரீடம்
I கொரி 9:24-27

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்தவ வாழ்க்கையில் எழக்கூடிய ஏதாவது ஒரு சந்தேகத்தைக் குறித்து பவுலிடம் கேள்வி கேட்கக்கூடிய சிலாக்கியம் உங்களுக்குக் கிடைத்திருந்தால் என்ன கேள்வி கேட்டிருந் திருப்பீர்கள்? இன்று உங்களுக்குப் பதில்கூற பவுல் இல்லை: ஆயினும் கிறிஸ்தவ வாழ்க்கை முறையின் பிரச்சனைகளைக் குறித்தும், அனுபவங்களைக் குறித்தும் எழும்புகின்ற ஒவ்வொரு கேள்விக்கும் வேதாகமத்தில், கர்த்தருடைய வார்த்தை மூலம் ஏதாவது ஒரு பகுதியில் விடை நிச்சயமாக உண்டு. எவ்வளவு தூரம் உங்கள் வேத அறிவைப் பெருக்கிக் கொள்ளுகிறீர்களோ, அதற்குத் தகுந்த அளவில், உங்கள் கேள்விகளுக்குரிய விடைகளைச் சீக்கிரமாகக் கண்டுகொள்ளக் கூடும்.

ஆதார சத்தியம்

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப்பகுத்து ப் போதிக்கிற வனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு." (11தீமோ 2:15)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அகுட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோனானின் மரணம்

நாள் 332 பவுல் சபைக்கு ஒழுங்கு முறைகளைக் கற்றுத் தருகிறார்

யூத சரித்திர பரம்பரை மீண்டும் ஆராயப்படுதல்
I கொரி 10:1-14

கர்த்தருடைய பந்தி ஆசரிப்பில், உலகத்துடன் ஒத்துப்போகும் சமரசமில்லை
I கொரி 10:15-22

கர்த்தருடைய பந்தி ஆசரிப்பில் நிறை, குறைகள்
I கொரி 11:17-22; 27-34

ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துதல்
I கொரி 12:1-11

எல்லாவற்றையும் ஆண்டவரின் மகிமைக்காகவே செய்தல்
I கொரி 10:23-33

சில தவறான உபயோகங்களைப் பவுல் திருத்தியமைத்தல்
I கொரி 11:1-16

மனித சரீர அமைப்புடன் ஒப்பிட்டு நோக்குதல்
I கொரி 12:12-31

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பல காரியங்களைக் குறித்தும் பவுல் தரும் தெளிவான போதனைகளுக்காக நாம் அவருக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம். எல்லாவற்றிலும் பெரிய நன்றிக்கடன் கர்த்தருடைய பந்தியைக் குறித்த முன்றுவிதமான தன்மைகளை விளக்கியிருப்பதற்காக அவருக்குச் செலுத்தப்பட வேண்டும். அந்த முன்று தன்மைகளை ஒருவர் இவ்வாறு விளக்குகிறார், "கடந்த காலப் பரிசோதனை, தற்பரிசோதனை, வருங்கால எதிர்பார்ப்பு" எனக் கூறுகிறார். உங்களால் இவற்றைக் கண்டுகொள்ள முடிகிறதா?

ஆதார சத்தியம்

"... இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது." (மத். 26:26-28)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

மிகப்பெரிய வெகுமதி - அன்பே!

நாள் 333

அன்பின் மையஸ்தானம்
I கொரி 13:1-13

தீர்க்க தரிசன வரம் விரும்பத்தக்கது
I கொரி 14:1-11

தீர்க்க தரிசனம் சபையைக் கட்டுகிறது
I கொரி 14:12-25

ஒழுங்கான ஆராதனை
I கொரி 14:26-40

பவுல் உயிர்த்தெழுதலை நிரூபித்தல்
I கொரி 15:1-4; 8-28

மறுப்புகளுக்கு பதில் தருதல்
I கொரி 15:29-49

அழிவுள்ளதிலிருந்து அழியாமைக்கு
I கொரி 15:50-54

விசுவாசியின் வெற்றி
I கொரி 15:55-58

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

'அன்பு' என்ற பதத்தின் விளக்க உரைகள், அநேகமாகப் பரவசமூட்டும், கிளர்ச்சியுண்டு பண்ணும் உணர்ச்சிகளையே மையமாகக் கொண்டுள்ளன. அன்பில் உணர்ச்சிகள் அடங்கியிருந்த போதிலும், உண்மையான அன்பு என்பது திடசித்தத்திலிருந்து பிறக்கும் கிரியைகளே ஆகும். சார்லஸ் பின்னி கூறுகிறார், "ஒரு தனி நபருக்கு நாம் கொடுக்கக் கூடிய மிகப்பெரிய நன்மையான காரியத்தைக் கொண்டு வருவதே அன்பு" 1கொரி. 13ஆம் அதிகாரத்தை மீண்டும் ஒருமுறை கூர்ந்து வாசித்து, அதன்பின் வெளிப்பாடு உணர்ச்சிகளிலா அல்லது திடசித்தத்திலா என்று ஆராய்ந்து பார்!

ஆதார சத்தியம்

"அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்." (1யோவா 4:8)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 334 பவுல் தனது இருதயத்தை நம்முடன் பகிர்ந்துகொள்ளுதல்

தரித்திரருக்குப் பணம் சேகரித்தல்
I கொரி 16:1-12

முடிவுரை
I கொரி 16:13-24

பவுல் மக்கதோனியாவுக்குச் செல்லுதல்
I தீமோ 1:3, அப். 20:1

கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபம் சோதனையில் தேவனின் ஆறுதல்
II கொரி 1:1-14

பவுல் வரமுடியாமைக்குக் காரணங்கள்
II கொரி 1:15-24

குற்றம் செய்தவன் மனஸ்தாபப்பட்டால் ஏற்றுக்கொள்ளப்படுதல்
II கொரி 2:1-11

பவுலின் வெற்றிகரமான ஊழியம்
II கொரி 2:12-17

மகிமையான சுவிசேஷம்
II கொரி 3:1-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

விமரிசிக்கப்படும்போது நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறீர்கள்? மனத்தாங்கலுடனா, நல்லிணக்கத்துடனா? II கொரிந்தியரில், பவுல் தனது நடத்தையும் குணாதிசயங்களும் தாக்கப்பட்டு வந்தது பற்றிக் கூறுகிறார். அவர் மன உறுதியற்றவர், பெருமைக்காரர், தற்புகழ்ச்சி செய்பவர், பெலவீனர், தெளிவற்ற பேச்சுக்காரர், குறுகிய மனப்பான்மைக்காரர், உண்மையற்றவர், மனநிலையில் தெளிவற்றவர் என்றெல்லாம் குற்றஞ் சாட்டப்பட்டவர். அவர் எவ்வாறு இக்குற்றச் சாட்டுக்களால் பாதிக்கப்படுகிறார்? II கொரி. 2:14 ஐ மீண்டும் வாசித்துப் பாருங்கள்: தெரிந்து கொள்ளுவீர்கள்: யாராவது உங்களைத் தாக்கும்போது, நீங்கள் இவ்வாறா நடந்து கொள்ளுகிறீர்கள்?

ஆதார சத்தியம்

"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டுக், களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்." (மத். 5:11-12)

வேதாகமத்தில்	எழுதியது	
1.2 தீமோத்தேயு, தீத்து புதிய ஏற்பாட்டில் 15ஆம், 16ஆம், 17ஆம் புத்தகங்கள் 10ஆம் 11ஆம் 12ஆம் நிருபங்கள்	பவுல்	

உக்கிராணக்காரனாகக் கிறிஸ்தவன்

நாள் 335

பவுலின் பாடுகளும் வெகுமதியும்
II கொரி 4:1-18

அப்போஸ்தலனின் நம்பிக்கை
II கொரி 5:1-15

புது சிருஷ்டி
II கொரி 5:16-21

பவுலின் ஊழியத்தின் ஆதாரம்
II கொரி 6:1-10

அவிசுவாசிகளிடமிருந்து பிரிதல் தேவை
II கொரி 6:11-18, 7:1

பவுல் தன் இதயத்தை வெளிப்படுத்தல்
II கொரி 7:2-16

கொடுப்பதற்கு ஒரு முன்மாதிரி
II கொரி 8:1-10

கொடுப்பதற்கு ஊக்குவிக்கப்படுதல்
II கொரி 8:11-15

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சில கிறிஸ்தவர்களின் ஈகை, மோசேயினால் அடிக்கப்பட்டாலொழிய தண்ணீர் தராத பாறையைப் போன்ற ஈகையாகும்! இன்றும் சிலரது ஈகை, பிழியப்பட்டாலொழிய தண்ணீர் வெளிவிடாத உறிஞ்சு பஞ்சைப் (Sponge) போன்ற ஈகை! ஆனால் சிலருடைய ஈகையோ, கேட்டாலும் கேட்காவிட்டாலும் நறுமணத்தைக் கொடுப்பதில் மகிழ்ச்சியடையும் மலரைப் போன்ற ஈகை. நீ எந்த வகையைச் சேர்ந்தவன்?

ஆதார சத்தியம்

"அவனவன் விசுனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்: உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். "

(11கொரி 9:7)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இம்மூன்று புத்தகங்களிலும் இயேசு பாவிகளின் இரட்சகர் என்று காட்டப்பட்டுள்ளார். அவர் நம்மைச் சகல அக்கிரமங்களிலும் நின்று மீட்டுக் கொண்டு தமக்குரிய சொந்த ஜனங்களாக மாற்றி தம்மைச் சுத்திகரிக்கும்படி தம்மை நாமே ஒப்புக் கொடுத்தார்.	பவுல் தீத்துவும். தீமோத்தேயும் தமது பொறுப்பில் உள்ள சபைகளைப் பரிபாலித்தல் குறித்து அறிவுறுத்தி தலைமைத்துவத்தில் உள்ளவர்களின் தன்மை குறித்தும் குறிப்பிடுகிறார்.	தீத்து 3:5

இதயத்திற்கு இதயம்

நவம்பர்

விசுவாசிகள் சீடர்கள் என்று அழைக்கப்பட்டதை கவனித்தீர்களா? அவர்கள் இயேசுவின் வழியைப் பின்பற்றி பரிசுத்தவியானவர் தமது வாழ்வை ஒழுங்கு படுத்த அனுமதித்தார்கள். கிறிஸ்துவைப் போன்று அன்போடு சேவை செய்தார்கள். ஜெபத்தின் மூலமாகவும் வேதாகமத்தைக் கற்பதன் மூலமாகவும் அவர்கள் பெலனடைந்தார்கள். இந்த வருடத்தில் வேதாகமத்தை வாசிக்க நீங்கள் உங்களை ஒழுங்காக்கிக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையான சீடர்கள் வேதத்தின் பிரகாரம் நடப்பவர்கள் என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

12

இந்தப் பகுதியில் .....

பவுலின் கடிதங்களும் அவைகளின் பெரிதான தொனிப் பொருளும்.
ரோமாபுரிக்கான பவுலின் பயணம்
பேதுரு, யோவான் ஆகியோரின் கடிதங்கள்
ஏழுசபைகளுக்கான செய்திகள்
புதிய வானமும் புதிய பூமியும்

நாள் 336 பவுலின் மாம்சத்திலிருந்த முள்

பவுல் தீத்துவை அனு ப்புதல் -
IIகொரி 8:16-24;9:1-5

தாராள மனப்பான்மையின் விளைவு -
II கொரி 9:6-15

பவுல் தனது அதிகாரத்தை நியாயப்படுத்துதல்-
II கொரி 10:1-18

ஆண்டவருக்காகப் பவுலின் வைராக்கியம்-
II கொரி 11:1-15

அரவது தற்புகழ்ச்சி
II கொரி 11:16-29

தனது பெலவீனங்களில் மேன்மை பாராட்டுதல்-
II கொரி 11:30-33

அவர் பெற்ற தேவ தரிகனங்கள்
II கொரி 12:1-5

மாம்சத்தில் இருந்த முள்
II கொரி 12:6-10

சிந்தனைக்கும், தியானத்திற்கும்

பல நூற்றாண்டுகளாக, பவுலின் மாம்சத்தில் இருந்த முள் என்ன என்பதைக் குறித்த விவாதம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. சிலர் அதை பார்வைக் குறைவு என்றும், சிலர் குறிப்பிட்ட காலத்தில் தொடர்ந்து தாக்கிய மலேரியா ஜுரம் என்றும், இன்னும் சிலர் சரிவரப் பேசமுடியாத ஒரு குறையெனவும் கூறு கின்றனர். ஒருவர் அழகாகக் கூறினார், "பாவுலுக்கு மாம்சத்தில் ஒரு முள் இருந்தது: ஆனால் அதைப்பற்றி யாருக்கும் எதுவுமே சரிவரத் தெரியவில்லை: நமக்கு மாம்சத்தில் ஒரு முள் இருந்தால், நமக்குத் தெரிந்த அனைவரும், அந்த முள்ளைப் பற்றிய அனைத்துக் காரியங்களையும் தெரிந்து கொள்ள வழிசெய்து விடுவோம்! உன் வாழ்க்கையில் இது பொருந்துகிறதா?"

ஆதார சத்தியம்

"அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுண்டாகக் காணப்படும்." (1பேது. 1:7)

வேதாகமத்தில்	எழுதியது	
2 கொரிந்தியர் புதிய ஏற்பாட்டின் 8 ஆவது புத்தகம் 3ஆவது நிருபம்	பவுல்	

நியாயப் பிரமாணமும் கிருபையும்

நாள் 337

பவுலின் பயனுள்ள வெற்றி ஊழியம்
II கொரி 12:11-18

அவரது செய்கைகளில் விளங்கும் உண்மை
II கொரி 12:19-21; 13:1-10

முடிவுரை
II கொரி 13:11-14

பவுல் கொரிந்துவுக்குப் பிரயாணப்படுதல்
அப் 20:2-3

கலாத்தியர் நிருபம் தேவனிடமிருந்து பவுல் பெற்ற சுவிசேஷம் - *கலா 1:1-16; 20-24*

எருசலேமுக்குச் செல்லுதல்
கலா 2:1-6

விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் படுதல் - *கலா 2:15-21*

நியாயப் பிரமாணத்தின் அடிமைத்தனம்
கலா 3:1-18

நியாயப் பிரமாணம் கிறிஸ்துவினிடம் நம்மைக் கொண்டு வருதல்
கலா 3:19-29

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இன்று மக்களிடையே பரவலாக நிலவி வரும் ஒரு பொதுவான கருத்து - எவ்விதக் கட்டுப்பாடுகளும் நம்மீது விதிக்கப்படாமலிருந்தால் தான் நான் விடுதலையுடன் சுதந்தரமாக இருக்க முடியுமென்பது. ஒழுங்கு முறைகள், பொறுப்புகள், அதிகார ஆதிக்கம் ஒன்றுமே இல்லாத நிலை! ஆனால் கலாத்தியர் நிருபம் கற்றுக் கொடுப்பதோ, 'சுதந்திரம் அல்லது விடுதலையென்பது நாம் விரும்பியவற்றைச் செய்யும் உரிமை அல்ல: மாறாக, நாம் செய்ய வேண்டிய சரியான காரியங்களைச் செய்யும் வல்லமை.

ஆதார சத்தியம்

"....கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோமர். 8:2)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இந்த நிருபத்தில் இயேசுக்கிறிஸ்து கிறிஸ்தவர்களின் கர்த்தராகக் காட்டப்பட்டுள்ளார். 2 கொரிந்தியர் 4:5	பவுலின் சுயசரிதைப் புத்தகங்களில் ஒன்றான இது கிறிஸ்துவுக்காகப் பாடுபடுதலைக் குறிக்கிறது. தேவனுடைய மகிமை எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உண்டு.	2 கொரிந்தியர் 5:17

நாள் 338 பவுலின் மூன்று பெரிய அறிக்கைகள்

சட்டத்திட்ட சடங்குகளைக் கைக் கொண்ட மூடத்தனம் - *கலா 4:1-20*

அடிமைப் பெண்ணும் சுயாதீனப் பெண்ணும் *கலா 4:21-31*

கிறிஸ்துவில் சுயாதீனம் *கலா 5:1-15*

மாம்சமும் ஆவியும் *கலா 5:16-26*

பலவிதப் போதனைகள் *கலா 6:1-10*

முடிவுரை *கலா 6:11-18*

ரோமருக்கு நிருபம் : முன்னுரையும் ஜெபமும் *ரோமர் 1:1-12*

சுவிசேஷத்தின் வல்லமை *ரோமர் 1:13-17*

மனிதர் யாவருக்கும் பொதுவான பாவம் *ரோமர் 1:18-32*

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ரோமர், முதலாம் அதிகாரத்தில் பவுல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்துக் கூறுகின்ற மூன்று பெரிய அறிக்கைகளைக் குறித்துப் பேச, போதகர்கள் பொதுவாக வேதனையடைகின்றனர். (1) நான் ஒரு கடனாளி (வ. 14) (2) நான் ஆயத்தமாக இருக்கிறேன். (வ.15) (3) நான் வெட்கப்படுவதில்லை (வ.16) ஒரு சில நிமிடங்கள் இந்த மூன்று வாக்கியங்களையும் நன்கு மனதில் சிந்தித்துப் பாருங்கள். உங்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். "கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தைக் குறித்து எனது மனநிலையும் இதுதானா?

ஆதார சத்தியம்

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்: முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது." (ரோமர் 1:16)

வேதாகமத்தில்	எழுதியது	
காலத்தியர் புதிய ஏற்பாட்டில் 8 ஆவது புத்தகம் 4ஆவது நிருபம்	பவுல்	

விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுதல் நாள் 339

எல்லா மனிதரும் செய்கையின்படி நியாயந் தீர்க்கப்படுவர் - *ரோம 2:1-16*

விருத்தசேதனம் மட்டும் போதுமானதல்ல *ரோம 2:17-29*

யூதனாயிருப்பதன் அனுகூலங்கள் *ரோம 3:1-8*

நீதிமான்களாக்கப் படுதலின் விளைவு *ரோம 5:1-11*

எல்லா மனிதரும் பாவிகள் *ரோம 3:9-20*

விசுவாசத்தினால் நீதிமான்களாகுதல் *ரோம 3:21-31*

ஆபிரகாம், ஒரு உதாரணம் *ரோம 4:1-25*

ஆதாமும் கிறிஸ்துவும் ஒப்பிடப்பட்டு வேறுபடுத்தப்படுதல் *ரோம 5:12-21*

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வேதாகமம் முழுவதிலுமுள்ள மிகப் பெரிய சத்தியங்களில் ஒன்று - விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப் படுதல். அதாவது, நாம் ஒரு பொழுதும் பாவமே செய்யாதது போல் ஆண்டவர் நம்மை ஏற்றுக் கொள்ளுகிறார். இதை நீங்கள் உணர்ந்ததுண்டா? ஒரு சிறிய தற்பரிசோதனை - நீங்கள் ஈடுபட்டுள்ள எல்லா கிறிஸ்தவப் பணிகளையும் ஒரு பட்டியலிடுங்கள். அதன் பின்னர் இந்தக் கேள்வியை உங்களிடமே கேட்டுக் கொள்ளுங்கள். "நான் இரட்சிக்கப் படுவதற்காக இந்தக் காரியங்களையெல்லாம் செய்கிறேனா? அல்லது இரட்சிக்கப்பட்டதனால் இந்தக் காரியங்களில் ஈடுபடுகிறேனா?" - 'இரட்சிக்கப்படுவதற்காக' என்பது உங்கள் விடையாக இருக்குமானால், நீங்கள் திரும்பவும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

ஆதார சத்தியம்

"எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள்." (ரோம. 3:23,24)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசுவின் மறுரூபம் வல்லமையான கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களை நீதிச்சட்ட சாபத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கிறது. கலா 3:13	பவுல் நீதிச்சட்டத்தை அனுசரித்து நடப்பதை எதிர்த்து கிறிஸ்தவர்கள் தொடர்ந்து ஜீவியம் ஜீவிக்க வலியுறுத்துகின்றார்.	காலத்தியர் 2:20

நாள் 340 ஏழிலிருந்து, எட்டுக்குள்!

ஞானஸ்நானத்தின் மூலம் பாவத்துக்கு மரித்தல் – *ரோம. 6:1-14*

நீதிக்கு அடிமைகள்
ரோம. 6:15-23

விசுவாசிகள் கிறிஸ்துவுடன் ஐக்கியப்படுதல்
ரோம. 7:1-6

நியாயப் பிரமாணத்தின் நோக்கம்
ரோம. 7:7-13

பழைய, புதிய தன்மைகளுக்கிடையில் எழுகின்ற போராட்டம்
ரோம. 7:14-25

ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுதலை
ரோம. 8:1-9

தேவனுடைய பிள்ளைகளின் உரிமைகள்
ரோம. 8:10-17

எதிர்கால மகிமை
ரோம. 8:18-27

முற்றிலும் ஜெயங் கொள்ளுகிறவர்கள்
ரோம. 8:28-39

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்தவர்கள் சில சமயங்களில் ஒருவரையொருவர் கேட்கும் கேள்வி, 'நீங்கள் 7ஐ விட்டு 8க்குள் வந்துவிட்டீர்களா? "அதாவது ரோம: 7ஆம் அதிகாரத்தை விட்டு நீங்கி, 8ஆம் அதிகார விடுதலைக்குள் வந்துவிட்டீர்களா? என்பதே அதன் பொருள். 7ஆம் அதிகாரத்தில் பவுல் ஆழமான அடிமைத்தனத்தில் இருக்கிறார், ஆனால் 8ஆம் அதிகாரத்திலோ மகிமையான விடுதலையை அனுபவிக்கிறார். இந்த வித்தியாசத்திற்குக் காரணமாயிருப்பது எது? பரிசுத்த ஆவியானவர். இந்த அனுபவம் உனக்கு உண்டா? இல்லையெனில், இன்றே தேவன் உனக்கு உதவி செய்யுமாறு கேள்.

ஆதார சத்தியம்

"குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்."

(யோவா 8:36)

வேதாகமத்தில்	எழுதியது	
ரோமர் புதிய ஏற்பாட்டில் 6ஆவது புத்தகம் 1ஆவது நிருபம்	பவுல்	

இஸ்ரவேல் எதிர்காலத்தில் மீண்டும் நிலைநாட்டப்படல் நாள் 341

யூதரைப் பற்றி பவுல் கொண்ட கரிசனை
ரோம். 9:1-13

தேவனின் இராஜரீகம்
ரோம. 9:14-29

இஸ்ரவேலின் தற்காலத் தோல்வி
ரோம. 9:30-33

இஸ்ரவேலுக்காகப் பவுலின் ஜெபம்
ரோம. 10:1-4

விசுவாசத்தினாலுண்டாகும் நீதி
ரோம. 10:5-11

யூதனுக்கும், புறஜாதியானுக்கும் தேவன் ஒன்றே
ரோம. 10:12-21

இஸ்ரவேல் இறுதியாக புறக்கணிக்கப் படுவதில்லை - *ரோம. 11:1-11*

அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவர்
ரோம. 11:12-21

புறஜாதியார் பெருமையடையாதவாறு எச்சரிப்பும் பெறுதல் - *ரோம. 11:22-32*

தேவஞானம், தயவு இவற்றைப் புகழ்ந்து துதித்தல் - *ரோம. 11:33-36*

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு வேத ஆராய்ச்சிக்கு நீங்கள் தயாரா? இதோ! - இன்று நீங்கள் வாசித்த மூன்று அதிகாரங்களிலும், பவுல் பழைய ஏற்பாட்டில் தமக்கிருந்த மிகப் பெரிய வேத அறிவை, 10 வெவ்வேறான பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களிலிருந்து மேற்கோள் கொடுப்பதன் மூலம் வெளிப்படுத்துகிறார். அவற்றில் எத்தனை புத்தகங்களை உங்களால் கண்டுபிடிக்கக் கூடும்? கண்டுபிடித்து விட்டீர்களா? 1-4 நன்று; 5-7 மிக்க நன்று; 8-10 சிறப்பான வெற்றி!

ஆதார சத்தியம்

"தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாக வில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்."
(II பேது. 1:21)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
கிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும் கிறிஸ்தவனின் இரட்சிப்புக்கு அடிப்படையாக விளங்குகின்றது. ரோமர் 3:23-25	தேவனுடைய தரத்தில் இல்லாதமையால் எல்லோரும் ஆக்கினைக்குள்ளானார்கள் ஆனால் ஒருவர் கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பவார் என்று பவுல் கூறுகின்றார்.	ரோமர் 1:16

நாள் 342 நடைமுறையில் கொண்டு வருதல்

அர்ப்பணிக்க அழைப்பு
ரோம 12:1-2

ஆவிக்குரிய வரங்களை உண்மையாகப் பயன்படுத்து தல் - *ரோம 12:3-8*

முற்றிலும் மாற்றப்பட்ட வாழ்க்கை
ரோம 12:9-21

அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல்
ரோம 13:1-7

சகோதரனை துக்கப்படுத்தாதே
ரோம 14:14-23

ஒற்றுமையைக் காத்துக் கொள்ளல்
ரோம 15:1-14

அன்பு நியாயப் பிரமாணத்தின் நிறைவேறுதல்
ரோம 13:8-14

பிறரை குற்றஞ்சாட்டாதபடி எச்சரிப்பு
ரோம 14:1-13

பவுலின் வருங்காலத் திட்டங்கள்
ரோம 15:15-29

அவரது ஜெப விண்ணப்பம்
ரோம 15:30-33

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ரோமர் நிருபத்தின் முதல் பதினொரு அதிகாரங்களில், கிறிஸ்தவ விசுவாசத்தின் முக்கிய கோட்பாடுகளை பவுல் விவாதிக்கிறார். இப்பொழுது, கோட்பாடுகளிலிருந்து, கடமைக்குக் கடந்து வருகிறார் - அதுவே தேவையான விளைவு. நாம் நம்புகிற காரியங்கள், நாம் நடந்து கொள்ளும் விதத்தை கண்டிப்பாகப் பாதிக்க வேண்டும். அவ்வாறில்லை யாயின், அது சரியான கோட்பாடல்ல.

ஆதார சத்தியம்

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது: தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." (11 தீமோ. 3:16-17)

கி.மு. 5	கி.பி. 1	கி.பி. 10	கி. பி.20	கி. பி.30	கி. பி.40	
	கிறிஸ்துவின் பிறப்பு		அகஸ்துராயரின் மரணம்	கிறிஸ்துவின் மரணமும் உயிர்த் தெழுதலும்		முதலாவது அருட்பணிப் பயணம்

பவுல் எருசலேமுக்குப் போகுதல் நாள் 343

பவுல் எருசலேமுக்குப் போகுதல் கி. பி. 58

தனிப்பட்ட வாழ்த்துக்கள்
ரோம. 16:1-16

பிரிவினைகளைக் கொண்டு வருபவர்களைக் குறித்த எச்சரிக்கை
ரோம. 16:17-20

மேலும் வாழ்த்துரைகளும் முடிவுரையும்
ரோம. 16:21-27

துரோவாவில் பவுல்
அப். 20:4-12

எபேசுவின் மூப்பர்களை பவுல் சந்தித்தல்
அப். 20:13-17

அவரது பிரிவுபசார உரை
அப். 20:18-38

மிலேத்துவிலிருந்து செகரியாவுக்கு
அப். 21:1-9

அகபுவின் தீர்க்க தரிசனம்
அப். 21:10-12

பவுல் எருசலேமுக்குப் பயணப்படுதல்
அப். 21:13-19

அவன் ஒரு பிரார்த்தனை எடுத்துக் கொள்ளுதல்
அப். 21:20-26

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

எருசலேமுக்குப் போனதினால் பவுல் பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படியாமற் போனாரா? நிச்சயமாக கீழ்ப்படியவில்லை என்றுதான் அப். 21:4 கூறுவது போன்றிருக்கிறது. தேவனுக்காக ஊழியம் செய்ய வேண்டுமென்ற ஆர்வ மிகுதியினால், அவரது வழிநடத்துதலுக்காகக் காத்திருக்க மறந்து போகக்கூடாது; இதைக் குறித்து நாம் அதிக எச்சரிக்கையாயிருக்க வேண்டும். தேவனின் சித்தத்திற்கு, அவரது ஊழியத்தைச் செய்ய முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

ஆதார சத்தியம்

"... ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும்."
(யாக். 4:15)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நிரோவின் மரணம்			யோவானின் மரணம்

நாள் 344 யூதருக்கு முன்பாக பவுல்

பவுல் தேவாலயத்தில் கைது செய்யப்படுதல்
அப். 21:27-40

யூதருக்கு முன்பாக தன்னை நியாயப்படுத்துதல்
அப். 22:1-21

யூதர்களின் சீற்றம்
அப். 22:22-25

பவுல் விடுதலை செய்யப்படுதல்
அப். 22:26-30

பவுல் ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாகப் பேசுதல்
அப். 23:1-5

பரிசேயர், சதுசேயரின் கருத்து வேறுபாடு
அப். 23:6-10

தேவனின் வாக்குறுதி
அப். 23:11

யூதரின் சதித்திட்டம் கண்டு பிடிக்கப்படுதல்
அப். 23:12-22

பவுல் செசரியாவுக்கு அனுப்பப்படுதல்
அப். 23:23-35

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பவுல் எருசலேமுக்குப் போனது தவறோ என்று நாம் நம்பினாலும், நம்பாவிட்டாலும், மற்ற மதங்களை விட கிறிஸ்தவ விசுவாசமே மேலானது என்று அவன் அழுத்தம் திருத்தமாகக் கூறியதினாலேயே கைது செய்யப்பட்டானென்பது மட்டும் உறுதி. இப்படிப்பட்டதொரு குற்றச் சாட்டினிமித்தம் நீ கைது செய்யப்பட்டால், உனக்கு எதிராகத் தீர்ப்புச் சொல்லப் போதுமான சாட்சியங்கள் இருக்குமா?

ஆதார சத்தியம்

"யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்." (1கொரி. 1:22-23)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நீரோவின் மரணம்			யோவானின் மரணம்

பவுலின் ரோமாபுரிப் பயணம்



நாள் 345 ரோமர்களுக்கு முன்பாக பவுல்

தெர்துல்லு பவுலைக் குற்றஞ்சாட்டுதல்
அப். 24:1-9

பெலிக்ஸ் முன்பாக பவுல் தன்னை நியாயப்படுத்துதல்
அப். 24:10-21

பவுல் செசரியாவில் கைது செய்யப்படுதல்
அப். 24:22-27

பெஸ்துவின் முன் பவுல்
அப். 25:1-9

ராயருக்கு அபயமிடல்
அப். 25:10-12

பெஸ்து அகிரிப்பாவுடன் கலந்து பேசுதல்
அப். 25:13-27

அகிரிப்பாவின் முன் பவுல்
அப். 26:1-23

பெஸ்துவிடமும். அகிரிப்பாவிடமும் குற்றமின்மையை வலியுறுத்து தல்
அப். 26:24-32

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

சிக்கலான தீர்மானத்தை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் பெலிக்ஸ் மன உறுதியற்ற வனாகக் காட்சியளிக்கிறான். அரசியல் காரணங்களால் பவுலை விடுவிப்பது கூடாத காரியமாயிருந்தபடியால், பவுலின் வழக்கை இரு ஆண்டுகளுக்கு இழுத்தடிக்கிறான். ஒரு கடினமான தீர்மானம் எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இப்போது இருக்கிறாயா? இதோ! ஒரு நல்ல ஆலோசனை! முதலாவது தேவன் உன்னிடம் என்ன விரும்புகிறாரென்பதை முடிவு செய்: மற்ற தீர்மானங்கள் தானாகவே ஒழுங்காக அமைந்துவிடும்.

ஆதார சத்தியம்

"உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையா யிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."

(நீதி. 3:5-6)

வேதாகமத்தில்	எழுதியது	விசேடதன்மை
பிலேமோன் 18ஆவது புதிய ஏற்பாட்டுப் புத்தகம் 13ஆவது நிருபம்	பவுல்	புதிய ஏற்பாட்டில் உள்ள பவுலுடைய ஒரே ஒரு தனிப்பட்ட நிருபம்

பவுலின் ரோமாபுரிப் பயணம் நாள் 346

பவுல் ரோமாபுரி நோக்கிச் செல்லு தல்
அப். 27:1-11

புயலில் சிக்குதல்
அப். 27:12-20

பவுல் அதிகாரத்தைக் கையில் எடுத்தல்
அப். 27:21-38

பத்திரமாகக் கரை சேருதல்
அப். 27:39-44

தீவாரால் அன்புடன் வரவேற்க்கப்படுதல்
அப். 28:1-10

ரோமாபுரிக்குப் பயணப்படுதல்
அப். 28:11-16

பிலேமோனுக்குக் கடிதம்: வாழ்த்துக்கள்
பிலே. 1:1-7

ஒநேசிமுவுக்காக பவுலின் வேண்டுகோள்
பிலே. 1:8-22

முடிவுரை
பிலே. 1:23-25

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பிலேமோனுக்குப் பவுல் எழுதிய சிறிய கடிதம், முகசவரம் செய்யுமுன்பு சோப்பு நுரையைத் தடவுவது என்று கூறுவார்களே, அதற்கு ஒரு நல்ல எடுத்து க்காட்டாகும். அதாவது, ஒரு மனிதனிடமுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதற்கு முன்னதாக, அவரது நிறைவுகளைப் பாராட்டுவதாகும். அவர் கட்டளையிடுமுன்னர் எவ்விதமாகப் பாராட்டுகிறாரென்பதைக் கவனியுங்கள். இன்றிலிருந்து, நானும் இந்த முன் மாதிரியைப் பின்பற்றுவேனென்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள்.

ஆதார சத்தியம்

"சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணு கிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்" (ரோம. 12:10)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
முழுப்புத்தகமும் கிறிஸ்துவினால் விசுவாசம் அடையும் படி குறித்துப் பேசுகிறது.	கிறிஸ்துவிலிருந்து பெற்றுக் கொண்ட கிருபையும் கருணையும் குறித்து பவுல் பிலேமோனுக்கு நினைவு படுத்துகிறார்.	பிலேமோன் 4-5

நாள் 347 பவுல் கொலோசெயருக்கு எழுதுகிறார்

கொலோசெயருக்காகப் பவுல் ஜெபிக்கிறார்
கொலோ 1:1-14

எல்லோரிலும் சிறந்தவர் கிறிஸ்து
கொலோ 1:15-23

பவுலின் அன்பின் ஊழியம்
கொலோ 1:24-29, 2:1-3

அவர்களில் அவரது மகிழ்ச்சி
கொலோ 2:4-7

தவறான விசுவாசங்களுக்கு எதிரான எச்சரிப்பு
கொலோ 2:8-23

விசுவாசியின் பாதை
கொலோ 3:1-25, 4:1-6

முடிவான வாழ்த்துக்களும் அறிவுரைகளும்
கொலோ 4:7-18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வேதாகமத்திலுள்ள மிக முக்கியமான சொற்றொடர்களில் ஒன்று கொலோ. 1:27இல் காணப்படுகிறது – 'கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள்..' இந்த வார்த்தைகளைத் தியானித்து க் கொண்டிருந்த பெரிய பிரசங்கியார் ஒருவர், தனது முடிவுரையில் இவ்வாறு கூறினார். "கிறிஸ்துவுடன் வாழும் வாழ்க்கை முடிவற்ற நம்பிக்கையுள்ளது: அவரில்லாத வாழ்க்கையோ, நம்பிக்கையற்ற முடிவுள்ளது".

ஆதார சத்தியம்

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப் பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்."

(கலா. 2:20)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	எழுதியது	
கொலோசேயர் புதிய ஏற்பாட்டின் 12ஆவது புத்தகம் 7ஆவது நிருபம்	பவுல்	

எபேசியருக்கு எழுதிய நிருபம்

நாள் 348

கிறிஸ்துவில் விசுவாசியின் நிலை
எபே 1:1-14

ஞானம், வெளிப்படுத்தல் கேட்டு பவுலின் ஜெபம்
எபே 1:15-23

தேவனின் கிருபையின் ஐசுவரியம்
எபே 2:1-10

யூதரும், புறஜாதியாரும் கிறிஸ்துவில் ஒன்றே
எபே 2:11-22

சபையின் இரகசியம்
எபே 3:1-12

பவுலின் இரண்டாவது ஜெபம்
எபே 3:13-21

சபையில் ஊழியங்கள்
எபே 4:1-16

விசுவாசியின் நடைமுறை
எபே 4:17-32

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இன்று உங்கள் வாழ்க்கையில் ஒளியற்ற, சோர்வு தரும் நாளாக இருப்பதாக உணருகிறீர்களா? உத்திரவாதத்துடன் தரக்கூடிய மருந்து ஒன்று, இதோ! எபேசியர் 1:3-14 இல் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில், கிறிஸ்துவில் நீங்கள் பெற்றுள்ள உரிமைகள், சிலாக்கியங்களை எண்ண ஆரம்பியுங்கள். வெகுசீக்கிரத்தில் , நீங்கள் துதியின் கீதம் பாட ஆரம்பித்து விடுவது உறுதி! வசனம் 3 முதல் 14 வரை, கிரேக்க மொழியில் ஒரே நீண்ட முடிவற்ற வாக்கியமாக அமைந்துள்ளது. ஆம்! தேவனின் ஆசீர்வாதங்களைப் போன்றே அது முடிவற்றதாகத் தோன்றுகிறது.

ஆதார சத்தியம்

"எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திர முண்டாவதாக; நம்மேல் அசீர்வாதத்தைச் சுமத்தி, நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே." (சங். 68:19)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
அவர் எல்லாவற்றிக்கும் போதுமான இரட்சகராக இருக்கிறார். கொலோசியர் 11:19-20	கிறிஸ்து எல்லாவற்றிக்கும் மேலானவர் அவர் இரட்சிப்பை அளிக்கிறார் யூத கொள்கைகளை இன்று படித்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை	கொலோசேயர் 1:28

நாள் 349 கிறிஸ்துவை உயர்த்துதல்

ஆவியில் நிறைந்த வாழ்க்கை
எபே 5:1-21

சில குறிப்பிட்ட உறவுகளைக் கடைப்பிடித்தல்
எபே 5:22-33, 6:1-9

தேவனின் போராயுதங்கள்
எபே 6:10-18

முடிவுரை
எபே 6:19-24

பிலிப்பியரின் நிருபம். பவுலின் நன்றி கூறுதலும் ஜெபமும்
பிலி 1:1-11

பவுல் அவர்களை உற்சாகப் படுத்துதல்
பிலி 1:12-30

கிறிஸ்து விசுவாசிக்கு மாதிரி
பிலி 2:1-18

பவுலின் எதிர்காலத் திட்டங்கள்
பிலி 2:19-30

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பிலிப்பியர் நிருபம் சிறைக் கூடத்திலிருந்து எழுதப்பட்டது: ஆனால் அதற்குரிய அறிகுறி ஒன்றுமே நிருபத்தில் இல்லை: யாருமே அது சிறையிலிருந்து எழுதப்பட்டதாக எண்ணக் கூடாத அளவில் மகிழ்ச்சியின் நிருபமாக அது அமைந்துள்ளது. 'கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்தைப் பற்றியே அது ஒரு மனதுடன் கூறுகிறது' பவுல் எந்த சூழ்நிலைமீதும் வெற்றி கொள்ளக் கற்றுக் கொண்டுவிட்டார். நீ கற்று விட்டாயா?

ஆதார சத்தியம்

"என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லு கிறதில்லை: ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மன ரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்" (பிலி. 4:11)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	எழுதியது	
எபேசியர் புதிய ஏற்பாட்டில் 10ஆவது புத்தகம் 5ஆவது நிருபம்	பவுல்	

ரோமாபுரியில் பவுல்

நாள் 350

பவுல் சிறையிலிருந்து விடுதலை பெறுதல் கி. பி. 64

பவுலின் உண்மையான வாஞ்சை
பிலி 3:1-21

உறுதியாக நிற்கத் தூண்டும் போதனை
பிலி 4:1-9

பவுலின் மனதிருப்தி
பிலி 4:10-19

முடிவுரை
பிலி 4:20-23

பவுல் யூதரைத் கலந்தாலோசித்தல்
அப் 28:17-29

பவுல் ரோமாபுரியில் தங்குதல்
பிலி 28:30-31

தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் நிருபம்: வாழ்த்துதல்
1 தீமோ. 1:1-2

நியாயப் பிரமாணத்தின் நோக்கம்
1 தீமோ. 1:4-11

பவுலின் அழைப்பு
1 தீமோ. 1:12-17

தீமோத்தேயுவிடம் ஒப்புவித்த பணி
1 தீமோ. 1:18-20

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பிலி 4:8ஆம் வசனத்தை. ஒரு கிறிஸ்தவர் பெரிய கொட்டை எழுத்து க்களில் எழுதி, தனது தொலைக்காட்சிப் பெட்டியினருகில் தொங்க விட்டார். "உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ... கற்புள்ள வைகளெவைகளோ.... நற்கீர்த்தியுள்ளவைக ளெவைகளோ... அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்". அதன் பின்னர் அவர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் 50% பார்க்காமலிருக்க முடிந்தது என அவர் கூறு கிறார்! நீங்களும் செய்து பார்க்கக் கூடிய காரியம்தானா?

ஆதார சத்தியம்

"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிற தினாலே மறு ரூபமாகுங்கள்." (ரோம. 12:2)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
எபேசியர் புத்தகத்தில் கிறிஸ்துவில் கிறிஸ்துவுடன் என்ற பதங்கள் அடிக்கடி வருகின்றன. இதனால் கிறி ஸ்து தாம் கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிக்கும் என்று அறிந்து கொள்கிறார்கள்.	விசுவாசிகள் கிறிஸ்தவுக்குள் என்பதனால் மீட்பு வல்லமை. கிருபை பரலோக குடியிருப்பு என்ப வற்றை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டு மென்று விரும்புகிறார்.	எபேசியர் 4:1-2

நாள் 351 பவுல் தீமோத்தேயுவுக்குக் கட்டளைகள் கொடுத்தல்

சபைக்கு வழிகாட்டுதல்
1 தீமோ. 2:1-15

மூப்பர்கள், உதவிக்காரரின் தகுதிகள்
1 தீமோ. 3:1-16

தீமோத்தேயு முன்மாதிரியாக இருக்க வேண்டும்
1 தீமோ. 4:1-16

ஊழியக்காரனின் வேலை
1 தீமோ. 5:16

முதியோரைக் கனம் பண்ணுதல்
1 தீமோ. 5:17-25

போதுமென்னும் மனதுடன் கூடிய தேவ பக்தியின் ஆதாயம்
1 தீமோ. 6:1-10

பவுல் தீமோத்தேயுவுக்கு ஒப்புவித்த பணி
1 தீமோ. 6:11-19

முடிவுரை
1 தீமோ. 6:20-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இன்றைய சமூகத்திலும் அநேக கிறிஸ்தவ மக்களிடையேயும், 'நல்ல பண்புள்ள நடத்தைகள்' (Good Manners) என்பது காணப்படக் கூடாத ஒரு காரியமாக இருக்கிறது. 'கர்த்தருடைய வீட்டில்' எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று நீ அறிந்திருக்கிறாயா? (1தீமோ 3:15) நமது எஜமானின் வீட்டில் நடந்து கொள்ள வேண்டிய சரியான முறைகளைக் கற்றுக் கொள்ள. இந்தக் கடிதத்தில் பவுல் கூறியவற்றை அப்படியே உட்கொண்டு. உள்ளத்தில் பதித்து விடுங்கள். ஒரு நாளும் தவறு செய்ய மாட்டீர்கள்.

ஆதார சத்தியம்

"சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக் கடவது." (1 கொரி. 14:40)

வேதாகமத்தில்	எழுதியது	விசேடதன்மை
பிலிப்பியர் புதிய ஏற்பாட்டில் 11ஆவது புத்தகம் 6ஆவது நிருபம்	பவுல்	இந்த நிருபம் மகிழ்ச்சியை வலியுறுத்துகிறது.

தீத்துவுக்குக் கடிதம்: மூப்பர்களைத் தெரிந்தெடுத்தல்
தீத்து. 1:1-16

கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மாதிரி
தீத்து. 2:1-15; 3:1-7

நற்கிரியைகளின் முக்கியத்துவம்
தீத்து. 3:8-11

இறுதியான அறிவுரைகள்
தீத்து. 3:12-15

பேதுருவின் முதல் நிருபம் கிறிஸ்தவனின் பாதுகாப்பு
1 பேது. 1:12

பரிசுத்தம், அன்பைத் தூண்டும் போதனைகள்
1பேது 1:13-25

தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள்
1பேது 2:1-10

துன்பத்தில் பொறுமை
1பேது 2:11-20

கிறிஸ்துவின் முன்மாதிரி
1பேது 2:21-25

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பவுல் தீத்துவுக்கு எழுதிய கடிதத்தைக் கருத்துடன் வாசியுங்கள் . எந்த வயதுள்ளவராயிருந்தாலும், ஆண் அல்லது பெண்ணாக இருந்தாலும், மனப்பக்குவம் அடைந்தவரோ, அடையாதவராயிருந்தாலும், அனைவருக்கும் தகுந்த சமயத்தில் கொடுக்கப்படக் கூடிய அருமையான ஆலோசனைகள் இதில் அடங்கியுள்ளன. இன்று இப்பகுதிகளை வாசிக்கும் போது, உனது தனிப்பட்ட வாழ்க்கையிலோ, அல்லது உனது சபையிலோ உள்ள குறைபாடு ஏதாவது உன் மனதில் தோன்றியதா? அவ்வாறாயின், அவரது சித்தத்துக்கு ஏற்றபடி அந்தக்காரியங்கள் ஒழுங்கு செய்யப்பட, நீ என்ன செய்ய வேண்டுமென்பதை தேவனிடம் கேள்.

ஆதார சத்தியம்

"தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக் கடவன்" (1 கொரி. 7:17)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இயேசு எவ்வாறு தனது வல்லமையை தருகிறார் என்று பவுல் 4:13ல் கூறுகிறார்.	மகிழ்ச்சியாய் இருப்பதுமட்டுமின்றி கிறிஸ்து வைப்போல் இருக்கவேண்டுமென்றும் தாழ்மை, ஆவியின் ஐக்கியம் உள்ளயிருக்க வேண்டுமென்றும் பவுல் போதிக்கின்றார்.	பிலிப்பியர் 1:21

நாள் 353 கிறிஸ்து நமது முன்மாதிரி

சமாதான வாழ்க்கை
1பேது 3:1-13

நல்மனச் சாட்சியைக் காத்துக் கொள்ளல்
1பேது 3:14-22

நீதியுள்ள வாழ்க்கை
1பேது 4:1-11

பாடுகளில் பரவசமடைதல்
1பேது 4:12-19

உறுதியாயிருக்கத் தூண்டும் போதனை
1பேது 5:1- 9

முடிவான ஜெபம்
1பேது 5:10- 14

எபிரேயருக்கு நிருபம்: கிறிஸ்து தேவதூதரை விடப் பெரியவர்
எபி 1:1- 14

அவர் மனிதத் தன்மையைத் தரித்தல்
எபி 2:1- 9

அவரது பாடுகளும் வெற்றியும்
எபி 2:10- 18

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

இந்த வினாடியில், பாடுகள், மன அழுத்தங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களா? அந்தப்பாடுகள் சரியான காரியங்களைச் செய்வதினால் ஏற்பட்டவையா அல்லது தீமையான காரியங்களைச் செய்ததினால் விளைந்தவையா என்பதை மட்டும் முதலில் உறுதி செய்து கொள்ளுங்கள். அதன்பின், 'வையப்படும்போது, பதிலுக்கு வையாத' கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்ற மறந்து விடாதீர்கள் - அப்படியானால், நித்தியமான வெகுமதி நிச்சயமாகக் கிடைக்கும்.

ஆதார சத்தியம்

"நீங்கள் குற்றஞ் செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால், அதினால் கீர்த்தியுண்டு. நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்." (1 பேது. 2:20)

கண்ணோட்டம்		
வேதாகமத்தில்	எழுதியது	
1, 2 பேதுரு புதிய ஏற்பாட்டில் 21ஆவது 22ஆவது புத்தகங்கள் 16ஆம், 17ஆம் நிருபங்கள்	பேதுரு	

கிறிஸ்துவின் தனிச்சிறப்பு

நாள் 354

கிறிஸ்து மோசேயிலும் பெரியவர்
எபி 3:1-6

அவிசுவாசத்துக்கு விரோதமான எச்சரிப்பு
எபி3:7-13

விசுவாசத்தின் தேவை
எபி3:14-19

நமது ஓய்வுநாள் இளைப்பாறுதல்
எபி4:1-13

கிறிஸ்து நமது பிரதான ஆசாரியர்
எபி 4:14-16, 5:1-14

முதிர்ச்சியடையுமாறு வளரும்படி போதனை
எபி 6:1-12

தேவனின் மாறாத தன்மை
எபி 6:13-20

மெல்கிசேதேக் - கிறிஸ்துவின் ஒருநிழல்
எபி 7:1-28

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்துவின் தனிச்சிறப்பு எல்லாவற்றுக்கும் மேலான உயர்ந்த மகத்துவம் - பழைய ஏற்பாட்டு மக்களுக்கும் நியாயப் பிரமாண விதிகளுக்கும் மட்டுமல்லாது. நமது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் வெளிப்பட வேண்டியது மிக அவசியம். உதாரணமாகக், கிறிஸ்துவை உன் மனைவி / கணவனை விட, உனது வங்கிக் கணக்குகளை விட, உனது வேலையை விட, உனது வாழ்க்கை ஓட்டத்தை விட மேலானவராக உன் வாழ்க்கையில் வைத்திருக்கிறாயா? நினைவிலிருக்கட்டும் - அவரை எல்லாருக்கும் உன்னதமான கர்த்தராக நீ முடிசூடாவிட்டால்., அவரைக் கர்த்தராக ஏற்றுக் கொண்டு முடிசூட்டவில்லை என்பதே அர்த்தமாகும்.

ஆதார சத்தியம்

"ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும்.. சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. "

(கொலோ. 1:16,17)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
கிறிஸ்துவின் பாடுகள் கிறிஸ்துவுக்காக பாடுகள் என்பன பற்றி கூறப்படுகின்றது1 பேதுரு 4:12-13 கிறிஸ்துவில் மறுரூபம் 2 பேதுரு 1:17-18 வருகை 3:10-13	1 பேதுரு விசுவாசத்துக்காக துன்புறும் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது. 2 பேதுரு பல்வேறு பட்ட பிரச்சனைகளை ஆராய்ந்தது போலப் போதிக்கின்றது. போராட்டம் குறித்துப் பேசுகிறது.	2 பேதுரு 1:20-21

உண்மையான பிரதான ஆசாரியன்
எபி 8:1-5

புது உடன்படிக்கை மேலானது
எபி 8:6-13

ஆசரிப்புக் கூடாரத்தின் விளக்கம்
எபி 9:1-10

அது கிறிஸ்துவில் நிறைவேறுதல்
எபி 9:11-22

கிறிஸ்துவே போதுமான பலி
எபி 9:23-28, 10:1-18

உண்மையான ஆராதனை
எபி 10:19-25

கிறிஸ்துவைப் புறக்கணிப்பது மரணத்துக்கு ஏதுவானது
எபி 10:26-31

விசுவாசியின் வெகுமதி
எபி 10:32-39

விசுவாச முன் மாதிரிகள்
எபி 11:1-10

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு கோட்பாடுகளும் நமது வாழ்க்கை நடைமுறையைத் தொடுவதாகவே அமைந்துள்ளது என்பதை முக்கியமாக நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்து மேலான பிரதான ஆசாரியர்: மேலான வழியைத் திறந்து கொடுத்தவர். மேலான உடன்படிக்கையை ஆரம்பித்து வைத்தவர்: ஆகவே, இந்த சத்தியங்களுக்கு நாம் மேலான கீழ்ப்படிதல் அளிக்க வேண்டும். தேவனின் உதவியுடன், நேற்றிருந்ததை விட இன்று ஒரு மாறுபட்ட, மேலான கிறிஸ்தவ வாழ்க்கை வாழவேண்டுமென்று தீர்மானம் செய்து கொள்.

ஆதார சத்தியம்

"தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே. முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு. தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களை தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்." (ரோம. 8:29)

வேதாகமத்தில்	எழுதியது	
எபிரேயர் புதிய ஏற்பாட்டில் 19ஆவது 14ஆவது நிருபம்	தெரியாது	

விசுவாசத்தின் மேன்மை

நாள் 356

முற்பிதாக்களின் விசுவாசம்
எபி 11:11-22

மோசேயும் மற்றப் பழைய ஏற்பாட்டு முன்மாதிரிகளும்
எபி 11:23-40

பொறுமையுடன் தொடர்ந்து ஓடத்தூண்டும் போதனை
எபி 12:1-11

சமாதானத்தையும். பரிசுத்தத்தையும் தொடர்ந்து கொள்ளுதல்
எபி 12:1217

புதிய ஏற்பாட்டு நியமனத்தின் மேன்மை
எபி 12:18-29

பலவிதமான நற்போதனைகள்
எபி 31:1-19

முடிவுரை
எபி 13:20-25

பேதுருவின் 2ஆம் நிருபம்:
நமது விசுவாசத்தை அதிகரிக்குதல்
2 பேது 1:1-11

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

விசுவாசம் என்றால் என்ன என்பதைக் குறித்து, உனக்குப் பிரியமான விளக்கம் என்ன? ஒரு சிறுவனிடம் விசுவாசத்தின் விளக்கத்தைக் கேட்டபோது., உண்மையல்ல என்று உனக்குத் தெரிந்த ஒன்றை நம்புவதே விசுவாசம்!" என்று கூறினான். சிறந்த விளக்கம் எப்போதுமே வேதாகம விளக்கங்களேயாகும். எபிரேயர் நிருபத்தின்படி, விசுவாசம் என்பது 'காணப்படாதவைகளின் நிச்சயம்" உலகப் பிரகாரமான சட்ட வாக்கியம். "பார்ப்பதை-நம்புவது" ஆனால் கிறிஸ்தவ சட்ட வாக்கியம், "பார்க்காமலிருப்பதை நம்புவது ஏன்?" விசுவாசமென்பது காணப்படாதவைகளின் நிச்சயம்"

ஆதார சத்தியம்

"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் " (1 யோவா 5:4)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
எபிரேயப் புத்தகத்தில் இயேசு எமது பிரதான ஆசாரியராகக் காட்டப்படுகிறார்.	கர்த்தராகிய இயேசுவின் மனிதத் தன்மையும் தெய்வத் தன்மையும் எபிரேய புத்தகத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.	எபிரேயர் 7:27

நாள் 357 பேதுருவின் 'நற்குணங்களின் ஏணி'

பேதுரு சுவிசேஷத்தின் உண்மையை உறுதிப்படுத்துதல்
IIபேது 1:12-21

வரப்போகும் மறுதலிக்கும் நாட்களின் அடையாளம்
IIபேது 2:1-22

இறுதி நாட்களில் மறுதலிப்பு
IIபேது 3:1-10

தேவனுக்கேற்ற நடத்தையை உணர்த்தும் போதனை.
IIபேது 3:11-18

யூதா நிருபம் : மறுதலிப்பின் சரித்திரம்
யூதா 1:1-7

மறுதலிக்கும் போதனையளிப்பவர்களைப் பற்றி விவரித்தல்
யூதா 1:8-19

விசுவாசிகளுக்கு உற்சாக மூட்டுதல்
யூதா 1:20-23

கர்த்தரைத் துதிக்கும் வார்த்தையலங்காரம்
யூதா 1: 24-25

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

2 பேதுரு. 1:5-11இல் உள்ள பிரபலமான வேத பகுதியின் மீது செய்யப்பட்ட ஒரு பிரசங்கத்தையாவது. நீங்கள் நிச்சயமாகக் கேட்டிருப்பீர்கள். பிரசங்கிப்பவர்கள் அடிக்கடி அதை பேதுருவின் நற்குண ஏணி' என்று குறிப்பிடுவதுண்டு. இன்று, உங்களது ஓய்வு நேரத்தில், அதை மீண்டும் வாசியுங்கள்: அதன்பின் இந்தக் கேள்வியை உங்களிடமே கேட்டுக் கொள்ளுங்கள், "நான் இந்த ஏணியின் எந்தப் படியில் நிற்கிறேன்?

ஆதார சத்தியம்

"கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ அவைகளேயே சிந்தித்துக் கொண்டிருங்கள்." (பிலி. 4:8)

வேதாகமத்தில்	எழுதியது	விசேடதன்மை
யூதா புதிய ஏற்பாட்டில் 26ஆவது புத்தகம் 21ஆம் நிருபம்	யூதா	

தீமோத்தேயுவுக்கு 2ஆம் நிருபம் நாள் 358

பேதுருவும் பவுலும் இரத்த சாட்சியாக மரித்தது கி. பி. 67-68

பவுல் தீமோத்தேயுவை ஊக்குவித்தல்
II தீமோ 1:1-18

கிறிஸ்துவின் நல்ல போர்ச் சேவவன்
II தீமோ 2:1-13

நல்ல போர்ச் சேவகனின் தற்பாதுகாப்பு
II தீமோ 3:14-17; 4:1-8

பவுல் அநேகரால் கைவிடப்படுதல்
II தீமோ 4:9-18

கர்த்தரின் உத்தம ஊழியக்காரன்
II தீமோ 2:14-26

கடைசி நாட்களில் விசுவாச மறுதலிப்பு
II தீமோ 3:1-13

இறுதி வாழ்த்துக்கள்
II தீமோ 4:19-22

யோவானின் முதல் நிருபம்:
அதன் நோக்கம்
I யோவா 1:1-4

பாவத்துடன் இடைபடுதல்
I யோவா 1:5-10

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதிய 2ஆம் நிருபம் பவுல் தனது ஆவிக்குரிய மகனாகிய தீமோத் தேயுவுக்கு எழுதிய உயிலும் சாட்சியுமாகும். எவ்வளவு ஞானம் அதனுள் அடங்கியிருக்கிறது! ஒரு நிமிடம் நின்று, நீங்கள் இதுவரை கிறிஸ்தவ வாழ்க்கையில் கற்றுக் கொண்டவைகளைக் குறித்து உங்கள் ஆவிக்குரிய மகன் அல்லது மகளுக்கு எழுத வேண்டிய நிலையெழுந்தால், என்ன எழுதுவீர்களென்று சிந்தித்து ப்பாருங்கள். முடிந்தால், உங்கள் முடிவான எண்ணங்களை எழுதிப் பாருங்கள்.

ஆதார சத்தியம்

"நாம் அவருடைய கற்பனைகளின் படி நடப்பதே அன்பு: நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி நடந்துகொள்ள வேண்டிய கற்பனை இதுவே ."
(IIயோவா. 1:6)

இயேசுவும் வேதமும்	போதனை	மனன வசனம்
	தேவன் மக்கள் ஒழுக்கக் கேடான விடயங்களிலும் நற்செய்தியை மறுதலிப்பதிலும் உவகைப்படுத்தி சபை யை பயமுறுத்தினார்கள்.	யூதா 24:25

நாள் 359 அன்பும் கீழ்ப்படிதலும்

யோவானின் நிருபங்கள் கி. பி. 95-100

கீழ்ப்படிதல் தேவை
I யோவா 2:1-14

உலக சிநேகம், அவிசுவாசத்தைக் குறித்த எச்சரிப்பு
I யோவா 2:15-23

அவரில் நிலைத்திருத்தல்
I யோவா 2:24-28

நம்மீது தேவ அன்பு
I யோவா 2:29, 3:1-2

நீதியும் பாவமும்
I யோவா 3:3-10

அன்பின் கிரியை
I யோவா 3:11-24

உலகத்தை ஜெயித்தல்
I யோவா 4:1-6

அன்பு தேவனால் உண்டானது
I யோவா 4:7-21

நமது வெற்றி
I யோவா 5:1-12

நமது நம்பிக்கையும் பாதுகாப்பும்
I யோவா 5:13-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

பெரிய கிறிஸ்தவ தத்துவ மேதையான தாமஸ் புல்லர் (Thomas Fuller) கூறினார், "அன்பு மேல்நோக்கி ஏறுவதில் மட்டும் மகிழ்சியடைவதில்லை: கீழ்நோக்கி வருவதிலும் பெருமகிழ்ச்சியடைகிறது: இதுதான் முதல் கிறிஸ்மஸ் தினத்தில் நடைபெற்றது. அன்பு இறங்கிக் கீழே வந்தது. இந்தக் கிறிஸ்துமஸ் தின முழுவதும் இந்த எண்ணம் உன் மனதில் கனிந்து கொண்டே இருக்கட்டும்.

ஆதார சத்தியம்

"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." (யோ. 3:16)

வேதாகமத்தில்	எழுதியது	
1 யோவான் புதிய ஏற்பாட்டில் 23ஆவது புத்தகம் 18ஆவது நிருபம்	யோவான்	

ஏழு சபைகளுக்குமுரிய செய்தி

நாள் 360

யோவானின் 2ஆம் நிருபம் சத்தியத்தில் நடப்பது
II யோ 1:1-13

யோவானின் 3ஆம் நிருபம்: காயு புகழ்ப்படுதல்
III யோ 1:1-8

தியோத்திரேப்பு. தேமேத்திரியுவைக் குறித்து
III யோ 1:9-14

வெளிப்படுத்தின விசேஷம் முன்னுரை
வெளி 1:1-8

யோவானின் தரிசனம்
வெளி 1:9-20

எபேசு சபைக்குச் செய்தி
வெளி 2:1-7

சிமிர்னா சபைக்கு
வெளி 2:8-11

பெர்கமு சபைக்கு
வெளி 2:12-17

தியத்தீரா சபைக்கு
வெளி 2:18-29

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

கிறிஸ்து தமது சபையில் எதை எதிர்பார்க்கிறார்? ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் அவர் கூறிய வார்த்தைகளில் இதற்குரிய விடை அடங்கியுள்ளது. ஒவ்வொரு சபைக்குமுரிய செய்தியின் மைய வார்த்தை அன்பு. மற்ற சபைகளுக்குமுரிய வார்த்தைகளையும் கண்டுபிடியுங்கள்.

ஆதார சத்தியம்

"கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும்....." (எபே. 5:27)

கண்ணோட்டம்		
இயேசுவும் புத்தகமும்	போதனை	மனனவாக்கியம்
யோவான் இயேசு விசுவாசிகளைச் சுத்தம் செய்கிறதாகக் காட்டுகிறார்.	யோவான் இந்நிருபத்தை கிறிஸ்தவர்கள் நிச்சயமாக கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டுமென்ற நோக்கத்தில் எழுதியிருக்கிறார்.	1 யோவான் 3:16

நாள் 361 ஆராதிக்கும் முறை

சர்தை சபைக்குரிய செய்தி
வெளி 3:1-6

பிலதெல்பியா சபைக்கு
வெளி 3:7-13

லவோதிக்கேயா சபைக்கு
வெளி 3:14-22

தேவனின் சிங்காசனம்
வெளி 4:1-11

முத்திரை போட்ட புத்தகம்
வெளி 5:1-8

ஆட்டுக்குட்டியானவருக்கு ஆராதனை
வெளி 5:9-14

ஆறு முத்திரைகள் உடைக்கப்படுதல்
வெளி 6:1-17

144,000 பேர் முத்திரை போடப்படுதல்
வெளி 7:1-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

A.W.டோசர் கூறுகிறார், "சபைகளில் இப்பொழுது "மறக்கப்படும் விலைமதிப்பற்ற ஆபரணம் ஆண்டவரைப் பணிதல்" ஆனால் பரலோகத்தில் இது மறக்கப்படுவதில்லை. 24 மூப்பர்களும் தங்கள் கிரீடங்களைக் கழற்றி விடுதல் பணிந்து கொள்ளுதலின் ஒரு வகையல்லவா? இன்று நீ எதை விட்டுக் கொடுத்து, அவரைப் பணிந்து கொள்ள ஆயத்தமாக இருக்கிறாய்?

ஆதார சத்தியம்

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும். " (யோவா. 4:24)

வேதாகமத்தில்	எழுதியது	
2, 3 யோவான் புதிய ஏற்பாட்டில் 24ஆவது புத்தகம் 19ஆவது, 20ஆவது நிருபங்கள்	யோவான்	

ஏழு எக்காள நியாயத்தீர்ப்பு

நாள் 362

பரலோகத்திலுள்ள எண்ணற்ற திரள் கூட்டம்
வெளி 7:9-17

7 ஆவது முத்திரை உடைக்கப்படல்
வெளி 8:1-6

முதல் நான்கு எக்காளங்கள்
வெளி 8:7-13

5ஆம் 6ஆம் எக்காளங்கள்
வெளி 9:1-21

சிறிய புத்தகம் வைத்திருந்த தூதன்
வெளி 10:1-11

தேவாலயம் அளக்கப்படல்
வெளி 11:1-2

இரு சாட்சிகள்
வெளி 11:3-13

7 ஆவது எக்காளம்
வெளி 11:14-19

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

ஒரு இறுதியான நியாயத் தீர்ப்பு நாளை தேவன் ஸ்தாபிக்காதிருந்தால். இப்பிரபஞ்சம் நடுநிலையுடன் உறுதியாக இருக்கவே இருக்காது. நியாயத் தீர்ப்பு நிச்சயமாக வரும். நீ ஒரு உண்மை கிறிஸ்தவனாக இருந்தால் களிகூறு. ஏனெனில் உன்னைப் பொறுத்தமட்டில் நியாயத் தீர்ப்பு கடந்து விட்டது. கிறிஸ்துவில் இனி ஆக்கினைத் தீர்ப்பில்லை.

ஆதார சத்தியம்

"ஆனபடியால். கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து. மாம்சத்தின்படி நடவாமல். ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே. ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே"

(ரோமர். 8:1,2)

கண்ணோட்டம்		
இயேசுவும் புத்தகமும்	போதனை	மனனவாக்கியம்
இயேசுவை மாம்சத்தில் வந்தவர்கள் என்பதை ஏமாற்றுக்காரர்கள் தவிர்க்கப்பட வேண்டியவர்கள்	2 யோவான் கிறிஸ்தவ நற்செய்திக்கு எதிரான பொய்யான போதகர் கூறுகிறது. 3 யோவான் உண்மையான கிறிஸ்தவர்கள்	2 யோவான் 9ஆவது வசனம்

நாள் 363 சபையும் அதன் சத்துருக்களும்

ஸ்திரீ. குழந்தை. வலுசர்ப்பம்
வெளி 12:1-8

சாத்தான் பூமிக்குத் தள்ளப்படுதல்
வெளி 12:9-17

இரு மிருகங்கள்
வெளி 13:1-15

மிருகத்தின் முத்திரை
வெளி 13:16-18

ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுவோர்
வெளி 14:1-5

மூன்று தேவ தூதர்கள்
வெளி 14:6-13

அரிவாளுடன் கூடிய கிறிஸ்துவின் தரிசனம்
வெளி 14:14-20

மோசேயின் பாடல்
வெளி 15:1-4

ஏழு பொற்கலசங்கள்
வெளி 15:5-8

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"சபைக்கு அநேக சத்துருக்கள் உண்டு; ஆயினும் அவர்களெல்லாம் அடியோடு அழிக்கப்படும் ஒருநாள் நிச்சயமாக வரும் - நீங்கள் தவறான எண்ணங் கொள்ளவே வேண்டாம். சத்தியமும் நீதியும் இறுதியில் வெற்றியடைந்தே தீரும்.

ஆதார சத்தியம்

"அதன் பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும், அவர் ஆளுகை செய்ய வேண்டியது"
(1 கொரி. 15:24,25)

வேதாகமத்தில்	எழுதியது	
வெளிப்படுத்தல் புதிய ஏற்பாட்டின் 27ஆவது புத்தகம் 1ஆவது தீர்க்க தரிசனப் புத்தகம்	யோவான்	

பாபிலோனின் வீழ்ச்சி

நாள் 364

ஏழுவாதைகள்
வெளி 16:1-21

மிருகத்தின் மேல் வீற்றிருந்த ஸ்திரீ
வெளி 17:1-6

அதன் அர்த்தம்
வெளி 17:7-18

பாபிலோனின் அழிவு
வெளி 18:1-8

பாபிலோனுக்காகப் புலம்புதல்
வெளி 18:9-19

சபை அந்த வீழ்ச்சி குறித்துமகிழுதல்
வெளி 18:20-24

தேவனுக்குத் துதி
வெளி 19:1-5

ஆட்டுக் குட்டியானவரின் கலியாண விருந்து
வெளி 19:6-10

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

யாரோ ஒருவர் கூறினார், 'வேதாகமம் 'இரு நகரங்களின் கதை' போன்றது - ஒன்று பாபிலோன், மற்றொன்று எருசலேம்." பாபிலோன் பாவத்தையும், எருசலேம் நீதியையும் குறிக்கிறது. ஒரு 'புது எருசலேம்' இறங்கி வருமென்றும், புதிய பாபிலோன் என்று ஒன்று இருக்காது என்றும் அறிந்து கொள்வது எத்தனை ஆறுதலான காரியம்! அல்லேலூயா! - பாவம் நீக்கப்பட்டு விடும் - நிரந்தரமாக!

ஆதார சத்தியம்

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிர மான தேவ தூதர்களினிடத்திற்கும், பரலோ கத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர் களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கும்... வந்து சேர்ந்தீர்கள்" (எபி 12:22-23)

இயேசுவும் புத்தகமும்	போதனை	மனன வசனம்
இப்புத்தகம் இயேசுகிறிஸ்துவின் வெளிப்படுத்தல் என்று ஆரம்பித்து, நான் விரைவாக வருகிறேன், என்று முடிவடைகிறது.	உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்து மாத்திரமே உலகத்தை நியாயந் தீர்க்கவும் நீதியுள்ளவர் என்பதை தரிசனங்கள் மூலம் காட்டுகிறார்.	வெளி 21:3-4

முதல் ஆதாம் - கடைசி ஆதாம்

முதல் ஆதாம்		கடைசி ஆதாம்
பாவம், மரணத்தை அவன் உலகத்திற்குள் கொண்டு வந்தான்	செய்த காரியம்	அவர் நீதியையும், ஜீவனையும் உலகத்திற்குள் கொண்டு வந்தார்
ஏதேன் தோட்டத்தில்	செய்யப்பட்ட இடம்	கல்வாரி சிலுவை மீது
கீழ்ப்படியாமை (ஆதி. 3:6)	செய்வதற்குக் காரணம்	கீழ்ப்படிதல் (லூக். 22:42)
தண்டனைக்குரிய தீர்ப்பு	செய்கையின் விளைவுகள்	நீதிமான்களாக்கப் படுதல்
1. அவன் மீது உடனே வந்த ஆக்கினைத் தீர்ப்பு		1. உடனே நீதிமான்களாக்கப் படுதல்
2. அவனது வம்சத்தினருக்கே அளிக்கப்பட்ட ஆக்கினைத் தீர்ப்பு		2. குறிக்கப்பட்டுள்ள நீதி
3. எல்லார் மீதும் நித்தியமான ஆக்கினைத் தீர்ப்பு		3. நித்திய ஜீவன்
4. அவனது செய்கையின் மோசமான நிலையைத் தெளிவாகப்படம் பிடித்துக் காட்ட நியாயப் பிரமாணம் உதவியது.	கிருபைக்கும் நியாயத் தீர்ப்புக்கும். அவனது செய்கைக்குள்ள தொடர்பு	4. அவனது செய்கையின் 'இன்னும் அதிக' விளைவுகளைத் தெளிவுபடுத்த கிருபை உதவியது.
அது பெருகியது.	செய்கையின் விஸ்தாரம்	அது இன்னும் அதிகமாகப் பெருகியது.

புதிய வானம், புதிய பூமி

நாள் 365

கிறிஸ்து மிருகத்தையும் அதன் சேனையையும் அழித்தல்
வெளி 19:11-21

திரள் கூட்டத்தார்
வெளி 20:1-6

இறுதி யுத்தம்
வெளி 20:7-10

பெரிய வெள்ளை சிங்காசனம்
வெளி 20:11-15

புதிய வானமும் புமியும்
வெளி 21:1-8

புதிய எருசலேம்
வெளி 21:9-27

ஜீவ நதி
வெளி 22:1-5

யாவருக்கும் இலவச அழைப்பு
வெளி 22:6-19

இறுதி வாக்குத் தத்தமும் ஆசீர்வாதமும்
வெளி 22:20-21

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

'கிறிஸ்துவின் வருகை' என்ற மகிமையான நம்பிக்கையுடன் வேதாகமம் முடிவடைகிறது. இதை நன்றாகக் கவனியுங்கள். "இதோ! சீக்கிரமாய் வருகிறேன்!" என்ற வாசகத்தை உடனே ஒரு பதில் பின் தொடருவதைப் பாருங்கள். "ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்" கிறிஸ்துவின் வருகையைக் குறித்த உனது பதிலும் இவ்வளவு விரைவாக, உடனே கூறப்படுவதாக இருக்கிறதா?

ஆதார சத்தியம்

"ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும், ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக ஆமென்." (வெளி. 7:12)

கி.மு. 50	கி.பி. 60	கி.பி. 70	கி. பி.80	கி. பி.90	கி. பி.100	
	அருட்பணிப் பயணம்	பவுலின் மரணம்	எருசலேம் அழிதல் நிரோவின் மரணம்			யோவானின் மரணம்

ஏழு சபைகளுக்குரிய செய்திகள்



புதிய வானமும் பதிய பூமியும் நாள் 366

புதிய வானமும் புதிய பூமியும்
வெளி 21:1-8

புதிய எருசலேம்
வெளி 21:9-27

ஜீவ நதி
வெளி 22:1-5

எல்லோருக்கும் இலவச அழைப்பு
வெளி 22:6-19

இறுதியான வாக்குத் தத்தமும் ஆசிர்வாதமும்
வெளி 22:20-21

மூன்று தேவ தூதர்கள்
வெளி 14:6-13

பின்பு பளிங்கை போல் தெளிவான ஜீவ தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தன.

வெளி 22:1

சிந்தனைக்கும் தியானத்திற்கும்

"வேதாகமம் மகிமையுள்ள நம்பிக்கையான இயேசுகிறிஸ்துவின் வருகையை கூறி முடிவடைகின்றது. எவ்வளவு துல்லியமாகவும் உறுதியாகவும் இச்செய்தி கூறப்படுகின்றது. ஆம் நான் விரைவாக வருகிறேன். என்று. ஆமென். வாரும் கர்த்தர் இயேசுவே என்பதற்கு உடனடியாக பதில் தருகிறார் இயேசுவின் வருகைகான சிந்தனைக்கு பிரதிக்கிரியை எவ்வளவு சாதகமாக இருக்கிறது.

ஆதார சத்தியம்

"ஆமென் எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக ஆமென் என்றார். " (கொரி. 7:12)

வேதாகமத்தில்	எழுதியது	
வெளிப்படுத்தல் புதிய ஏற்பாட்டின் 27ஆவது புத்தகம் 1ஆவது தீர்க்க தரிசனப் புத்தகம்	யோவான்	

இதயத்திற்கு இதயம்

டிசம்பர்

நன்று நீங்கள் கற்கை நெறியை நிறைவு செய்து விட்டீர்கள். முழு வேதாகமத்தையும் வாசித்து விட்டீர்கள். உங்களுடைய முதுகில் ஒரு தட்டுக் கொடுங்கள். தேவனுடைய வார்த்தையை வாசித்த முடித்தமை தேவன் உங்களுக்குள் என்ன நிறைவேற்றியிருக்கிறார் என்று சற்று சிந்தியுங்கள். தேவன் தனது வார்த்தையை காரியங்களை நிறைவேற்ற அனுப்புகிறவர். உங்களது சிந்தனைகளையும் ருசித்து வாசித்து சில பகுதிகளையும் உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். கருத்து வெளிப்பாடு ஆழமான தாக்கத்தை எற்படுத்தக்கூடியது என்பதை மறக்க வேண்டாம். எனவே உங்களது கருத்தை வெளிப்படுத்த தருணம் தருமாறு தேவனிடம் கேளுங்கள்.

அட்டையிலிருந்து அட்டைக்கு முழு வேதாகமத்தையும் ஒரு வருடத்தில் அறிந்துகொள்ள மிகவும் பெறுமதியுள்ள புத்தகம். இதனுடைய காலக்கிரமத்திட்டம் சம்பவங்கள் நடைபெற்ற பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாகத் தேவனுடைய திட்டம் செயற்பட்டமையை நீங்கள் அறிய வேண்டுமென்ற நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது. தினசரி வாசிக்கவும், வருட முழுவதும் உங்களை ஒழுங்குபடுத்தவும், தெளிவுறச்செய்யவும், உற்சாகமூட்டவும், வழிநடத்தவும் உதவியாகவிருக்கும்.

ஏனைய அம்சங்கள்

- நாளுக்கு ஒரு பக்கம் காலக்கிரம வாசிப்புத்திட்டம்.
- அடிவரிசைக்கோடுகள் ஒவ்வொரு நாளும் காலக்கிரமத்தில் நடைபெற்றவைகளை அறிய உதவிசெய்யும்.
- வரைபடங்களும், அட்டவணைகளும், புவியியற்படங்களும் வேதாகம காலங்களை விளக்கி வேதாகமத்தில் உங்களுடைய புரிந்துணர்வை அதிகரிக்கும்.
- செல்வின், ரெவர் ஆகியோரின் விளக்கங்கள் உங்கள் தனிப்பட்ட வாழ்வில் சவால்களாக அமையும் அல்லது தினமும் உற்சாகமூட்டுவதாக அமையும்.

அட்டையிலிருந்து அட்டைக்கு நிகழ்ச்சித் திட்டம் ஒரு மில்லியனுக்கு (பத்துலட்சம்) மேற்பட்ட மக்கள் முழுவேதாகமத்தையும் 2000 ஆம் ஆண்டில் வாசிக்கவேண்டுமென்ற நோக்கில் தயாரிக்கப்பட்டது.

செல்வின் ஹியூஸ் - CWR ஊழியத்தின் ஆரம்பகர்த்தா. 30 வருடங்களாக ஒவ்வொரு நாளும் இயேசுவுடன் (Every Day with Jesus) என்னும் தினசரி வேத தியானப்புத்தகத்தின் ஆசிரியர். அகில உலகப் பிரசித்திபெற்ற வேதாகம ஆசிரியர்.

ரெவர் ஜே பாட்ரிட்ஜ் - இறையியல் பட்டதாரியான இவர் பல நாடுகளுக்கும் சென்று கூட்டங்களிலும், கருத்தரங்குகளிலும் பிரசங்கித்தும் வேதகலாசாலைகளில் கற்பித்துள்ளார்.

ISBN 955-8337-01-3